எண்டமூரி வீரேந்திரநாத்

# அஷ்டாவக்ரன்



தமிழில்

கௌரி கிருபானந்தன்

தெலுங்கு மூலம்

**எண்டமூரி வீரேந்திரநாத்**

தமிழாக்கம்

**கௌரி கிருபானந்தன்**

**ஜெனரல் பப்ளிஷர்ஸ்**
244 (பழைய எண்), ராமகிருஷ்ணா மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை – 600 004.

முதற் பதிப்பு - 2013

© ஆசிரியருக்கு

விலை : ரூ. 160.00

Laser Typeset by : Jai Krishna Designs, Chennai - 4

Printed by : Sree Durga Printers, Chennai - 117

# உள்ளுரை

இந்தக் கதையைப் படித்து முடித்தேன். ஒரு பதிப்பாளர் என்ற முறையில் பதிப்புரை எழுதுவதைவிட எண்டமூரியின் கதைகளை ஆர்வத்துடன் படித்து, புதிய சில விஷயங்களைத் தெரிந்து கொண்ட மனத்திருப்தியில் எழுதப்பட்ட உரை இது.

'அஷ்டாவக்ரன்' என்பது புராண காலத்தில் வாழ்ந்த ஒரு மகான். அவரது உடலில் அஷ்ட (எட்டு) வக்ரங்கள் (கோணல்கள்) இருந்ததால் இப்பெயர் வந்தது. இவர் மகாபுத்திமான். தன்னுடைய சிறு வயதிலேயே - தசரத சக்கரவர்த்தியின் சபையில் இருந்த பெரிய பெரிய வித்வான்களை யெல்லாம் தன் வாதத்திறமையால் வென்றவர். இவரது உடலில் உள்ள எட்டு கோணல்களும் நிவர்த்தியாகும் வரை அவர் உயிருடன் இருப்பதாக ஒரு ஐதீகம். அதற்குப் பல ஆயிரம் கோடி வருட கணக்கு உள்ளது. மனத்திற்கும் வாக்கிற்கும் புலப்படாத இவற்றை மனித மனம் ஏற்பதற்குத் தயங்கலாம்.

புராணகால அஷ்டாவக்ரனை, கலியுக கதாபாத்திரமாக வடித்து, தீய சக்தி போல உருவாக்கி, கடைசியில் அதே அஷ்டாவக்கிரனின் பிறப்பு - தீய சக்திகளை அழிப்பது போல எழுதியிருப்பதுதான் சபாஷ்! நல்லவர்களை நல்லவர்களாகச் சொல்லாவிட்டாலும், கெட்டவர்கள் போல் சித்தரித்து விட்டால் ஆபத்துதானே! இந்த ஆபத்து தவிர்க்கப்பட்டு, ஆனந்தம் நிலவுகிறது.

மற்ற எல்லாக் கதைகளையும் போல, இந்த நாவலிலும் விறுவிறுப்பு அதிகம். புத்தக பக்கங்களைவிட, மன ஓட்டமும், ரத்தவோட்டமும் வேகமாகச் செல்கின்றது. எண்டமூரி தன்னுடைய ஒவ்வொரு நாவலிலும் ஒவ்வொரு புதிய விஷயத்தை சமூகத்திற்குச் சொல்கிறார். இந்த நாவலில் 'ஜெனடிக் சயின்ஸ்' பற்றி கூறியிருக்கிறார். ஏதோ நாம் கொஞ்சமாவது இதைப் பற்றித் தெரிந்து கொள்ள இந்த நாவல் உதவும்.

ஹைதராபாத்தில் முன்னாள் முதல்வர் NTR க்குப் பிறகு, மிகவும் புகழ் பெற்ற எண்டமூரி வீரேந்திரநாத் தன் நாவல்களின் மூலம் மக்கள் மனதில் இடம் பெற்றார். இவரது நூல்களைத் தொடர்ந்து வெளியிட வாய்ப்பு தந்த இந்நூலாசிரியருக்கும், மொழி பெயர்ப்பாளர் கௌரி கிருபானந்தனுக்கும் நமது நன்றி. தொடர்ந்து எண்டமூரியின் நூல்களை வாங்கி எங்களை ஆதரிக்கும் வாசகர்களுக்கும் நன்றி.

**அல்லயன்ஸ் ஸ்ரீனிவாசன்**

# முன்னுரை

திரு. எண்டமூரி வீரேந்திரநாத் அவர்கள் தெலுங்கில் எழுதிய ''அஷ்டாவக்ரா'' என்ற நாவல் ''அஷ்டாவக்கிரன்'' என்ற தலைப்பில் தமிழ் வாசகர்கள் முன்னால் வைக்கப்பட்டுள்ளது.

கதையில் வரும் ஒரு காட்சி...

உஸ்ஸோக் அங்கத்தினர்கள் எல்லோரும் சேர்ந்து டி.வி.யில் நேரடி ஒளிபரப்பை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். டி.வியில் கிழவன் ஒருவன் ஒரு பெட்டியைத் திறந்து, அதிலிருந்து தோலில் எழுதப்பட்ட கடிதத்தை எடுத்துப் படித்துக் காட்டுகிறான்.

''ராஜாக்களுக்கெல்லாம் ராஜா, க்ஷுத்ர கணாதிபதியான காஷ்மோராவின் அம்சையுடன் மனித ஜாதியை ஆள்வதற்கு குட்டிச் சாத்தானின் வாரிசு பிறக்கப் போகும் நேரம் நெருங்கிவிட்டது.

மாந்த்ரீகர்கள் ஆன விஷாச்சி மற்றும் காத்ராவின் எலும்புத் தூளை கிராமத்தின் வடக்குத் திசையில் இருக்கும் பயிர்களின் மீது தெளிக்க வேண்டும். அதன் பிறகு எட்டுக் குழந்தைகள் அந்த கிராமத்தில் பிறப்பார்கள். ஒரு கண் மட்டுமே உடையவன், ஒரு மார்பு மட்டுமே கொண்டவன், நான்கு கைகள் இருப்பவன், இரண்டு உடல்கள் ஒன்றாக இணைந்தவன் இப்படி ஏழு குழந்தைகள் பிறப்பார்கள்.

எட்டாவதாக பிறக்கப் போகிறவன்தான் அஷ்டாவக்கிரன்!

எல்லோரையும் போல் அல்லாமல் அவன் தாயின் கர்ப்பத்தைக் கிழித்துக் கொண்டு வெளியே வருவான்.''

தமிழில் மொழி மாற்றம் செய்வதற்கு அனுமதியளித்த மூல ஆசிரியருக்கும், புத்தகமாக வெளியிட்ட அல்லயன்ஸ் நிறுவனத்தாருக்கும் எனது நன்றி என்றும் உரியது.

கௌரி கிருபானந்தன்

# அஷ்டாவக்கிரன்

அவன்...

தனக்குள் இருக்கும் இருபத்தி மூன்று அம்சங்களை எடுத்துக் கொண்டு, தன் பரிமாணத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் லட்சம் மடங்கு தூரத்தை பயணிக்கும் லட்சியத்துடன் வேகமாக அவளை சென்று அடைவான்.

அவள்...

தன்னுடைய இருபத்திமூன்று அம்சங்களை அண்டத் திற்குள் பத்திரப்படுத்தி மழையின் துளிக்காக முத்துச் சிப்பியாக காத்திருந்தாள்.

இரு உயிரணுக்களும் இணைந்து, ஒரு உயிருள்ள கருவாக உருமாறும் சமயத்தில் ....

மலையின் குகைக்குள்ளே, கடலின் ஆழத்தில், அ்டர்த்தி யான காட்டுக்குள் காய்ந்த இலைகளுக்குக் கீழே, எங்கேயோ ஏதோ ஒரு மூலையில் யாரோ பெருமூச்சு விட்ட சத்தம்.

வானத்தில் பறந்து கொண்டிருந்த பறவைகள் கூட தம் பயணத்தை நிறுத்திவிட்டு கீழே நிலத்தைப் பார்த்தன. புல்லை மேய்ந்து கொண்டிருந்த மான்குட்டி ஒன்று யாரோ துரத்திக் கொண்டு வருவது போல் ஓட ஆரம்பித்தது. மந்தையிலிருந்து விலகி தொலைவாக வந்துவிட்ட ஆட்டுக் குட்டியை கண்ணிமைக்கும் நேரத்திற்குள் விழுங்கிவிட்டு சோம்பேறித் தனமாக மரத்தைச் சுற்றி பிணைந்து படுத்திருந்த மலைப்பாம்பு கூட தூக்கத்திலிருந்து யாரோ எழுப்பிவிட்டது

போல் பரபரப்புடன் விழித்துக் கொண்டு மேலே நகர்ந்தது. திடீரென்று பறவைகளின் கலகலப்பு, கீழே குரங்குகளின் சலசலப்பு . . . ஒரே மாதிரியாக இயற்கை சலனம் பெற்று விட்டது போல சுறுசுறுப்பாக இயங்கியது.

பூமியின் ஆழத்தில் எப்போதோ புதைந்து போயிருந்த இரண்டு பிணங்கள். . . ஒரிஸ்ஸாவில் . . . பிஸ்தா கிராமத்தில் . . . . .

யாரோ கொஞ்சம் அசைத்தாற் போல் ஒரே நேரத்தில் அசைந்தனவா? பூமியைப் பிளந்து கொண்டு மேலே நீட்டிய கைகள், கால வெள்ளத்தில் மண்ணோடு மண்ணாக புதைந்து கிடந்தவை - திரும்பவும் உயிர் பெற்று காற்றில் அசைந்தனவா? தனியத்திலிருந்த காற்றைக் கிழித்துக் கொண்டு வரும் தம் நாயகனை வரவேற்பது போல் அந்தக் கைகள் அசைந்தனவா?

உலகம் முழுவதும் ஏதோ சங்கடத்தில் ஆழ்ந்ததுபோல் தவித்த அந்த ஒரு வினாடி . . . . கேவலம் ஒரு சிலர் மட்டும் சந்தோஷத்துடன் பிசாசுகளாய் நாட்டியமாடிய அந்த ஒரு வினாடி.

அங்குலத்தில் முன்னூற்றில் ஒரு பங்கு மட்டும் இருந்த அவன் சிறிய தலையும் பெரிய வாலுடனும் மீன் எதிர்நீச்சல் போடுவது போல் பிரவாகத்தில் சில ஆயிரம் மைல்களை நீந்திக் கொண்டே தன்னுடைய இருப்பை நிலைநாட்டிக் கொண்டே அவளைச் சென்று அடைந்தான்.

ஆணின் வீரியத்திலுள்ள உயிரணு ஒன்று அந்த பீஜத்தை சுற்றிலும் வளைத்து இருபத்தி மூன்றை நாற்பத்தி ஆறாக மாற்றப் போகும் நேரத்தில் . . .

அதே நேரத்தில் . . .

அந்த கர்ப்பத்திற்குள் குடி புகுந்து கொள்வதற்காக நீண்ட உறக்கத்திலிருந்து மெதுவாக கண்களைத் திறந்து

பார்த்தது . . .

காஷ்மோரா! ! !

அந்த பிண்டம் மட்டும் உயிர்பெற்று விட்டால் ஒன்பது மாதங்கள் கழித்து பிறக்கப் போகும் அந்தக் குழந்தைதான் உலகத்தையே ஆளப் போகிறது. பிரளயத்தை ஏற்படுத்தப் போகிறது. அதுதான் காஷ்மோராவின் அம்சத்தை கொண்ட. . . .

**அஷ்டாவக்கிரன்**

# 1

ஒன்பது மாதங்களுக்குப் பிறகு ஒருநாள் . . .

அரபிக் கடலின் அலைகள் பனைமரம் உயரத்திற்கு எழும்பி கரையில் வந்து மோதிக் கொண்டிருந்தன. அந்தச் சத்தத்திற்கு கட்டிடங்கள் கூட அதிர்ந்து கொண்டிருந்தன. மெரின் டிரைவ் வழியாக காரில் போய்க் கொண்டிருந்தவர்கள் கடல்பக்கம் திரும்பிப் பார்க்கவும் பயந்து கொண்டிருந்தார்கள். பத்தடி தொலைவுக்குப் பிறகு கடலே தெரியாத அளவுக்கு மழை ஹோவென்று பெய்து கொண்டிருந்தது.

ஓஷன் வ்யூ நர்ஸிங் ஹோம். மும்பையிலேயே பெரிய ஆஸ்பத்திரி . . . முதல் மாடி.

மூடியிருந்த ஜன்னலின் இடுக்கு வழியாக காற்றும் மழையும் உள்ளே நுழைந்து சூழ்நிலையை மேலும் தீவிரமாக்க முயன்று கொண்டிருந்தன. இடி இடிக்கும் சத்தம் உள்ளே கேட்டுக் கொண்டிருந்தது. கரெண்ட் போய் ரொம்ப நேரமாகிவிட்டது. ஜெனரேட்டர் இயங்கிக் கொண்டிருந்தது.

இந்தியாவிலேயே பெயர் பெற்ற கைனகாலஜிஸ்ட் மிஸெஸ் பராஞ்ஜபேயின் நெற்றியில் வியர்வை அரும்பி யிருந்தது. ஏறக்குறைய அரைமணி நேரமாக அவள் செய்த முயற்சிகள் எல்லாம் தோல்வியடைந்துவிட்டன. அவளுக்குத் துணையாக உதவி செய்து கொண்டிருந்த டாக்டர்கள் இருவரும் பதட்டத்தில் இருந்தார்கள்.

டாக்டர் பராஞ்ஜபே இஞ்ஜெக்ஷனை கையில் எடுத்தாள். பக்கத்திலிருந்த டி.வி. ஸ்க்ரீனில் பிரதிமா

அகர்வாலின் வயிற்றில் இருக்கும் சிசுவுக்கு சம்பந்தப்பட்ட எக்ஸ்ரே தெளிவாக தென்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு குழந்தை இல்லை, இரட்டை. இரண்டு தலைகளும், இரு உடல்களும் தென்பட்டன.

இந்தப் பிரசவம் கஷ்டமாக இருக்கும் என்று அவளுக்கு முன்னாடியே தெரியும். அதனால் பதட்டப்படாமல் இஞ்ஜெக்ஷன் கொடுக்க முயன்றாள்.

திடீரென்று பிரதிமா அகர்வால் வேதனை குறைந்து விட்டாற்போல் நிம்மதியாக தென்பட்டாள். அதுவரையிலும் இருந்து வந்த பிரசவ வலி திடீரென்று மாயமாகிவிட்டது. ஆனால் அதுதான் ஆபத்து.

அனுபவம் மிகுந்த டாக்டர் நிமிடத்தில் நடந்ததை உணர்ந்துவிட்டாள். கருவில் குழந்தையை கவனமாக பாதுகாக்கும் பனிக்குடம் கருப்பையை கிழித்துக் கொண்டு குழந்தை வயிற்றுக்குள் நுழைந்தது. சாதாரணமாக இருந்தால் தாய் மற்றும் சேயின் வாழ்க்கை அந்த நிமிடமே முடிந்திருக்கும். ஆனால் நாட்டிலேயே பராஞ்ஜபேயை மிஞ்சுபவர்கள் யாரும் இல்லை.

அடுத்த நிமிடமே நோயாளியின் வயிறு அறுக்கப்பட்டது. மற்ற டாக்டர்கள் இருவரும் துரிதமாக தங்களுடைய கடமைகளை செய்ய ஆரம்பித்தார்கள். ஒரு டாக்டர் கருப்பையை முழுவதுமாக நீக்கிவிட்டு தாயின் உயிரைக் காப்பாற்றுவதில் மூழ்கிவிட்டார். மற்றொருவர் ரத்தப் போக்கை கட்டுப்படுத்துவதில் முனைந்தார். டாக்டர் பராஞ்ஜபே குழந்தைகளை காப்பாற்றும் பொறுப்பை எடுத்துக் கொண்டாள். கிழிக்கப்பட்ட வயிற்றுக்குள்ளிருந்து குழந்தைகளை வெளியே எடுக்கப் போனாள். அவ்வளவுதான்.

அவளுக்கு ஷாக் அடித்தாற்போல் இருந்தது. சந்தேகத்துடன் டி.வி. ஸ்க்ரீன் பக்கம் பார்த்தாள். அந்த

காலத்தில் தொழில்நுட்பம் இந்த அளவுக்கு முன்னேற வில்லை. ஸ்க்ரீன் மீது வெறும் எலும்புகளின் உருவம் மட்டும்தான் இரட்டையர்களை போல் தென்பட்டது.

ஆனால் கருப்பையில் இரண்டு குழந்தைகள் இல்லை.

இரண்டு தலைகள்.... நான்கு கைகள் .... நான்கு கால்கள்.

டாக்டர் ஒரு நிமிடம் தயங்கிவிட்டு உடனே தேறிக் கொண்டாள். கிளவுஸ் போட்ட கைகளால் அந்த சிசுவின் உடலை வெளியே எடுத்தாள்.

சாதாரண இரட்டைக் குழந்தைகளாக இருந்தால் உயிரோடு இருக்கும். இரண்டு உடல்களும் ஒட்டிப் பிறந்தாலும் பிழைத்துக் கொண்ட சந்தர்ப்பங்கள் உண்டு. ஆனால் விகாரமான உருவத்தில் வளர்ந்த பிண்டம் மட்டும் உயிரோடு இருக்காது. கருவிலிருந்து வெளியே வந்து ஓரிரு நிமிடங்கள் உயிரோடு இருந்தாலும் உடனே இறப்பது உறுதி.

அதனால் அவள் அந்தக் குழந்தையை உயிர்ப்பிக்கும் முயற்சி எதுவும் செய்யவில்லை. சாதாரணமாக அந்தக் குழந்தையின் பக்கம் பார்த்தாள்.

பார்த்ததும் திடுக்கிட்டாள். தன் வாழ்க்கையில் என்றுமே அவள் அந்த அளவுக்கு பயந்தது இல்லை.

அந்த சிசுவின் நான்கு கண்களும் அவளையே தீர்க்கமாக பார்த்துக் கொண்டிருந்தன, அவள் இதயத்தின் ஆழத்தை பரிசோதிப்பதுபோல். அப்பொழுதுதான்... பிறந்த குழந்தை கண்களைத் திறந்து பார்ப்பதே அதிசயம். அதிலும் அந்தப் பார்வை!

தான் பிரமையில் இருக்கிறோமோ என்று டாக்டர் ஒருமுறை தலையை சிலிர்த்துக் கொண்டாள். அவள் அவஸ்தையைப் பார்த்துதானோ என்னவோ இரண்டு முகங்களில் ஒரு முகத்தில் முறுவல் மலர்ந்தது. இரண்டாவது முகம் மட்டும் அவளை அப்படியே ஆழமாக பார்த்துக்

கொண்டிருந்தது.

அவள் வீலென்று அலற நினைத்தாள். ஆனால் பயத்தில் உடல் விறைப்பாகிவிட்டது. தன்னுடைய முப்பது வருட வைத்தியத் தொழிலிலோ அறுபது வயது வாழ்க்கையிலேயோ அவள் ஒரு நாளும் அந்த அளவுக்கு பீதி அடைந்ததில்லை. மேலும் ஒரு நிமிடம் கழிந்திருந்தால் அவள் என்ன செய்திருப்பாளோ தெரியாது. அதற்குள் அந்த தலைகள் இரண்டும் ஒரு பக்கமாக சரிந்துவிட்டன. உயிர்போய்விட்டது.

இதெல்லாம் கண்மூடித் திறப்பதற்குள் நடந்து முடிந்து விட்டது. நர்ஸ்களாகட்டும், பக்கத்திலிருந்த டாக்டர்களா கட்டும் யாருமே இதை கவனிக்கவில்லை. தாயின் உயிரைக் காப்பாற்றுவதில் மூழ்கியிருந்தார்கள்.

மேலும் பத்து நிமிடங்களில் ஆபரேஷன் முடிவடைந்தது.

★

**அ**தே அரபிக் கடலின் மற்றொரு கரையோரத்தில், தெற்கு திசையில். . . .

எர்ணாகுளத்திற்கு பத்துகிலோ மீட்டர் தொலைவில் ஒரு பட்டிக்காட்டில், கடல் அலைகளின் சத்தத்திற்கு நடுவில் ஒரு குடிசையில் நாட்டு மருத்துவச்சி ஒருத்தி பிரசவம் பார்த்துக் கொண்டிருந்தாள். குழந்தையின் தலை தென்பட்டு ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டது. அதே இடத்தில் நின்று விட்டது. “முக்கு. . . முக்கு” என்று பிள்ளைத்தாய்ச்சியைத் தொல்லைப்படுத்திக் கொண்டிருந்தாளே தவிர மருத்துவச்சி எதுவும் செய்யவில்லை. என்ன செய்வதென்றும் அவளுக்கும் தெரியாது. அவளுக்கு எந்த குவாலிஃபிகேஷனும் இல்லை. பத்து பிரசவங்களை பார்த்த அனுபவம் மட்டுமே இருந்தது. குழந்தை வெளியே வருவதற்காக விளக்கெண்ணெயை மட்டும் தாராளமாக தடவிக் கொண்டிருந்தாள். “என்ன

இது?" என்று யாராவது கேட்டால் மலையாளத்தில், "உங்க தாத்தா காலத்திலிருந்தே பிரசவம் பார்த்து வருகிறேன். இப்போ நீ வந்து என்னை கேட்கிறாயா?" என்று வசைபாடுவாள்.

அப்படிப்பட்டவள்கூட என்ன செய்வதென்று புரியாமல் குழம்பிப் போனாள். வயிற்றை அமுக்கி அமுக்கி அந்தப் பெண்ணை மேலும் மரணத்திற்கு அருகில் கொண்டுபோய் சேர்த்தாள்.

இறப்பதற்கு சரியாக ஒரு நிமிடத்திற்கு முன்னால் அந்த பிள்ளைத்தாய்ச்சிப் பெண்ணிற்கு மயக்கம் தெளிந்து விழிப்பு வந்தது. மரணம் நெருங்கிவிட்டதென்று அவள் உணர்ந்து கொண்டாள். அவள் கூலி வேலை செய்பவள். வயலில் வேலை பார்த்து வந்தாள். இறப்பதற்குமுன் தனக்குத் தெரிந்த ரகசியத்தை உலகிற்கு வெளிப்படுத்த நினைத்தாள். மிகக் கொடூரமான அந்த உண்மை மட்டும் அவள் வாயிலிருந்து வெளிப்பட்டிருந்தால் என்ன நடந்திருக்குமோ தெரியாது. ஆனால் அந்த விஷயம் வெளிப்படுவதில் விருப்பம் இல்லாதது போல், யாரோ ஊதி அணைத்துவிட்டாற்போல் காடா விளக்கு சட்டென்று அணைந்துவிட்டது. அத்துடன் அந்தப் பெண்ணின் உயிரும் காற்றில் கலந்துவிட்டது. அந்தப் பெண்ணின் மாமியார் கிழவி மறுபடியும் விளக்கை ஏற்றிக் கொண்டு வருவதற்குள் மருத்துவச்சி 'மாயை'யைப் பிடித்து வெளியே இழுத்தாள். மாயை விழுவதற்குள் தொப்புள் கொடியை அறுத்தால் குழந்தைக்கு ஆபத்து என்ற மூட நம்பிக்கை அவளுக்கு.

அதற்குள் மாமியார் கிழவி விளக்கை கொண்டு வந்தாள். ஏற்கனவே குழந்தை அசையாமல் இருந்ததை மருத்துவச்சி கவனித்துவிட்டாள். தன்னுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்வதற்காக குனிந்து பார்த்தவள் கிரீச்சென்று கத்தினாள். அந்த சிசுவுக்கு நெற்றியில் ஒரு கண்தான்

இருந்தது. மூக்கு இருக்கவில்லை. வாய் இருக்க வேண்டிய இடத்தில் சின்ன ஓட்டை இருந்தது. பூமியில் விழுந்ததும் அந்தக் குழந்தை இறந்துவிட்டது.

மும்பை போன்ற பெரிய நகரம் இல்லை என்பதால் நிமிடத்தில் கிராமம் முழுவதும் செய்தி பரவிவிட்டது. மக்கள் எல்லோரும் வந்து வேடிக்கை பார்த்துவிட்டுப் போனார்கள். மாலையாவதற்குள் விஷயம் பழசாகிவிட்டது. தாயையும், குழந்தையையும் குலவழக்கப்படி புதைத்தார்கள்.

அதே நாள் நள்ளிரவும் தாண்டியபிறகு மாடு மேய்ப்பவர்களைப் போல் தென்பட்ட இரண்டு நபர்கள் இடுகாட்டில் குழியைத் தோண்டினார்கள். குழந்தையின் பிணத்தை வெளியே எடுத்து பரிசீலிப்பது போல் பார்த்தார்கள். மறுபடியும் பழையபடி புதைத்துவிட்டு எழுந்து நின்றார்கள். கறுப்புக் கம்பளிப் போர்வை அவர்களுடைய முகத்தை மறைத்துக் கொண்டிருந்தது. அப்படியே வெளியே வந்து இருட்டில் கலந்துவிட்டார்கள்.

அரை மணி நேரம் கழித்து அவர்கள் உட்கார்ந்திருந்த ஹெலிகாப்டர் மும்பையை நோக்கி பறந்து கொண்டிருந்தது.

நாட்டில் தலா ஒரு மூலையில் நடந்த இந்த இரண்டு பிரசவங்களுக்கும் நடுவில் சம்பந்தம் எதுவும் ஊகிக்க முடியாத உலகம், ஆழமான உறக்கத்தில் இருந்தது.

## 2

ரோஜா வண்ண ஃபியட் கார் போர்டிகோவில் வந்து நின்றது. கார் நின்ற உடனேயே டிரைவர் அவசர அவசரமாக இறங்கிப் பின் கதவைத் திறந்து பணிவோடு நின்றான்.

மெதுவாக இறங்கினாள் கேதார கௌளி. அந்த வயதில் பலபேரிடம் இல்லாததும், தென்படாததும் அவளிடம்

இருந்தது. அதுதான் கருணை. மழை பெய்து முடிந்தபின் மேகங்கள் விலகித் துல்லியமாகத் தெரியும் வானத்தைப் போல் இருந்தது அவள் முகம்.

காருக்கு அந்தப் பக்கத்திலிருந்து இறங்கினான் ராகேஷ். ஆறடி உயரம். கட்டம் போட்ட புஷ்ஷர்ட். நெற்றியில் வந்து விழும் கேசங்கள். காரை விட்டிறங்கி அவளோடு சேர்ந்து படியேறிக் கொண்டே "மாலை புரோகிராம் பற்றி என்ன முடிவு செய்தாய் கௌரீ?" என்று கேட்டான்.

அவனோடு சேர்ந்தாற் போல் நடக்கும்போது அவன் தோளுக்குக் கீழே வந்தாள். அதனால் நிமிர்ந்து அவனைப் பார்த்து "அதான் சொன்னேனே ராகேஷ்! அக்ரிகோவுக்கு ஒரு கட்டுரை எழுதணும் என்று" என்றாள்.

அவன் கடைக்கண்ணால் பார்த்துவிட்டு "நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள் கௌரி. எனக்கு வெறும் தியரி மீது அவ்வளவு நம்பிக்கை இல்லை" என்றான்.

அவள் சூட்டிகை என்பதால் புரிந்து கொள்வாள் என்று எண்ணி சிரிக்கப் போனான்.

குறும்புத்தனமாகச் சிரிக்கப் போன அவன் உதடுகள் அவள் முகத்தைப் பார்த்துவிட்டு அப்படியே நின்றுவிட்டன. இத்தனைக்கும் அதில் அதிகாரமோ, மறுப்போ, கோபமோ இல்லை. சர்வசாதாரணமாகப் பார்த்தாள், அவ்வளவுதான். அதிலிருந்த தூய்மை! அதுதான் அவனை பயமுறுத்தியது. அதுதான் கோட்டைச் சுவராய் அவனை என்றுமே தொலைவில் நிற்க வைத்துக் கொண்டிருந்தது.

அவன் தாய் அவளுடைய தந்தைக்கு தூரத்து உறவு, தங்கை முறை. தாய் தந்தையரை இழந்த அவன் பதினாறாவது வயதிலேயே அவர்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். ஆனால் அவனைப் பார்ப்பவர்கள் யாருமே அது போல் எண்ண மாட்டார்கள். வாயில் தங்க ஸ்பூனுடன் பிறந்தவனாகத்தான்

நினைப்பார்கள்.

பணத்தின் அருமையை சிறுவயதிலேயே நன்றாக உணர்ந்து கொண்டுவிட்டான். இப்பொழுது தருணம் வந்து வாய்த்திருக்கிறது. கௌரியை மணந்துகொண்டால் அவள் சொத்தெல்லாம் தனக்கே சொந்தமாகிவிடும். அதனால்தான் அவன் அவளை உயிராய் பாவித்து வந்தான்.

அவனும் அவளும் ஒரே படிப்பு. ஒரே வருஷம். அக்ரிகல்சர் யூனிவர்சிடீயில் நான்காம் வருஷம். கல்லூரிக்கு காரில் வருபவர்கள் அரிது. ஒரே வீட்டில் இருப்பதால் அவளோடு அவனும் ஒன்றாக காரில் வருவான். மாலையில் மட்டும் மாமாவுக்கு தெரியாமல் அவளைக் கெஞ்சி கூத்தாடி காரை எடுத்துக்கொண்டு நண்பர்களுடன் ஊர் சுற்ற போய்விடுவான். அவளும் தந்தையிடம் சொல்லமாட்டாள். அப்படி அவருக்கு கார் தேவையாக இருந்து கோபித்துக் கொண்டால் சிநேகிதிக்குத் தந்ததாகச் சொல்லி தவற்றை தன் மீது போட்டுக் கொண்டுவிடுவாள். அவள் அந்த மாதிரி இருந்ததால் வீட்டிலிருந்த வேலைக்காரர்கள் முதல் மல்லிகைக் கொடி வரையிலும் அவள் மீது கொள்ளைப் பிரியம் வைத்திருந்தார்கள்.

அவளுக்கு வேளாண்மை படிப்பின் மீது ஆர்வம் அதிகம். செடி கொடிகளை, பூக்களை, மிக நெருங்கியவர்களாக பாவித்தாள். நான்கு ஏக்கர் நடுவில் கட்டப்பட்டிருந்தது அவர்களின் வீடு. அதிலிருந்த ஒவ்வொரு செடியும் அவளுக்கு நன்றாகத் தெரியும், தோட்டக்காரனைவிட அதிகமாகவே.

இரவு முழுவதும் பால்கனியில் விளக்கைப் போட்டுக் கொண்டு படித்தபடியே தலையை உயர்த்துவாள். சுற்றிலும் உள்ள செடி கொடிகள் எல்லாம் தன்னையே கண்ணிமைக் காமல் பார்ப்பது போல் தோன்றும். தன்னுடைய எண்ணங்களை நினைத்து உள்ளூர சிரித்துக் கொள்வாள்.

மனிதர்களை விட தாவரங்களின்பால் அதிக அன்பை வளர்த்துக் கொண்டதற்குக் காரணம் இருந்தது. அவை வெறிபிடித்து நாட்டியமாடாது. குதிக்காது. சந்தோஷம் ஏற்பட்டால் நிதானமாக தலையை ஆட்டும். அவ்வளவுதான், கேதாரகௌளரியைப் போலவே.

அவள் தந்தைக்கு அவளைக் கண்டால் பிரியம் அதிகம். அவர் பெயர் பவானிசங்கர். பெரிய வியாபாரப் புள்ளிகளில் ஒருவர். ஓடுகள் தயாரிக்கும் தொழிலில் மாதத்திற்கு பல லட்சங்கள் லாபம் சம்பாதித்து வந்தார்.

லட்சாதிபதியாக இருந்தவர் கோடீஸ்வரனாகும் தருவாயில் அவருடைய மனைவி இறந்துவிட்டாள். அன்றிலிருந்து மகனையும், மகளையும் பார்த்துக் கொண்டு மறுமணம் செய்து கொள்ளாமல் இருந்துவிட்டார். நடுவில் மகன் வீட்டை விட்டு ஓடிவிட்டான். சில நாட்கள் கழித்து இதோ ராகேஷ் வந்து குடும்பத்தில் மற்றொரு அங்கத்தினராக சேர்ந்து கொண்டான்.

கல்லூரியிலிருந்து வந்ததுமே குளிப்பது அவள் வழக்கம். ஆனால் அன்று ஏனோ வந்ததும் படுத்துக் கொண்டாள். யார் சொன்னார்களோ தெரியாது. அடுத்த ஐந்தாவது நிமிடம் பவானிசங்கரின் கார் வாசலில் வந்து நின்றது. அவர் பரபரப்புடன் உள்ளே வந்து கொண்டே "என்னம்மா? உடம்பு சரியாக இல்லையா?" என்று கேட்டார்.

அவள் அதற்கு பதிலளிக்காமல் "என்னைத் துப்பறிவதற்கு ஆட்களை வைத்திருக்கீங்களா டாடீ?" என்றாள்.

பவானிசங்கர் அதிர்ந்தவராய் "என்னம்மா? எதற்காக இப்படி கேட்கிறாய்?" என்றார்.

"இன்றைக்கு என் தினசரி நிகழ்ச்சி நிரலில் ஏற்பட்ட சின்ன மாறுதல் ஐந்தே நிமிடங்களில் உங்களுக்குத் தெரிந்து

என்றாள் சிரித்தபடி.

வேறு ஏதோ சீரியஸான விஷயம் என்று எதிர்பார்த்த பவானிசங்கர் கூட சிரித்துவிட்டு "ஓ. . . அதுவா" என்றார்.

அவள் அந்த விஷயத்தை விளையாட்டுக்காகத்தான் சொன்னாளோ இல்லையோ தெரியாது. ஆனால் அவருடைய ஆட்கள் அந்த வீட்டிலும், அவ்வூரிலும் நிறைய பேர் இருந் தார்கள். உளவாளிகள் என்ற பெரிய பெயர் தேவையில்லை. ஆனால் அவர் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு சிறிய விஷயத் தையும் தகவல் சேகரித்து தெரிவிக்க நிறைய ஆட்கள் இருந்தார்கள். கோடிக் கணக்கான பணத்தோடு புரளும் வியாபாரிகளுக்கு கைவசம் அந்த மாதிரி ஆட்கள் இருப்பது தேவைதான்.

அத்தகைய ஒரு ஆள் அன்று அவருக்குக் கொண்டு வந்த தகவல்தான் அவர் மனதைப் பெரிதும் கலவரப்படுத்திக் கொண்டிருந்தது. ராகேஷைப் பற்றிய சமாச்சாரம் அது. ஆனால் வியாபாரத்துறையில் கைதேர்ந்தவரானதால் தன் மனதில் இருந்ததை வெளியில் காட்டிக் கொள்ளாமல் ஜாக்கிரதையாக இருந்தார்.

வந்து கட்டிலில் அமர்ந்தார். "இன்னும் நீ என் கேள்விக்கு பதில் சொல்லவே இல்லையே?" என்றார்.

"எந்த விஷயம் டாடீ?"

"இன்றைக்கு நீ ஏதோ போல் இருப்பது."

"அப்படி எதுவும் இல்லை டாடீ."

"பரீட்சைகள் முடிந்ததுமே உங்க கல்யாணத்தை முடித்து விடலாம்னு இருக்கேன். என்ன சொல்கிறாய்?"

திடீரென்று எதிர்பார்க்காமல் அசந்தர்ப்பமாக அவர் வாயிலிருந்து இந்த விஷயம் வெளி வரவும் திகைத்துப்

போனாள் அவள். எவ்வளவு அதிர்ச்சி அடைந்தாள் என்றால் அவளால் உடனே பதில் சொல்ல முடியவில்லை.

அவருக்கு அந்த விஷயம் தெரியும். அதான் அப்படிக் கேட்டார். எதிர்பாராத நேரத்தில் இவ்வாறு சிக்க வைத்தால் எதிராளியின் மனம் உள்ளது உள்ளபடி வெளிப்பட்டுவிடும் என்பதை அனுபவம் அவருக்குக் கற்றுத் தந்திருந்தது.

"ஒரே வீட்டில் இருந்து கொண்டு எதற்காக இன்னும் தாமதம் செய்யணும்? அது அவ்வளவு நல்லதும் இல்லை. பண்ண வேண்டியதை காலாகாலத்தில் பண்ணி வைத்துவிட்டு அவனிடம் வியாபாரத்தை ஒப்படைத்து விட்டால் என் பொறுப்பு தீர்ந்துவிடும்." கடைக் கண்ணால் மகளைப் பார்த்துக் கொண்டே சொன்னார்.

அவளால் சட்டென்று எதுவும் பேசமுடியவில்லை. ஏதோ இனம் புரியாத தயக்கம்.

பத்தாண்டுகளாக இருவரும் சேர்ந்தே வசித்து வந்திருக்கிறார்கள். எல்லாம் தீர்மானமாகி விட்டாற் போல்தான். ராகேஷைத் தட்டிக் கழிக்கும் அளவுக்கு அவனிடம் எந்தக் குறையுமே இல்லை.

ஆனால் . . .. ஆ. .னா. . . ல் ?

காதலுக்கு எல்லாம் நன்றாக இருந்துவிட்டால் மட்டுமே போறாது. இன்னும் வேறு ஏதோ தேவை. அவள் சங்கடத்தோடு நிமிர்ந்து பார்த்தாள். "இன்னும் ஆறு மாதங்களுக்குப் பிறகு நடக்கப் போகிற விஷயத்தைப் பற்றி இப்போ எதற்காக பேசணும்?" என்றாள்.

அவர் நிம்மதியாக மூச்சை விட்டுக் கொண்டார். அவள் மட்டும் அந்தக் கேள்விக்கு வெட்கப்பட்டுக்கொண்டே "உங்க இஷ்டம் டாடீ" என்று அரைமனதுடன் சம்மதித்து இருந்தால்கூட அவர் பெரிய சங்கடத்தில் ஆழ்ந்திருப்பார். ராகேஷிடம் மகளுக்கு இன்னும் தெளிவான விருப்பம்

ஏற்படாதது அவருக்கு சந்தோஷத்தைத் தந்தது. இன்று கேள்விப்பட்ட விஷயத்தைப் பற்றி முழுவிவரங்களையும் சேகரித்துக் கொள்வதற்கு அந்த அவகாசம் போதுமானது. மனம் லேசாகிவிட்டது அவருக்கு.

"இத்தனைக்கும் நான் கேட்டதற்கு நீ பதில் சொல்லவே இல்லை" என்றார்.

"ஒன்றுமில்லை டாடீ."

"இதோ பாரும்மா. சிறு வயதுமுதல் உன்னை வளர்த்தவன் நான். உன் சுபாவம் எனக்குத் தெரியாதா? சரி அதைவிடு. ஒரு பிசினெஸ்மேனுக்கு எதிராளியின் மனதில் இருப்பதை கண்டுபிடிப்பது கை வந்த கலை. உன்னிடம் மயிரிழை வேறுபாடு தோன்றினாலும் கூட என்னால் சட்டென்று கண்டுபிடித்து விட முடியும்."

வேறு வழியின்றி அவள் "ரொம்ப சின்ன விஷயம் டாடீ" என்றாள். மேற்கொண்டு அவள் சொல்லட்டும் என்பதுபோல் அவர் மௌனம் சாதித்தார். அந்த நிசப்தத்தைத் துளைத்துக் கொண்டு வெளிப்பட்டது அவள் குரல்.

"நேற்று இரவு எனக்கு ஒரு கனவு வந்தது டாடீ. முழுவதுமாக சொல்கிறேன். ஆனால் சிரிக்கக் கூடாது. நான் இதே போல் படுத்துக் கொண்டிருந்தபோது பார்வதி பரமேசுவரன் தென்பட்டு 'உனக்கு என்ன வேண்டுமோ கேள்' என்று சொல்கிறார்கள். நான் அவர்களை வணங்கிவிட்டு 'எந்த ஜென்மத்தில் செய்த புண்ணியமோ எனக்கு கொஞ்சம் அறிவு இருக்கு. உயிருக்கு மேலாக பார்த்துக் கொள்ளும் தந்தை இருக்கிறார். பணமும் தேவைக்கு அதிகமாகவே இருக்கிறது. முடிந்தால் என் காலை சரியாக்கி விடுங்கள்' என்று வேண்டிக் கொண்டேனாம்."

உதடுகளை அழுத்திக் கொண்டு வரும் அழுகையை அடக்கிவிட முடிந்தாலும், கண்ணீரை இமைகளால் தடுத்து

நிறுத்திவிட முடியவில்லை. அத்தனை பெரிய பிசினெஸ் டைகூன் கூட மனம் கலங்கிப் போனவராய் அவள் தலை மீது கையை வைத்து "வருத்தப்படாதேம்மா" என்றார்.

கண்ணீருக்கிடையே சிரித்த அவள் "வருத்தமா? எனக்கு வருத்தம் எதுக்கு டாடீ?" என்று பின்னுக்குச் சாய்ந்து உட்கார்ந்தபடி "எனக்கு இந்த மாதிரி கனவு வந்தது என்றால் என் உள் மனதில் எந்த மூலையிலேயோ நான் இதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்று அர்த்தம். எந்த எண்ணத்தை நான் தவிர்க்க நினைக்கிறேனோ அந்த எண்ணம் என்னைவிட்டு விலகிப் போகவில்லை என்று அர்த்தம். என் கவலை எல்லாம் என் அங்கஹீனத்தைப் பற்றி இல்லை டாடீ. இந்த மாதிரி யோசனை வந்ததற்காகத்தான்."

"ஆனால் . . ."

"என்னைக் கொஞ்ச நேரம் தனியாக இருக்க விடுங்கள் டாடீ."

அவர் ஏதோ சொல்ல வந்தவர் சட்டென்று மனதை மாற்றிக் கொண்டு தலையை அசைத்துவிட்டு அங்கிருந்து வெளியேறினார்.

அவள் தனித்துவிடப்பட்டாள். அவள் பார்வை தன்னை யறியாமல் காலின் மேல் படிந்தது. கீரைத் தண்டுபோல் துவண்டு தொங்கிக் கொண்டிருந்த காலை எடுத்து கட்டில்மீது சரியாக வைத்துவிட்டு மறுபடியும் படிக்கத் தொடங்கினாள்.

பேத்தாலஜி அவளுக்கு ரொம்ப இஷ்டமான சப்ஜெக்ட். நோயைப் பற்றி விவரிக்கும் சாஸ்திரம் அது. வேடிக்கை என்னவென்றால் அவள் படித்துக் கொண்டிருந்த பிளாண்ட் பேத்தாலஜியில் மட்டும் போலியோ பற்றி இருக்காது, திரும்பத் திரும்ப தன் குறையை நினைவூட்டும்படி.

மும்முரமாக படித்துக் கொண்டிருந்தவள்

கடியாரத்தைப் பார்த்தாள். 'நேரம் போனதே தெரியவில்லை' என்று நினைத்துக் கொண்டே புத்தகத்தை மூடி வைத்துவிட்டு படுக்கையில் சாய்ந்தாள்.

அப்போது மணி சரியாக பன்னிரெண்டு.

இரவு பன்னிரெண்டு மணி.

நாலைந்து கட்டிடங்களுக்கு நடுவில் இருந்த ஒரு குறுகிய தெரு. சாக்கடைத் தண்ணீர் தெருவுக்குள் ஓடிக் கொண்டிருந்தது. உயர்ந்த கட்டிடங்கள் இருந்ததால் வெளிச்சம் படாமல் மறைத்தது. எப்போதும் இருள் படர்ந்திருந்த அந்த இடத்தில் ஒருவிதமான துர்நாற்றத்துடன் காற்று வீசிக் கொண்டிருந்தது.

அந்தத் தெருவில் இரண்டு பேர் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். ஒருத்தன் குள்ளமாகவும், பருமனாகவும் இருந்தான். அடுத்தவன் உயரமாக இருந்தான். குளிர் இல்லாவிட்டாலும் கழுத்தில் மஃப்ளர் கட்டியிருந்தார்கள்.

"பரீட்சை ரொம்ப கடினமாக இருக்குமோ?" கேட்டான் உயரமாக இருந்தவன்.

"அவ்வளவு கடினமாக இருக்காது. ஆனால் மனதில் கபடமிருந்தால் மட்டும் மரணம் உறுதி. அது நீயாக இருந்தாலும் சரி நானாக இருந்தாலும் சரி."

"பிசாசுகளை நம்புகிறவனின் மனதில் கபடம் இல்லாமல் வேறு என்ன இருக்கும்?"

"அப்படிச் சொல்லாதே. நம்பிக்கைதான் முக்கியம். சிலர் கடவுளை நம்புவார்கள். வேறு சிலர் பிசாசை நம்புவார்கள். இதுவரை அவர்கள்தான் ராஜ்ஜியம் ஆண்டு வந்தார்கள். இனி நாம் ஆளப் போகிற நாள் வந்துவிட்டது."

"எப்போது?"

"நெருங்கிவிட்டது என்று தெரியும். ஆனால் எப்போது என்று தெரியாது. அது எப்போ வருமோ, எப்படி வருமோ ஒருத்தனுக்கு மட்டுமே தெரியும் - "

"யாருக்கு?"

குள்ளனின் முகத்தில் திடீரென்று மாறுதல் தென்பட்டது. 'அவனைப்' பற்றி நினைத்ததால் வந்த மாற்றம் அது. மெதுவாக தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டே தாழ்ந்த குரலில் சொன்னான்.

"மகாத்ரஷ்டாவுக்கு - "

"மகாத்ரஷ்டாவா?"

"ஆமாம். யாருடைய பெயரைச் சொன்னால் அழும் குழந்தை கூட பாலை மறுத்துவிட்டு ரத்தத்தைக் கேட்குமோ, யாரைப் பற்றிக் கேள்விப்பட்டதுமே தங்களுடைய நாயகனாக மதிப்பார்களோ . . . அவன்தான் உஸ்ஸோக்கின் தலைவன். உஸ்ஸோக்! (Under World Society of Secret occult) நம் தெய்வம். இந்த உலகத்திற்கு வெகு சீக்கிரத்திலேயே சக்கரவர்த்தியாகப் போகிறவன். மகாத்ரஷ்டா!"

"அவனைச் சந்திக்க முடியுமா?"

"சந்திப்பதா. . . அவனையா?" என்று உரத்தக் குரலில் சிரித்தான் குள்ளன். "அவனை நேரில் பார்த்தவர்களே ரொம்ப குறைவு. ரெட் ஸ்கெலிடன் நிலையில் இருப்பவர்கள் மட்டுமே பார்க்க தகுதி படைத்தவர்கள். அந்த நிலைக்கு வரணும் என்றால் நிறைய படிகளைக் கடக்கணும்."

"எவ்வளவு நாள் ஆகும்?"

"உன்னை ஆறுமாதங்கள் பரிசோதித்த பிறகுதான் இங்கே அழைத்து வருகிறேன். இந்த கூட்டத்தில் உன்னைச் சேர்த்துக் கொண்டுவிட்டால் உனக்கு ப்ளூஸ்கெலிடன்

மெம்பர்ஷிப் தரப்படும். பத்து பதினைந்து வருடங்கள் இடைவிடாமல் வேலை செய்தால் வைட் ஸ்கெலிடனாக பதவி உயர்வு கிடைக்கும். அதற்குப் பிறகு எல்லோ, அதற்கு மேல் பிளாக். இவற்றை அடைய எவ்வளவோ பாடுபடவேண்டும். பிளாக் ஸ்கெலிடன் ஆன பிறகு ஏதாவது சிறப்பான காரியம் செய்தால் அப்பொழுதுதான் ரெட் ஸ்கெலிடன் ஆக முடியும். அவனுக்கு மட்டும்தான் மகாத்ரஷ்டாவைச் சந்திக்கும் தகுதி உண்டு. அவ்வளவு கஷ்டமான காரியம்."

"இதெல்லாம் பார்த்தால் ஏதோ கராத்தே போல் தோன்றுகிறது."

"ஆமாம். சின்ன தவறு நேர்ந்தாலும் பிசாசுகளின் அதிபதி குடலைப் பிடுங்கிவிடுவான்."

உயரமானவன் தன்னையும் அறியாமல் நடுங்கினான்.

அதற்குள் அவ்விருவரும் ஒரு பழங்காலத்து வீட்டிற்கு முன்னால் வந்து நின்றார்கள். பத்தடி உயரமான அதன் கதவுகள் மழையில் நனைந்தும், வெயிலில் காய்ந்தும் விறைத்துப் போயிருந்தன. எந்தக் காலத்திலிருந்தோ மூடிக் கிடப்பது போல் தென்பட்டன.

குள்ளமானவன் மணியை அழுத்தினான். உள்ளே மணியோசை கேட்டது. அடுத்த நிமிடம் கதவு திறந்து கொண்டது.

உள்ளே நுழையும் போது உயரமானவன் "ஒரு சந்தேகம்" என்றான்.

"என்ன?"

"ஆறு மாதங்கள் என்னைப் பரிசோதித்தது உண்மைதான். ஆனால் எவ்வளவோ ரகசியமான இந்த கூட்டத்தில் சேருவது இவ்வளவு சுலபமாக இருந்தால் இந்த நேரத்திற்கு இதில் யாராவது எதிரிகள் சேர்ந்து

அரசாங்கத்திற்கு இதைப்பற்றி தகவல் சொல்லி யிருக்கலாமே?”

குள்ளன் சிரித்தான். “மனதில் கபடம் வைத்துக் கொண்டு இங்கே யாராலுமே பொய் சொல்லிவிட முடியாது. எவ்வளவு அனுபவசாலியான உளவாளியாக இருந்தாலும் சரி குட்டிச் சாத்தானுக்கு முன்னால் தலை வணங்க வேண்டியதுதான். பொய் சொல்லிவிட்டு இந்த எல்லை வரையிலும் வந்து விட்டாலும் உயிரோடு மட்டும் திரும்பிப் போய்விட முடியாது.

டப் என்ற சத்தம் கேட்டு உயரமானவன் திரும்பிப் பார்த்தான். கதவுகள் மூடிக் கொண்டன.

ஏனோ தெரியவில்லை. அவன் மேனி தன்னையறியாமல் நடுங்கியது. சில ஆயிரக் கணக்கான கண்ணுக்குத் தெரியாத உருவங்கள் தன்னைச் சுற்றி வருவது போலவும், லட்சக் கணக்கான கண்கள் ரகசியமாக தன்னை கண்காணிப்பது போலவும் தோன்றியது. காதுக்கு அருகில் காற்று ஹோவென்று அலறிக் கொண்டே போனது போலிருந்தது. குளிர்ந்த காற்று உடலைத் தழுவியது. உடனே அங்கிருந்து வெளியேறி விட வேண்டும் என்று நினைத்தான். வாயைத் திறந்து ஏதோ பேச முயன்றான். குரல் எழும்ப மறுத்தது.

முதுகெலும்பை யாரோ நகத்தால் பிராண்டுவது போலவும், நரம்புகள் முறுக்கேறுவது போலவும் உணர்ந்தான். ‘பயமாக இருக்கு. நான் போய்விடுகிறேன்’ என்று சொல்ல நினைத்தான். ஆனால் முடியவில்லை.

இதை எதையும் கவனிக்காத குள்ளன் தன் பாட்டுக்குச் சொல்லிக் கொண்டே போனான். “அதனால்தான் இவ்வளவு நாட்களாக இந்த சொஸைட்டி இத்தனை கட்டுக் கோப்புடன் செயல்பட்டு வருகிறது. நீ அதிர்ஷ்டசாலி. கடைசி நேரத்திலாவது எங்களுடன் வந்து சேர்ந்தாய், எஞ்சிய மக்கள் எல்லோருமே நமக்குக் கீழே அடிமையாகப் போகும்

தருணத்தில்."

இருவரும் விசாலமான ஹாலுக்குள் அடியெடுத்து வைத்தார்கள்.

அங்கே ஒரு கிழவன் வெண்ணிற தாடியுடன் உட்கார்ந்திருந்தான்.

"இவன்தானா மகாத்ரஷ்டா?" ரகசியமாக கேட்டான் உயரமானவன்.

"இல்லை இல்லை. இவன் வெறும் வைட் ஸ்கெலிடன் மட்டும்தான்."

"நீ?"

"நானும் உன்னைப் போலவே ப்ளூ ஸ்கெலிடன்தான். பத்து ஆண்டுகளாக இப்படியேதான் இருந்து வருகிறேன்."

உயரமானவன் கடந்த ஆறு மாதங்களாக இதைப் பற்றியேதான் யோசித்துக் கொண்டிருந்தான். முதலில் சாதாரணமாக எடுத்துக் கொண்டான். ஆனால் நண்பன் மேலும் மேலும் வற்புறுத்திச் சொன்னதும் நம்பிக்கை ஏற்பட்டது. இப்போ சுயமாக பார்த்தபோது அந்த நம்பிக்கை உறுதியாகிவிட்டது.

"வைட் ஸ்கெலிடன் ஆனதும் எத்தனையோ கிராதங்களை செய்தான். மகாத்ரஷ்டாவின் பாராட்டை பெறுவதற்காக பூத தேவதைகளுக்கு எத்தனையோ குழந்தைகளையும், கன்னிப் பெண்களையும் பலி தந்திருக்கிறான். இன்னும் எல்லோ ஸ்கெலிடனாக பதவி உயர்வு கிடைக்கவில்லை. அதற்காக பெரும் முயற்சி செய்து வருகிறான். ஆனாலும் மகாத்ரஷ்டாவின் அனுகிரகம் இவனுக்கு கிடைக்கவில்லை" என்று அவன் அருகில் சென்று "உஸ்ஸோக்கில் சேர்ப்பதற்காக ஒரு நபரை அழைத்து வந்திருக்கிறேன்" என்றான்.

கிழவன் தலையை அசைத்தான். குள்ளன் அங்கிருந்த நெருப்புக்கு முன்னால் முழங்காலிட்டு அமர்ந்து கொண்டு "உஸ்ஸோக்கின் நிபந்தனைகளை அனுசரித்து ஆறுமாதங்கள் பரிசோதித்துவிட்டு திருப்தி அடைந்த பிறகு இவனை அழைத்து வந்திருக்கிறேன்" என்றான்.

மூவரும் பக்கத்து அறைக்குச் சென்றார்கள், கிழவன் வாயையே திறக்காததை உயரமானவன் கவனித்தான். அவன் கண்களில் மிதந்த விஷமயமான பளீரென்ற ஒளியையும் கவனிக்கத் தவறவில்லை. ஒரு புதிய உலகத்திற்குள் அடியெடுத்து வைத்தாற் போலிருந்தது. உள்ளே தென்பட்ட காட்சியைப் பார்த்து அதிர்ச்சியடைந்தான்.

அந்த அறைக்குள் பெரிய கெலிடன் இருந்தது. கீழே இரண்டு துளைகள் இருந்தன. முற்காலத்தில் தூக்குத் தண்டனைக்குப் பதில் அது போன்ற சாதனத்தைத்தான் பயன்படுத்தி வந்தார்கள்.

இருவரின் கைகளும் பின்னால் சேர்த்துக் கட்டப்பட்டன. இருவரும் முழங்காலிட்டு அமர்ந்து கொண்டு தலையை அதற்குள் நுழைத்ததும் மேலேயிருந்து ஸ்க்ருக்கள் பொருத்தப் பட்டன. மேலே இருந்த பிளேடின் ஒளி பளபளத்தது. அது கீழே இறங்கிவிட்டால் போதும் இருவரின் கழுத்துக்களும் துண்டிக்கப்பட்டுவிடும்.

"இப்போ உன்னிடம் சில கேள்விகள் கேட்பார்கள். நீ பொய் சொல்ல நினைத்தாலும் முடியாது. நீ வேறு எண்ணத்துடன் இங்கே வந்திருந்தாயானால், அந்த விஷயம் உன் வாயிலிருந்து வெளிப்பட்ட மறுவினாடி மேலே இருக்கும் பிளேட் சர்ரென்று கீழே இறங்கிவிடும். உன்னையும், சரியாக சோதிக்காமல் உன்னை அழைத்து வந்ததற்காக என்னையும், ஒரே நேரத்தில் கொன்றுவிடும். அப்படி நடக்காது என்று எண்ணுகிறேன்" என்று கண்களை மூடிக் கொண்டான் குள்ளன். உயரமானவனும் கண்களை

மூடிக் கொண்டான்.

கொஞ்ச நேரம் நிசப்தம். ஏதோ ஓசை கேட்டது. தொலைவில் எங்கேயோ இரண்டு எலிகள் கீச் கீச் என்று சண்டை போட்டுக் கொள்வது போன்ற சத்தம். கம்பியின் மீது ஒரே தாளலயத்துடன் மீட்டுவது போன்ற சத்தம். அவன் தன்னைக் கட்டுப்படுத்த முயன்று தோற்றுப் போனான். மயக்கம் ஆட்கொள்ளப் போனபொழுது கிழவனின் குரல் முதல் முதலாக கேட்டது.

“உஸ்ஸோக் சமூகத்தில் சேருவதற்கு ஆர்வம் காட்டும் இளைஞனே! உனக்கு நல்வரவு. உன் விருப்பங்களை எல்லாம் குட்டிச்சாத்தான் நிறைவேற்றி வைக்கும். சாத்தானையே நம்பு. இப்போது நீ எங்கள் கேள்விகளுக்கு நேர்மையாக பொய் கலக்காமல் பதில் சொல்லப் போகிறாய்.”

அவன் காதில் இந்த வார்த்தைகள் விழுந்தன. யோசித்துப் பார்க்க முயன்றான். ஆனால் மூளை தன் சுவாதீனத்தில் இல்லை.

“நண்பனே! இப்போது சொல்லு. நீ ஏன் இந்த கடினமான காரியத்தை தேர்ந்தெடுத்தாய்? எங்களோடு சேர்ந்து கொள்ள ஏன் விரும்புகிறாய்?”

அவன் அடி மனதில் புதைந்து கிடந்த வார்த்தைகள் வெளியில் வரத் தொடங்கின.

“சிறு வயதில் நான் ரொம்பவும் கஷ்டப்பட்டேன். இப்பவும் வேறொருவரின் தயவு தாட்சிண்யத்தில்தான் இருந்து வருகிறேன். அதனால் எனக்குள் வெறுப்பு தோன்றிவிட்டது. எனக்குப் பணம் என்றால் ரொம்பப் பிடிக்கும். இந்த உலகில் பெரிய பெரிய மாளிகைகளும், கார்களும் எனக்கு சொந்தமாக வேண்டும். அழகான பெண்கள் எனக்கு அடிமையாக வேண்டும். சகல சௌபாக்கியங்களையும் பெற

வேண்டும். அதற்காகத்தான் உஸ்ஸோக்கில் சேருவதற்காக வந்திருக்கிறேன்."

"உண்மையைச் சொன்னதற்கு மகிழ்ச்சி. நண்பனே! உன்னுடைய பெயர்?"

"ராகேஷ்."

★

**ரா**கேஷ் இப்பொழுது ஒரு புதிய உலகத்தில் இருந்தான். அவன் கைகட்டுகள் அவிழ்க்கப்பட்டிருந்தன. குள்ளன் ராகேஷை நன்றியுடன் பார்த்தான். ஒரு புதிய மெம்பரை உஸ்ஸோக்கில் சேர்த்ததற்காக அவனுக்கு ஏதோ ஒரு விதத்தில் லாபம் கிடைக்கும்.

மூவரும் அடுத்த அறைக்குள் நுழைந்தார்கள். அந்த அறையில் வெள்ளை தாடியுடன் நான்கு கிழவர்கள் இருந்தார்கள்.

"சட்டையைக் கழற்று" என்றான் குள்ளன். "பேண்டையும் கூட."

ராகேஷ் தயங்கினான். ஆனால் அங்கே அவனை யாருமே பொருட்படுத்தவில்லை. ஹோமத் தீயில் அவர்கள் எதையோ போட்டுக் கொண்டிருந்தார்கள். அறை முழுவதும் வெண்மையான புகை பரவியதில் ஒருவரை ஒருவர் பார்க்க முடியாமல் போய்விட்டது.

அதற்குள் ராகேஷின் தோள் மீது, பின்னாலிருந்து யாருடைய கையோ படிந்தது.

"பிரம்மோபாஸனம், மந்திரோபாஸனம், பிரதிமோபாஸனத்தால் குட்டிச்சாத்தானின் அனுகிரகத்தைப் பெறப்போகும் நண்பனே! அஷ்டாவித புருஷ சக்திகளுக்கு அதிபதியான குட்டிச் சாத்தான் உனக்கு அனுக்கிரகம் புரியட்டும்."

அடர்ந்த புகை மண்டலத்திற்குள்ளிருந்து யாரோ

விளக்கை ஏந்திக் கொண்டு வருவது போல் மெல்லிய ஒளிக்கீற்று நெருங்கி வந்தது. அருகில் வந்த பிறகுதான் அது விளக்கு இல்லை என்றும் உணர்ந்தான். மேலும் நெருங்கிவந்த பிறகுதான் அது ரப்பர் முத்திரையைப் போன்று எரியும் மண்டையோடு என்றும் புரிந்தது.

நடப்பது என்னவென்று புரிந்து கொள்வதற்குள்ளாகவே கிழவன் அதை இடுக்கியால் பிடித்துக் கொண்டு ராகேஷின் உடல் மீது பலமாக அழுத்தினான். அறையின் சுவர்க ளெல்லாம் நடுநடுங்கும் விதமாக கத்திய அவன் நினைவு தப்பினாற்போல் கீழே சரிந்தான்.

ராகேஷுக்கு நினைவு திரும்பியபோது அவனும் குள்ளனும் மட்டுமே அறையில் இருந்ததார்கள்.

“நாம் கிளம்பலாமா?” குள்ளன் கேட்டான்.

ராகேஷுக்கு சோர்வாக இருந்தது. அவன் எழுந்து கொள்ள முயன்றபோது குள்ளன் சொன்னான். “நம் ஆட்களையெல்லாம் உன்னால் சுலபமாக கண்டுபிடித்து விடமுடியும். அதேபோல் அவர்களும் உன் மேனியில் உள்ள முத்திரையை ஊடுருவிப் பார்த்துத் தெரிந்து கொண்டு விடுவார்கள். நம் ஆட்களிடம் நீ எது வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் மற்றவர்களிடம் மட்டும் நீ இதைப் பற்றி வாயே திறக்கக் கூடாது.”

“எனக்கு இன்னும் ஆச்சரியமாகத்தான் இருக்கு.”

“என்ன?”

“சாதாரண மெம்பர்ஷிப் கிடைப்பதற்குக் கூட இத்தனை கஷ்டமான ரகசிய கூட்டத்தில் என்னை இரண்டே இரண்டு கேள்விகளை மட்டும் கேட்டுவிட்டு எப்படி சேர்த்துக் கொண்டார்கள்?”

“பிளேடின் கீழே கழுத்தை பொறுத்திக் கொண்டு நாமிருவரும் எவ்வளவு நேரம் இருந்திருப்போம் என்று

நினைக்கிறாய் ராகேஷ்?

"ஐந்து அல்லது பத்து நிமிஷங்கள் இருக்கலாம்."

"நாம் இந்த வீட்டிற்குள் நுழைந்து?"

ராகேஷ் மனதிலேயே கணக்குப் போட்டு "நாம் உள்ளே நுழைந்த போது மணி பன்னிரெண்டு. இப்போ நள்ளிரவு தாண்டியிருக்குமா?" என்றான்.

இருவரும் வெளிவாசலை நெருங்கினார்கள்.

"உஸ்ஸோக்கை அவ்வளவு சாதாரணமாக எடை போட்டு விடாதே ராகேஷ்! உன்னிடம் எத்தனையோ கேள்விகளை கேட்டார்கள். உனக்கே தெரியாமல் ஆழ்மனதிற்குள் புதைந்து கிடக்கும் விவரங்கள், எண்ணங்கள், உன் வாழ்க்கை வரலாறு எல்லாமே உஸ்ஸோக்கின் ரிக்கார்டுகளில் பதிவு செய்யப்பட்டு விட்டன. ஒரு காலத்தில் உஸ்ஸோக்கில் மந்திரவாதிகளும், பூத தேவதைகளை உபாசனை செய்பவர்களும் மட்டுமே இருந்து வந்தார்கள். காரியங்கள் எல்லாம் ரகசியமாகவே நடைபெற்று வந்தன. இப்பொழுதோ இதை விரிவுபடுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து விட்டார் மகாத்ரஷ்டா. அதற்கு வேண்டிய ஆணைகளைக்கூட பிறப்பித்துவிட்டார். ஏதோ பெரிய விஷயம் நடக்கப் போகிறது. உலகத்தின் ஆதிக்கம் குட்டிச் சாத்தானின் கைக்கு வரப்போகும் முகூர்த்தம் நெருங்கிவிட்டதென்று நம் ஆட்கள் உணர்ந்துவிட்டார்கள்.

வெளி உலகில் சாதாரண மனிதர்களாய் கலந்து திரிந்து கொண்டே நாம் சில காரியங்களை செய்ய வேண்டும். இந்த இறுதி தருணத்தில் நீ இதில் வந்து சேர்ந்து கொண்டது உன் அதிர்ஷ்டம்" என்று சொல்லிக் கொண்டே கதவைத் திறந்தான்.

வெளியே காலடி எடுத்து வைத்த ராகேஷுக்கு அதிர்ச்சியாக இருந்தது. சூரியன் நடுவானத்தில் சஞ்சரித்துக்

கொண்டிருந்தான். வெயில் சுள்ளென்று தகித்துக் கொண்டிருந்தது.

## 4

**ரா**வே (RAWE) புரோகிராம். அக்ரிகல்சர் பி.எஸ்.ஸி. பட்டப்படிப்பின் இறுதியாண்டில் ரூரல் அக்ரிகல்சர் வர்க்கிங் எக்ஸ்பீரியன்ஸ் என்று ஒரு புரோகிராம் இருக்கும். கிராமத்திற்குப் போய் அங்கேயே கிராமவாசிகளுடன் ஆறு மாதங்கள் தங்கியிருக்க வேண்டும். அங்கேயே சாப்பிட தங்க வேண்டும், உழவர்கள் செய்யும் விவசாயத்தைப் பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு அறிவுரைகளை வழங்க வேண்டும். சில சமயம் நாம் வழங்கும் அறிவுரை களைவிட அவர்கள் சொல்லும் அனுபவப் பாடமே உயர்வாக இருந்தால் பேக்கு போல் முகத்தை வைத்துக் கொள்ள வேண்டும். இப்படியாக ஆறு மாதங்கள் கழிக்க வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திற்கும் மாணவ மாணவிகளைக் குழுக்களாகப் பிரித்து அனுப்புவார்கள். அந்தந்த கிராமங்களில் யாராவது தெரிந்தவர்கள் இருந்தால் அவர்களோடு தங்கிக் கொள்ளலாம். இல்லாவிட்டால் தனியாகவும் இருந்து கொண்டு சமாளித்துக் கொள்ளலாம்.

கேதாரகௌரியும், ராகேஷும் ஒரே பேட்சில் இருந்தார்கள். அந்த ஊர் கர்ணம் அவர்களுக்கு தம் வீட்டில் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்தார். பெரிய வீடு அவர்களுடையது. சமையல் மட்டும் தனியாக செய்து கொள்ள வேண்டும்.

ஆறு மாதங்கள் பயிர்களுக்கு நடுவில் சுற்றிச் சுற்றி வருவதும், ஆட்டமும், பாட்டும் கும்மாளமும் உற்சாகத்தைத் தந்தாலும் போகப் போக பட்டண வாசத்திற்காக தவிக்கத்

தொடங்கி விடுவார்கள்.

கேதார கௌரிக்கு மட்டும் அந்த ஊர் கிருஷ்ணபுரம் மிகவும் பிடித்துப் போய்விட்டது. செயற்கையான சூழலை விட்டுவிட்டு இயற்கை சூழலுக்கு வந்து சேர்ந்தாற்போலவும், சுத்தமான காற்றை சுவாசிக்க நேர்ந்தாற் போலவும் தோன்றியது.

அன்று அவள் மிகவும் களைத்துப் போயிருந்தாள். தனக்குத் தெரிந்த எண்டமாலஜி பாடத் திட்டத்தை மனதில் கொண்டு சோளப் பயிர்களுக்கு வரும் புழு, பூச்சிகளைப் பற்றி கிராமவாசிகளுக்கு விவரித்துச் சொல்ல முயன்றாள். வெயிலில் சுமார் இரண்டு மணி நேரம் சுற்றியிருப்பாள்.

இரவு பன்னிரெண்டு மணி அளவில் அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். பெரிய ஓட்டு வீடு அது. வராண்டாவில் போட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தாள். வயலிலிருந்து தவழ்ந்து வந்த காற்று இதமாக இருந்தது.

திடீரென்று அவளுக்கு விழிப்பு ஏற்பட்டது. வாசல் அருகில் ராகேஷ் நின்று கொண்டிருந்தான். நிலவின் வெளிச்சம் இருவர்மீதும் பட்டுக் கொண்டிருந்தது.

அவள் சட்டென்று எழுந்து கொண்டாள். "என்ன வேண்டும் ராகேஷ்?" என்றாள் சரியாக உட்கார்ந்து கொண்டே.

ராகேஷ் சிரித்தான். "ஒன்றுமில்லை கௌரி. நீ படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தபோது பார்க்க ரொம்ப அழகாக இருந்தது. உன்னைத் தொந்தரவு செய்து விட்டேனோ? சாரி" என்று அங்கிருந்து மெதுவாக போய்விட்டான். அவனிடம் தவறான எண்ணம் எதுவும் தென்படவில்லை. ஒரு வழிபாடு உணர்வு மட்டுமே தெரிந்தது.

தான் சொன்ன வார்த்தைகள் அந்தப் பெண்ணின்

தொலைவில் நின்றபடியே ஆராதிக்கும் தன் மீது அவளுக்கு மதிப்பு ஏற்படும் என்றும் அவனுக்குத் தெரியும். அவளாகவே தன்னை நெருங்க வேண்டும் என்று காத்திருந்தான் அவன். அவ்வாறு எத்தனை நாளானாலும் சரி காத்திருக்கும் பொறுமை அவனுக்கு இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அவளை தன்பால் இழுக்க முயன்று கொண்டிருந்தான். . . தான் தொலைவில் இருந்து கொண்டே.

அவள் திரும்பிப் படுத்தாள். அவள் பார்வை வாசல் மீது படிந்தது. அவன் எவ்வளவு நேரமாக அங்கே நின்றிருந்தானோ? தன்னைத் தொட நினைத்திருந்தால் தொட்டிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. தொலைவில் நின்றபடியே வழிபட்டுக் கொண்டிருந்தான். இருபத்திஇரண்டு வயது பெண்ணுக்கு அது ரொம்ப திருப்தி தரக்கூடிய அனுபவமாக இருக்கலாம்.

ஆனால் அவளுக்கு அவ்வாறு இல்லை.

தான் அழகி இல்லை என்று அவளுக்கு நிச்சயமாகத் தெரியும். நிலா வெளிச்சத்தில் தன்னைப் பார்த்தபடி மணிக் கணக்கில் நிற்க வேண்டிய தேவை யாருக்குமே வரப் போவதில்லை, தன்னை திருப்திப்படுத்துவதற்காகத்தான் அப்படிச் சொன்னானே தவிர, மனசாட்சிக்கு விரோதம் அது.

அவள் கண்களை மூடிக் கொண்டாள். மனச்சாட்சியை வஞ்சிப்பவர்களைக் கண்டால் அவளுக்கு அறவே பிடிக்காது.

★

**மா**ணவ மாணவிகள் மொத்தம் இருபத்தைந்து பேர் வரையிலும் இருந்தார்கள். அதில் ஆறுபேர் பெண்கள். எல்லோரும் அக்கம் பக்கத்து கிராமங்களிலிருந்து வந்து சேர்ந்தார்கள்.

பல நாட்கள் கழித்து சந்தித்தது எல்லோருக்கும்

உற்சாகமாக இருந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை.

பாட்டு... கும்மாளம்... மிமிக்ரி... அந்தாட்சரி. ஆர்வம் மிகுந்தவன் சத்யமூர்த்தி. எப்போதும் ராகேஷையே சுற்றிக் கொண்டிருப்பான்.

"இப்போ ஒரு சின்ன விளையாட்டு" என்றான் சத்ய மூர்த்தி. "கொஞ்சம் புத்திசாலித்தனத்தைப் பயன் படுத்தினால் போதும்."

எல்லோரும் ஆர்வத்துடன் பார்த்தார்கள்.

"நான் வரிசையாக கேள்விகளைக் கேட்பேன். எல் லோருக்கும் தெரிந்தவைதான். நீங்கள் பேப்பரின் மீது பதில் எழுதுங்கள். எல்லாம் சரியாக எழுதியவர்கள் ஜெயித்தாற் போல்."

"அவர்களுக்குப் பரிசுகூட உண்டு'' என்றான் ராகேஷ்.

"எங்களுக்குத் தெரியாத கேள்வியைக் கேட்டுவிட்டால்?"

"தெரியாது என்ற பேச்சுக்கே இடமில்லை. பெரும் பாலானவர்கள் எதைச் சொல்கிறார்களோ அதுதான் கரெக்ட். முதல் கேள்வி. தமிழ் சினிமா உலகத்தை ஆளும் கதாநாயகன் யார்?"

எல்லோரும் உள்ளூர சிரித்துக் கொண்டே தங்கள் அபிமான ஹீரோவின் பெயரை எழுதினார்கள். பதினெட்டு ஓட்டுக்கள் சூர்யாவுக்கு விழுந்தன.

சத்யமூர்த்தி சொன்னான். "ஜெயிக்கணும் என்றால் உங்கள் அபிப்பிராயத்தை மட்டுமே எழுதக் கூடாது. பொது ஜனத்தின் கருத்தையும் மனதில் கொண்டு பதில் எழுதினால் ஜெயிக்கலாம். இரண்டாவது கேள்வி. நம் பேட்சில் எல்லோரையும் விட அழகான பெண் யார்?"

ப்ரீத்திக்கு இருபது ஓட்டுக்கள் விழுந்தன. அவளிடம் அழகைவிட ஸ்டைல்தான் அதிகம். ஆனால் மக்களின்

ஏகோபித்த அபிப்பிராயம்தானே சரியானது.

திடீரென்று ஐடியா தோன்றி கொடிகளால் கிரீடத்தை செய்து அவள் தலையில் வைத்தான் சத்யமூர்த்தி. எல்லோரும் சிரித்துக் கொண்டே கைகளைத் தட்டினார்கள்.

"எல்லோரையும்விட அமைதியான, அடக்கமான, எல்லோருக்கும் பிடித்த பெண் யாரு?"

கேதார கௌரிக்கு இருபத்திநான்கு ஓட்டுக்கள் விழுந்தன. ஒரே ஒரு ஓட்டு விழவில்லை. அது கேதாரகௌரியின் ஓட்டுதான்.

"எல்லோரைக் காட்டிலும் அழகானவன் யார்?"

ராகேஷிற்கு இருபத்தைந்து ஓட்டுக்கள் விழுந்தன.

"இந்த சுப வேளையில் ராகேஷ் நம் எல்லோருக்கும் பட்டணத்திலிருந்து டின்னர் வரவழைக்கப் போகிறான்" என்று அறிவித்தான் சத்யமூர்த்தி. கைத்தட்டல்கள்.

"இன்னொரு கேள்வி." சத்யமூர்த்தி கேட்கப் போனான். ராகேஷ் முந்திகொண்டு "எல்லோரையும் விட அவலட்சண மானவன் யார்?" என்றான்.

திடீரென்று அந்த இடத்தில் நிசப்தம் வந்து சூழ்ந்து கொண்டது. ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். சூழ்நிலையை எளிதாக்க விரும்பிய சத்யமுர்த்தி "ஆமாம், அவனுக்கு அஷ்டாவக்கிரன் என்ற பட்டம் வழங்கப்படும்" என்று அறிவித்தான்.

மாணவர்கள் நகைத்துக் கொண்டே எழுதத் தொடங்கினார்கள். இருபத்திநான்கு ஓட்டுக்கள் விழுந்த அந்த மாணவன் எழுந்து நின்றான். அவன் உண்மையில் அஷ்டாவக்கிரன் இல்லை என்றாலும் குரூபிதான். கறுப்பாக, விசாலமான நெற்றியுடன் குள்ளமாகவும் இருந்த அவன் முறுவலித்தபடி எல்லோருக்கும் வணக்கம் தெரிவித்தான்.

சுற்றிலும் இருந்தவர்கள் உதட்டை அழுத்தி சிரிப்பை அடக்க முயன்று கொண்டிருந்தார்கள்.

அவன் பெயர் சித்தார்த்தா.

கேதாரகௌரி அவனை இரக்கம் ததும்ப பார்த்தாள். அவன் சிரித்த அந்தச் சிரிப்பிற்குப் பின்னால் எவ்வளவு வேதனை இருந்ததோ அவள் ஒருத்திக்கு மட்டும்தான் தெரியும். அவளால் புரிந்து கொள்ள முடியும்.

வேறொருவராக இருந்தால் அருவருக்கத்தக்க அந்த சூழ்நிலையில் கோபித்துக் கொள்வதோ, ரோஷத்தால் அங்கிருந்து போய்விடுவதோ... ஏதாவது செய்திருப்பார்கள்.

அவனுக்கு இருபத்தி நான்கு ஓட்டுக்கள் விழுந்தன. ஒரு ஓட்டு விழவில்லை. கேதார கௌரி யாருக்குமே ஓட்டுப் போடவில்லை. அப்படி என்றால் ... அப்படி என்றால்...

தன்னுடைய ஓட்டையும் அவன் தனக்கே போட்டிருக் கிறான் என்று அர்த்தம்.

## 5

**நா**ன்கு மாணவர்கள் வயலில் இருந்தார்கள். அந்தக் குழுவில் மொத்தம் ஆறுபேர். ராகேஷ், கேதாரகௌரியைத் தவிர மீதி நான்கு பேர். அதில் சித்தார்த்தாவும் ஒருவன். அன்றைக்கு இரு மாணவர்கள் பக்கத்து கிராமத்திற்கு போயிருந்தார்கள். எஞ்சியவர்கள் மட்டும் வயலில் இருந்தார்கள்.

வயல் வரப்பில் இருந்த மரத்திலிருந்து பறவைகள் கலகலவென்று ஆரவாரம் செய்து கொண்டிருந்தன. இன்னும் காற்றில் பயிர்கள் அசைந்தாடிக் கொண்டிருந்தன.

ராகேஷ் வரப்பைத் தாண்டி சேற்றில் கவனமாக

அடியெடுத்து வைத்தபடி முன்னால் நடந்தான்.

வயலுக்குப் பாய்ந்து கொண்டிருந்த தண்ணீரை சமனப்படுத்திக் கொண்டிருந்தான் ஒரு கிழவன். ஒல்லியாய், எலும்புக் கூடாக இருந்தான்.

"இந்த நேரத்தில் வயலுக்கு நீர் பாய்ச்சுவானேன்?"

வேலை செய்து கொண்டிருந்த கிழவன் நிமிர்ந்து ராகேஷைப் பார்த்தான். "பாய்ச்சக் கூடாதா?"

"நல்லது இல்லை" என்று விவரித்தான் ராகேஷ்.

எல்லாவற்றையும் கேட்டு முடித்துவிட்டு கிழவன் தண்ணீருக்கு மண்ணால் அணை போட்டுவிட்டு "நாங்க உங்களைப் போல் படிச்சவங்க இல்லையே சாமீ. எங்களுக்கு தெரியாது" என்றான். பிறகு "அதோ அந்த மூலையில் பயிருக்கு ஏதோ பூச்சி தாக்கியிருக்கு. பார்த்துச் சொல்றீங்களா தம்பீ?" என்று கேட்டான் கிழவன்.

தன் அபிப்பிராயத்திற்கு அவர்கள் மதிப்புத் தருவது ராகேஷுக்கு பெருமையாக இருந்தது. கிழவனுடன் சேர்ந்து மற்றவர்களுக்கு தொலைவாக இருந்த அந்த இடத்திற்குப் போனான். அங்கே பயிர்கள் பச்சை நிறத்திலிருந்து இளமஞ்சள் நிறத்திற்கு மாறிக் கொண்டிருந்தது. தனக்குத் தெரிந்த ஞானத்துடன் "இது ஹைபோ. . . ." என்று ஏதோ சொல்லப் போனான்.

கிழவன் இலைகளை நீவிவிடும் சாக்கில் குனிந்து மெதுவாகச் சொன்னான். "நாளை இரவு எட்டு மணிக்கு மகாத்ரஷ்டா உஸ்ஸோக் அங்கத்தினர்களுக்காக ஒரு முக்கியமான சொற்பொழிவு ஆற்றப் போகிறார். க்ளோஸ்ட் சர்க்யூட் டி.வி.யில் வரும். உடனே கிளம்பி நம் அலுவலகத் திற்குப் போ."

கையில் பிடித்துக் கொண்டிருந்த நெற்பயிர் திடீரென்று

பாம்பாய் மாறிவிட்டது போல் மிரண்டு போன ராகேஷ் சட்டென்று நிமிர்ந்தான்.

கிழவன் எழுந்து தன் கலப்பையை நோக்கி நடந்தான், தான் வந்த காரியம் முடிந்துவிட்டாற் போல்.

ராகேஷின் மேனி நடுங்கியது. கிழவனின் அடிவயிற்றுக்கு மேல் தெளிவாக தென்பட்டது, சிவப்பாய் உஸ்ஸோக் அங்கத்தினர்களிலேயே மிக உயர்ந்த பதவியை பெற்றவர்களின் அடையாளச் சின்னம் . . .

ரெட் ஸ்கெலிடன்!

★

ஒரு பயங்கர ரகசியம் வெளியாகப் போகிறது. ராகுவும் கேதுவும் சமமான கோட்டிற்கு வரும் நாளன்று, பதினைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே வரும் அந்த நாளுக்காக இத்தனை நாளாக காத்திருந்தது உஸ்ஸோக் சங்கம்.

அன்று நள்ளிரவு நேரத்தில் இருட்டு உலகத்தின் பயங்கர ரகசியம் ஒன்று வெளிப்படப் போகிறது. அத்துடன் உலகத்தின் போக்கே மாறிவிடும். அதற்காக பரபரப்புடன் காத் திருந்தார்கள் அவர்கள்.

ஹால் முழுவதும் இருளில் மூழ்கிக் கிடந்தது. சுமார் நூறு மெம்பர்கள் அங்கே உட்கார்ந்திருந்தாலும் நிசப்தமாக இருந்தது.

எல்லோருடைய பார்வையும் டி.வி.யின் மீதே இருந்தது. பெயருக்குத்தான் அது க்ளோஸ்ட் சர்க்யூட் டி.வி. ஆனால் எங்கிருந்து ஒளிபரப்பு ஆகிறது என்று யாருக்குமே தெரியாது. நாட்டில் முக்கிய நகரங்களில் உஸ்ஸோக் மெம்பர்கள் ரகசிய இடங்களில் கூடி டி.வி.யில் வரப்போகும் நிகழ்ச்சிக்காக காத்திருந்தார்கள்.

மெதுவாக டி.வி.யில் காட்சி தெரிய ஆரம்பித்தது.

ஆகாயத்தில் இடி. . . மின்னல் . . . காற்று. . . மழை. மயானத்திற்கு நடுவில் கிழவன் ஒருவன் தோண்டிக் கொண்டிருந்தான். விஷாச்சி மந்திரவாதியின் கை எலும்புகளை சேகரித்தான்.

பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு அது தம் ஊர் இல்லை என்று தெரிந்தது. காஷ்மோராவின் வருகையைத் தெரிவிக்கும் நேரடி ஒளிபரப்பு. உணர்ச்சிகளின் கொந்தளிப்பில் அவர்களின் இதயம் வேகமாக துடித்துக் கொண்டிருந்தது.

இரவு சரியாக பன்னிரெண்டு மணிக்கு வானமே இடிந்து விழுவது போல் பெரிய ஓசை கேட்டது. மின்னல் ஒன்று பார்ப்போரின் கண்ணைப் பறிப்பது போல் பூமியை நோக்கி வேகமாக வந்து பூமியைத் துளைத்துக் கொண்டு போயிற்று. கிணறு வெட்டியது போல் பூமியில் குழி ஒன்று ஏற்பட்டது. இரண்டாகப் பிளந்த பூமியிலிருந்து எலும்புகளால் தயாரிக்கப் பட்ட பெட்டி ஒன்று வெளிப்பட்டது.

கிழவன் மந்திரங்களை உச்சரிப்பதை நிறுத்திவிட்டு அந்தப் பெட்டியின் அருகில் சென்றான். பிறகு தன்னுடைய ரத்தத்தால் அதற்கு அபிஷேகம் செய்துவிட்டு மூடியைத் திறந்தான். எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அது அவ்வாறு புதைக்கப்பட்டதோ தெரியாது. ஆனால் அது உருக்குலையாமல் அப்படியே இருந்தது. அதன் மீது ரத்தத்தால் எழுதப்பட்டிருந்த எழுத்துக்களை கிழவன் உரத்த குரலில் படிக்கத் தொடங்கினான்.

“ராஜாதிராஜன்! பூதகணபதியான காஷ்மோராவின் வாரிசான அஷ்டாவக்கிரன் இந்த பூமியில் வந்து பிறக்கப் போகும் வேளை நெருங்கிவிட்டது.

“மகாமந்திரவாதிகளான விஷாச்சி, காத்ராவின் எலும்புத் துகள்களை கிராமத்தின் வடதிசையில் உள்ள

பயிர்களின் மீது தூவ வேண்டும். குளம் குட்டையில் கரைக்க வேண்டும். நெருப்பிலிட்டு அதன் புகையை கிராமத்திற்கு பரவவிட வேண்டும். இதுதான் காஷ்மோராவின் ஆணை. இந்த காரியத்தை செய்பவன் கொடியவனிலும் கொடியவனாக இருக்க வேண்டும். கன்னிப்பெண் ஒருத்தி அவனுக்கு உதவ வேண்டும். அதற்குப் பிறகு எட்டுக் குழந்தைகள் அங்கஹீனமாக அவலட்சணமாக அந்த கிராமத்தில் வரிசையாக பிறப்பார்கள். ஒரு கண்ணுடையவன், நான்கு கைகள் உடையவன், இரண்டு உடல்கள் ஒட்டிப் பிறந்தவன். . . இப்படி விகாரமான, வித்தியாசமான உருவத்துடன் ஏழுபேர் பிறப்பார்கள்.

“எட்டாவதாக பிறப்பவன்தான் அஷ்டாவக்கிரன். தாயின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வருவான். அந்த விதமாக பிறக்கும் போதே தாயைக் கொன்றுவிடுவான். பிறந்த முதல் நாளே தந்தையின் சாவுக்கும் காரணமாவான். அவன் சிரிக்க மாட்டான். அழவும் மாட்டான். பிசாசை நம்பியவர் களை எல்லாம் ஒன்று கூட்டிக் கொண்டு பிசாசின் அம்சத்தோடு உலகத்தை ஆளுவான். குறுக்கே வந்தவர்களைக் கொன்று குவித்து விடுவான். பிசாசை நம்பியவர்கள் அவன் நிழலில் சந்தோஷமாக இருப்பார்கள். எல்லா சுகங்களையும் அனுபவிப்பார்கள்.

“இன்னும் ஒரு வருடத்திற்குள் பிறக்கப் போகும் அஷ்டாவக்கிரனின் ஜனன சமயத்தில் நரிகள் ஊளையிடும். காக்கைகள் மரக்கிளையிலிருந்து தாமாகவே கீழே விழுந்து உயிரை விடும். இடைவிடாத அடைமழை கொட்டும்.

“முதலில் பிறக்கும் ஏழு குழந்தைகளும் இறந்து போய் விடுவார்கள். அஷ்டாவக்கிரன் பிறந்த இரண்டு நாட்கள் வரையிலும் யாரும் பார்க்கக் கூடாது.

“தாய்க்கு பிரசவித்த கட்டிலே மரணப்படுக்கையாகி விடும். பிரசவம் பார்த்த தாதியும் அந்த இடத்திலேயே

ரத்தத்தைக் கக்கி உயிரை விடுவாள். குழந்தையைப் பார்க்கப் போகும் தந்தை கதவுக்கு அருகிலேயே இறந்து போவான். இரண்டு நாட்கள் வரையிலும் கதவைச் சாத்தியே வைக்க வேண்டும். தாய் தந்தையரின் ரத்தத்தைக் குடித்துவிட்டு அஷ்டாவக்கிரன் முதல் இரண்டு நாட்கள் உயிர் வாழ்வான். கிராமத்தில் செய்தி பரவக் கூடாது. அதன்பின் அறையின் கதவைத் திறக்கக் கூடியவன் கேசரி முத்திரையும், பிரம்மவிருத்தி மந்திரமும் தெரிந்தவனாக இருக்க வேண்டும். அவன்தான் அஷ்டாவக்கிரனின் ராஜ்ஜி யத்திற்கு மந்திரியாவான். பிசாசுகளின் தலைவனான காஷ்மோரா இந்த உலகத்தை அஷ்டாவக்கிரனின் உருவில் ஆளப் போகும் சமயத்தில் அவனை நம்பியவர்கள் மட்டுமே சுகப்படுவார்கள்.

"இந்த பத்திரத்தை படிப்பவர்களும், கேட்டவர்களும் இந்த வினாடியிலிருந்தே அஷ்டாவக்கிரனின் ஜனனத்திற்காக சாதனை புரிய வேண்டும். ரத்தத்தால் தர்ப்பணம் செய்ய வேண்டும்."

## 6

**ரா**கேஷ் கிருஷ்ணாபுரத்திற்கு திரும்பி வரும்போது மாலையாகிவிட்டது. வரும் வழியெல்லாம் அவன் யோசித்துக் கொண்டே இருந்தான்.

'இந்த எலெக்ஷன்கள், இரு நாடுகளுக்கிடையே மோதல்கள், ஜாதி பேதங்கள் எதுவுமே இருக்காது. பத்திரத்தில் இருந்தபடி அஷ்டாவக்கிரனுக்கு ஏழாவது ஆண்டு வரும் போது உலகமே அவன் குடையின் கீழ் வந்துவிடும். முடிந்தால் தானே அவனுக்கு மந்திரியாகிவிட வேண்டும்.'

"ஏன் இன்னிக்கு என்னவோ போல் இருக்கிறாயே?" கேட்டாள் கேதார கௌரி.

“ஒன்றுமில்லையே?” பேச்சை மாற்றினான் ராகேஷ்.

மறுநாள் வழக்கம் போல் வயலுக்கு கிளம்பிப் போனான். மதிய நேரத்தில் உணவு சாப்பிட்டுவிட்டு கையை அலம்பிக் கொண்டிருந்தபோது புதருக்கு மறைவிலிருந்து “ராகேஷ்!” என்று குரல் கேட்டது. அந்தப் பக்கமாக போனான். தன்னை முதல்நாள் உஸ்ஸோக்கிற்கு போகச் சொன்ன உழவன், ரெட்ஸ்கெலிடன்.

என்ன என்பது போல் அவனைப் பார்த்தான் ராகேஷ்.

“அப்படிப் போ.” ஆழ்கிணறைச் சுட்டிக் காட்டினான்.

“எங்கே?”

“உள்ளே.”

உஸ்ஸோக்கில் ரெட்ஸ்கெலிடன் சொன்ன பிறகு எதிர்க் கேள்வி கேட்கக் கூடாது. ராகேஷ் கிணற்றுப் படிகளில் இறங்கி கீழே போனான். உள்ளே தண்ணீர் இல்லை. காய்ந்து கிடந்தது. ஒரு மூலையில் சிறிய துளை ஒன்று இருந்தது. இடுப்பை வளைத்து ஊர்ந்தபடி உள்ளே போனான். சிறிய அறை, ஒரு விதமாக சொல்லணும் என்றால் சமாதியைப் போல் இருந்தது. அந்தப் பக்கமாக திரும்பி உட்கார்ந்திருந்த ஆள் திரும்பிப் பார்க்காமலேயே “வா. இந்த பஸ்மத்தை இங்கே வைக்கிறேன். சூரிய வெளிச்சம் படக் கூடாது. ராத்திரி நேரத்தில் வந்து எடுத்துக் கொண்டு போ. வடக்கு திசையில் உள்ள வயல்களில் தூவு. மேலும் கொஞ்சம் தூளை காற்று வீசும் திசையைப் பார்த்து கிராமத்தில் பரவவிடு. தண்ணீரிலும் கலந்து விடு” என்றான்.

ராகேஷுக்கு சந்தோஷத்தில் ஒரு நிமிடம் வாயில் வார்த்தை வரவில்லை. இந்தக் காரியத்திற்கு தன்னைத் தேர்ந்தெடுத்தது அவனுக்கு பெருமையாக இருந்தது.

“நான் பி.எஸ்.ஸி அக்ரிகல்சர் மாணவன். மிகச் சுலபமாக

இந்தக் காரியங்களை செய்து முடிப்பேன்.

"முட்டாளே! இந்தக் காரியத்திற்கு உன்னைத் தேர்ந் தெடுத்ததற்குக் காரணம் அதுவல்ல. தன்னைவிட வயதில் பெரியவளுடன் உறவு வைத்துக் கொண்ட நீச்சமானவன் வேண்டும் இதற்கு."

வென்னீரை முகத்தில் வாரி இறைத்தாற்போல் இருந்தது ராகேஷுக்கு.

"உன்னுடன் அந்தப் பெண்ணையும்அழைத்துப் போ. அவள் கன்னிப் பெண்தானே?"

"கன்னிப்பெண்தான். அதில் சந்தேகம் இல்லை."

"அவளுக்கு இந்த விஷயம் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. உன்னோடு இருந்தால் போதும்."

ராகேஷ் தலையை அசைத்தான்.

"இனி போ, ராத்திரி நேரத்தில் வா."

அவன் திரும்பினான்.

"இதோ பார்."

ராகேஷ் நின்றான்.

"பிரம்மவித்த கேசரியை கற்றுக் கொள்ளும் ஆசையை இப்போதைக்கு வைத்துக் கொள்ளாதே. ரொம்ப கஷ்டமான சாதனை அது."

ஒரேதிரியாய் மிரண்டு போய் "என்ன?" என்றான்.

"என்னைக் கொன்றுவிட்டு அஷ்டாவக்கிரனுக்கு வலதுகரமாக மாறிவிடலாம் என்ற எண்ணம் இருக்கிறதே, அது பலிக்காது என்று சொல்லுகிறேன்."

ராகேஷின் தொண்டை உலர்ந்துவிட்டது. "யா . . . யார் நீங்க?" என்று கேட்டான்.

அதுவரையிலும் அந்தப் பக்கமாக திரும்பிக் கொண்

டிருந்த கிழவன் மெதுவாக தலையைத் திருப்பினான். முகத்தை மறைத்துக் கொண்டிருந்த கம்பளி கீழே நழுவியது. மனதின் ஆழத்திற்குப் போய் ரகசியங்களை சோதித்து விடக் கூடிய பார்வை. எதிர்காலத்தில் காஷ்மோராவுக்கு பக்கபலமாக இருக்கப் போகிறவன்.. . காத்ராவின் சமாதியைத் தோண்டியவன் . . . யாரிவன்?

அதற்குள் அந்தக் கிழவனின் உதடுகள் முணுமுணுத்தன. "நான்தான் மகாத்ரஷ்டா!"

ராகேஷ் நடுங்கிவிட்டான். ரெட்ஸ்கெலிடன்களுக்குக் கூட யாருடைய தரிசன பாக்கியம் கிடைக்காதோ, யார் எதிர்காலத்தில் ராஜாவாகப் போகிறானோ. . . அவனுக்கு இத்தனை அருகில் . . .

"ராகேஷ்! உன் மனதில் இருக்கும் தீய எண்ணங்களுக்காக நீ வெட்கப்படத் தேவையில்லை. புதிதாக உருவாகப் போகும் உலகில் உனக்கு உயர்ந்த ஸ்தானம் உண்டு. ரத்தம் ஆறாக ஓடுவதற்கும், கன்னிப் பெண்களை பலி கொடுப்பதற்கும் தயாராக இரு. கடவுள் மீது இருக்கும் நம்பிக்கையை நாசமாக்க வேண்டும். இன்றிரவே அதற்கு நீ திறப்பு விழா நடத்த வேண்டும். மந்திரவாதிகளின் எலும்பு பஸ்மத்தால் பயிர்களை விஷமயமாக்கி அதைத் தின்ன கிராமத்தாரின் வீரியத்தை குறைகள் நிறைந்ததாய் ஆக்கிவிடு. பெண்களின் கர்ப்பம் முழுமையடையாமல் பண்ணிவிடு. மொத்தம் எட்டு பேர் பிறக்கவேண்டும். இனி நீ போ. அந்தப் பெண்ணை உன்னுடன்அழைத்துப் போ."

அன்று மாலையில் ராகேஷ் கேதாரகௌரியிடம் கேட்டான். "இன்றிரவு நாம் ஒரு த்ரில்லான காரியம் செய்வோமா?"

"என்ன?"

"சில ஏழை விவசாயிகளின் பயிர்களில் ரகசியமாக

எருவைத் தூவுவோம்."

"எதற்கு?" என்றாள் அவள் புரியாமல்.

"ஜஸ்ட் ஃபார் த்ரில். அவர்கள் ஏழைகள். இரண்டு நாட்கள் கழித்து சொன்னால் சந்தோஷப்படுவார்கள்."

"இதில் என்ன த்ரில் இருக்கு?"

"ப்ளீஸ்! எனக்காக."

"சரி ஆகட்டும்." அவள் ஒப்புக் கொண்டாள்.

## 7

கிருஷ்ணாபுரம்.

அழகிய ஊர். சுமார் நானூறு ஓட்டு வீடுகளுக்கு மேல் இருக்காது. ஊரைச் சுற்றிலும் பச்சைபசேலென்று வயல்கள். அங்கே இருக்கும் மக்கள் அப்பாவிகள். இன்னும் அந்த ஊரில் அரசியல் நுழையவில்லை.

கோவில் குளத்து நீரையும், தொலைவில் இருந்த ஏரியையும் அந்த ஊர் மக்கள் குடிக்க பயன்படுத்துவதில்லை. ஊராருக்காக இரண்டு பொதுக் கிணறுகள் இருந்தன.

இரவு ஒரு மணிக்கு அந்தக் கிணறுகளில் காக்ரா, விஷாச்சியின் எலும்பு பஸ்மத்தை கலந்தான் ராகேஷ். அப்பொழுது கேதாரகௌளரி அவனுடன் இல்லை. அதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்புதான் அவளோடு சேர்ந்து போய் காற்று வீசும் திசையில் அந்த பஸ்மத்தைத் தூவினான் அவன். அதுதான் கொஞ்சம் கஷ்டமான வேலையாக இருந்தது. போகும்போதே அவள் தீவிரமாக ஆட்சேபித்தாள்.

"இந்த நள்ளிரவுநேரத்தில் எந்த வயலில் போய் எருவைத் தூவுவது?" என்றாள்.

ராகேஷ் கெஞ்சினான். "போகும் வழியில் உனக்கு எல்லாம் விவரமாக சொல்கிறேன். ப்ளீஸ்!"

இந்தக் கிராமத்திற்கு வந்த பொழுதே கார் எடுத்துக் கொண்டு வந்தது அவளுக்குப் பிடிக்கவில்லை. எல்லோரையும் போலவே சாதாரணமாக 'ராவே' புரோகிராமில் கலந்து கொள்ள விரும்பினாள். ஆனால் அவள் தந்தை அதற்குச் சம்மதிக்கவில்லை. அதனால் காரில் வந்திருந்தாள்.

அன்றிரவு அதே காரில் அவ்விருவரும் ஊருக்கு வடக்குப் பக்கமாக கிளம்பினார்கள்.

காரை ஓட்டிக் கொண்டே "நான் ஒரு விஷயம் சொல்கிறேன். சிரிக்கமாட்டாயே?" என்றான் அவன்.

கௌரி நெற்றியைச் சுளித்தபடி "என்ன?" என்று கேட்டாள்.

"இந்தச் சாம்பலை ஒரு காட்டுவாசி தந்தான். இதை வயலில் தெளித்தால் நன்றாக விளையுமாம். நாம் தூவப் போவது எரு இல்லை."

"உனக்கு நிச்சயமாக பைத்தியம்தான் பிடித்திருக்கிறது. காரை உடனே திருப்பு" என்றாள் கேதாரகௌரி.

"ப்ளீஸ்! அப்படிச் சொல்லாதே. என் நம்பிக்கை எனக்கு. நம்முடைய 'ராவே' புரோகிராம் கூட முடியும் நிலையில் இருக்கு. திரும்பவும் நாம் இந்த ஊருக்கு வரப்போவதில்லை. போகும்முன் கொஞ்சம் நல்லது செய்துவிட்டுப் போவதில் நஷ்டமில்லையே?"

கார் நின்றது. கிராமத்தையும் நகரத்தையும் இணைக்கும் சாலை அது. தினமும் ஒரு தடவை மட்டும் பஸ் அந்தப் பக்கமாக வரும்.

"இறங்கு" என்றான் காரை நிறுத்திவிட்டு.

"நான் எதற்கு?" என்ன செய்யணுமோ நீயே செய்து கொள் என்பது போல் சொன்னாள் அவள்.

அவன் கொஞ்சம் வெட்கமடைந்தவனாக "இந்த காரியத்தில் பெண் ஒருத்தி துணையாக இருக்கணுமாம். நாளைக்கு நெல் நிறைய விளைந்தால் அந்தப் புண்ணியத்தில் உனக்கும் பங்கு. . ."

அவன் முடிக்கக் கூட இல்லை. "போதும் நிறுத்து" என்றபடி அவள் காரை விட்டிறங்கினாள். அவன்மேல் அவளுக்கு காதல் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அளவு கடந்த இரக்கம் இருந்தது. தாய் ஒருத்தி இல்லாமல் தான் எவ்வளவு தனிமையாக உணருகிறாள் என்பதை அவள் மட்டுமே அறிவாள். அப்படி இருக்கும்போது தாய் தந்தை இருவருமே இல்லாத அவனுடைய மனதைக் கொஞ்சமும் நோகடிக்க அவள் விரும்பவில்லை. அதனால் காரை விட்டிறங்கினாள்.

தெற்கேயிருந்து காற்று பலமாக வீசியது. புடவைத் தலைப்பு காற்றில் படபடவென்று அடித்துக் கொண்டது. காற்றின் வேகம் ஆளையே தள்ளிவிடும் போலிருந்தது.

"என்ன செய்யணும் இப்போ?" என்றாள்.

"கையை விரித்தபடி நில்" என்று அவன் பையைப் பிரித்தான்.

திடீரென்று காற்று நின்றுவிட்டது. அதை அவளும் கவனித்தாள். அத்தனை பலமாக வீசிக் கொண்டிருந்த காற்று திடீரென்று நின்றது அவளுக்கு வியப்பை ஏற்படுத்தியது. மழை வரப்போகிறதோ என்று வானத்தை அண்ணாந்து பார்த்தாள். வானம் நிர்மலமாக இருந்தது. அதற்குள் அவன் அந்தச் சாம்பலை அவள் உள்ளங்கையில் போட்டான்.

"இந்தச் சாம்பலை எந்த வயலில் தூவுகிறோமோ

அங்கேதான் நன்றாக வளருமா? அல்லது இதன் மகிமை பக்கத்து வயல்கள் மீது கூட இருக்குமா?" முறுவலுடன் கிண்டலடித்தாள் அவள்.

அவன் சிரிக்கவில்லை. தொலைவில் எங்கிருந்தோ ஸ் ஸ் ஸ் என்ற சத்தம் கேட்கவே இருவரும் அந்தப் பக்கமாக பார்த்தார்கள். மலைக்கு அந்தப் பக்கமாக வளையம் வளையமாக சுழற்காற்று நிலா வெளிச்சத்தில் தெளிவாகத் தெரிந்தது. அந்த ஓசை பயங்கரமாக இருந்தது. இந்தப் பக்கமாக வந்து அவர்களை சூழ்ந்து கொண்டது.

அவள் ஏனோ நடுங்கினாள்.

பஞ்சபூதங்களில் முதலாவதான காற்று இரண்டாவதான ஆகாயத்தைத் தாக்க வந்தாற்போல் அவள் கையிலிருந்த சாம்பலை மேலே எழுப்பி பூமியெங்கும் பரவி விழச் செய்தது. அதுவரையில் நிர்மலமாக இருந்த வானம் தணலாக எரிவது போல் மின்னல்கள்.

போலியோ காலுடன் அப்படி கைகளை நீட்டிக் கொண்டு நிற்பது அவளுக்கு சிரமமாக இருந்தது. விழப் போனவள் எப்படியோ சமாளித்துக் கொண்டாள்.

சுற்றிலுமிருந்த பயிர்களுக்கு மட்டும் வாய் இருந்திருக்கு மானால் அவள் அப்பாவித்தனமாக செய்து கொண்டிருக்கும் காரியத்தைப் பார்த்துவிட்டு 'வேண்டாம் வேண்டாம்' என்று வாய்விட்டு அலறியிருக்குமோ என்னவோ!

அவள் சக்தியை இழந்தவளைப் போல் போய் காரில் உட்கார்ந்து கொண்டாள்.

வேலை முடிந்துவிட்டாற்போல் அவன் காரை ஸ்டார்ட் செய்தான். கார் கிளம்பப் போனபொழுது டப் என்று மழைத்துளி வந்து தெறித்தது. அடுத்த நிமிடம் மழை தொடங்கி விட்டது. பயிர்களின் மீது போர்வையாக

வழியில்லாதது போல் தாரையாக மழை வானத்திலிருந்து பொழியத் தொடங்கியது.

காரில் ஊரை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது "அட! அதோ பார், என்ன அது?" என்றாள்.

தொலைவில் நெருப்பு. "யாரோ கரும்புப் பயிரை எரிக்கிறார்கள் போல் இருக்கு" என்றான் அவன், திரும்பிப் பார்க்காமலேயே.

"இந்தக் காலத்தில் கரும்பாவது? ஆனாலும் மழை இவ்வளவு பலமாக பெய்யும்போது நெருப்பு எப்படி வரும்?"

அவன் பதில் சொல்லவில்லை. பஞ்சபூதங்களில் கடைசியான அக்னியைத் திருப்திப் படுத்துவதற்காக உஸ்ஸோச் செய்த வேலை அது. அவனுக்கு அது தெரியும். ஆனால் அவளுக்கு?

அதற்குள் கார் ஊருக்குள் நுழைந்து விட்டது.

★

**ம**னிதனின் வாழ்க்கையில் சில முக்கியமான திருப்பங்கள் எதிர்பாராமலேயே நடக்கும். சில நிகழ்ச்சிகள் வாழ்க்கையின் போக்கையே மாற்றிவிடும். அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி கேதாரகௌளரியின் வாழ்க்கையில் அன்று நடந்தது.

'ராவே' முடியப் போகிறது. அடுத்தவாரம் ஊருக்குத் திரும்ப வேண்டும். வயலுக்கு நடுவில் நின்று கொண்டு உழவர்களுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள் கேதாரகௌளரி. கணுக்கால் அருகில் அரிப்பது போல் இருந்ததால் குனிந்தாள்.

அங்கிருந்ததைப் பார்த்துவிட்டு வீலென்று அலறினாள். பெரிய அட்டையொன்று அவள் பாதத்தைப் பற்றி ரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருந்தது.

அவள் வீல்வீல் என்று கத்திக்கொண்டே இருந்தாள். வயதான உழவன் குனிந்து அதைப் பாதத்திலிருந்து பிய்க்க முயன்றான். அது வரவேயில்லை. அட்டையை சருமத்தி லிருந்து பிரிப்பது ரொம்ப கஷ்டம்.

அதற்குள் அங்கேயே கொஞ்சம் தூரத்தில் நின்று பயிர் களைக் கவனித்துக் கொண்டிருந்த சித்தார்த்தா சட்டென்று ஓடிவந்தான். ஜேபியிலிருந்து சிறிய பேனாக் கத்தியை எடுத்து அதைப் பிரித்தான்.

அதற்குள் அவளுக்குக் கிட்டத்தட்ட நினைவு தப்பி விட்டது போல் இருந்தது. தன்னை யாரோ கைத்தாங்கலாக பிடித்து அழைத்துக் கொண்டு போனது மட்டும் தெரிந்தது.

"கொஞ்ச நேரம் படுத்துக்கோம்மா" என்றார்கள் யாரோ. கீழே கயிற்றுக் கட்டில் தட்டுப்பட்டது.

கண்களைத் திறந்து பார்த்தபொழுது நெற்றியில் குங்குமம் இல்லாத பெண்மணி ஒருத்தி நின்று கொண்டிருந்தாள். பக்கத்திலேயே சித்தார்த்தா.

"என்னுடைய அம்மா" என்றான்.

கௌரி எழுந்துகொள்ள முயன்றாள். "படுத்துக் கொள் அம்மா" என்றாள் அவனுடைய தாய்.

அவள் பெயர் பார்வதி. அவள் தந்த மோரைக் குடித்து விட்டு எழுந்துநின்று கைகளை கூப்பி "போய் வருகிறேன். அனாவசியமாக உங்களுக்கு தொந்தரவு கொடுத்துவிட்டேன்" என்றாள்.

"இதில் என்னம்மா தொந்தரவு?"

சித்தார்த்தாவுடன் சேர்ந்து வெளியே வந்தாள்.

"உங்களுக்கு இதே ஊர்தான்னு எனக்குத் தெரியவே தெரியாது" என்றாள்.

"இந்த ஊர்தான்."

"இந்த வீடு வயல் எல்லாம் உங்களுடையதுதானா?" அந்தக் குடிசையைக் காட்டிக் கேட்டாள்.

சித்தார்த்தா சங்கடத்துடன் பார்த்துவிட்டு "ஒருவிதமாக சொல்லணும் என்றால் எங்களுடையதுதான். ஆனால் இன்னொரு விதத்தில் இல்லை" என்றான்.

"அப்படி என்றால்?"

அவன் பேச்சை மாற்றிக் கொண்டே "அதை விடுங்க" என்றான்.

"நீங்க இந்த ஊர்தான்னு ஏன் முன்னாடியே சொல்ல வில்லை. எல்லோரும் சாப்பிட வந்துவிடுவோம் என்று பயமா?" என்று கேட்டபடி அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"அப்படி எல்லாம் நான் நினைக்கமாட்டேன். ஒரு வேளை நான் சாப்பிடக் கூப்பிட்டிருந்தாலும் வராமல் எப்படி தப்பிக்கலாம் என்றுதான் எல்லோரும் பார்ப்பார்கள்."

அவள் நொந்து கொண்டே "சாரி. என் உத்தேசம் அது இல்லை" என்றாள்.

அவனும் சிரித்துவிட்டு "நானும் சும்மாதான் சொன்னேன்" என்றான்.

★

இன்னும் இரண்டே நாட்களில் அவர்களின் புரோகிராம் முடிந்துவிடும். வயலில் ஸ்ப்ரே டெமான்ஸ்ட்ரேஷன் நடந்து கொண்டிருந்தது.

கேதார கௌரி "இது நம் சித்தார்த்தாவின் வயல்தானே?" என்றாள் கூட இருந்த உழவனிடம்.

"ஆமாம்மா. பெரிய துரையிடம் அடமானம் வைத் திருக்காங்களே, சின்ன வயதிலேயே" என்றான் உழவன்.

"அவன் இல்லை. அவனுடைய அம்மா." திருத்திச்

சொன்னான் பக்கத்திலிருந்தவன்.

பிறகு அவள் சித்தார்த்தாவைச் சந்தித்தபொழுது முறுவலுடன் "உங்கள் வயல் ரகசியம் எனக்குத் தெரிந்து போய்விட்டது. உங்களுடையதாக இருந்தும் இல்லாமல் போனது" என்றாள்.

"யார் சொன்னாங்க?"

அவள் சொன்னாள்.

"சின்ன வயதிலேயே அப்பா இறந்து போய்விட்டார். அம்மா அந்த இரண்டு ஏக்கர்களை அடமானம் வைத்தாள். அதை வைத்துக் கொண்டு என் படிப்பு பிளஸ்டூ வரையிலும் நீடித்தது" என்றான்.

"வட்டி அதிகமாக இருக்குமோ."

"எங்களுக்கு கடன் கொடுத்த வியாபாரியே நிலத்தை குத்தகைக்கு விட்டார். கடன் முழுவதுமாக தீரும் வரையில் நிலத்திலிருந்து வரும் ஆதாயம் முழுவதும் அவருக்குத்தான் சொந்தம். அதுதான் வட்டி."

மனம் சிதறிப் போனவளாக அவள் ரொம்ப நேரம் பேசவில்லை. பிறகு மெதுவாகச் சொன்னாள். "புரட்சி புரட்சி என்று முழக்கமிட்டுக் கொண்டு இருக்கிறார்களே தவிர, புரட்சி எதற்காக வரணும்னு இது போன்று சம்பவங்களை மேற்கோள் காட்டி ஏன் சொல்லக் கூடாது?"

அவன் சிரித்துவிட்டு "மற்றவர்களைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் எங்களுக்குக் கடன் தந்த வியாபாரி மட்டும் நல்லவர்தான். அவர் நினைத்திருந்தால் எங்கள் நிலத்தை என்றைக்கோ ஸ்வாஹா பண்ணியிருக்கலாம்" என்றான்.

"எவ்வளவு நாளாக இப்படி நடந்து வருகிறது?"

"பதினாறு வருடங்களாக."

அவள் அதிர்ந்து போனவளாக "இரண்டாயிரம் ரூபாய் கடன் முடிய பதினாறு வருஷமா?" என்றாள்.

"இத்தனை வருடங்களாக நாங்கள் அசலை கொஞ்சம்கூட கட்டவே இல்லையே?" என்றாள்.

அவளுக்கு ஏதோ சந்தேகம் வரவே "பின்னே இத்தனை காலமாக உங்கள் ஜீவனம் எப்படி நடக்கிறது?" என்று கேட்டாள்.

"அம்மா இங்கே எங்களுடைய நிலத்திலேயே கூலி வேலை செய்கிறாள். நானும் அங்கிருந்து நூறோ இருநூறோ அனுப்பி வைப்பேன்."

"எப்படி?"

"ட்யூஷன் சொல்லித் தந்து."

அவள் வாயடைத்துப் போனவளாக அவன் பக்கம் பார்த்தாள். அவன் அதைக் கவனிக்கவில்லை. தலையைக் குனிந்து கொண்டு தன் போக்கில் சொல்லிக் கொண்டிருந்தான்.

"எவ்வளவு முயன்றாலும் அதைவிட அதிகமாக கிடைப்பதில்லை. சீக்கிரமாக வேலை கிடைத்துவிட்டால் ஒரு ஆறு மாதங்களுக்குள் அசலை திருப்பி விடலாம். அதுவரைக்கும் வேலை செய்ய வேண்டாம்னு சொன்னால் அம்மா கேட்க மாட்டேங்கிறாள். மகன் அக்ரிகல்சர் பி.எஸ்.ஸி. தாய் விவசாயக் கூலி."

அவன் பேசிக் கொண்டிருந்ததை அவள் கவனிக்கவே இல்லை. அவள் மனம் எப்பொழுதோ கலங்கி விட்டிருந்தது.

★

'ராவே' புரோகிராம் முடிய இன்னும் இரண்டு நாட்கள்தான் இருந்தன. எல்லோரும் எப்பொழுது வீட்டிற்குப் போவோம் என்ற துடிப்பில் இருந்தார்கள்.

அந்த ஊரின் அக்ரிகல்சர் ஆபீசரின் பெயர் ஹரிநாத். ரொம்ப நேர்மையான மனிதர். கேதாரகௌளரி அவருடன் சேர்ந்து வயலுக்குப் போவாள். அவரிடம் தந்தைக்கு சமமான மதிப்பு ஏற்படத் தொடங்கியது.

ஒரு சாதாரண வேலையிலிருந்து வந்த அவரிடம் எத்தனையோ உயர்ந்த பண்புகள் இருந்ததை அவள் உணர்ந்தாள். அன்று அதையே அவரிடம் சொன்னபோது அவர் சிரித்துவிட்டு "அனாவசியமாக என்னை வானளவுக்குப் புகழ்கிறாய். இதைவிட உயர்ந்த நற்பண்புகளை கொண்ட ஒருவர் என்னைவிட சிறியவர் உங்கள் வகுப்பறையிலேயே இருக்கிறார்" என்றார்.

"யார்?"

"சித்தார்த்தா. இந்த ஊர்க்காரன்தான்."

அவள் சிரித்தபடி "என்ன மாமா அவ்வளவு உயர்வு அவரிடம்?" என்று கேட்டாள். ஹரிநாத் ஏதோ சொல்ல வாயைத் திறந்தபோது வாசலில் கார் வந்து நின்றது. அவளுக்குப் பழக்கப்பட்ட சத்தம்தான் அது. சட்டென்று எழுந்து வாசலுக்குப் போனாள்.

காரிலிருந்து பவானிசங்கர் இறங்கிக் கொண்டிருந்தார். மகளைப் பார்த்ததும் அவர் முகம் மலர்ந்தது. உள்ளே அடியெடுத்து வைத்துக் கொண்டே "எப்படிம்மா இருக்கே?" என்று கேட்டார். சிரித்தபடியே "ஃபைன்" என்றாள்.

இரண்டே நாட்களில் தான் வந்துவிடப் போகிறாள். அதற்குள்ளாக தன் தந்தை இப்பொழுது ஏன் வரவேண்டும் என்றுதான் அவளுக்குப் புரியவில்லை.

உள்ளே வந்த பிறகு ஹரிநாத்துக்கும், கர்ணத்திற்கும் அறிமுகம் செய்து வைத்தாள். அறிமுகப்படலம் முடிந்த பிறகு மகளைத் திரும்பிப் பார்த்து "உன்னை அழைத்துப்

போகத்தான் வந்தேன். உன் புரோகிராம் முடிந்துவிட்டது இல்லையா?" என்றார்.

அவளுக்கு ஒரு நிமிஷம் எதுவும் புரியவில்லை. "என்ன டாடீ இது? வேண்டாம் என்று சொன்னாலும் கேட்காமல் கார் கொடுத்து அனுப்பினீங்க. டிரைவ் பண்ண ராகேஷும் இருக்கிறான். நாளை மறுநாள் நானே வந்துவிடப் போகிறேன். இதற்குப் போய் இப்போ நீங்க ஏன் வரணும்?" என்றாள்.

பவானிசங்கர் சங்கடத்துடன் "உனக்குப் புரியாதும்மா" என்றார்.

கர்ணம் குறுக்கிட்டு "கல்யாணம் நடந்து ஒரு குழந்தை பிறந்தால் தன்னால் புரியும்" என்றார். எல்லோரும் சிரித்தார்கள்.

அன்றிரவு வீட்டுக் கொல்லைப்புரம் மரத்தடியில் நிலா வெளிச்சத்தில் உட்கார்ந்திருந்தபொழுது மறுபடியும் அதே பேச்சு வந்தது.

"இந்தக் கோடையில் மகளுக்குக் கல்யாணத்தைப் பண்ணிவிடலாம்னு இருக்கேன். மாப்பிள்ளை யாரு தெரியும் இல்லையா? ராகேஷ்! என்னுடைய தங்கையின் மகன்" என்றார் பவானிசங்கர்.

"பார்த்திருக்கிறேன்" என்றார் ஹரிநாத்.

"எங்க வீட்டில்தானே தங்கியிருக்கிறான். பார்க்காமல் என்ன? நல்ல ஜோடிப் பொருத்தம்." அப்பொழுதுதான் உள்ளே நுழைந்து கொண்டிருந்த ராகேஷையும், கௌரியையும் பார்த்துவிட்டுச் சொன்னார் கர்ணம்.

"இங்கே எவ்வளவு நன்றாக இருக்கு டாடீ. நாம் திரும்பிப் பட்டணத்திற்குப் போய்விட்டால் எல்லாம் இயந்திரகதிதான்" என்றபடி தந்தைக்கு அருகில் வந்து உட்கார்ந்துகொண்டாள் கௌரி.

"உங்க வீட்டுக்காரரை இங்கேயே கொஞ்சம் நிலத்தை வாங்கிப் போடச் சொல்லும்மா. எங்க ஊர் மருமகளாகவே இருந்து விடலாம்." கர்ணம் சிரித்தார்.

அவள் ஒன்றும் புரியாதவளாக தந்தையின் பக்கம் பார்த்தாள்.

"இந்தக் கோடையில் உங்கள் கல்யாணத்தைப் பண்ணி வைக்கப் போவதாய் இப்பொழுதுதான் சொன்னேன்."

ராகேஷின் முகம் மலர்ந்தது. அவனே வீட்டிற்குப் போனதும் மாமாவிடம் இதைப் பற்றிப் பேச எண்ணி யிருந்தான். இந்த வருடம் படிப்பு முடிந்து விடுகிறது, இனியும் ஏன் தாமதிக்க வேண்டும் என்று. கேதாரகௌரி மனப் பூர்வமாக அவனை விரும்புவதாக இன்னும் சொல்லவில்லை என்பதையும் அவன் அறிவான். அதே நேரம் அவள் வெறுப்பையும் காட்டிக் கொள்ளவில்லை. கேதாரகௌரியாக அல்லாமல் வேறு யாராவதாக இருந்திருந்தால் பிடிப்பற்ற தன்மை என்று எண்ணியிருப்பான் அவன். ஆனால் கேதாரகௌரி ரொம்ப அழுத்தக்காரி. வெட்கத்தால் முகத்தைப் பொத்திக் கொண்டு உள்ளே ஓடமாட்டாள். அதனால்தான் அவனுக்கு எந்த மூலையிலேயோ ஆசை இருந்தது. அந்த ஆசை நிறைவேறும் தருணம் வந்துவிட்டது. இனி எந்தக் கவலையும் இல்லை.

"எங்க ஊரிலேயே ஒரு ஜோசியர் இருக்கிறார். அவர் முகூர்த்தம் பார்த்து வைத்தால் ரொம்ப ஸ்ட்ராங்காக இருக்கும். எங்கிருந்தெல்லாமோ வந்து பார்த்துக் கொண்டு போகிறார்கள். இவ்வளவு தூரம் வந்துட்டீங்க. அதனால் அந்த வேலையும் முடித்துக் கொண்டு போங்க."

"ஆமாம். அப்படியே செய்யுங்கள். எங்க கேதார கௌரியின் கல்யாணத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பே வந்து முகாம் போட்டுவிடப் போகிறோம். என்ன சொல்றீங்க

பவானி சங்கரன் சார்?"

"அதைவிட வேறு பாக்கியம் உண்டா? உடனே முகூர்த்தம் பார்க்க ஏற்பாடு செய்கிறேன்" என்றார் பவானிசங்கர்.

கேதார கௌரி தலைகுனிந்தபடியே உட்கார்ந்திருந்தாள். தென்னங்கீற்றின் நிழல் அவள் முகத்தில் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது.

அவள் எழுந்து கொண்டாள். "எனக்கு தூக்கம் வருகிறது டாடீ" என்று உள்ளே போய்விட்டாள். அவள் போன திசையையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு கர்ணம் பவானி சங்கரிடம் சொன்னார்.

"இந்த மாதிரி ஒரு பெண் இருந்துவிட்டால் வீடே கலகலப்பாகிவிடும். என்ன அடக்கம்! இப்படி அடக்கமான பெண்ணைப் பார்த்ததே இல்லை."

பவானி சங்கருக்கு பயமாக இருந்தது. மகளுக்கு எங்கேயாவது திருஷ்டி பட்டுவிடப் போகிறதே என்று பேச்சை மாற்ற எண்ணி "சரி, படுத்துக் கொள்ளப் போகலாமா? காலையில் சீக்கிரமாக எழுந்து கொண்டு ஜோசியரிடம் போகணுமே" என்றார். ஹரிநாத்தும் எழுந்து கொண்டார்.

"அப்போ ஜாதகங்கள்?" என்றார் கர்ணம்.

"என்ன கர்ணமய்யா நீர். சம்பந்தம் பார்க்கத்தான் ஜாதகம் எல்லாம் வேண்டும். முகூர்த்தமே குறிக்க ஜாதகம் எதுக்கு?" என்றார் ஹரிநாத்.

"என் மகளுடைய நட்சத்திரம் எனக்குத் தெரியும். ராகேஷ் ஜாதகம் வேண்டும் என்றால் இரவோடு இரவாக டிரைவரை அனுப்பி. . ."

"அதெல்லாம் தேவையில்லை. நாளை காலையில் நான் வரும்போது தயாராக இருங்கள்" என்று வாசலைத்

தாண்டப் போன ஹரிநாத் சற்று நின்று "ஆமாம், முந்தாநாள் பேப்பரில் உங்க போட்டோவைப் பார்த்தேனே" என்றார்.

"எங்க தொழிலாளர்களின் கம்யூனிஸ்ட் சங்கத்தில்."

"நீங்க கம்யூனிஸ்டா?"

"அந்த மாதிரி கொள்கைதான்னு வைத்துக் கொள்ளுங்கள். ஏன்?"

"அது இல்லை. ஜாதகம் நட்சத்திரம் என்று ஏதேதோ சொல்றீங்களேன்னுதான்."

பவானி சங்கடத்துடன் சிரித்துக் கொண்டே "அது பாட்டுக்கு அது. இது பாட்டுக்கு இது." என்றார். மற்றவர்களும் சிரித்தார்கள்.

★

**அ**ன்றிரவு பன்னிரெண்டு மணிக்கு ராகேஷ் ரெட் ஸ்கெலிடனைச் சந்தித்தான்.

"எனக்கு ஒரு விவரம் தேவை."

"என்ன?"

"உஸ்ஸோக்கில் சேர்ந்திருக்கும் நான் இப்போ கல்யாணம் செய்து கொள்ளலாமா?"

"சாதாரணக் கல்யாணம் என்றால் தடையில்லை. ஆனால் நீயோ. . ."

"நான் என்ன ஸ்பெஷல்?"

அவன் தயங்கினான். "நீ மகாத்ரஷ்டாவைச் சந்திப்பது நல்லது" என்றான்.

ராகேஷ் அதிர்ச்சியடைந்தான். "நான் மகாத்ரஷ்டாவைச் சந்திப்பதா?" என்றான் வியப்புடன்!

கிழ உழவன் கொஞ்சம் யோசித்துவிட்டு "உன்னைப்

பற்றி நீ என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? நீ இப்போ யாரு தெரியுமா?"

"நான் யார்?"

மயானத்தில் இருந்த குட்டையில் தண்ணீர். அதில் ராகேஷ் தன் நிழலைப் பார்த்துக் கொண்டான். பூமி சுழலுவது நின்றுவிட்டாற் போலவும், வானத்திலிருந்து நட்சத்திரங்கள் உதிர்ந்து கீழே விழுவது போலவும் பிரமை ஏற்பட்டது. வயிற்றுக்குக் கீழ்பாகம் தண்ணீரில் தெளிவாய் தெரிந்தது. அவன் ஒரு ரெட் ஸ்கெலிடன்!

## 8

அவன் இன்னும் பிரமையிலிருந்து மீளவில்லை. பின்னாலிருந்து கிழவனின் குரல் கேட்டது.

"அஷ்டாவக்கிரனின் பிறப்புக்காக வயலில் எலும்புகளின் பஸ்மத்தைத் தூவுவதற்குத் தகுதியான ஆளைத் தேடிக் கொண்டிருந்த சமயத்தில் நீ வந்து உஸ்ஸோக்கில் சேர்ந்தாய். இந்தக் காரியத்தைச் செய்யப் போகிறவன் சாதாரண மெம்பராக இருக்கக் கூடாது. அதனால்தான் உன்னை மூன்று நான்கு படிகளை உயரத் தூக்கி வைக்கப்பட்டது. உன் வேலையை நீ திறமையாக செய்து முடித்தாய். நாற்பது ஐம்பது ஆண்டுகள் இடைவிடாமல் தவமிருந்தாலும் கிடைக்காத பதவி உனக்குக் கிடைத்திருக்கிறது. உஸ்ஸோக் வரலாற்றி லேயே எல்லோரையும் விட இளைஞன் நீதான். இந்தப் பிரச்னை இதற்கு முன்னால் யாருக்குமே வரவில்லை. என்ன செய்ய வேண்டுமோ மகாத்ரஷ்டா சொல்லுவார் போ."

விடியும் நேரத்தில் உஸ்ஸோக்கின் இடத்தை அடைந்தான் அவன். ராகேஷ் போனபொழுது ஒருவன்

க்ளோஸ் சர்க்யூட் டி.வி.யில் எதையோ பார்த்துக் கொண்டிருந்தான்.

"மகாத்ரஷ்டா இப்போ எங்கே இருக்கிறார்?"

"இமய மலைக்குப் போயிருக்கிறார். வர இரண்டு நாட்களாகும்."

"எதுக்கு?"

"அஷ்டாவக்கிரன் பிறக்காமலிருப்பதற்காக அங்கே ஒரு சிவ யோகி ஏதோ யாகம் செய்கிறாராம். அவரைக் கொன்று விட்டு வரத்தான்."

டி.வி. திரையில் மகாத்ரஷ்டாவின் உருவம் தெரிந்தது.

"வாழ்த்துக்கள் ராகேஷ்! மிக சொற்ப காலத்திலேயே உன்னதமான இடத்தை பெற்றுவிட்டதற்கு."

"நம் ஆள் ஒரு சந்தேகத்தை நிவர்த்தி பண்ணிக் கொள்ள வந்திருக்கிறான்" என்றான் அருகிலிருந்தவன்.

"என்ன சந்தேகம்?"

ராகேஷ் முன்னால் வந்து "நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவளைக் கல்யாணம் செய்து கொள்ள லாமா?" என்று கேட்டான்.

எப்பொழுதாவது அரிதாகத் தென்படும் முறுவல் மகாத்ரஷ்டாவின் முகத்தில் தென்பட்டது. "நீ காதலிக்க வில்லை ராகேஷ். காதலிப்பது போல் நடிக்கிறாய், அவள் தந்தையின் கோடிக் கணக்கான சொத்துக்களுக்காக."

ராகேஷ் ஆச்சரியமடைந்தான். அந்த விஷயம் மகாத்ரஷ் டாவுக்கு தெரிந்துவிட்டதற்காக இல்லை. அவ்வளவு ஆயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலிருந்தும் அந்த விஷயத்தை நன்றாக நினைவு வைத்துக் கொண்டு சொன்னதற்கு.

அதற்குள் மகாத்ரஷ்டாவின் குரல் கடுமையாக ஒலித்தது.

"உஸ்ஸோக்கில் ரெட்ஸ்கெலிடன் பதவியை அடைந்தவர்கள் உலகத்தில் உள்ள சகல பாக்கியங்களையும் அனுபவிக்கத் தகுதி படைத்தவர்கள்தான். ஆனால் அவர்கள் எந்த விதமான பந்தபாசங்களையும் வைத்துக் கொள்ளக் கூடாது. புரிந்ததா ராகேஷ்?"

ராகேஷ் மௌனமாக இருந்தான்.

"பெண்கள், பணம் எதை வேண்டுமானாலும் நீ வேண்டிய வரையிலும் அனுபவிக்கலாம். ஆனால் மனைவி, குழந்தைகள் என்ற பந்தம் இருக்கக் கூடாது. அது இருந்து விட்டால் கோழையாகி விடுவாய். உஸ்ஸோக்கிற்குக் கொஞ்சமும் பயன்படாமல் போவாய்."

"ஆனால் கேதாரகௌரியை நான் கல்யாணம் செய்து கொள்ளவில்லை என்றால் சொத்து என் கைக்கு வராது."

மறுமுனையில் சற்று நேரம் மௌனம். "உனக்கு கேதார கௌரியுடன் சம்சார வாழ்க்கை நடத்தணும் என்ற எண்ணம் இருக்கிறதா?"

மகாத்ரஷ்டாவிடம் பொய் சொல்வது விவேகம் இல்லை. ராகேஷ் சொன்னான். "அவளுடன் குடித்தனம் நடத்தும் எண்ணமே எனக்கு இல்லை. அவளை எந்த ஆண் மகனாவது மனப்பூர்வமாக விரும்பி மணப்பானா என்பதுகூட சந்தேகம்தான். நான்தான் ஏதோ. . . ."

"அப்படி என்றால் பண்ணிக்கொள் ராகேஷ்! ஆனால் அவளுடன் எந்த உறவும் வைத்துக் கொள்ளாதே. உங்கள் திருமணம் நடந்த நாலாவது நாள் அவள் இறந்து விடுவாள். அந்த மரணம் ரொம்ப சகஜமாக நடைபெறும்விதமாக உஸ்ஸோக் பார்த்துக் கொள்ளும். உன்மீது யாருக்குமே சந்தேகம் வராது. கல்யாணம் ஆன அன்றைக்கே நீ ஏதோ வேலையிருப்பது போல் வெளியூருக்கு போய்விடு. நாலு நாள்

அவகாசம் கொடு. நீ திரும்பி வருவதற்குள் காரியம் முடிந் திருக்கும். அதற்குப் பிறகு சொத்து உன் கைக்கு வந்து சேரும். உனக்குப் பிடித்தமான பெண்களுடன், மனம் விரும்பியது போல் சந்தோஷமாக இருக்கலாம். திருமண விஷயத்தை மட்டும் மறந்துவிடு, நீ ரெட் ஸ்கெலிடன் என்பதால்."

ராகேஷின் உள்ளத்திலிருந்து சந்தோஷம் அலையாய் பொங்கியது. "உங்களுக்கு என் நன்றியை எப்படித் தெரிவிப்பேன்?" என்றான்.

"உஸ்ஸோக்கில் நன்றி சொல்ல வேண்டிய தேவை யாருக்கும் வராது ராகேஷ். காத்ரா, விஷாச்சியின் எலும்பு பஸ்மத்தை கிராமத்திற்குள் பரவச் செய்ததற்காக உஸ்ஸோக் உனக்கு இந்த உதவியைச் செய்கிறது."

காட்சி மறைந்துவிட்டது.

ராகேஷ் வெளியே வரும்போது கிழக்கில் நன்றாக வெளுத்துவிட்டிருந்தது.

★

**அ**தே சமயத்தில் கிராமத்திலிருந்த ஜோசியர் கடைசி முறையாக கணக்குப் போட்டு பார்த்துவிட்டு "ரொம்ப திவ்யமான முகூர்த்தம். இன்னும் ஒரு வருஷத்திற்கு திரும்பவும் இது போன்ற முகூர்த்தம் கிடைக்காது" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

"மார்ச் மாதம் என்றால் ரொம்ப கிட்டத்தில் இருக்கே." சந்தேகத்தை வெளியிட்டார் பவானிசங்கர்.

"சாதாரண முகூர்த்தம் என்றால் மாற்றி வைத்துக் கொள்ளலாம். ஆனால் இதில் சக்கரம்கூட போட்டுப் பார்த்து விட்டேன். மார்ச் ஆறாம் தேதி ஆறுமணி பத்துநிமிஷத்திற்கு இந்தப் பெண்ணின் கல்யாணம் நடக்காமல் போனால் நான் ஜாதகம் பார்ப்பதையே

விட்டுவிடுகிறேன்." உதயசூரியனின் செம்பொற்கிரணங்கள் அந்த ஜோசியரின் முகத்தில் ஆவேசத்தை அதிகப்படுத்திக் காண்பித்தன.

"அப்படி ஏன் சொல்றீங்க?" கர்ணம் கேட்டார்.

"திவ்யமான ஜாதகம் சுவாமீ! என் வாழ்நாளில் இது போன்ற ஜாதகத்தை பார்த்ததே இல்லை. நான் சொன்ன முகூர்த்தத்தில் கல்யாணம் பண்ணிப் பாருங்கள். புத்ர பௌத்ராபிவிருத்தியுடன் உங்கள் வம்சம் எப்படி விளங்கப் போகிறது என்று."

பவானிசங்கர் யோசித்தார். குறைந்தபட்சம் ஐந்தாயிரம் பத்திரிகையாவது அடிக்கணும். நாட்டிலேயே இது போன்ற கல்யாணம் நடந்ததில்லை என்பது போல் நடத்த வேண்டும். ஒரே மாதத்திற்குள் இவ்வளவு ஏற்பாடுகளையும் செய்ய முடியுமா? நினைத்தால் முடியாதா என்ன?

"சரி. அந்த முகூர்த்தமே இருக்கட்டும்" என்றார்.

★

'ராவே' புரோகிராம் அன்றுடன் முடிவடைந்தது. ஊராரிடமிருந்தும், தம்மை விருந்தினராக ஏற்றுக் கொண்டவர்களிடமிருந்தும் மாணவ மாணவிகள் விடைபெற்றுக் கொண்டிருந்தார்கள்.

கேதாரகௌரி சித்தார்த்தாவின் தாயிடம் சொல்லிக் கொள்வதற்காக அவன் வீட்டிற்குப் போனாள். அப்பொழுது இரவு எட்டு மணியிருக்கும். அவள் போன சமயம் காடா விளக்கு வெளிச்சத்தில் நான்கு சிறுவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சித்தார்த்தா அவளைப் பார்த்து வியப்புடன் எழுந்து கொண்டு உள்ளே எட்டிப் பார்த்து "அம்மா!" என்று அழைத்தான். கையில் உணவுக் கிண்ணத்துடன் அப்படியே வெளியே வந்த அவனுடைய தாய் "வாம்மா வா" என்று அவளை வரவேற்றாள்.

"உட்காருங்கள்" என்று கட்டிலை காண்பித்துவிட்டு தான் கதவில் சாய்ந்து நின்று கொண்டான் சித்தார்த்தா. அவன் உட்காருவதற்கு வேறு எதுவுமே இல்லாததை கவனித்தாள் அவள்.

"நீங்களும் எங்களுடன் ஊருக்கு வந்துவிடப் போறீங்களா?" என்று கேட்டாள்.

"ஆமாம்" என்றான்.

அதற்குள் உள்ளே சாப்பாடு முடித்துவிட்டு சிறுவர்கள் வெளியே வந்தார்கள்.

"இவர்கள் யாரு?" கேட்டாள் அவள்.

"எங்கள் வீட்டிலேயே தங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்று யாருமே இல்லை. இங்கேயே தங்கி படித்துக் கொண்டு இருக்கிறார்கள்."

"இதுக்கெல்லாம் பணம்?"

"நான்தான் அங்கேயிருந்து அனுப்பிக் கொண்டு இருக்கிறேனே."

சித்தார்த்தா ட்யூஷன் சொல்லித் தருவது அவளுக்குத் தெரியும். "உங்கள் நிலம் அடமானத்தில் இருக்கும்போது அதை மீட்காமல் இவர்களுடைய பாரத்தை ஏற்றுக் கொள்வானேன்?" கேட்டுவிட்டாள் அவள்.

"மேலும் நாலு சித்தார்த்தாக்கள் உருவாகாமல் இருப்பதற்கு."

அவள் அதிர்ந்தவளாய் அவனைப் பார்த்தாள். அவன் சிரித்தான். "இந்த உதவிகூட எங்களுக்கு செய்ய யாரும் முன்வராததால் என்னை படிக்க வைப்பதற்காக எங்கம்மா நிலத்தை அடமானம் வைத்துவிட்டு அதிலேயே கூலி வேலை செய்யத் தொடங்கினாள். ஏதோ அதிர்ஷ்டவசமாக என்னால் கொஞ்சமாவது சம்பாதிக்க முடிந்தது. நாலு

அவள் அவனை கண்ணிமைக்காமல் பார்த்தாள். அவன் அழகற்றவனாக இருக்கலாம். அதனால் என்ன? தனித் தன்மையானது அவனுக்கு தேஜஸ்ஸை அளித்திருந்தது.

சித்தார்த்தாவைப் பற்றி ஹரிநாத் புகழ்ந்தது நினைவுக்கு வந்தது. தங்களுக்குள் ஒருவனாக இருந்தும் தன்னைப் பற்றி இத்தனை நாளாக ஒரு வார்த்தைகூட ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாத இவன். . .

சின்ன விஷயத்தைகூட மலையளவுக்கு விளம்பரப் படுத்திக் கொள்ளும் வேறு பலரைவிட பல மடங்கு உயர்ந்தவன்தான்.

"அது சரி. கடந்த நாலைந்து வருடங்களாக கஷ்டப்பட்டு உழைத்து மாதா மாதம் இருநூறு ரூபாய்அனுப்பி இவர்களைப் படிக்க வைக்கிறீங்க. நல்ல காரியம்தான். ஆனால் அந்தப் பணத்தை கடனுக்கு அடைத்திருந்தால் இவ்வளவு வட்டி கட்டத் தேவையில்லாமல் சீக்கிரம் தீர்ந்திருக்கும் இல்லையா? நிலம் உங்கள் கைக்கு வந்துவிட்டால் அப்புறம் நாலு பேரென்ன, ஆறுபேரைக் கூட படிக்க வைக்கலாம் இல்லையா? நீங்க செய்கிற காரியத்தில் லாஜிக் இருப்பதாகத் தெரிய வில்லையே?"

அவன் அதே புன்னகை மாறாமல் "நீங்க சொன்னதும் உண்மைதான். நாலு வருஷம் பொறுத்திருந்தால் அம்மாவுக்கு சீக்கிரத்தில் இந்தக் கூலி வேலையிலிருந்து விடுதலை கிடைத்திருக்கும். ஆனால் அதற்குள் மேலும் நாலு சித்தார்த்தாக்கள் உருவாகியிருப்பார்கள். வாழ்க்கையில் லாஜிக்கை விட மதிப்பு வாய்ந்தவை நிறைய உள்ளன மிஸ் கௌரி! எல்லாவற்றையும் விட முக்கியமானது ஆத்ம திருப்தி."

அவள் கண்கள் மலர அவனைப் பார்த்துக் கொண்டிருந்த போது உள்ளேயிருந்து அவன் தாய் இரண்டு ஆரஞ்சுப் பழங்களுடன் வெளியே வந்தாள்.

## 9

திருமணக் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. கோடிக் கணக்கான வியாபாரத்தைக் கூட தன் சுண்டு விரலால் ஆட்டி வைக்கக் கூடிய பவானிசங்கர் திருமணம் நெருங்க நெருங்க பதற்றமடையத் தொடங்கினார். எந்த மாதிரி அழைப்பிதழை அச்சடிக்க வேண்டும் என்ற சர்ச்சையிலேயே மூன்று நாட்கள் கழிந்தனவே தவிர ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

ஹாலில் அமர்ந்தபடி அழைப்பிதழ் டிசைனைப் பார்வை யிட்டுக் கொண்டிருந்தார் பவானிசங்கர். அவர் தோளுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தாள் கௌரி.

"கௌரீ! எல்லாவற்றையும் விட இதுதான் எனக்குப் பிடித்திருக்கிறது."

"நரை முடி வந்துவிட்டது டாடீ உங்களுக்கு." அவர் பேச்சை கவனிக்காமல் தலையையே பார்த்தபடி சொன்னாள்.

"ஐம்பதைத் தாண்டிவிட்டேன் இல்லையா?"

"அப்படி என்றால் இவ்வளவு நாள் நரைக்காமல் இருந்தது அதிர்ஷ்டம்தான்."

பவானிசங்கர் உரத்த குரலில் சிரித்துவிட்டு "நீயும் ஏமாந்து விட்டாய். இளமையிலேயே எனக்கு வெள்ளை முடியிருந்தது. டை போட்டுக் கொண்டு பெண் பார்க்கப் போனேன். கல்யாணமாகி இரண்டு வருஷம் வரைக்கும் உங்க

அம்மாவுக்கே தெரியாது எனக்கு தலைமுடி நரைத்திருப்பது."

கேதாரகௌளரியும் சிரித்துவிட்டு "கல்யாணத்திற்கு முன்னால் அம்மாவோடு அறிமுகம் இல்லையா டாடீ உங்களுக்கு?" என்று கேட்டாள்.

"அறிமுகமா? நன்றாகச் சொன்னாய் போ. உங்க தாத்தா பெயருக்குத்தான் முற்போக்குவாதியே தவிர இந்த மாதிரி கல்யாணத்திற்கு முன்னாடி பெண்ணோடு பேசணும் என்று சொல்லியிருந்தால் கழியைக் கையில் எடுத்திருப்பார். உங்க அம்மாவும் நானும் கல்யாணம் முடிந்து ஒரு மாதம் வரையிலும் ஒருத்தரோடு ஒருத்தர் பேசவேயில்லை. அத்தனை வெட்கம் அந்தக் காலத்தில்."

அந்தக் காலத்து நினைவுகளில் மூழ்கிவிட்ட தந்தையைப் பரிவோடு பார்த்து "அம்மா உங்களை ரொம்ப நன்றாக கவனித்துக் கொண்டாள் இல்லையா டாடீ" என்றாள்.

அவர் கண்களைத் திறக்காமலேயே "வாழ்க்கையில் என்றுமே துரதிர்ஷ்டமானது என்னை நெருங்காது என்று பெருமைப்பட்டுக் கொண்டிருந்தேன். எல்லாவற்றுக்கும் சேர்த்துவைத்து என்னைப் பழி வாங்கிவிட்டது உங்க அம்மாவின் சாவு" என்றார்.

கொஞ்ச நேரம் நிசப்தம்.

"நீங்க யாருன்னு அம்மாவுக்கும் அம்மா யாருன்னு உங்களுக்கும் தெரியாது. கல்யாணமான பிறகும் ஒரு மாதம் வரையில் நீங்கள் இருவரும் பேசிக் கொள்ளவே இல்லை. ஆனாலும் ஒருத்தருக்கொருத்தர் துணையாய் நிழலாய் எப்படி டாடீ இருக்க முடிந்தது?"

"சேர்ந்து வாழ்ந்ததன் மூலம். அதற்குப் பின்னாலிருந்தது புனிதமான திருமணபந்தம் என்பதால். ஏனம்மா இப்படி கேட்கிறாய்?"

அவள் அந்தக் கேள்விக்கு பதில் அளிக்காமல் "இல்லை டாடீ. ஒருத்தரை ஒருத்தர் புரிந்து கொண்டதால்தான் அது சாத்தியமாயிற்று என்று நான் நினைக்கிறேன்" என்றாள்.

அவர் கொஞ்சம் யோசித்தார். பிறகு "நீ சொன்னதும் உண்மைதான்" என்றார்.

"அப்படி என்றால் பெண் பார்க்கும் சடங்கெல்லாம் எதுக்கு டாடீ? அந்தக் குறுகிய நேரத்திற்குள் எப்படியும் ஒருத்தரையொருத்தர் புரிந்து கொண்டு விட முடியாதே?"

இந்த மாதிரி கேள்விகளைக் கேட்டு அவரை இக்கட்டில் ஆழ்த்துவது அவளுக்கு வழக்கம்தான். அதனால் அவர் சிரிப்பு மாறாமலேயே "இரண்டு பேர் வாழ்நாள் முழுவதும் சேர்ந்து இருக்கணும் என்றால் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது ரொம்ப முக்கியம். சிலரைப் பார்த்ததுமே சிநேகபாவம் ஏற்பட்டுவிடும். வேறு சிலரைப் பார்த்ததுமே காரணமில்லாத வெறுப்புகூட ஏற்படக் கூடும். வாழ்க்கைத் துணையாக வரப்போகும் நபரைப் பார்த்ததுமே நமக்கு எந்த மாதிரி உணர்வு தோன்றுகிறது என்று தெரிந்து கொள்ளத்தான் இந்தப் பெண் பார்க்கும் நிகழ்ச்சியெல்லாம். ஒரு தடவை அந்த மாதிரி சிநேகபாவம் ஏற்பட்டுவிட்டால் திருமணம் எப்படியும் அவர்களை ஒன்று சேர்த்துவிடும். சாதாரணமாக கண்கள் ஏமாற்றினால் தவிர, எந்த திருமணபந்தமும் தோல்வியில் முடியாது."

"நீங்க சொல்வதைப் பார்த்தால் கண்கள் சொல்லும் தீர்வு என்றுமே தவறாக இருக்காது என்று தோன்றுகிறது. சிலரைப் பார்த்ததுமே சிநேகபாவம் ஏற்படுகிறது. வேறு சிலரிடம் எவ்வளவு நாளாகப் பழகி வந்தாலும் அந்த எண்ணமே வருவதில்லை."

"அது சரி. இதையெல்லாம் ஏன் கேட்கிறாய்?"

"எனக்குள் நானே தத்தளித்துக் கொண்டிருந்தேன் டாடீ

இத்தனை நாளாக. ஒரு நபருடன் எவ்வளவு கலந்து பழகினாலும் எனக்கு ஏனோ அந்த மாதிரி சிநேக பாவம் தோன்றவில்லை. ஒருக்கால் நான் யோசிப்பதில்தான் ஏதாவது தவறு இருக்கிறதோ என்று நினைத்தேன். நீங்களும் என்னைப் போலவே நினைப்பது எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கு."

"யாராக இருந்தாலும் இதையேதான் சொல்லுவார்கள்."

"காரணமில்லாமல் சிலர் மீது அன்பு ஏன் தோன்றுகிறது என்று நம்மால் சொல்ல முடியாது இல்லையா? உண்மைதான் டாடீ. நானும் இப்போ அந்தநிலையில்தான் இருக்கிறேன். அவன் பெயர் சித்தார்த்தா. நீங்க சம்மதித்தால் அவனையே கல்யாணம் செய்து கொள்கிறேன் இதே முகூர்த்தத்தில்."

## 10

**வா**னம் இரண்டாகப் பிளந்து விடுமோ என்பதுபோல் இடி இடித்துக் கொண்டிருந்தது. ஹோவென்று காற்றின் சத்தம் கிருஷ்ணாபுரத்தையே கதிகலங்க வைத்துக் கொண்டிருந்தது.

அந்த கிராமத்தில் ஏரிக்கரைக்கு அருகில் இருந்த ஒரு ஓட்டு வீட்டில் பெட்ரோமாக்ஸ் விளக்கு வெளிச்சத்தில் ஒரு நோயாளியுடன் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தார் ரங்கபிரசாத்.

ரங்கபிரசாத் எம்.எஸ்.

உண்மையில் அவர் படித்த படிப்புக்கு அந்த ஊரில் பிராக்டீஸ் செய்வது லாபகரம் இல்லைதான். ஆனால் ஒரு நல்ல கொள்கையுடன் கிராம மக்களுக்கு உதவி செய்ய

வேண்டும் என்ற எண்ணத்துடன் அந்த ஊருக்கு வந்தார். பக்கத்து கிராமங்களிலிருந்தும் ஜனங்கள் வந்து கொண்டிருந்தனர். ஏதோ சுமாராக தொழில் நடந்து கொண்டிருந்தது.

வந்தது ஒரு கூலிப்பெண். கல்யாணமாகி ஆறுமாதங்கள் முடிந்திருந்தன. நாலாவது மாதம். வயிற்றுவலி, ரத்தப் போக்குடன் நினைவு இல்லாத நிலையில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டாள். பார்த்ததுமே அபார்ஷன் கேஸ் என்று தெரிந்துவிட்டது. அவசரமாக முதலுதவி சிகிச்சை செய்தார். வலி குறைந்தது. ஆனால் ரத்தப் போக்கு இன்னும் நிற்கவில்லை. ரத்தம்கட்டி கட்டியாக விழத் தொடங்கியது.

அரைமணியாகிவிட்டது. சிறிய கேஸ் என்று எண்ணிக் கொண்டிருந்தது, அபாய நிலைக்கு வந்து சேர்ந்துவிட்டது. அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. நோயாளியைச் சேர்ந்தவர்கள் நாலாவது மாதம் என்று சொல்லியிருந்தார்கள். ஆனால் அவருக்குச் சந்தேகம் ஆறு மாதம் இருக்கும் என்று.

இறுதியில் ஹிஸ்டராடமி செய்வது என்று முடிவுக்கு வந்தார். அருகில் இருந்த நர்ஸ் வியப்புடன் பார்த்தாள். எவ்வளவோ முக்கியமாக இருந்தால் தவிர வயிற்றைக் கிழித்து அந்த மாதிரி ஆபரேஷனை செய்யமாட்டார்கள்.

ஏன்தான் அந்த யோசனை அவர் மனதிற்கு தோன்றியதோ தெரியாது. ஆனால் அது நல்ல பலனையே தந்தது. தாய் பிழைத்துக் கொண்டாள். மேலும் அரைமணி கழித்து ஆபரேஷன் முடிவடைந்தது. முகத்தைக் கழுவிக் கொண்டு டீயை குடித்தபடியே மருத்துவ பத்திரிகையை புரட்டிக் கொண்டிருந்தாரே தவிர, டாக்டர் ரங்கபிரசாதின் எண்ணங்கள் எங்கேயோ இருந்தன.

கிழித்த வயிற்றுக்குள்ளிருந்து தன் கைகளால் வெளியே

எடுக்கப்பட்ட பிண்டம் .... குரங்குக் குட்டியின் தோற்றத்தில் உயிரோடு இருந்த அந்த பிண்டம் ....

அதுதான் அவரைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. நாலே மாதத்தில் கரு எப்படி அந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்தது? திருமணத்திற்கு முன்பே அவளுக்கு யாருடனாவது தொடர்பு இருந்திருக்குமோ? ஏனோ அது உண்மையாக இருக்குமென்று தோன்றவில்லை. வெளிப்பட்ட பிண்டத்தின் பின்பக்கம் சிறிய வால். அதுதான் அவரைக் கலவரப்படுத்தியது.

தலையை சிலிர்த்துக் கொண்டு மறுபடியும் புத்தகம் படிப்பதில் ஆழ்ந்துவிட்டார்.

வெளியே இன்னும் மழை பெய்து கொண்டே இருந்தது. கூடுவாய் முனையிலிருந்து தாரையாக விழும் மழைத் தண்ணீரை பார்த்தபடி கிழவன் ஒருவன் கண்களை பாதி மூடிய நிலையில் சுருட்டைப் பிடித்துக் கொண்டிருந்தான். அரைமணிக்கு முன்னால் அவன் அனுப்பிய செய்தி அலை அலையாய் உஸ்ஸோக் அங்கத்தினர்களுக்கு போய்ச் சேர்ந்தது.

'அஷ்டாவக்கிரனின் வருகைக்கு அறிகுறியாய் முதல் குழந்தை குரங்கு உருவத்தில் பிறந்துவிட்டது' என்பதுதான் அந்தச் செய்தி.

★

"அவன் அழகானவன் இல்லை டாடீ. பணக்காரனும் இல்லை. ஒருக்கால் இந்த இரண்டும்தான் என்னை அவன்பால் இழுத்தனவோ? ராகேஷிடம் நான் என்றுமே சுவாதீனத்தோடு பழகினதில்லை. கண்ணுக்குத் தெரியாத ஒரு இடைவெளி. ஒருக்கால் அது என் தாழ்வு மனப்பான்மையாகவும் இருக்கலாம். அது அப்படியே இருந்துவிட்டது. அதனால்தான் எனக்குச் சமமான தகுதியில்

இருக்கும் அவனையே கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறேன். எங்களை ஆசீர்வதியுங்கள்."

"கௌரீ! நான் சித்தார்த்தாவைப் பார்க்கணும் என்று கூட தேவையில்லை. என் மகளின் தீர்மானத்தின் மேல் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. முகூர்த்தத்தைக்கூட மாற்றத் தேவை யில்லை."

அவருடைய அன்பிற்கு அவள் உருகிவிட்டாள். "தாங்க்ஸ் டாடீ" என்றாள்.

"ஆனால் ராகேஷிடம் இந்த விஷயத்தை எப்படிச் சொல்லுவாயோ அந்த வேலையை உன்னிடமே விட்டு விடுகிறேன். உன் மேல் அவன் ரொம்ப ஆசையை வைத்துக் கொண்டிருக்கிறான். நீதான் நயமாக எடுத்துச் சொல்லணும். இது அவனுக்குப் பெரிய அதிர்ச்சி" - சொன்னார் பவானிசங்கர்.

அவள் தலைகுனிந்தபடி "சரி டாடீ" என்றாள்.

★

"**நீ** இல்லாமல் என்னால் வாழ முடியாது கௌரீ! விஷத்தைக் குடித்துச் செத்துப் போய்விடுகிறேன். காதலில் தோல்வியடைந்த காதலர்கள் எல்லோரும் என்ன செய்தார்கள்? தற்கொலை செய்து கொண்டார்கள், இல்லையா? குடிகாரர்களாக ஆனார்கள். நானும் ஏதோ வழியைத் தேடிக் கொள்கிறேன்."

"ராகேஷ்!"

"என்று சொல்லுவேன்னு நினைத்தாயா கௌரீ? உன்னுடைய உண்மையான நண்பனான எனக்கு நீ என்ன செய்தாலும் சம்மதம்தான். சித்தார்த்தா ரொம்ப நல்லவன். நீ நல்ல முடிவைத்தான் எடுத்திருக்கிறாய்."

அவள் அவனை நெருங்கி வந்தாள். "உனக்கு இதில்

வருத்தம் இல்லையே" என்று கேட்டாள்.

அவன் சிரித்தான். "வருத்தமா? எதுக்கு வருத்தம்? நீ சந்தோஷமாக இருப்பதில் எனக்கு என்ன வருத்தம்?" என்றான்.

அவள் முகம் மலர்ந்தது. லேசாகி விட்ட மனதுடன் "எனக்குத் தெரியும் ராகேஷ். நான் உனக்கு எந்த விதத்திலேயும் சரியான ஜோடியாக இருக்க முடியாது. உன் அழகிற்கு முன்னால் இந்த நொண்டிப் பெண் எப்படிப் பொருத்தமாக இருப்பாள். ஏதோ ஏழைக்கேற்ற எள்ளுருண்டை" என்றாள்.

"ச்செ. . . ச்செ. . . . அப்படி எல்லாம் ஏன் பேசுகிறாய்? ஆனால் தினமும் உன்னைப் பார்த்து மனைவியாய் கற்பனை பண்ணியே வளர்ந்துவிட்ட எனக்கு இந்த விஷயத்தை அவ்வளவு சீக்கிரத்தில் ஜீரணிக்க முடியவில்லை. சரி போகட்டும். இந்த வீட்டிலிருந்து வெளியேறுவதற்குக் கொஞ்சம் நாள் அவகாசம் தருவாயா?" என்று கேட்டான்.

"வீட்டை விட்டுப் போவதாவது? எதற்கு?" என்றாள் வியப்புடன்.

"இந்த வீட்டிற்கும் எனக்கும் இனி எந்த சம்பந்தமும் இல்லை என்பதை நான் மறந்துவிடவில்லை. அதான் சொன்னேனே, மனதை சமாதானப்படுத்துவதற்கு கொஞ்ச நாளாகும் என்று. குறைந்தது உன் கல்யாணம் ஆகும் வரையிலாவது என்னை உங்களுடன் இருக்கவிடு."

அவளுக்கு துக்கம் வந்தது. "என்மேல் ஆணை. அப்படி எல்லாம் பேசாதே" என்றவள் வலுக்கட்டாயமாக அழுகையை அடக்கிக் கொண்டு "உன் மனதை காயப்படுத்தியிருந்தால் என்னைத் திட்டு. ஆனால் இந்த மாதிரி மனம் உடைந்து போகும் விதமாக பேசாதே. வீட்டைவிட்டுப் போவதாவது? நீ எங்களோடயே இருந்தாகணும். என்னைவிட அழகான பெண்ணை

கல்யாணம் செய்து கொள்ளணும். எனக்கு சத்தியம் செய்துகொடு" என்று கையை நீட்டினாள்.

அவன் மெதுவாக அவளை நெருங்கினான். அவள் முகத்தை உற்றுப் பார்த்தான். அவள் கையில் தன் கையை வைத்து "சரி, இருக்கிறேன் போதுமா?" என்றான்.

அவள் முகம் மலர்ந்தது.

★

இது நடந்த இரண்டு மணி நேரம் கழித்து அவன் மகாத்ரஷ்டாவின் முன்னால் நின்று கொண்டிருந்தான். பழைய ராகேஷாக இல்லை அவன். முகத்தில் ராட்சதத்தன்மை பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

"இதுக்கு .... இதுக்கு நல்லாப் பழிவாங்கணும்" என்று கத்தினான். அந்த அறை முழுவதும் தூபம் புகைந்து கொண்டிருந்தது. அப்பொழுதுதான் அஷ்ட தேவதார்ச்சனை முடிந்தது போலிருந்தது. ரெட் ஸ்கெலிடன் என்பதால் அவனுக்கு சுலபமாகவே தரிசனம் கிடைத்துவிட்டது. பைத்தியம் பிடித்தவனைப் போல் கத்தினான்.

"இந்த ராகேஷின் வாழ்க்கையில் நினைத்தது நடக்காமல் போனது இதுதான் முதல்தடவை. இதுவே கடைசி தடவையாகவும் இருக்கணும். இந்த ராகேஷ் நினைத்தால் எதற்கும் பின்வாங்கமாட்டான் என்று உலகத்திற்குப் புரியணும். இவ்வளவு மறுப்பாளா? எனக்குக் கிடைக்க வேண்டிய கோடிக் கணக்கான சொத்து கடைசி நிமிடத்தில் கை நழுவிப்போவதா? எதைக் கண்டு அந்த கேதார கௌரிக்கு இவ்வளவு திமிரு? அந்த அடக்கமும் நிம்மதியும் பயத்தால் பஞ்சாய் பறக்கணும். நிமிஷத்துக்கு நிமிஷம் அவள் பயந்து நடுங்கும்படி செய்யணும். ஒன்பது மாதங்கள் படாத கஷ்டங்களை எல்லாம் அனுபவித்து விட்டு, கடைசியில்

கணவனுடன் சேர்ந்து பிரசவத்திலேயே சாகணும். அதாவது அஷ்டாவக்கிரன் அவள் வயிற்றில் பிறக்கவேண்டும். ராகேஷிற்கு நேர்ந்த அநியாயத்திற்கு உஸ்ஸோக் இந்த விதத்தில் உதவி செய்ய வேண்டும். இதுதான் என் வேண்டுகோள்."

அவன் குரல் அறையின் சுவற்றில் மோதி எதிரொலித்தது. ஆவேசத்தால் மூச்சு இரைத்துக் கொண்டிருந்தது.

மகாத்ரஷ்டா ராகேஷை கண்ணிமைக்காமல் பார்த்தார். "ராகேஷ்! அஷ்டாவக்கிரனின் பிறப்புக்காகத்தான் உஸ்ஸோக் காத்திருக்கிறது. ஆனால் இஷ்டமான இடத்தில் கருவை உருவாக்குவதற்கு அதற்குத் தெரியாது."

"காஷ்மோராவை வழிபடுகிறவர்களுக்கு தெரியாத அம்சம் இருக்கும் என்றால் நான் நம்பவில்லை."

"ஆனால் உன் விருப்பம் ரொம்பப் பெரிசு."

"எனக்குத் தெரியும். ஆனால் என்பகை எப்படிப்பட்டது என்று உஸ்ஸோக் புரிந்து கொள்ளணும்."

மகாதிரஷ்டா அவனை கூர்ந்து பார்த்தார். அவன் உறுதி தளராது என்பதைக் கண்டு கொண்டார். பிறகு தலையை அசைத்துவிட்டு "சரி ராகேஷ்! கிருஷ்ணாபுரத்து பயிர்களில் பஸ்மத்தை தூவி உஸ்ஸோக்கிற்கு உபகாரம் செய்ததால் உனக்கு நாங்கள் இந்த உதவியை செய்கிறோம். ஆனால் உள்ளது உள்ளபடி சொல்கிறேன். நமக்குப்பிடித்த கருவறையில் அஷ்டாவக்கிரனைத் தோன்றச் செய்வது எப்படி என்று எனக்குத் தெரியாது. அது தெரிந்தவன் ஒருத்தன் தான்.

"யார்?"

"விஷாச்சி. கால வெள்ளத்தில் மறைந்துவிட்ட பெரிய மந்திரவாதி. அவன் ஒருத்தனுக்குத்தான் இந்த ரகசியம் தெரியும். காத்ரா, தார்க்கா, விஷாச்சி மூன்று பேரும் ஒரே

லட்சியத்திற்காக உயிரை தியாகம் செய்தார்கள். இந்த முறை காஷ்மோராவின் வருகையை யாராலும் தடுக்க முடியாது. அதற்கு அறிகுறியாய் முதல் சிசு ஏற்கனவே தோன்றி விட்டது."

"உண்மையாகவா? எங்கே?" வியப்புடன் கேட்டான் ராகேஷ்.

"இதே ஊரில், டாக்டர் ரங்கபிரசாத் ஆஸ்பத்திரியில்."

"நாம் உடனே செயல்படவேண்டும்."

"நாம் பிஸ்தா கிராமத்திற்குச் செல்ல வேண்டும் ராகேஷ். மந்திரவாதிகள் தங்களுடைய ரகசியங்கள் தாம் உறங்கும் இடத்தின் அடியில் புதைத்து வைப்பார்கள். விஷாச்சி வசித்து வந்த இடம் இப்போ எப்படி இருக்கிறதோ நமக்குத் தெரியாது. பட்டணத்து நாகரீகம் கிராமங்களிலும் பரவிவிட்டது. ஏற்கனவே அந்த ரகசியம் சிதிலமாகியிருந்தால் நம்மால் எதுவும் செய்ய முடியாது."

அன்று மாலையில் அவர்கள் பிஸ்தாவுக்குக் கிளம்பி போனார்கள்.

★

**ம**காதிரஷ்டா சொன்னது உண்மைதான். பிஸ்தா கிராமத்திலும் நாகரீகம் புகுந்துவிட்டது. மயானத்திற்கு அந்தப் பக்கமாக இருந்த குடிசைகள் மட்டும் அப்படியே இருந்தன. அரைமணி நேரம் தேடிய பிறகு ஒருத்தன் கிடைத்தான். இவர்களுக்கு தேவைப்பட்ட சமாசாரத்தை ஓரளவுக்குச் சொன்னான். அதை பின்பற்றி பிஸ்தாவுக்கு ஐந்து கி.மீ. தொலைவில் இருக்கும் நாராயண்கட் என்ற இடத்திற்கு போய்ச் சேர்ந்தார்கள். அங்கே அவர்களுக்கு தென்பட்டான் அந்தக் கிழவன்.

ராம்சாஹூ! வயது அறுபதுக்கு மேல் இருக்கும்.

"உங்களுக்கு விஷாச்சி குடியிருந்த இடத்தை எதற்காக தெரிந்து கொள்ளணும்?" காவி பிடித்த பற்கள் தெரிய இளித்துக் கொண்டே கேட்டான்.

"குட்டிச் சாத்தானை வழிபடுகிறவர்கள் நாங்கள். விஷாச்சியின் ஆன்மா அமைதி பெறுவதற்காக சில சடங்குகளை செய்யணும்."

அவன் மேலும் சிரித்துவிட்டு "மந்திரவாதிகளின் ஆன்மா அமைதி பெறுவது சாத்தியமில்லை. எப்போதும் அலைந்து கொண்டே இருக்கும்" என்றான்.

ராகேஷ் ஏதோ சொல்லும் முன் மகாதிரஷ்டா இடை புகுந்து "எங்களுடைய தேவை எங்களுக்கு" என்று சொல்லிக் கொண்டே பணத்தை எடுத்து அவன் கையில் திணித்தார்.

பணத்தை பார்த்ததுமே அவன் முகம் மலர்ந்தது. "எனக்குத் தெரியும் நீங்கள் எதற்காக வந்தீர்கள் என்று. விஷாச்சியின் மந்திர ரகசியங்களை களவாடுவதற்கு. சரிதானே?" என்றான்.

ராகேஷ் வியப்படைந்தான். மகாதிரஷ்டா பதில் பேசவில்லை.

"இன்னும் கொஞ்சம் பணம் வேண்டும்."

ராகேஷ் ஏதோ சொல்ல வந்தான். மகாதிரஷ்டாவின் முகத்தைப் பார்த்துவிட்டு மேலும் பணத்தை எடுத்து சாஹுவின் கையில் வைத்தான்.

"இன்றிரவே போகலாம். நள்ளிரவு தாண்டிய பிறகுதான் தோண்டணும்." மலர்ந்த முகத்துடன் சொன்னான் ராம் சாஹு.

"எங்களுக்குத் தெரியும்." சுருக்கமாக சொன்னார் மகாதிரஷ்டா.

★

இரவு பதினோரு மணி ஆகும்போது அவர்கள் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். ராகேஷ் தொலைவில் நின்றபடி யாராவது வருகிறார்களா என்று கவனித்துக் கொண்டிருந்தான். ராம்சாஹு விடாமல் பேசிக் கொண் டிருந்தான். மகாதிரஷ்டா மௌனமாக தன் வேலையில் ஆழ்ந்து விட்டிருந்தார்.

சடங்கு முடியும் போது பன்னிரெண்டு மணியாகி விட்டது. ஹோமத்தீ அணைந்ததும் ராகேஷும் அவர்களுடன் வந்து சேர்ந்து கொண்டான். கடப்பாறையால் முதல் குத்து பூமியில் குத்தினான் ராகேஷ். அந்த இடம் முழுவதும் லேசாக அதிர்ந்தது. தொலைவில் எங்கிருந்தோ ஓநாயின் ஊளைச் சத்தம் கேட்டது. ராகேஷின் கைகள் நடுங்கின. கடப்பாறையை உயர்த்திய கை பயத்தால் காற்றில் அப்படியே நின்றுவிட்டது.

அதற்குள் இரண்டாவது குத்து மகாதிரஷ்டா குத்தினார். ராம்சாஹு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தான். விஷாச்சி மந்திரவாதி குடியிருந்த இடத்தை தோண்டுவது நிச்சயமாக நரபலியைக் கேட்கும் என்று அவனுக்குத் தெரியும். அதனால் சற்று தொலைவில் நின்றபடி அந்த இருவரில் யார் பலியாகப் போகிறார்களோ என்று பார்த்துக் கொண்டிருந்தான்.

அவர்கள் தோண்டும்போது ஒவ்வொரு குத்துக்கும் பக்கத்திலிருந்த மின்சார கம்பம் ஆடிக் கொண்டிருந்தது. சிறிது நேரம் கழித்து பூமிக்கடியிலிருந்து பெட்டி ஒன்று வெளிப் பட்டது.

“மூடியைத் திறந்து பார் ராகேஷ்!” ஆணையிட்டார் மகாதிரஷ்டா. ராகேஷ் மூடியைத் திறக்கப் போனபோது “நில்!” என்ற குரல் கேட்டது. இருவரும் அந்தப் பக்கம் திரும்பி பார்த்தார்கள்.

ராம்சாஹு அருகில் வந்து கொண்டே “இது பிஸ்தா

கிராமவாசிகளின் சொத்து. இதை நீங்கள் எடுத்துச் செல்லக் கூடாது'' என்றான்.

ராகேஷின் கை கூடப்பாறையை இறுக்கமாக பற்றிக் கொண்டது. மகாதிரஷ்டா மட்டும் தடுமாறாத குரலில் "இதற்காக உனக்கு வேண்டிய அளவுக்கு பணம் ஏற்கனவே கொடுத்தாகிவிட்டது ராம்சாஹு'' என்றார். "பணத்திற்காக தம் வம்சத்து ரகசியங்களை வெளியிட்டவன் மந்திரங்களை உச்சரிப்பதற்கு தகுதியற்றவன். சொத்தைப் பற்றியும், வாரிசு பற்றியும் பேசும் உரிமை உனக்கு இல்லை.''

ராம்சாஹு உரத்த குரலில் ஏதோ சொன்னான். தொலைவில் சில உருவங்கள் மங்கலாக அசைந்தன. ராகேஷின் உடல் நடுங்கியது. சில வினாடிகளில் பத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் புதர்களுக்குப் பின்னாலிருந்து வந்து வளையமாக நின்று கொண்டார்கள். பிஸ்தா கிராமத்து இளைஞர்கள்.

ராம்சாஹு ஓரடி முன்னால் வைத்து ஏளனமாக சிரித்தான். "இத்தனை காலமாக யார் வந்து இந்த காரியத்தை செய்யப் போகிறார்கள் என்று காத்திருந்தோம். இதைத் தோண்டும்போது நரபலி கேட்கும் என்று எங்களுக்குத் தெரியும். பெட்டியை எங்களிடம் ஒப்படைத்துவிட்டு உயிருடன் திரும்புங்கள். பிஸ்தா மந்திரவாதிகளான எங்களுக்குத்தான் இது சொந்தம்'' என்றான் உரத்த குரலில்.

ரொம்பநாட்கள் கழித்து மகாதிரஷ்டாவின் முகத்தில் முறுவல் மலர்ந்தது. காத்ரா, விஷாச்சியின் வாரிசு என்று தம்மைத் தாமே பறைச்சாற்றிக் கொள்ளும் இந்த கத்துக் குட்டிகளைப் பார்த்துத்தானோ என்னவோ? திடீரென்று காற்று வேகமாக வீசத் தொடங்கியது.

மகாதிரஷ்டாவின் குரல் கடினமாக ஒலித்தது. "ராம்சாஹு! கடைசி தடவையாகச் சொல்கிறேன். உன் ஆட்களை அழைத்துக் கொண்டு போய்விடு.''

ராம்சாஹு குனிந்து பெட்டியை எடுக்கப் போனான்.

"பெட்டியை அதே இடத்தில் வைத்துவிடு."

ராம்சாஹு காதில் வாங்கவில்லை. மேலும் குனிந்தான்.

"ராம்சாஹு!" மகாதிரஷ்டாவின் குரல் அந்த எல்லையில் எதிரொலித்தது. "இதுவரையில் வெளிப்படுத்தாத ரகசியத்தைச் சொல்கிறேன் கேட்டுக்கொள். விஷாச்சி, காத்ரா, தார்க்காவுக்குப் பிறகு கடைசி மந்திரவாதி நான்தான். என்னால் தான் இந்தக் காரியம் தொடங்கணும். அஷ்டாவக்கிரனின் வருகையை தடுக்காதே மூடனே."

ராம்சாஹு பெட்டியை எடுத்துக் கொண்டு திரும்பினான். என்ன செய்வது என்பது போல் ராகேஷ் மகாதிரஷ்டாவைப் பார்த்தான். மகாதிரஷ்டா சலனமற்று இருந்தார். ராகேஷ் கடப்பாறையுடன் அவனை எதிர்கொண்டான். தொலைவில் நின்றிருந்த இளைஞர்கள் வேகமாக முன்னோக்கி வந்தார்கள்.

ராகேஷைவிட ராம்சாஹு பலம் வாய்ந்தவன். அதோடு பின்னால் இருந்த கும்பல் அவன் தைரியத்தை மேலும் கூட்டியது. அவன் பெட்டியை கடப்பாறைக்கு குறுக்கே வைத்தான். ஏற்கனவே பழைய பெட்டி அது. கடப்பாறை பெட்டியைத் துளைத்துக் கொண்டு அந்தப் பக்கம் வெளியேறியது. ராம்சாஹு பலமாக இழுத்ததும் கடப்பாறை ராகேஷ் கையிலிருந்து விடுபட்டு பெட்டியுடன் அவன் கைக்கு வந்துவிட்டது. ராம்சாஹு மேலும் சிரித்துக் கொண்டே பெட்டியுடன் கடப்பாறையை தொலைவில் வீசினான்.

அது போய் மின்சார கம்பத்தின் மீது விழுந்தது. ஏதோ சக்தி அதிலிருந்து புறப்பட்டு தாக்கியது போல் அதுவரையில் ஊசலாடிக் கொண்டிருந்த மின்சார கம்பம் அப்படியே

போல் பார்த்துக் கொண்டிருந்தான்.

என்ன நடக்கிறது என்று ராம்சாஹு உணருவதற்குள் வினாடி நேரம் தாமதமாகிவிட்டது. பயத்தால் குரல் வளையத்திலிருந்து வெளியேறப் போன கத்தல் முழுவதுமாக வெளி வரவில்லை. கண்ணிமைக்கும் நேரத்தில் அந்தக் கம்பம் வேகமாக அவன் கழுத்தில் விழுந்தது. தலை வெட்டுப்பட்டு விஷாச்சியின் பெட்டிக்காக தோண்டப்பட்ட குழியில் உருண்டு விழுந்தது.

தொலைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த கும்பல் திகைத்துப் போனாலும், உடனே தேறிக்கொண்டு முன்னால் வரப்போனார்கள்.

அப்பொழுதுதான் கேட்டது அந்த சத்தம். எங்கிருந்தோ வந்த ஓநாய்களின் கூட்டம் ஒன்று, ஆவேசமாக அந்த இளைஞர்களை தாக்கியது. பத்து நிமிடங்கள் வரையில் அங்கே பயங்கரமான சூழ்நிலை நிலவியது. கால்களால் - பற்களால் உடல்களை துளைக்கும் ஓநாய்கள்.

ராகேஷ் பயந்து போய் மகாதிரஷ்டாவின் பக்கம் பார்த்தான். அங்கே தென்பட்ட காட்சி அவனை மேலும் நடுங்கச் செய்தது. மகாதிரஷ்டாவின் கண்விழிகள் பின்னால் திரும்பியிருந்தன. நாக்கு நீண்டு நெற்றியைத் தொட்டுக் கொண்டிருந்தது.

★

பெட்டியிலிருந்து ஒவ்வொரு ஓலைச்சுவடியாக எடுத்து வெளியே வைத்துக் கொண்டிருந்தார் மகாதிரஷ்டா. கடைசியாக எடுத்த ஓலைச் சுவடியை படித்துவிட்டு கண்களை மூடிக் கொண்டார்.

“என்ன விஷயம்?” ராகேஷ் பதற்றத்துடன் கேட்டான்.

“ராகேஷ்! அஷ்டாவக்கிரனின் ஜனனத்திற்காக செய்ய

வேண்டிய சடங்குகள் சிலது உள்ளன. அந்தப் பெண்ணின் பெயர் என்ன?"

"கேதாரகௌரி."

"அந்த கேதார கௌரியைக் கொண்டு செய்ய வேண்டிய காரியங்கள் சிலது இருக்கு. இன்னொரு முக்கியமான விஷயம். கல்யாணம் ஆன பிறகு நான்கு இரவுகள் வரையிலும் தம்பதிகள் ஒன்று சேரக்கூடாது. அதற்குப்பிறகும் அந்தக் காரியம் திறந்தவெளியில் வானத்தைப்பார்த்து நிகழ வேண்டும். அதை எப்படி செய்யணுமோ நீ பார்த்துக் கொள். மற்றதை பிறகு சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டு கண்களை மூடிக்கொண்டார் மகாதிரஷ்டா.

## 11

**அ**ன்று மாலையே ராகேஷ் கேதாரகௌரியைச் சந்தித்தான். அதற்குள் திருமண வேலைகள் தொடங்கி யிருந்தன. கௌரியின் முகத்தில் கல்யாணக் களை வந்து விட்டது. மஞ்சள் பூசிய முகத்திற்கு நாணயமானது மெருகை கூட்டியது.

ராகேஷைப் பார்த்து "எங்கே போயிருந்தாய் ராகேஷ்?" என்று கேட்டாள்.

ராகேஷ் பாரமாக மூச்சுவிட்டபடி சொன்னான். "என்னால் இங்கே இருக்க முடியவில்லை கௌரீ! சொன்னால் எல்லோரும் சிரிப்பார்கள். ஆனால் நீ புரிந்துகொள்வாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. இந்த கோலாகலம், கல்யாணச் சந்தடி. . . . எவ்வளவு சாதாரணமாக இருக்க முயன்றாலும் முடியவில்லை. அதனால் பூரிக்கும், கோணார்க்குக்கும் போனேன். கோவிலில் சுவாமி சிலையை பார்த்தாலும், கோவில் சுவர்களில் இருந்த சிற்பங்களைப்

பார்த்தாலும் நீதான் நினைவுக்கு வந்தாய். அதனால் எந்த பிரயோஜனமும் இல்லையென்று திரும்பி வந்துவிட்டேன். ஆனால் இதெல்லாம் என் சொந்த விஷயம். அதைப் பற்றி மறந்துவிடு. இதை உன்னிடம் சொன்னதுகூட தவறுதான்."

அவள் கண்களில் நீர் சுழன்றது. தன்னால் அவனுக்கு எவ்வளவு வருத்தம் என்று நினைத்துக் கொண்டாள். கல்யாணத்திற்கு முன்னாடியே சொத்தில் பாதியை அவனிடம் தரச் சொன்னாள் தந்தையிடம். ஆனால் பவானிசங்கர் அதில் ஆர்வம் காட்டவில்லை. அவர் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரமாட்டார். நிதானமாகத்தான் எதையும் செய்வார். அவளைப் பொறுத்தவரையில் சொத்தில் இருவருக்குமே உரிமை இருப்பதாக எண்ணி வந்தாள். ராகேஷுக்கு சீக்கிரம் கல்யாணமாகிவிட்டால் தன்னால் நிம்மதியாக இருக்க முடியும் என்று நினைத்தாள்.

அப்பாவியான அவள் ராகேஷ் உண்மையிலேயே வேதனைப்படுவதாக எண்ணிவிட்டாள். "இதோ பார்" கையிலிருந்த புத்தாடைகளைக் காண்பித்தாள். "எப்படி இருக்கு?"

நான்கு சூட் தைத்துக்கொள்வதற்கான துணிகள் அவை.

"யாருக்கு? சித்தார்த்தாவுக்கா?"

"இல்லை. உனக்குத்தான்."

"கல்யாணம் எனக்கா? சித்தார்த்தாவுக்கா?" சிரித்தான் ராகேஷ்.

கேதார கௌரியும் சிரித்துவிட்டு "கல்யாணத்தில் முக்கியத்துவம் வகிக்கப் போகிற நபர் நீதான். கோட்சூட் எல்லாம் தனக்கு தேவையில்லை என்று சித்தார்த்தா கச்சிதமாக சொல்லிவிட்டான். உண்மைதானே. கிராம வாழ்க்கைக்கு சூட் எதற்கு?" என்றாள்.

“அப்படி என்றால் நீயும் கிருஷ்ணாபுரத்திற்கே போய் விடப் போகிறாயா?”

“பின்னே? சித்தார்த்தா இங்கே இருப்பான் என்று நினைத்தாயா? அதுவும் அவனா? அது நடக்காது.”

கிருஷ்ணாபுரம்! எலும்புகளின் பஸ்மத்தை தூவிய வயல்களைச் சேர்ந்த ஊர்.

ராகேஷ் மகிழ்ச்சி அடைந்தான்.

★

**க**ண்ணிமைக்கும் நேரத்தில் அது நடந்து முடிந்து விட்டது. கிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்த சேரியில் இரவு பதினோரு மணியளவில் . . . ஒரு குடிசையில். . .

ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழித்தெழுந்தாள் கங்கா. எட்டாவது மாதம் அவளுக்கு.

அவள் எழுந்ததைப் பார்த்துவிட்டு “என்ன கங்கா?” என்று கேட்டான் அவள் கணவன்.

“ஒன்றுமில்லை. லேசாக வயிறு வலிக்கிறது” என்று படுக்கையை விட்டு எழுந்துகொண்டு வெளியே வந்தாள். கதவை வெறுமே சாத்திவிட்டு குடிசைக்குப்பின்னால் கட்டியிருந்த தட்டியருகில் போனாள். மழை அப்பொழுது தான் விட்டிருந்தது. குளிர்ந்தகாற்று விர்ரென்று வீசிக் கொண்டிருந்தது. “சனியன் பிடித்த மழை” என்று முணு முணுத்துக் கொண்டாள்.

மூன்று பக்கமும் தட்டியால் தடுப்பு வேயப்பட்டிருந்தது. நான்காம் பக்கம் காடாய் வளர்ந்து கிடந்த புதர்கள். காற்றுக்கு அவை பயங்கரமாக ஆடிக்கொண்டிருந்தன.

நடந்து கொண்டிருந்தபோது ஏதோ காலடிச் சத்தம் கேட்டாற்போல் இருந்தது. ஆனாலும் பழக்கப்பட்ட இடம் என்பதால் அவள் எப்பொழுதும் போலவே உள்ளே

போனாள். கொஞ்ச நேரத்தில் ஏதோ சந்தேகம் வரவே வெளியே வந்தாள்.

அதுவரையிலும் கிரீச்சிட்டுக் கொண்டிருந்த சுவற்றுக் கோழிகள் சத்தத்தை நிறுத்திவிட்டதால் திடீரென்று நிசப்தம் சூழ்ந்து கொண்டது. இனம் புரியாத பயத்தால் கங்காவின் மேனி நடுங்கியது. "யாரது?" என்று இருட்டைப் பார்த்துக் கத்தினாள். எந்த பதிலும் இல்லை.

அவள் மேலும் ஒரு அடியெடுத்து வைக்கப் போன பொழுது தொலைவிலிருந்து புதர் சலசலத்த சத்தமும் அதிலிருந்து ஒரு உருவம் வெளிப்பட்டதும் தெரிந்தது. கங்கா சிலையாக நின்றுவிட்டாள். சுமார் மூன்றடி உயரமுள்ள வேட்டைநாய் அது. இருட்டில் அதன் கண்கள் பளபளத்துக் கொண்டிருந்தன. நாக்கு வெளியே தொங்கிக் கொண்டிருந்தது. அதற்கு இருபுறமும் இரண்டு கோரைப் பற்கள். அது அசையாமல் நின்றது. ஆனாலும் அதன் தோற்றம் பயத்தை ஏற்படுத்தியது. கணவனுக்குக் குரல் கொடுக்கலாமா என்று நினைத்தாள்.

ஆனால் தன் வீட்டுக் கொல்லையில் தனக்கென்ன பயம்? அவள் ஓரடி எடுத்து வைக்கப் போனாள். சரியாய் அதே நேரத்தில் பின்னாலிருந்து வேட்டு வந்து விழுந்தது. கங்காவின் மேனி தரையில் சரிந்தது. ஆயுதம் அதே வேகத்தில் போய் வேட்டை நாயின் முன்னால் விழுந்தது. யாரோ பயிற்சி அளித்தாற்போல் அது அந்த ஆயுதத்தை கவ்விக் கொண்டு ஓட்டமெடுத்தது.

உள்ளே கங்காவின் கணவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். காலையில்தான் அவனுக்குத் தெரியவந்தது, கங்காவின் மரணத்தைப் பற்றி.

அதுவரை மழை தூறிக் கொண்டே இருந்தது. அந்தப் பிணம் நனைந்து கொண்டே இருந்தது. அஷ்டாவக்கிரனுக்கு முன்னால் பிறக்க வேண்டிய ஏழு குழந்தைகளில் அது

இரண்டாவது. தாயின் வயிற்றிலேயே ஏன் கொல்லப்பட்டான் என்று உஸ்ஸோக் மெம்பர்கள் ஒருவருக்குமே தெரியாது. மகாதிரஷ்டாவுக்கு மட்டுமே தெரியும்.

★

அன்று மாலை சித்தார்த்தா தெருவைக் கடக்கப் போன பொழுது ரங்கபிரசாதைச் சந்தித்தான். அவ்வூருக்கு டாக்டராக வந்ததிலிருந்தே அவரை அவனுக்குத் தெரியும்.

இருவரும் சேர்ந்தாற்போல் நடக்கத் தொடங்கினார்கள். முதலில் யாருமே பேசவில்லை.

"இன்னிக்கு ஏன் ஒரு மாதிரியாக இருக்கீங்க?" சித்தார்த்தா கேட்டான்.

ரங்கபிரசாத் நிமிர்ந்து அவனைப் பார்த்தார். "நேற்று முன்தினம் ஒரு கொலை நடந்தது" என்றார்.

"ஆமாம். நேற்று ஊர் முழுவதும் போலீஸ் கூட்டம் தானே?"

"இன்னிக்கு பிரேத பரிசோதனை நடந்தது. அங்கேயிருந்து தான் வருகிறேன். அந்தக் காட்சி என் மனதை என்னவோ செய்கிறது."

"என்ன நடந்தது டாக்டர்?"

"அவள் நிறைமாத கர்ப்பிணி. அதொன்றும் ஆச்சரிய மில்லை. டாக்டர் என்ற முறையில் அதுபோல் நிறைய பார்த்திருக்கிறேன். ஆனால் அந்த கர்ப்பத்தில் இருந்த குழந்தை மைகாட்! ஹாரிபிள்!"

"இதில் எந்த ஆச்சரியமும் இல்லையே? நான் ஜெனடிக்ஸ் பற்றி அதிகம் படித்தவனில்லை. ஆனால் டௌன் சிண்ட்ரோம், குரோமோசோம்களில் இருக்கும் குறைபாடுகள் இதெல்லாம் சகஜம்தானே."

"நாங்களும் அந்த மாதிரி எண்ணித்தான் திருப்திப்பட்டுக் கொள்ள நினைத்தோம். ஆனால் மனிதன் இறந்து போன கொஞ்சநேரத்தில் ரிகர்மார்டின் தொடங்கி விடும். உடல் குளிர்ந்துவிடும். நகங்கள் கறுத்துவிடும். இந்த மாற்றங்களை வைத்துக் கொண்டுதான் மனிதன் இறந்துபோய் எவ்வளவு நேரமாகியிருக்கும் என்பதை கண்டுபிடிப்பார்கள். முந்தாநாள் இரவு இறந்துபோன பெண்ணை இன்று காலையில்தான் போஸ்ட்மார்ட்டம் செய்தோம். இந்த முப்பத்தாறு மணி நேரத்தில் பிணமும் அதற்கேற்ப மாற்றங்களை அடைந் திருந்தது. ஆனால் உள்ளே இருந்த சிசுவின் உடல் மட்டும் அப்பொழுதுதான் இறந்தது போல் கொஞ்சம் கதகதப்பாக இருந்தது."

சித்தார்த்தா அதிர்ச்சியடைந்தவன் போல் டாக்டரைப் பார்த்தான். அவனால் நம்பத்தான் முடியவில்லை. ரங்க பிரசாதின் பார்வை எங்கேயோ நிலைத்திருந்தது. தனக்குள் சொல்லிக் கொள்வதுபோல் சொல்லிக்கொண்டிருந்தார்.

"அந்தக் கணக்குப்படி பார்த்தால், குழந்தை இறந்து ஒரு மணி நேரம்கூட ஆகியிருக்காது. அப்படி என்றால் தாய் இறந்த பிறகு சுமார் முப்பது மணி நேரத்திற்கும் மேல் அந்தக் குழந்தை பிழைத்தே இருந்ததா?"

"இம்பாசிபிள்!"

ரங்கபிரசாத் சித்தார்த்தாவை நிதானமாக நிமிர்ந்து பார்த்தார். "ஆமாம். இம்பாசிபிள்தான். ஆனால் இப்போ எந்த விதத்திலேயும் எங்களால் அதை நிரூபிக்க முடியாது. போஸ்ட் மார்ட்டத்தைக் கொஞ்சம் நேரத்திற்கு முன்னால் பண்ணியிருந்தால் என்ன ஆகியிருக்குமோ? ஒருக்கால் உலகத்தின் பார்வை கிருஷ்ணாபுரத்தின் மீது விழுந்திருக்கும்."

சித்தார்த்தா லேசாக சிரித்துவிட்டு "எங்கேயோ ஏதோ பிழை நேர்ந்திருக்கு" என்றான்.

ரங்கபிரசாத் யோசனையில் ஆழ்ந்தார். ஆமாம் எங்கேயோ ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது. இல்லாவிட்டால் எங்கேயோ ஐந்தாயிரம் கேசுகளில் ஒரு கேஸாக அபூர்வமாக ஏற்படவேண்டிய ஜெனடிக் கோளாறு கிருஷ்ணாபுரத்தைப் போன்ற சிறிய ஊரில் இரண்டுமாத இடைவெளியில் இரண்டு ஏற்படுவதாவது? கன்ஜெனிடல் மால்ஃபார்மேஷன்ஸ், டௌன் சிண்ட்ரோம் - இதைப் பற்றியல்ல அவர் யோசித்தது.

தாரையாய் பெய்த மழையில் வீட்டுப் புழக்கடையில் நாதியில்லாமல் பல மணிநேரம் விழுந்துகிடந்த பிணத்தைப் பற்றியும், வயிற்றில் அத்தனை மணி நேரம் பிழைத்திருந்த குழந்தையைப் பற்றியும்தான்.

அவர் ஏதோ சொல்லப் போனார். அதற்குள் பின்னா லிருந்து தூசியைக்கிளப்பிக் கொண்டு கார் ஒன்று வந்து நின்றது. ஜன்னல் வழியாக தலையை வெளியே நீட்டிய ராகேஷ் "ஹலோ" என்றான்.

"அட! நீங்க எப்போ வந்தீங்க?" சித்தார்த்தா கேட்டான்.

"இப்பொழுதுதான். உங்க ஜோஸ்யரிடமிருந்து லக்னப் பத்திரிகையை வாங்கிக் கொண்டு வரச் சொன்னார் மாமா."

"முகூர்த்தம் பார்த்துச் சொல்லணுமா?"

"ஏற்கனவே முகூர்த்தம் பார்த்தாகிவிட்டது. இப்போ நேரத்தையும், வினாடியையும் சரியாக குறித்துக் கொண்டு போகத்தான் வந்தேன். அழைப்பிதழில் போடணும் இல்லையா" என்றவன் காரை ஸ்டார்ட் செய்து கொண்டே "போய் வருகிறேன்" என்றான்.

"ஒரு நிமிஷம்" என்று ரங்கபிரசாத் பக்கம்திரும்பிய சித்தார்த்தா "கேதாரகௌளரியின் கஸின், ராகேஷ்" என்று அறிமுகப்படுத்தினான்.

"தெரியும். 'ராவே' புரோகிராமுக்குக் கூட வந்திருந்தாரே."

ராகேஷ் தலையை அசைத்துவிட்டு கைகுலுக்கி விடைபெற்றுக் கொண்டு காரை கிளப்பினான்.

"கல்யாண வேலைகளை எல்லாம் தலையில் போட்டுக் கொண்டு செய்கிறான் போலிருக்கே."

"ஆமாம்."

"நல்ல பையனாக தென்படுகிறான்."

சித்தார்த்தா பதில் பேசவில்லை.

சரியாக அதே சமயத்தில் கார் ஊர் எல்லையைத் தாண்டியது. வழியில் ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு ராகேஷ் லக்னப் பத்திரிகையை வெளியே எடுத்தான். ஜேபியிலிருந்து கறுப்புப் பேனாவை வெளியே எடுத்து இரண்டாம்பேருக்கு சந்தேகம் ஏற்படாதவாறு ஆறுமணி பத்து நிமிஷம் என்றிருந்ததை எட்டு மணி பத்து நிமிஷம் என்று மாற்றினான்.

உஸ்ஸோக்கிற்குத் தேவையான தீய முகூர்த்தம் வர அந்த இரண்டு மணி நேரம் போதுமானது.

## 12

***ரா***கேஷ் யோசிக்கத் தொடங்கினான்.

கேதார கௌரியும், சித்தார்த்தாவும் அஷ்டாவக்கிரன் பிறந்த அன்றே இறந்து விடுவார்கள். அஷ்டாவக்கிரனைத் தானே வளர்த்துப் பெரியவனாக்க வேண்டும். அதற்குள் மகாதிரஷ்டாவைக் கொல்ல முடிந்தால் அஷ்டா வக்கிரனுக்கு நெருங்கியவனாக தானே இந்த உலகத்தை ஆளலாம். இதுதான் அவனுடைய விருப்பம். ஆனால் எதிராளியின்மனதில் இருப்பதை மகாதிரஷ்டா எப்படியோ

தெரிந்து கொண்டு விடுகிறார். அதனால் அவன் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

ராகேஷ் உஸ்ஸோக் காரியாலயத்திற்குச் சென்றதும் அவன் கொண்டு வந்த லக்னப் பத்திரிகையை வாங்கிப் பார்த்தான் உஸ்ஸோக்கின் ஆஸ்தான ஜோதிடன். பார்த்துவிட்டு திருப்தியுடன் தலையை அசைத்தான்.

"ஆனால் கிருஷ்ணாபுரத்திலிருந்து அந்த ஜோதிடர் கல்யாணத்திற்கு வருவார்; நாம் முகூர்த்தத்தை மாற்றிய விவரம் அவருக்குத் தெரிந்துவிடும். என்ன செய்வது?" கேட்டான் ராகேஷ்.

"இதைப் பற்றி நீ மகாதிரஷ்டாவிடம் பேசவில்லையா?"

"இல்லை."

ஜோதிடன் எழுந்து உள்ளே போனான். ராகேஷ் தனித்துவிடப்பட்டான். அவன் பார்வை அங்கிருந்த ஒரு ஓலையின் மீது விழுந்தது. ஆர்வத்துடன் எடுத்துப் பார்த்தான். மிகச் சிறிய எழுத்துக்கள் தென்பட்டன. சற்றுவித்தியாசமான எழுத்துக்கள்.

அவன் மளமளவென்று அதை ஒரு காகிதத்தில் அப்படியே எழுதிக் கொண்டான். கடைசி வரியை எழுதிக் கொண்டிருந்தபோது ஜோதிடன் உள்ளேயிருந்து வந்து விட்டான். ராகேஷ் அவன் கண்ணில் படாதவாறு காகிதத்தை மடித்து ஜேபியில் வைத்துக் கொண்டான்.

"ராகேஷ்! அந்த ஜோசியர் கல்யாணத்திற்கு வரமாட்டார். வராமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு உஸ்ஸோக்கைச் சேர்ந்தது" என்றான் ஜோதிடன்.

ராகேஷ் போகத் திரும்பியவன் "ஜோதிடரே! இன்னும் நான் செய்ய வேண்டிய வேலை ஏதாவது பாக்கி இருக்கிறதா?" என்று கேட்டான்.

ஜோதிடனின் முகத்தில் கலவரம் தென்பட்டது.

அஷ்டாவக்கிரன் பிறப்பதற்கு முன்னால் ஐந்து சடங்குகளைச் செய்யணும் என்று மட்டும்தான் தெரியும். இந்த ஓலைச் சுவடியில் எழுதியிருப்பதை மொழி பெயர்க்கச் சொல்லி யிருக்கிறார், மகாதிரஷ்டா. கடந்த பத்து நாளாக பாடுபட்டுக் கொண்டு இருக்கிறேன். முதல் இரண்டு சடங்குகளை மட்டும்தான் தெரிந்து கொள்ள முடிந்தது. இந்த மொழி ரொம்ப கடினமாக இருக்கிறது. அந்தக் காலத்து மந்திர வாதிகளின் இருட்டுலகத்தில் புதைந்து கிடந்த மறைபொருள் வாசகம். இதை சீக்கிரமாக மொழி பெயர்த்துச் சொல்லா விட்டால் . . ." என்று நிறுத்தினான்.

சொல்லாவிட்டால் என்ன நடக்கும் என்று இரு வருக்குமே தெரியும். உஸ்ஸோக்கில் குறிப்பிட்ட நேரத்திற்குள் வேலையை முடிக்கவில்லை என்றால் வாழ்க்கையே முடிந்து போய்விடும்.

"நீங்க தெரிந்து கொண்ட முதல் இரண்டு சடங்குகள் என்ன?"

"முதலாவது நீ இப்போ செய்ததுதான். முகூர்த்தத்தை தீய சக்திகள் சஞ்சரிக்கும் நேரத்திற்கு மாற்றுவது. இரண்டாவது தாலி கட்டப் போகும் சமயத்தில் மஞ்சளுடன் ரத்தத்தையும் தாலிக் கயிற்றில் தடவ வேண்டும். மீதிதான் புரியவில்லை. முயற்சி செய்து வருகிறேன்."

"இன்னும் கல்யாணத்திற்கு நாள் இருக்கே. அதற்குள் தெரிந்துகொள்ள முடியாதா? நான் வருகிறேன். அப்புறம் சந்திப்போம்" என்று புறப்பட்டான் ராகேஷ்.

★

இண்டர்நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் கம்ப்யூட்டர் டெக்னாலஜி கட்டிடத்தின் ஐந்தாவது மாடியில் ராகேஷ் ஒரு இன்ஜினியரைச் சந்தித்தான். ஜேபியிலிருந்த காகிதத்தை எடுத்து அவரிடம் கொடுத்தான்.

"இதை டிகோட் பண்ணணும்" என்றான்.

இன்ஜினியர் அதை கூர்ந்து பார்த்துவிட்டு "இது என்ன மொழி?" என்று கேட்டார்.

"தெரியாது."

இன்ஜினியர் தலையை அசைத்துவிட்டு "பதினைந் தாயிரம் செலவாகும்" என்றார்.

"ஐந்து வாக்கியங்களை டிகோட் செய்வதற்கு பதினைந் தாயிரமா?"

"பல காம்பினேஷன்களைப் பயன்படுத்தணும். இதைப் பார்த்தால் லேசில் டிகோட் பண்ண முடியும் என்று தோன்ற வில்லை."

ராகேஷ் தலை அசைத்துவிட்டு "எப்போ தருவீங்க?" என்றான்.

"நாளைக்கு இதே நேரத்தில்."

"சரி." அங்கிருந்து அகன்றான் ராகேஷ். அன்று மாலையே கேதாரகௌரியிடம் கேட்டான். "எனக்குக் கொஞ்சம் பணம் வேணும் கௌரீ."

"எவ்வளவு?"

"பதினைந்தாயிரம்."

"ஒரு நிமிஷம் இரு. கொண்டு தருகிறேன்." கௌரி உள்ளே போகத் திரும்பினாள்.

"என்ன இது? பணம் எதுக்குன்னு கூடக் கேட்க மாட்டாயா?"

"எதுக்குன்னு கேட்டேன்னு வை. சொல்லாவிட்டால் தரமாட்டாயான்னு கேட்பாய்." - சிரித்தாள் கௌரி. ராகேஷும் சிரித்துவிட்டு பணத்தைப் பெற்றுக் கொண்டு நகர்ந்தான்.

மறுநாள் அவன் இன்ஜினியரைச் சந்தித்தான்.

"முடிந்துவிட்டதா?" என்று கேட்டான் பணத்தைத் தந்து கொண்டே.

"முடிந்துவிட்டது."

ராகேஷ் நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டான்.

"ரொம்ப தொல்லை கொடுத்தது. அதுவும் மேலதிகாரிக்குத் தெரியாமல் வேறு பண்ண வேண்டும். ஒரு மணி என்று நினைத்தது இரண்டு மணி நேரம் இழுத்துவிட்டது." பணத்தை வாங்கி ஜேபியில் போட்டுக் கொண்டே சொன்னார்.

"மொத்தத்தில் சாதித்து விட்டீங்க. தாங்க்ஸ்." காகிதத்தை வாங்கிக் கொண்டான் ராகேஷ்.

★

"இனி நீங்கள் சிரமப்படத் தேவையில்லை. அந்த லிபியை நம் மொழியில் மாற்றம் செய்ய வழி கண்டுபிடித்துவிட்டேன்."

ஜோதிடன் வியப்படைந்தபடி "எப்படி?" என்று கேட்டார்.

"நேற்றிரவு தூக்கத்தில் கனவு வந்தது. அதில் யாரோ விளக்கம் சொல்வது போல் இருந்தது. அது உண்மையாகவும் இருக்கலாம். அல்லது என் பிரமையாகவும் இருக்கலாம். பார்த்தால்தான் சொல்லமுடியும். எங்கே அந்த ஓலைச் சுவடி?"

ஜோதிடன் ஓலையை நீட்டினார்.

ராகேஷ் மூன்றாவது அம்சத்தை ரொம்ப நேரம் உற்றுப் பார்த்துவிட்டு ஒரு காகிதத்தின் மீது எழுதினான்.

'அமாவாசை நள்ளிரவு . . . திறந்த வெளியில் கணவன்

மனைவியின் சாந்தி முகூர்த்தம் நடக்க வேண்டும்.'

ஜோதிடன் தான் முதல் இரண்டு அம்சங்களை எப்படி மொழி பெயர்த்தோமோ அதே ரீதியில் இதை ஒப்பிட்டுப் பார்த்தான். அவன் கண்கள் மலர்ந்தன. ராகேஷைக் கட்டிக் கொண்டு "என்னைக் காப்பாற்றினாய். என் வேலையை சுளுவாக்கிவிட்டாய்" என்றான்.

ராகேஷ் அணைப்பிலிருந்து விடுவித்துக் கொள்ளப் போனபொழுது, ஓலைச்சுவடி கைதவறி கீழே தண்ணீர் நிரம்பிய பாத்திரத்திற்குள் விழுந்துவிட்டது. "அடடே!" என்று குனிந்து எடுக்கப் போனான். ஓலைச் சுவடி இரண்டாக பிளந்து போய் தண்ணீரில் நனைந்துவிட்டது. எழுத்துக்கள் அழிந்து விட்டன. ஜோதிடன் கலவரமடைந்தான்.

"பரவாயில்லை. ஐந்து அம்சங்களும் என்னவென்று தெரிந்துவிட்டனவே. இனி பயமில்லை" என்று எஞ்சிய இரண்டு சடங்குகளையும் தெரிவித்தான். பிறகு "இதை நீங்களே டிகோட் செய்ததாக மகாதிரஷ்டாவிடம் தெரிவித்துக் கொள்ளுங்கள். நான் ஒருத்தன் நடுவில் எதுக்கு?"

"சரி. . . அப்படியே செய்கிறேன்."

ராகேஷ் அவனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தான். அந்த ஓலையைத் தானே வாங்கி டிகோட் செய்ய வைத்தது நல்லதாகிவிட்டது. இல்லாவிட்டால் அதிலிருக்கும் விஷயம் தனக்குத் தெரியப் போவதில்லை. அதில் இருந்த கடைசி வரிதான் அவனை மகிழ்ச்சிக் கடலில் திளைக்கச் செய்து கொண்டிருந்தது.

'எவன் ஒருவன் அஷ்டாவக்கிரன் பிறப்பதற்காக இந்த ஐந்து அம்சங்களையும் முன் நின்று நடத்துகிறானோ, அவனே அஷ்டாவக்கிரனின் வலது கையாக இருந்து அவன் ராஜ்ஜியத்தில் சர்வாதிகாரியாக இருப்பான்' என்பதுதான்

அது. அவன்தான் அந்த ஐந்து அம்சங்களையும் செய்யப் போகிறான். அந்தக் கடைசி வரிகள் யார் கண்ணிலும் பட்டு விடக் கூடாது. அதனால்தான் கை நழுவியது போல் வேண்டுமென்றே அதைத் தண்ணீரில் போட்டுவிட்டு அழித்து விட்டான்.

★

மணமேடை கலகலப்பாக விளங்கியது. தாலி கட்டும் நேரம் நெருங்கிவிட்டது. புரோகிதர் தாலியை ஒரு தட்டில் வைத்து எல்லோரும் தொட்டு ஆசீர்வாதம் செய்வதற்காக கொண்டு வந்தார். ராகேஷ் மேடைக்கு அருகில் முன் வரிசையில் வந்து உட்கார்ந்து கொண்டான். புரோகிதர் சற்று தொலைவில் வந்து கொண்டிருக்கும்போதே ராகேஷ் மறைவாக வைத்திருந்த குண்டூசியை வெளியே எடுத்து வலது கை ஆள் காட்டி விரலில் குத்திக் கொண்டான். ரத்தம் ஜிவ்வென்று வெளியே ஒரு சொட்டு வெளியே வந்தது. அதற்குள் புரோகிதர் ராகேஷை நெருங்கிவிட்டார்.

ராகேஷுக்கு பக்கத்தில் உட்கார்ந்திருந்த குடும்ப நண்பர் வயதில் பெரியவர். ராகேஷ் தாலியைத் தொடப் போனபோது "கல்யாணம் ஆகாதவர்கள் அதைத் தொடக்கூடாது தம்பீ" என்று கிண்டலடித்தார். ராகேஷ் சிரித்துக் கொண்டே லேசாக தொட்டான். அவன் விரலில் இருந்த ரத்தம் தாலிக் கயிற்றில் ஒட்டிக் கொண்டது.

தாலி கட்டும் வரையிலும் ராகேஷ் முள்ளின் மேல் அமர்ந்திருப்பது போல் அமர்ந்திருந்தான். தாலி கட்டியதும் நிம்மதியாக மூச்சுவிட்டுக் கொண்டான்.

புரோகிதர் மணமக்களை வெளியே அழைத்து வந்து அருந்ததி நட்சத்திரத்தை காண்பித்துக் கொண்டிருந்தார். அவர்கள் பக்கம் பார்த்த ராகேஷ் திடுக்கிட்டான். இடது பக்கம் கௌரி இருந்தாள். நடுவில் சித்தார்த்தா இருந்தான்.

சற்று விலகி புரோகிதர் நடந்து வந்து கொண்டிருந்தார். ராகேஷைப் பார்த்தும் பார்க்காதது போல் அவனைத் தாண்டி போய் விட்டார்.

உஸ்ஸோக்கில் உயர்ந்த பதவியை வகிக்கும் ரெட்ஸ்கெலிடன்தான் அவன்!

மணமக்கள் பெரியவர்களை வணங்கி ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டிருந்தார்கள். ராகேஷ் அருகில் வந்தார்கள். கேதாரகௌரி குனிந்து அவன் கால்களில் விழுந்து வணங்கப் போனாள்.

“எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை” என்றான் ராகேஷ்.

சித்தார்த்தா சிரித்தான். கௌரியும் சேர்ந்து சிரித்தாள். ராகேஷ் கையை நீட்டிக் கொண்டே “கங்கிராட்சுலேஷன்ஸ்!” என்றான்.

“என்ன இது?” என்றான் சித்தார்த்தா கையை குலுக்கிக் கொண்டே.

அவன் பார்வை தன் விரல் மீது இருந்ததை கவனித்த ராகேஷ் “ப்ளேடு. . . காலையில் அறுத்துவிட்டது” என்றான் ரொம்ப காஷுவலாக.

சித்தார்த்தா அவன் முகத்தைக் கூர்ந்து கவனித்தான். தாலி கட்டுவதற்கு கொஞ்ச நேரம் இருக்கும்போது சித்தார்த்தாவின் பார்வை யதேச்சையாக ராகேஷின் மீது விழுந்தது. குண்டூசியால் விரலை குத்திக் கொண்டது கண்ணில் பட்டது. முள் ஏதாவது குத்தியிருக்கும், எடுக்கிறான் போலும் என்று நினைத்தான். ஆனால் இப்பொழுது ராகேஷ் சொன்ன பதில் வித்தியாசமாக இருந்தது. சித்தார்த்தாவுக்கு சந்தேகம் ஏற்பட்டது. வேறு யாராவதாக இருந்தால் அதை அத்துடன் விட்டிருப் பார்களோ என்னவோ? ஆனால் சித்தார்த்தா அப்படிப் பட்டவன் இல்லை.

"ஈஸ்டர்ஸ்" என்ற அம்மீன்கள் கடற்பாசியைத் தின்று அங்கேயே தூங்கி வழியும். அதிகம் அசையாமல், நீந்தாமல் அப்படியே இருக்கும். ஆனால் ஒருமுறை யாராவது அசைந்து விட்டால் போதும். எவ்வளவு பெரிய மீனாக இருந்தாலும் அதனுடன் போராடி உண்டு இல்லை என்று ஆக்கிவிடும். போராட்டம் முடிந்ததும் பழைய நிலைக்குத் திரும்பிவிடும்.

தன் முன்னால் ரொம்ப சாதாரணமாக, எந்த தனித் தன்மையும் இல்லாதது போல் தென்படும் சித்தார்த்தாவின் கண்களில் ஈஸ்டர் மீனுக்கு இருக்கும் லட்சணங்கள் இருக்கு என்றும், சமயம் வரும்போது வானமே இடிந்து விழுந்தாலும் பயப்படமாட்டான் என்றும் அறியாத ராகேஷ் வேலை முடிந்துவிட்ட சந்தோஷத்தில் கை குலுக்கிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

## 13

முதலிரவுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அறையில் ஊதுபத்திகளை ஏற்றி வைக்கப் போன வேலைக்காரன் வீலென்று கத்தினான்.

மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த கட்டில் மீது வெள்ளை வெளேரென்று விரிப்புக்கு நடுவில் பூனை ஒன்று இறந்து கிடந்தது. உயிர் போவதற்கு முன்னால் வெகு நேரம் துடிதுடித்தது போலும். எங்கும் ரத்தம் சிதறிக் கிடந்தது. ஒரே நிமிஷத்தில் அங்கே கூட்டம் சேர்ந்துவிட்டது.

பாலுக்காக மேஜை மீது ஏறிய பூனை கண்ணாடி டம்ளரைத் தள்ளிவிட்டிருக்கிறது. உடைந்த கண்ணாடித் துண்டுகளின் மீது கால் தடுக்கி விழுந்ததால் கண்ணாடித் துண்டு கழுத்தில் இறங்கிவிட்டிருக்கிறது. அங்கிருந்து

மரணாவஸ்தையுடன் கட்டிலில் குதித்து இறுதி மூச்சை விட்டிருக்கிறது.

எல்லோரையும்விட முன்னால் தேறிக் கொண்ட பவானி சங்கர் சட்டென்று வேலைக்காரர்களுக்கு ஆணைகளைப் பிறப்பித்தார், படுக்கையை உடனே மாற்றும்படி. அதற்குள் திருமணத்தை நடத்தி வைத்த புரோகிதர் அங்கே வந்தார். பவானிசங்கரை தனியாக அழைத்துப் போய் "இது அபசகுனம். இப்போ இந்த சடங்கை நடத்த வேண்டாம்" என்றார்.

"அறையை மாற்றிவிடலாமா?"

"அறை மட்டுமே இல்லை. இந்த முகூர்த்தமே வேண்டாம். நான்கு நாட்களுக்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்."

"ஆனால் கௌரியிடம் இதை எப்படிச் சொல்வது? அவளுக்கு இந்த விஷயம் தெரிவதில் எனக்கு விருப்பம் இல்லை."

"இந்த விஷயத்தை என்னிடம் விடுங்கள் மாமா."

அருகிலிருந்து குரல் கேட்டதும் இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். ராகேஷ் நின்று கொண்டிருந்தான் அங்கே.

"நான் பார்த்துக் கொள்கிறேன். இதைப் பற்றியே சொல்லாமல் சம்மதிக்க வைக்கிறேன்."

அவன் கௌரியிடம் போனான். "நான் உனக்கு கல்யாணப் பரிசு எதுவும் தரவில்லை. அவ்வளவு பணம் ஏது என்னிடம்? எனக்கு ஒரு யோசனை வந்தது. பணத்தால்தான் முடியாது. உழைப்பால் முடியுமே. அதனால் நானே உங்கள் முதலிரவுக்கான ஏற்பாடுகளை செய்யணும் என்று விரும்பு கிறேன். அதாவது நானே சுயமாக மலர்களால் அறையை ஜோடித்து. . ."

அவள் முகம் சிவந்துவிட்டது.

"மாமா உங்களை சிம்லாவுக்கு அனுப்புவதாக சொன்னார். அதைவிட நம்ப தோட்டம் நன்றாக இருக்குமே! கல்யாணத்திற்கு நான் தரப்போகும் பரிசை ஏற்றுக் கொள். ஆனால் இவ்வளவு ஏற்பாடுகளும் ஆன பிறகு இப்போ தள்ளிப் போட்டால் மகள் என்ன நினைப்பாளோ என்று மாமா தயங்குகிறார்."

"ச்சீ. . . . போ ராகேஷ்."

"அப்படி என்றால் உனக்கு ஆட்சேபணை இல்லையே?"

எந்த பதிலும் சொல்லாமல் அவள் நாணத்துடன் தலைகுனிந்து கொண்டாள்.

"தாங்க்யூ" நகர்ந்தான்.

அவள் கண்கள் பனித்தன, தான் அவனைக் கல்யாணம் செய்து கொள்ளாவிட்டாலும் தன் மீது அவனுக்கு இன்னும் பிரியம் இருந்ததற்கு. பணத்தால் தனக்கு எதுவும் செய்ய முடியாததை ஈடுகட்டுவது போல் தன் கையாலேயே முதலிரவுக்கான ஏற்பாடுகளை செய்ய நினைக்கிறான். எவ்வளவு நல்லவன் என்று நினைத்துக் கொண்டாள்.

ராகேஷ், பவானிசங்கரிடம் சென்று "சொன்னேன். சிரித்துக் கொண்டாள்" என்றான். அவர் நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டார்.

"நான்கு நாட்களுக்கு பிறகு இங்கே இல்லாமல் நம் தோட்டத்தில் ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னேன்" என்றான் பிரச்னை சுலபமாக தீர்ந்துவிட்டாற்போல்.

"அதனால் என்ன?" என்று பவானிசங்கர் வெளியே நடந்தார். பின்னாலேயே ராகேஷூம் மற்றவர்களும் சென்றார்கள்.

சித்தார்த்தா மட்டும் தனித்து விடப்பட்டான். ஒருமுறை

மேனேஜரைக் கூர்ந்து பார்த்தான். எப்படிப்பட்ட குறுகலான இடத்திலும் அனாயாசமாக நடக்கக்கூடிய பூனை பால் டம்ளரை தட்டிவிட்டு அதிலேயே விழுந்து கண்ணாடித் துண்டு கழுத்தில் குத்துவது. . . . கட்டில் மீது விழுந்து துடிதுடித்து சாவது. . . .

இதெல்லாம் ஏதோ நம்பமுடியாத சமாசாரமாக தோன்றியது.

★

**கா**ர் வந்து தோட்டத்தில் நின்றது. சித்தார்த்தாவும் கௌரியும் இறங்கிக் கொண்டார்கள். ராகேஷ் “குட் நைட்!” என்று சொல்லிவிட்டுக் காரைக் கிளப்பிக் கொண்டு போய் மறைந்தான். அவ்விருவர் மட்டுமே எஞ்சி நின்றார்கள். திடீரென்று தனித்து விடப்பட்ட அவர்களுக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை. கேதாரகௌரிக்கு அந்தத் திறந்தவெளியில்கூட நெற்றியில் வியர்த்துக் கொட்டியது. அவளைக் கவனித்த சித்தார்த்தா “வா போகலாம்” என்றான்.

எதிரே சிறிய வாய்க்கால். அதைத் தாண்டிக் கொண்டு இருவரும் பின்புறம் வந்தார்கள். அங்கே கண்ட காட்சியைப் பார்த்து வாயடைத்துப் போய் அப்படியே நின்றுவிட்டார்கள்.

தரைக்கு இரண்டு அங்குல உயரத்தில் கட்டிலைப் போன்ற மலர்படுக்கை ஒன்று தயாராக இருந்தது. முதலில் அந்தத் திறந்தவெளி கௌரிக்கு பயத்தை அளித்தது. ஆனால் அவனுடைய பேச்சு அந்த பயத்தை போக்கடித்தது. பிறகு சுற்றுச் சூழலே மறந்துவிட்டது. அவள் நாணத்தால் கண்களை மூடிக் கொண்டாள்.

அந்த வேளை வந்துவிட்டது. தொலைவில் எங்கிருந்தோ மாதா கோவிலில் பன்னிரெண்டு மணி அடித்தது. அமாவாசை என்பதால் சந்திரனை வானத்தில் காணவில்லை. ஆனால் அருகிலிருந்த புதரில் மட்டும் ஏதோ சலசலப்பு. அது

நாய்க்குட்டியா இல்லை ஓநாய்க்குட்டியா என்று தெரியவில்லை. வெளியே வந்து பயங்கரமாக கத்தியது. இயற்கையே ஸ்தம்பித்துவிட்டாற்போல் இருந்தது.

அவன் தன்னுள் இருந்த இருபத்திமூன்று அம்சங்களை ஏந்திக்கொண்டு அவளுள் இருந்த இருபத்தி மூன்று அம்சங் களுடன் சேரப்போகும் தருணத்தில் எங்கேயோ மலை யிடுக்கிலிருந்து காட்டில் குப்பை கூளங்களுக்கு அடியிலிருந்து யாரோ பெருமூச்சுவிட்ட ஓசை.

மந்தையிலிருந்து விடுபட்டு தனியாக வந்துவிட்ட ஆட்டுக் குட்டியை கண் இமைக்கும் நேரத்திற்குள் விழுங்கிவிட்டு ஆயாசத்துடன் மரத்தில் பிணைந்து கிடந்த மலைப்பாம்பு உறக்கத்திலிருந்து யாரோ தட்டி எழுப்பினாற் போல் பரபரப்புடன் மேல் கிளைக்குத் தாவியது.

உலகமெல்லாம் ஏதோ சங்கடத்துடன் நெளிந்த அந்த தருணம். . . . சிலர் மட்டும் ஆனந்தமாக பேய் போல் தாண்டவ மாடிக் கொண்டிருந்த நேரத்தில் . . . சிறிய தலை பெரிய வாலுடன் ஒரு உயிரணுவானது ஒரு வித்திற்குச் சலனத்தைத் தோற்றுவிக்க முயன்று கொண்டிருந்த சமயத்தில். . . .

அந்த கர்ப்பத்திற்குள் உயிரூட்டுவதற்காக மெதுவாக துயிலிலிருந்து எழுந்தது காஷ்மோரா. அந்தப் பிண்டத்திற்கு மட்டும் உயிர் வருமானால் ஒன்பது மாதங்களுக்குப் பிறகு உஸ்ஸோக் அங்கத்தினரின் ஆசையை நிறைவேற்றவும், காஷ்மோராவின் ஆளுமையை நிலைநாட்டுவதற்காகவும் சரியாக ஒன்பது மாதங்களுக்குப் பிறகு பிறப்பான் அஷ்டாவக்கிரன்.

★

**டா**க்டர் ரங்கபிரசாத் மீட்டிங்கில் கலந்து கொண்டு பம்பாயிலிருந்து சென்னைக்கு திரும்பிக் கொண்டிருந்தார். விமானத்தில் தனக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்ட அந்த இளைஞனைப் பார்த்தார்.

ரொம்ப ரஷ்! கடைசி நேரத்தில் டிக்கெட் கிடைப் பதற்குள் உன்பாடு என்பாடு என்றாகிவிட்டது” என்றபடி பேச்சைத் தொடங்கினான் அந்த இளைஞன். “பை தி பை என் பெயர் ஷாடோ. உங்கள் பெயர்?”

ரங்கபிரசாத் அதிர்ந்துபோய் அவனைப் பார்த்தார்.

“பயப்படாதீங்க. சுத்தத் தமிழன்தான். பெயர் ரவி. ‘சயின்ஸ் இந்தியா’வில் வேலை பார்க்கிறேன். சின்னச் சின்ன மேஜிக் வித்தைகளை செய்து காட்டுவேன். மெஜிஷியனாக புனைப் பெயர்தான் ஷாடோ.”

ரங்கபிரசாதிற்கு அந்த இளைஞனை பார்த்த மாத்திரத்தி லேயே பிடித்துப் போய்விட்டது. “என் பெயர் ரங்கபிரசாத். டாக்டர் ரங்கபிரசாத்” என்றார்.

“எந்த ஊரில் இருக்கீங்க?”

“கிருஷ்ணா புரத்தில். பிரைவேட் பிராக்டீஸ்.”

“நீங்க எம்.பி.பி.எஸ். டாக்டரா?”

“ஆமாம். பிறகு எம்.எஸ். முடித்தேன்.”

ஷாடோ ஆச்சரியமடைந்தவனாக அவரை ஏறிட்டு நோக்கினான். “எம்.எஸ். படித்துவிட்டு கிருஷ்ணாபுரம் போன்ற சின்ன கிராமத்தில் பிராக்டீஸ் செய்யறீங்களா? அது உங்களுடைய சொந்த ஊரா?”

“இல்லை. எங்க குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பல வருடங்களுக்கு முன்பே மதுரையில் செட்டில் ஆகி விட்டார்கள்.”

“பின்னே நீங்க எதுக்கு அவ்வளவு சின்ன ஊரில் போய்ப் பிராக்டீஸ் செய்யறீங்க?”

‘ரொம்பச் சின்னக் கேள்வி. ஆனால் பதில் வாழ்க்கையை விடப் பெரியது. பணத்தைவிட மேலானது ஆத்ம திருப்தி. அப்பாவி ஏழை மக்களுக்கு சேவை புரிவதில் கிடைக்கிறது’

என்று சொல்லுவதா?

தனக்கே பொருத்தமில்லாத பதிலாக தோன்றியது அவருக்கு.

"எங்கள் பத்திரிகையில் ஒரு கட்டுரை பிரசுரித்தால் எப்படி இருக்கும்?"

"என்ன கட்டுரை?"

"ஒரு எம்.எஸ். கோல்ட்மெடல் வாங்கிய டாக்டர் மக்களுக்கு சேவை புரிவதற்காகவே கல்யாணம்கூட செய்து கொள்ளாமல் ஒரு கிராமத்தில் பிராக்டீஸ் செய்து வருகிறார். இதுதான் தலைப்பு."

"நான் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருப்பதற்குக் காரணம் அது இல்லை."

"பின்னே?"

ரங்கபிரசாத் மௌனமாக இருந்தார். ரொம்ப மென்மை யான விஷயம். மனதிற்கு மட்டுமே சம்பந்தப்பட்டது. சொன்னால் மற்றவர்களால் புரிந்து கொள்ள முடியாது.

ரங்கபிரசாத் பேச்சை மாற்றியபடி "உங்க பத்திரிகையில் பிரசுரிப்பதானால் ஒரு முக்கியமான செய்தியைச் சொல் கிறேன்" என்றார்.

ஷாடோ உற்சாகத்துடன் "என்ன?" என்றான்.

"எங்க ஊர் கிருஷ்ணாபுரத்தில் சில மாத இடை வெளிக்குள் இரண்டு வித்தியாசமான குழந்தைகள் பிறந்து இறந்துவிட்டன. சாதராரணமாக பத்தாயிரம் கேசுகளில் ஒன்றாக அபூர்வமாக நிகழவேண்டியது ஒரே ஊரில் சில மாத இடைவெளிக்குள் இரண்டு நடந்தது வேடிக்கைதானே?"

ஷாடோ சந்தோஷத்தால் எழுந்து குதிக்கப் போனான். "போதும். இவ்வளவு போதும். இதை எழுதிவிடலாம். எனக்கு இறந்துபோன குழந்தைகளின் போட்டோக்கள் வேண்டும்.

முடிந்தால் அந்த தாய்மார்களின் போட்டோவும்."

"வெட்டிண்டுவா என்றால் கட்டிண்டு வந்துவிடுவாய் போலிருக்கே."

"ஏன்? அப்படி இருக்கக்கூடாதா?"

"அதற்காக இல்லை நான் சொன்னது. ஜெனடிக்ஸ் பற்றி கட்டுரை எழுதும்போது இதை உதாரணமாக காட்டச் சொன்னேன். அவ்வளவுதான். இதையே போட்டோ போட்டு கற்பனை ஜோடித்து எழுதச் சொல்லவில்லை."

"ஜெனடிக்ஸ் என்றால் என்ன? குழந்தைகள் அப்நார்மலாக பிறப்பதற்கும் ஜெனடிக்ஸிற்கும் என்ன சம்பந்தம்?" கேட்டான் ஷாடோ.

ரங்கபிரசாத் வியப்படைந்தவராய் "ஜெனடிக்ஸ் என்றால் என்னவென்று தெரியாமல்தான் சயின்ஸ் பத்திரிகையில் வேலை செய்கிறாயா?" என்று கேட்டார்.

"ஒன்றும் தெரியாதவன்தான் அதைப்பற்றி ஓஹோன்னு எழுதமுடியும். அதுபோகட்டும்.... ஜெனடிக்ஸுக்கும் அப்நார்மல் குழந்தைகளுக்கும் என்ன சம்பந்தம்?"

ரங்கபிரசாத் போர்டிங் ஸ்லிப்பின்மீது பேனாவால் கிறுக்கிக் கொண்டே சொல்லத் தொடங்கினார்.

"நம் வீடுகளில் பெரியவர்கள் சொல்ல கேட்டிருப்போம். அப்படியே அப்பாவைக் கொண்டு பிறந்திருக்கிறான். கண்ணும் மூக்கும் அப்படியே இருக்கு என்பார்கள். சிலர் காரண காரியமாக யோசித்தார்கள். அச்சு வார்த்தது போல் தாயையோ, தந்தையையோ கொண்டு பிறப்பதற்குக் காரணம் 'ஜீன்', அதாவது மரபணு இதற்கு சம்பந்தப்பட்ட விஞ்ஞானத்தைத்தான் ஜெனடிக்ஸ் என்பார்கள்" என்று சிறிது நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தார். "ஒரு ஆண் ஒரு பெண்ணைக் கூடும்போது அவனிடமிருந்து அவளுள்

நுழையும் விந்தில் கண்ணுக்குப் புலப்படாத நுட்பமான அணுக்கள் பல இருக்கும். அதில் ஏதாவது ஒன்றே ஒன்றுதான் பெண்ணின் கர்ப்பத்தில் உள்ள கருமுட்டையைச் சேர்ந்து கரு உருவாவதற்கு வழி வகுக்கிறது. அந்த சமயத்தில் ஆணின் அம்சங்களுக்கெல்லாம் தலைமை தாங்கும் இருபத்திமூன்று குரோமோசோம்கள் சந்திரனில் காலடி எடுத்து வைத்த முதல் மனிதன் பூமியில் உள்ள பொருளை அங்கு தன் நினைவாக விட்டு வைத்தாற்போல், ஆண் தன் வாரிசின் முத்திரையைப் பெண்ணிடம் ஜீன்ஸ் உருவத்தில் விட்டு வைப்பான். அதாவது தன் மூக்கு, கண், உயரம், புத்திசாலித்தனம் எல்லாவற்றையும்."

"பிரமாதமான எடுத்துக்காட்டு."

"இந்த இருபத்திமூன்று குரோமோசோம்களுடன் இன்னொரு முக்கியமான அம்சம் ஒன்று இருக்கிறது. அது இரண்டு விதம். ஒன்று x மற்றொன்று y. பெண்ணின் கரு முட்டையில் x குரோமோசோம்கள் மட்டுமே இருக்கும். ஆணுடையதில் x மற்றும் y இரண்டு குரோமோசோம்களும் இருக்கும். ஆணின் உயிரணுவில் உள்ள x பெண்ணை அடைந்தால் x x ஆகிறது. அப்பொழுது அந்த தம்பதியருக்கு பெண்குழந்தை பிறக்கிறது.

அவ்வாறு இல்லாமல் ஆணின் y உள்ள உயிரணு பெண்ணை அடைந்தால் x y ஆக மாறும். அப்பொழுது ஆண் குழந்தை உருவாகிறது. இதுவரையிலும் எல்லாம் இயற்கையாக நடப்பவை. ஆனால் சில சமயம் இயற்கைக்கு விரோதமாகவும் நடக்கும். ஒரே சமயத்தில் இரண்டு மூன்று x குரோமோ சோம்கள் அல்லது இரண்டு y குரோமோசோம்களோ சேர்ந்து கரு உருவாகும்போது சிக்கல்கள் உருவாகின்றன. இதெல்லாம் ஜீன்ஸுக்கு சம்பந்தப்பட்டவை. இதைத் தவிர ம்யுடேஷன்ஸ் கூட உண்டு. இருபத்திமூன்று குரோமோசோம்களில் ஏதேனும் ஒன்று குறைபாட்டுடன் இருந்தால் . . ."

“ஒரு நிமிஷம்” என்று நிறுத்தினான் ஷாடோ. “சயின்ஸ் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத எங்களிடம் வேறு ஆட்கள் இருக்கிறார்கள். எங்களுக்கு வேண்டியதெல்லாம் சென்சேஷன் நிறைந்த செய்திதான். அதைச் சொல்லுங்கள் போதும்.”

“அப்படி என்றால் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளணும். நீங்க இந்த இரண்டு கேசுகளை முக்கியச் செய்தியாக போட்டால் அது நகைப்பிற்கு இடமாகிவிடும். என்னிடம் விரைவில் இரண்டு பிரசவ கேஸ்கள் வரப் போகின்றன. அதையும் பார்த்துவிடலாம். அப்போ போட்டோக்கள் போடலாம்.”

“வரப்போகும் இரண்டு பிரசவங்களும் இதேபோல்தான் இருக்கும் என்று எதிர்பார்க்கிறீங்களா டாக்டர்?”

“இருக்கக்கூடாதுன்னுதான் நினைக்கிறேன். அப்படி நடந்துவிட்டால் மட்டும் அது வரலாற்றை படைத்துவிடும். கின்னஸ் புத்தகத்தில் வரக்கூடிய அளவுக்கு முக்கியச் செய்தியாக இருக்கும்.”

“அப்போ அந்த செய்தியை முதலில் பிரசுரித்ததற்கு எங்களுக்கு நல்ல பெயர் கிடைக்கும்.” சிரித்தான் ஷாடோ. அதற்குள் விமானம் தரையில் இறங்கியது. ஷாடோ தன் விசிட்டிங் கார்டை ரங்க பிரசாதிடம் தந்துவிட்டு “நீங்க உடனே விவரங்களை அனுப்பி வையுங்கள்” என்றான்.

“உடனே இல்லை. இரண்டு மூன்று மாதங்கள் கழித்து. அதுவும் அதுபோன்ற பிரசவங்கள் நடந்தால்தான். இல்லா விட்டால் சின்ன விஷயம் அனாவசியமாக மக்களை பயமுறுத்தியதுபோல் ஆகிவிடும்.”

இருவரும் இருக்கையை விட்டு எழுந்து கொண்டார்கள்.

★

டியர் ஷாடோ,

நாம் பேசிக் கொண்டாற்போலவே போட்டோக்களை அனுப்புகிறேன். இந்த ஊரில் நிலைமை ரொம்ப குழப்பமாக இருக்கிறது. இந்த இரண்டு பிரசவங்களிலும் அப்நார்மல் சிசுக்கள்தான் பிறந்தன. இதற்கு முன்னால் நிகழ்ந்ததாய் சொன்னேனே, இறந்த தாயின் வயிற்றில் இறந்துபோன குழந்தையைப் பற்றி. அதன் போட்டோகூட அதிர்ஷ்டவசமாக கிடைத்தது. அதையும் அனுப்புகிறேன்.

ஆறுமாத இடைவெளிக்குள் ஒரு சிறிய கிராமத்தில் நான்கு விநோத சிசுக்களின் ஜனனங்கள்! விஞ்ஞான உலகிற்கும், உலக வரலாற்றுக்கும் புரிபடாத விஷயம் இது. அரசாங்கத்தின் பார்வை இன்னும் இதன்மேல் ஏன் விழவில்லை என்றுதான் ஆச்சரியமாக இருக்கிறது. இதுவே வேறொரு நாடாக இருந்தால் இந்நேரத்திற்கு சோதனைகள் தொடங்கியிருக்கும்.

இந்தக் கிராமத்து பிரஜையாக, ஏதோ கொஞ்சம் விஞ்ஞான அறிவு இருப்பதால் என்னால் முடிந்ததை செய்ய முடிவு செய்து மதுரைக் கல்லூரியிலிருந்து சில விவரங்களைச் சேகரித்தேன். மியுடேஷனுக்குக் காரணமாக பாதரசம் குடிநீரில் கலந்திருக்குமோ என்று கூட பரிசோதித்துப் பார்க்கச் சொன்னேன். அந்த மாதிரி எதுவும் இல்லை என்று தெரிந்தது. கர்ப்பத்தில் உள்ள குழந்தைக்கு தீங்கு விளைவிக்கும் ரேடியோ ஆக்டிவ் கதிர்களை வெளிப்படுத்தும் பொருள் ஏதாவது கிராம எல்லையில் விழுந்திருக்கலாமோ என்றுகூட சோதித்தேன். அந்த மாதிரி எதுவும் இல்லை என்று தெரிந்து விட்டது. மக்கள் பயந்து நடுங்குகிறார்கள். மேலும் இரண்டு பெண்கள் பிரசவத்திற்குத் தயாராக இருக்கிறார்கள். நான் சேகரித்த விவரங்களோடு கன்ஜெனிடிகல் மாஸ் ஃபார்மேஷனுக்குரிய பலவித காரணங்கள், புரிபடாத கிருஷ்ணாபுரத்து விநோத

பிரசவங்கள் இதையெல்லாம் இணைத்து ஒரு கட்டுரையை தயாரித்து இத்துடன் அனுப்பி யிருக்கிறேன்.

கிருஷ்ணாபுரத்து மக்களுக்கு சயின்ஸ் இந்தியா ஏதாவது உதவும் என்று நம்புகிறேன்.

ரங்கபிரசாத்

கடிதத்தைப் படித்துவிட்டு துள்ளிக் குதித்தான் ரவி. அதை எடுத்துக்கொண்டு எடிட்டரின் அறைக்குப் போனான்.

"என்ன இது?" அலட்சியமாக வாங்கிப் பார்த்த எடிட்டர், படிக்கத் தொடங்கியதும் நிமிர்ந்து உட்கார்ந்தார். படிக்கப் படிக்க அவர் முகத்தின் நிறம் மாறத் தொடங்கியது.

படித்து முடித்ததும் நாற்காலியில் பின்னால் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டார். ரவி பதை பதைப்புடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"எப்படி இருக்கு?" என்று கேட்டான் பொறுமையின்றி.

அவர் ஏதோ உலகத்திலிருந்து மீண்டு வந்தவர் போல் கண்களைத் திறந்து மெதுவாகச் சொன்னார். "இந்தக் கட்டுரையில் இருக்கும் விஷயம் மட்டும் உண்மையாக இருந்தால் சயின்ஸ் இந்தியா உலகத்திற்கு ஒரு புதிய செய்தியை பரப்பப் போகிறது. இந்தியாவின் பார்வை முழுவதும் கிருஷ்ணாபுரத்தின் மீது விழப் போகிறது. இந்த டாக்டர் யாரோ தெரியவில்லை. ரொம்ப சிரமப்பட்டிருக் கிறார். ரேடியோ ஆக்டிவ் கதிர்களைப் பரிசோதித் திருக்கிறார். அந்தக் குழந்தைகளைப் பெற்ற தாய்மார்களை பரிசோதித் திருக்கிறார். அவர்களின் கணவன்மார்களின் ஸ்பெர்மை கூட சோதித்திருக்கிறார். எங்கேயும் தவறு இல்லை. ஆனால் வரிசையாக நான்கு அப்நார்மல் குழந்தைகள். மைகாட்!" என்று நிமிர்ந்தார்.

ரவி அவரையே பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான்.

"இந்த மாதம் நாம் அந்த போட்டோவையே அட்டைப்

பட்டமாகப் போட்டுவிடலாம். இவ்வளவு நடந்தும் கூட அரசாங்கம் என்ன செய்கிறது? கிருஷ்ணாபுரத்தை யார் காப்பாற்றப் போகிறார்கள்' என்பதுதான் தலைப்பு. இன்னொரு விஷயம் - இந்த விஷயத்தைப் பரிசோதித்துப் பார்ப்பதற்காக சயின்ஸ் இந்தியாவின் சார்பில் ஜெனடிக்ஸ் நிபுணர் ஒருவர் அவருடைய போட்டோவையும் போடு. க்விக். இதெல்லாம் இந்த மாத இதழில் வரணும்"

பத்து நாட்களில் அந்த மாத சயின்ஸ் இந்தியா இதழ் மார்க்கெட்டில் பரபரப்பாக விற்பனையாயிற்று. முதலில் சின்னதாக சலனம். அதைத் தொடர்ந்து அது உலகச் சர்ச்சையாகிவிட்டது.

## 14

**ரா**கேஷின் கண்களும் முகமும் சிவந்திருந்தன. அவனுக்கு முன்னால் இரண்டு ரெட் ஸ்கெலிடன்கள் நின்று கொண்டிருந்தார்கள். முன்னால் சயின்ஸ் இந்தியா பத்திரிகை கிடந்தது.

"ரங்கபிரசாத்! எவ்வளவோ ரகசியமாக நாங்கள் செய்துவரும் இந்தக் காரியத்தை உலகிற்கு வெளியிட்டாய். உலகத்தின் பார்வையே இந்த கிருஷ்ணாபுரத்தின் மீது விழும்படி செய்துவிட்டாய். இதற்குத் தகுந்த பலன் கிடைக்காமல் போகாது. உஸ்ஸோக் உன் மீது நடவடிக்கை எடுக்கப் போகிறது" என்றவன், ரெட் ஸ்கெலிடன்ஸ் பக்கம் திரும்பி "இன்றிரவு அவன் சாக வேண்டும். இன்றிரவே" என்றான்.

"மகாதிரஷ்டாவின் அனுமதியின்றி யாரையும் கொல்லுவது உஸ்ஸோக்கின் வழக்கமில்லை ராகேஷ்."

"நான்சென்ஸ்! ஒரு பக்கம் அவர்கள் வரத் தொடங்கி விட்டார்கள். இன்னும் அனுமதி வேறு கேடா?

ரங்கபிரசாதின் பரிசோதனைகளைப் பற்றிய முழு விவரங்களும் அவர்களுக்குக் கிடைக்கக் கூடாது. அதற்குள் நாம் தண்ணீரில் பாதரசம் கலப்பது போன்ற வேலைகளை செய்துவிடணும். அவர்களை மேலும் குழப்ப வேண்டும். இது போன்ற பிறப்புகளுக் கெல்லாம் வேறு ஏதோ காரணம் இருப்பதுபோல் பிரமை உண்டாக்கணும். அஷ்டா வக்கிரனின் பிறப்பு வரையிலும் இம்மாதிரி செய்து வரணும். அதற்கு முதல் படியாக உண்மையை ஆராய்ச்சி செய்யும் ரங்கபிரசாதைக் கொல் லணும். இந்தக் காரியத்திற்கு உங்களுக்கு மகாதிரஷ்டாவின் அனுமதிதான் வேண்டும் என்று சொன்னால் அதை நானே செய்துவிடுகிறேன், நம்ப வேட்டை நாயின் உதவியுடன் இன்றிரவு சரியாக பன்னிரெண்டுமணிக்கு." ஆவேசமாக கத்தினான்.

வேட்டை நாய் ஒன்று அந்த அறைக்குள் நுழைந்தது. சாதாரண நாய்போல் இல்லை அது. ஆளுயரத்தில் இருந்தது. கண்கள் நெருப்புக் கோளங்களாக இருந்தன. யானையின் கழுத்தைக்கூட எளிதாக கிழித்துக் குதறக்கூடிய பற்கள். ராகேஷின் முன்னால் வந்து நின்றது.

★

**ப**ன்னிரெண்டு மணி அடிக்க இன்னும் ஐந்து நிமிடங்கள் இருந்தன. ரங்கபிரசாத் மூன் அறையில் உட்கார்ந்து மருத்துவப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

அப்பொழுதுதான் அந்த சத்தம் கேட்டது, வெளிக்கதவை யாரோ நகத்தால் பிராண்டினாற்போல். அவர் நிமிர்ந்து பார்த்தார்.

நிசப்தம்.

பிரமையாக இருக்கும் என்று நினைத்து திரும்பவும் புத்தகத்தில் ஆழ்ந்தார். மறுபடியும் கேட்டது அந்த சத்தம்.

இந்த முறை மேலும் பலமாக.

"யாரது?" என்று கேட்டபடி கதவை நோக்கி நடந்தார். சிறிய குறட்டை போன்ற ஓசை வெளியே. ஆஸ்துமா நோயாளியின் தொண்டைக் குழியிலிருந்து புறப்படும் ஓசையைப் போல்.

அவர் கதவைத் திறப்பதற்காக தாழ்ப்பாளை நீக்கினார். அவர் முற்றிலும் கதவைத் திறப்பதற்குள் அது உள்ளே பாய்ந்து வந்தது. அதைச் சற்றும் எதிர்பாராத அவர் ஓரடி பின்னால் நகர்ந்தார்.

ஆளுயரத்திற்கு இருந்தது அந்த நாய். அதன் கண்கள் இரத்தத்தில் தோய்ந்தெடுத்தது போல் சிவப்பாக இருந்தன. அவர் யோசித்துப் பார்க்கவும் அவகாசம் தராமல் அந்நாய் அவர் மீது பாய்ந்தது.

அதன் நகங்கள் அவர் தோளில் இறங்கின. அவர் முகத்திற்கு அருகில் வந்தது அதன் முகம். மெதுவாக அவர் கழுத்தை நெருங்கியது.

★

"**அ**த்தை!" என்றாள் கேதாரகௌரி கலவரத்துடன். பார்வதி பதில் பேசவில்லை. ஆனால் வலியை அடக்கிக் கொண்டது முகத்தில் நன்றாகத் தெரிந்தது. ஒரு தீர்மானத்திற்கு வந்தவளாக கௌரி எழுந்து கொண்டாள். "நான் போய் டாக்டரை அழைத்து வருகிறேன்" என்று கிளம்பினாள்.

"இந்த ராத்திரி வேளையில் எதுக்கும்மா?" என்று மாமியார் சொன்னதை அவள் காதில் வாங்கவில்லை. "எவ்வளவு தூரம்? இதோ நாலடி எடுத்து வைத்தால் டாக்டர் வீடு வந்துவிடும்" என்று கூறிப் புறப்பட்டுவிட்டாள்.

அன்று மாலையில் பார்வதிக்கு லேசாக நெஞ்சு

வலித்தது. அலட்சியம் செய்தாள். இரவு பத்தாகும்போது வலி அதிகமாகி விட்டது. சித்தார்த்தாவும் ஊரில் இல்லை.

கேதாரகௌரிக்கு ஊர் ஒன்றும் புதுசு இல்லை. ரங்க பிரசாத் வீட்டைச் சுற்றிலும் காம்பவுண்ட் சுவர்போல் வேலியிருந்தது. அதன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனாள். நள்ளிரவு என்பதால் எங்கேயும் சந்தடி இல்லை.

அவள் படியேறி கதவிற்கு அருகில் வந்து நின்றாள். கதவு சாத்தியிருந்தது. காலிங்பெல்லுக்காக தேடினாள். அகப் படவில்லை.

அதற்குள் உள்ளேயிருந்து தொப்பென்று யாரோ விழுந்த சத்தம் கேட்டது. எதையோ இழுத்த ஓசை.

கதவைத் தட்டப் போனாள். கதவு வெறுமே சாத்தி யிருந்ததால் திறந்து கொண்டது. உள்ளே எட்டிப் பார்த்தவளுக்கு இதயமே நின்றுவிடும் போல் இருந்தது.

கீழே விழுந்துகிடந்த ரங்கபிரசாத் இரண்டு கைகளாலும் அந்த நாயை தள்ளிவிட முயன்று கொண்டிருந்தார். அவர் மார்பில் தன் இரு கால்களையும் ஊன்றிக் கொண்டு கழுத்தை கவ்வ முயன்று கொண்டிருந்தது. அந்த நாய்க்கு முன்னால் அவர் முயற்சி பலிக்கவில்லை.

கௌரியின் கத்தலைக் கேட்டு தன் முயற்சியை விட்டு விட்டு திரும்பிப் பார்த்தது அந்த நாய். முகத்திலிருந்த ரத்த மெல்லாம் உறைந்துவிட சிலையாய் நின்று கொண்டிருந்தாள் கௌரி.

ஒரு வினாடி அதன் பார்வை அவள் மீது பட்டது. அது திரும்பியதும், ஒரே பாய்ச்சலில் அவள் மேல் தாவியதும் கண்மூடித் திறப்பதற்குள் நிகழ்ந்து முடிந்துவிட்டன. கத்துவதற்குக் கூட அவகாசம் இல்லாமல் தரையில் சுருண்டு விழுந்தாள். நினைவு தப்புவது போல் இருந்தது. ஆனால்

அதற்குள் அவளைப் பார்த்துவிட்டார் ரங்கபிரசாத். சரேலென்று எழுந்துகொண்டார். சமயத்திற்கு எந்த ஆயுதமும் கிடைக்கவில்லை அவருக்கு. அருகில் இருந்த நாற்காலியைத் தூக்கி நாயை பலமாக அடித்தார். ஆனால் எருமைமாட்டின் மீது மழைபெய்தாற்போல் அந்த அடி நாய் மீது எந்த பாதிப்பும் ஏற்படுத்தவில்லை. பின்னாலிருந்து தாக்கியதும் அது கௌரியை விட்டுவிட்டு இருமடங்கு கோபத்துடன் அவர் மேல் பாய்ந்தது.

அந்தப் பாய்ச்சலுக்கு நாற்காலியோடு சேர்ந்து அவரும் கீழே விழுந்தார். நாற்காலியின் விளிம்பு தரையில்பட்டு அதிர்ந்தது. அப்பொழுதுதான் அவருக்கு ஒரு விஷயம் புரிந்தது, தன்னால் அதை எதிர்ந்து நிற்க முடியாது என்றும் மரணம் உறுதி என்றும். மெல்ல மெல்ல அவர் கண்கள் மூடிக்கொண்டன. தலையில் பட்ட அடியினால் நினைவு தப்பிவிட்டது. அதற்குப் பிறகு என்ன நடந்தென்று அவருக்குத் தெரியாது. சுமார் ஐந்து நிமிஷங்கள் வரையில் அவர் அப்படியே கிடந்தார். திடீரென்று முகத்தில் தண்ணீர் பட்டாற்போல் இருந்தது. கண்களைத் திறந்து பார்த்தார். நாயைக் காணவில்லை.

கேதாரகௌரி குனிந்து அவர் முகத்தைக் கலவரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவர் சட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டு "என்ன நடந்தது?" என்று கேட்டார்.

"அது போய்விட்டது யாரோ கூப்பிட்டாற் போல்" என்றாள். ஒரு நிமிஷம் இருவரும் ஒன்றுமே பேசவில்லை. அந்த நிசப்தத்தைக் கலைத்தவளாக "என் பெயர் கேதாரகௌரி. சித்தார்த்தாவின் . . ." என்று ஏதோ சொல்லப் போனாள்.

"எனக்குத் தெரியும்" என்றார் அவர் இடைமறித்து. "ராவே புரோகிராமுக்கு வந்தபோது பார்த்திருக்கிறேன். சித்தார்த்தா என் நண்பனும்கூட" என்றார்.

"அத்தைக்கு மாலையிலிருந்து நெஞ்சுவலி. அதான் வந்தேன் " என்றாள் அவள்.

"அடடா! உடனே போகலாம் வாங்க."அவசரமாக மெடிகல் கிட்டை எடுத்துக் கொண்டார். அவளுக்கு வியப்பாக இருந்தது, முதல் நிமிடம் வரையிலும் மரணத்திற்கு அவ்வளவு நெருக்கமாக போய்விட்டு வந்தவர், அவ்வளவு சீக்கிரத்தில் சுதாரித்துக் கொண்டது. எவ்வளவோ மனவுறுதி இருந்தால் தவிர இது சாத்தியமில்லை.

"இன்று என் உயிரைக் காப்பாற்றினீங்க. உங்களுக்கு என் நன்றி. யாரோ பேஷண்டாய் இருக்கும்னு நினைத்து கதவைத் திறந்தால் இது! ஒருக்கால் வெறி நாயாக இருக்கும் ஷர்ட் இருந்ததால் நல்ல வேளையாக நகம் உள்ளே பதியவில்லை." நடந்து போய்க் கொண்டிருந்தபோது ரங்கபிரசாத் சொன்னார்.

"இவ்வளவு பெரிய நாயை நான் இதுவரை பார்த்ததே இல்லை" என்றாள் அவள்.

"முதல் முறையாக நீங்க எங்கள் வீட்டுக்கு வந்தபோது இந்த மாதிரியான வரவேற்பு கிடைத்ததற்கு மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். சமயத்திற்கு வந்தீங்களோ நான் பிழைத்துக் கொண்டேனோ" என்றார் ரங்கபிரசாத்.

அவள் கொஞ்சம் நாணமடைந்தவளாக "நான் பெரிதாக என்ன செய்து விட்டேன்? யாராக இருந்தாலும் அதைத்தான் செய்திருப்பாங்க. நீங்க எங்க வீட்டிற்கு வந்தபோது நான் இந்த மா'திரி நிலையில் இருந்திருந்தால் நீங்கள் மட்டும் சும்மா இருந்திருப்பீங்களா?" என்றாள் சிரித்துக் கொண்டே.

அவள் அத்தனை சுவாதீனத்துடன் சரளமாகப்பேசியது

அவர் மனதில் பரிவை ஏற்படுத்தியது. "என்னுடைய நன்றிக் கடனைத் தீர்த்துக் கொள்வதற்காக அந்த மாதிரி கஷ்டம் உங்களுக்கு வரணுமா என்ன? ஒருவேளை வந்தாலும் எல்லோருக்கும் முன்னால் நான் ஓடிவந்து காப்பாற்றுகிறேன், போதுமா?" என்றார்.

இருவரும் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். முனை திரும்பி அவர்கள் மறைந்ததும் புழக்கடை இருட்டிலிருந்து மெல்ல வெளியே வந்தான் ராகேஷ். அவன் முகம் சிவந்து குரூரம் கலந்திருந்தது. அந்தச் சமயத்தில் அங்கே வந்தது உலகத்தில் வேறு யாராக இருந்தாலும் சரி, கேதாரகௌரியாக இல்லாமல் இருந்தால், அவன் கண்டிப்பாக நாய்க்கு உத்தர விட்டிருக்கமாட்டான் திரும்பி வரச்சொல்லி.

## 15

"ராகேஷ்! முடிவுகளை எடுக்கும் உரிமை உஸ்ஸோக்கில் மகாதிரஷ்டாவுக்கு மட்டுமே உண்டு. வேறு யாருக்குமே இல்லை. உன் சொந்த விருப்பத்தின்படி முடிவெடுத்ததால் உஸ்ஸோக்கிற்கு அபச்சாரம் செய்துவிட்டாய். இதற்கு உன் விளக்கம் என்ன?"

ரங்கபிரசாத் மீது நடந்த கொலை முயற்சியைப் பற்றி மகாதிரஷ்டாவுக்குத் தெரிந்துவிட்டது. ராகேஷை அழைத்து விசாரித்தார்.

"நான் எந்த தவறும் செய்யவில்லை. டாக்டர் ரங்கபிரசாத் எழுதிய கட்டுரையால் பலருடைய பார்வை இந்த கிராமத்தின் மீது விழத் தொடங்கிவிட்டது. மேலும் ஓரிரண்டு குழந்தைகள் பிறந்துவிட்டால் மக்களின் ஆர்ப்பாட்டம் அதிகமாகிவிடும். அதனால் டாக்டரைக் கொன்றுவிட நினைத்தேன். அத்துடன்

விஷயம் முடிந்துவிடுமே என்றுதான்.''

“ஓஹோ! அப்படியா? அப்படியென்றால் இனி கிருஷ்ணா புரத்தில் குழந்தைகளே பிறக்கமாட்டார்களா?''

“நமக்கு வேண்டியது கேதாரகௌரியின் வயிற்றில் பிறக்கப் போகும் அஷ்டாவக்கிரன்தான். மீதி குழந்தைகள் இல்லை. அவர்களை வயிற்றிலேயே கொன்றுவிடலாம். அல்லது அவர்களுடைய தாய்மார்களையே கொன்று விடலாமே.''

அவன் வார்த்தைகள் முடியக்கூட இல்லை. கன்னம் அதிர்ந்தது.

“குட்டிச் சாத்தான் இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்னால் அனுப்பப்போகிற அந்தக் குழந்தைகளை வயிற்றிலேயே கொன்றுவிடப் போகிறாயா? உஸ்ஸோக்கில் மெம்பராக இருந்து கொண்டு உனக்கு இந்த யோசனை எப்படி வந்தது?''

ராகேஷ் கன்னத்தைத் தடவிக் கொண்டான். பக்கத்தில் இருந்த ரெட் ஸ்கெலிடன்கள் சலனமில்லாமல் இந்தக் காட்சியை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

“ராகேஷ்! தொடக்கத்திலிருந்தே உன்னை கவனித்துக் கொண்டு வருகிறேன். அளவுக்கு அதிகமாக யோசிக்கிறாய் நீ. உஸ்ஸோக்கில் மகாதிரஷ்டா மட்டும்தான் உத்தரவு தர முடியும். மற்றவர்கள் அதை பின்பற்றணும். புரிந்ததா?''

மகாதிரஷ்டாவின் அதிகாரம் ராகேஷ் மனதில் குமுறலை ஏற்படுத்தியது. ‘புரிந்தது மகாதிரஷ்டா! இந்த ராகேஷ் யாருன்னு உனக்குத் தெரியாது. இதற்குப் பழி வாங்காமல் விடமாட்டேன். இந்த நிமிஷமே உன்மேல் பாய்ந்து உன்னைக் கொன்று போட்டாலும் என்னைத் தடுத்து விடமுடியாது. உஸ்ஸோக்கின் எதிர்கால சர்வாதிகாரியான என்னை

யாராலும் தடுக்க முடியாது. ஆனால் இது சமயம் இல்லை. சமயம் வரும்போது கவனித்துக் கொள்கிறேன்' என்று மனதிற்குள் கறுவிக் கொண்டே மௌனமாக நின்றிருந்தான்.

ராகேஷின் எண்ணங்களைச் சிதறடித்தபடி மகாத்ரஷ்டா மேலும் சொன்னார். "ரங்கபிரசாத் எழுதிய கட்டுரையின் விளைவு எப்படி இருக்கும் என்று தெரியும். என்ன நடந்தால் என்ன? பூதகணங்களின் சக்தியை இந்த மனிதர்களால் எதிர்க்க முடியுமா? கிருஷ்ணாபுரத்தில் இருக்கும் கர்ப்பிணிப் பெண்கள் எல்லோரையும் ஊரைவிட்டு போகச் சொல்வார்களா? அல்லது காரணத்தை ஆராய்ந்து பரிசோதனைகளை செய்யப் போறாங்களா? அவர்களுக்கு புத்தி குழம்பிப் போய்விடும். போகட்டும். பைத்தியம் பிடித்து அலையட்டும்." மகாதிரஷ்டா சிரிப்பை அடக்கிக் கொண்டு கடுமையான குரலில் தொடர்ந்தார்.

"அதற்குள் அஷ்டாவக்கிரன் பிறப்பை பற்றிய செய்தியை மக்களுக்கிடையே பரப்புவோம். இன்னும் கொஞ்சநாள்தான் இருக்கு. பூத தேவதைகளின் தலைவன் தன் பரிவாரங்களுடன் பூமியில் வந்து இறங்கும்போது அவருக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும்படி மக்களைத் தயார் செய்யணும். காரணத்தை அலசி ஆராய முயலுபவர்கள் அதிலேயே சிக்கிக் கொண்டு அழிந்து போவார்கள். போகப் போக மக்கள் உஸ்ஸோக் மீது நம்பிக்கை வைக்கத் தொடங்குவார்கள். அப்படிப்பட்டவர்கள் மட்டும்தான் உலகத்தில் பிழைத்திருப்பார்கள். மற்றவர்கள் இறந்துவிடுவார்கள். ஒருவிதத்தில் மக்களே மற்றவர்களை கொன்றுவிடுவார்கள்."

மகாதிரஷ்டா ராகேஷை கூர்ந்து பார்த்தபடி சொன்னார். "முன்பின் யோசித்துப் பார்க்காமல் அரைகுறை ஞானத்துடன் அவசரக் குடுக்கையாய் முடிவெடுத்தாய். இதற்கு உன்னை தண்டிக்க வேண்டும்."

அங்கே ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம் வந்து சூழ்ந்தது. அந்த நிசப்தத்தைத் துளைத்துக் கொண்டு ஒலித்தது மகாதிரஷ்டாவின் குரல்.

"ராகேஷ்! அஷ்டாவக்கிரன் பிறப்பதற்கு செய்ய வேண்டிய அடுத்த அம்சத்தை ஒருவனாய் முன் நின்று செய்யப் போகிறாய். அதற்குத் தேவையான பொருட்களை எல்லாம் நீயே சேகரித்துக் கொள்ளணும்."

வேறு ஏதோ எண்ணிக் கொண்டிருந்த ராகேஷ் வியப்புடன் நிமிர்ந்தான். உஸ்ஸோக் மிக ரகசியமாக செய்ய வேண்டிய அந்த யாகத்தை தன்னை மட்டுமே செய்யச் சொல்கிறாரே? அவனுக்கு ஓலைச் சுவடியில் படித்தது நினைவுக்கு வந்தது. 'யார் இந்த ஐந்து அம்சங்களையும் சுயமாக முன் நின்று செய்கிறார்களோ அவர்களே அஷ்டாவக்கிரனின் சாம்ராஜ்ஜியத்திற்கு அதிபதியாவார்கள்' என்பதுதான் அது.

இதை அவன் வெளியே சொல்லாதது நல்லதாகிவிட்டது. அவன் மகிழ்ந்து போனான்.

மகாதிரஷ்டா மேலும் சொன்னார். "ராகேஷ்! க்ஷுத்ட்ச யாகமென்றால் சாதாரண விஷயம் இல்லை. எத்தனையோ பொருட்களை சேகரிக்கணும். அஷ்டாவக்கிரன் தாயின் கர்ப்பத்தில் நுழைந்த மூன்றாம் மாதத்தில் நடத்த வேண்டிய இந்த யாகத்தில் பூத தேவதைகளுக்கு அதிருப்தி ஏற்பட்டாலோ அல்லது யாகத்தில் ஏதாவது பிழை நேர்ந்தாலோ அவ் விடத்திலேயே யாகத்தைப் பண்ணுபவனின் ரத்தத்தை உறிஞ்சிவிடும். நம் வம்சத்து மூலபுருஷனான காத்ரா என்ற மந்திரவாதிகூட இதேமாதிரிதான் இறந்தான். மந்திரத்தை நடுவில் சரியாக உச்சரிக்காததால் அங்கேயே காற்றில் சுற்றிக் கொண்டிருந்த ஆவிகள் எதிர்த்து வந்து ரத்தத்தை உறிஞ்சி விட்டன.

அதனால் ராகேஷ், ஜாக்கிரதை! இன்னொரு விஷயம்கூட சொல்கிறேன். இந்த யாகத்துக்கு ஆகும் செலவை உஸ்ஸோக் ஏற்றுக் கொள்ளாது. பொருளாதார ரீதியில் மிகக் கடினமானதும், உயிருக்கே ஆபத்து விளைவிக்கக் கூடியது மான இந்த யாகத்தை நடத்துவதுதான் உஸ்ஸோக் உனக்கு விதிக்கும் தண்டனை." மகாதிரஷ்டா விடுவிடு என்று போய்விட்டார்.

ராகேஷ் உதடுகளில் குறுநகை படர்ந்தது. குட்டிச் சாத்தானின் அனுகிரகம் இருந்துவிட்டால் எந்த ஆபத்தும் நேராது. பணப்பிரச்னையா? அப்பாவியான கேதார கௌரி இருக்கும் வரையில் கவலையே இல்லை.

★

"**ரா**கேஷ்! கொஞ்ச நாளாக உன்னை கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். இப்பொழுதெல்லாம் ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்?" கௌரி கேட்டாள்.

ராகேஷ் நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவள் முகத்தில் எந்த உணர்ச்சியும் தெரியவில்லை. அவன் சட்டென்று பதில் பேசவில்லை.

அவன் தடுமாற்றத்தை கவனித்த கௌரி "என்னிடம் கூட மறைக்கிறாயா?" என்று கேட்டாள்.

"இல்லை கௌரி! ஆனால் இது என் மனதிற்கு சம்பந்தப் பட்ட விஷயம். சில விஷயங்கள் மனதை மிகவும் வருத்தப் படுத்தும். வெளியே சொன்னால் நகைப்பிற்கு இடமாகிவிடும்."

"அப்படி உன் மனதை வருத்தப்படுத்தும் விஷயம் என்ன?"

அவன் நாற்காலியை விட்டு எழுந்து கொண்டான். ஒரு

தடவை குறுக்கும் நெடுக்குமாக நடந்துவிட்டுப் பிறகு தலையைக் குனிந்தபடி மெதுவாகச் சொன்னான்.

"என்னால் உன்னிடமோ அல்லது மாமாவிடமோ இருக்க முடியலைன்னு சொன்னால் நீ நம்புவாயா கெளரீ?"

"நம்புகிறேன்."

"குட்! நீ கெட்டிக்காரி. அதனால்தான் என் உணர்வுகளைப் புரிந்துகொண்டாய். இங்கிருந்து எங்கேயாவது போய் சின்ன பிசினெஸ் ஏதாவது நடத்தணும்.மூச்சுவிடக் கூட முடியாதபடி வேலையில் ஆழ்ந்து போகணும். அப்பொழுதுதான் என் மனதிற்கு கொஞ்சமாவது அமைதி கிடைக்கும்."

"அனாவசியமாக நீ சின்ன விஷயத்தைப் பெரிது படுத்துகிறாய் என்று எனக்குத் தோன்றுகிறது. என்னைவிட ஆயிரம் மடங்கு அழகான பெண்கள் கிடைப்பார்கள் உனக்கு."

"ஆனால் உன்னைப் போன்ற நல்லவள் கிடைக்க மாட்டாளே?"

இந்த உரையாடல் அவளுக்கு சங்கடத்தையளித்தது. அனாவசியமாக அவன் வாழ்க்கையில் ஒரு பெரிய ஏமாற்றத்தை தோற்றுவித்துவிட்டோமோ என்ற வருத்தம் அவளை மிகவும் பாதித்தது. முடிந்தவரையில் ஏதாவது செய்து அவனுக்கு நேர்ந்த துன்பத்திற்குப் பரிகாரம் செய்துவிட துடித்தாள்.

"நீ ஏதாவது வியாபாரம் செய்வதாக சொன்னால் உன்னை யார் தடுக்கப் போகிறார்கள்?" என்றாள்.

"இங்கே இல்லை. பம்பாய் அல்லது ஹைதராபாத்தில்."

"உன் விருப்பம்."

"ஆனால் மாமா ஒப்புக் கொள்ளாவிட்டால்?"

"நான் கேட்டால் காரணமே தேவையில்லை அவருக்கு. உடனே ஒப்புக் கொள்வார். சொல்லு, எவ்வளவு வேண்டும்?"

★

"**எ**வ்வளவு?" இரண்டு லட்சமா? கேட்டார் பவானிசங்கர்.

"ஆமாம் டாடீ. ராகேஷை ஒரு ஆளாக்கும் பொறுப்பு நம்மைச் சேர்ந்தது. முதலில் அவனுக்கு ஒரு வியாபாரத்தை ஏற்படுத்தித் தரணும். அதுக்குத்தான் இந்தப் பணம். . ."

"ராகேஷ் இப்போ எங்கே இருக்கிறான்?" பாதியிலேயே அவளைத் தடுத்துவிட்டு கேட்டார் பவானிசங்கர். அவர் முகம் வழக்கம்போல் இல்லை. தந்தை அவ்வாறு இருந்து அவள் என்றுமே கண்டதில்லை. அவள் எத்தனையோ எதிர் பார்ப்புடன் வந்தாள். கேட்டதுமே அவர் ஒப்புக் கொண்டு விடுவார் என்றும் வேலை சுலபமாகிவிடும் என்றும் நினைத் திருந்தாள். ஆனால் ராகேஷின் பெயரைக் கேட்டதுமே அவர் முகத்தில் ஏதோ இனம் புரியாத மாறுபாடு தென்பட்டதைக் கண்டு வியந்தாள்.

"ராகேஷ் எங்கேயிருக்கிறான்?" இந்த முறை அவர் குரல் மிகக் கடினமாக ஒலித்தது.

"கிராமத்தில்."

"நீ போ. . . அதே காரில் ராகேஷை அனுப்பு."

"வந்து. . . டாடீ. . ."

"எனக்கு உடனே அவன் வேண்டும்." முற்றுப்புள்ளி வைத்தாற் போல் சொல்லிவிட்டு எழுந்தார் பவானிசங்கர். 'இனி நீ போகலாம்' என்பது போலிருந்தது அவர் பார்வை. அவள் கிளம்பிப் போய் ராகேஷை அனுப்பும் வரையிலும் அவர் முள்ளின் மேல் இருப்பது போல் வீற்றிருந்தார்.

அன்று மாலையே ராகேஷ் வந்தான். ஆனால் கேதார கௌரி அவனிடம் தந்தையின் நடவடிக்கையைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. ஒருமுறை 'உன்னைப் பார்க்க வேண்டும்' என்று தந்தை சொன்னதாக தெரிவித்தாள்.

ராகேஷ் உல்லாசமாக உள்ளே நுழைந்தபடி "என்ன விஷயம் மாமா?" என்று கேட்டான்.

பவானிசங்கரின் ஆபீஸ் அறை அது. ஏ.சி. செய்யப்பட்ட அறை. விசாலமான மேஜைக்கு முன்னால் ரிவால்விங் சேரில் உட்கார்ந்திருந்தார் பவானிசங்கர். உள்ளே நுழைந்த ராகேஷை ஒரு வினாடி இமைக்காமல் பார்த்துவிட்டு "உட்கார்" என்றார்.

அவன் உட்கார்ந்ததும் போய் கதவைத் தாழிட்டுவிட்டு வந்தார். ராகேஷ் வியப்புடன் பார்த்தான்.

"நான் உன்னிடம் சில விஷயங்களை பேச வேண்டும்" என்று நினைக்கிறேன்."

ராகேஷின் வியப்பு மேலும் கூடியது.

"ராகேஷ்! இரண்டு வருஷங்களுக்கு முன்பு ஒரு வேலைக்காரி இருந்தாளே, நினைவு இருக்கா? சுமார் இருபது வருடங்களாக நம் வீட்டில் வேலை செய்து வந்தாள். ரொம்ப நம்பிக்கையானவள். இரண்டு வருடங்களுக்கு முன்பு சொல்லாமல் கொள்ளாமல் வேலையை விட்டு போய் விட்டாள். ஏன் என்ன கேட்டபோது காரணத்தைச் சொல்ல வில்லை. அவளுக்கு நாற்பது வயது."

"இதையெல்லாம் என்னிடம் ஏன் சொல்றீங்க?"

"உனக்குத் தெரியாதா?"

"தெரியாது."

பவானிசங்கர் மேஜை டிராயரிலிருந்து ஒரு உறையை

எடுத்து மேஜையின் மீது விட்டெறிந்து விட்டு "சரி! போகட்டும். இது என்னவென்றாவது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"என்ன?"

"பிரபல சைக்கியாட்ரிஸ்ட் வியாஸிடம் நீ எதற்காக போக வேண்டியிருந்தது என்று சொல்கிறாயா?"

ராகேஷ் திடுக்கிட்டான். இரண்டு வருடங்களுக்கு முன்னால் நடந்த விஷயம் இப்பொழுது எப்படி வெளியில் வந்தது?

"ராகேஷ்! இந்த பவானிசங்கர் பணத்தில் புழங்குபவன். ஒவ்வொரு வினாடியும் சுற்றுச் சூழ்நிலையும், எதிரிகளையும் கூர்ந்து கவனித்துக் கொண்டே வருவது என் வழக்கம். நோயாளியின் ரகசியங்களை எந்த டாக்டரும் வெளிப்படுத்த மாட்டார். ஆனால் பணத்தால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. டாக்டர் உன்னைப் பரிசோதித்த விவரங்கள், பெண்டதால் மருந்து மயக்கத்தில் அந்த நாட்களில் நீ அவருக்குத் தெரிவித்த விவரங்கள் முதலியவை அடங்கிய நகல் இது. நீ எவ்வளவு நீச்சமானவன் என்றும், சைக்கோபாதிக் என்றும் எடுத்துக்காட்டும் பத்திரங்கள் இவை." அவர் சற்று நிறுத்தி மீண்டும் தொடர்ந்தார்.

"எனக்கு ரொம்ப நாளாகவே உன்மேல் சந்தேகம் இருந்து வந்தது. ஏனோ உன் நடவடிக்கை வித்தியாசமாக இருந்தது. அதனால்தான் கௌரி உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன் என்று சொன்னபோது நான் சந்தோஷப்பட்டேன். அதற்குப் பிறகுதான் சில கொடூரமான ரகசியங்கள் வெளிப் பட்டன. அவற்றில் இந்த ரிப்போர்ட்டுகளும் ஒன்று. மைகாட்! மயிரிழையில் என் மகளின் வாழ்க்கை தப்பித்தது."

அவர் முன்னால் குனிந்தபடி சொன்னார். "என் ஆட்கள்

உன்னைப் பற்றிய விவரங்களைச் சேகரித்துக் கொண்டே வருகிறார்கள். இப்பொழுது சொல்லு ராகேஷ்! பத்தாவது குறுக்குத் தெருவில் எப்போதும் கதவுகள் சாத்தியே கிடக்கும் இரண்டு மாடிக் கட்டிடத்திற்கு நீ அடிக்கடி ஏன் போகிறாய்? அந்த வீட்டுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? சமீபத்தில் ஒரிஸ்ஸாவுக்கு எதற்காக நீ போனாய்? உன்னுடன் வந்த கிழவன் யாரு?"

எரிமலை வெடித்தாற்போல் வெளிவந்த அந்த வார்த்தைகளைக் கேட்டு வேறு யாராவதாக இருந்தால் கதிகலங்கிப் போயிருப்பார்களோ என்னவோ, ஆனால் ராகேஷ் மட்டும் சர்வசாதாரணமாக இருந்தான்.

"என்ன மாமா இது? நான் சைக்கியாடிரிஸ்டிடம் போவதாவது? சைக்கோ பாதிக் ஆவதாவது?" என்றான் ஏதும் அறியாதவன் போல்.

"ராகேஷ்! என் அனுபவத்தில் உன்னைப் போல் ஆயிரம் பேரை பார்த்திருப்பேன். டபாய்க்காமல் உன் பிரச்னை என்னவென்று சொல்லு."

"எனக்கா? எனக்கு எந்த பிரச்னையும் இல்லையே?"

"ராகேஷ்! கடந்த பத்தாண்டுகளில் விஞ்ஞானம் ரொம்ப வளர்ந்துவிட்டது. மனிதன் சொல்லாவிட்டாலும் மனதிலிருக்கும் எண்ணங்களைக் கண்டுபிடித்து விடும் இயந்திரங்கள் வந்துவிட்டன. இந்த ரிப்போர்ட்டுகளின்படி நீ ஹைபர் டென்ஷன், சோம்னாம்புலிஸம் போன்ற சாதாரண பிரச்னைகளுடன் டாக்டரிடம் போனாய். ஆனால் அதற்குப் பிறகு அவர் செய்த பரிசோதனையால் அதைவிடக் கொடிய விவரங்கள் வெளிப் பட்டன. மனிதர்களில் இத்தனை கொடிய எண்ணங்கள் கொண்டவர்கள் இருப்பார்கள் என்று இப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன். அத்துடன் நாளுக்கு நாள் பெருகிவரும் சாடிஸம் வேறு. இதே நிலை

நீடித்துக் கொண்டிருந்தால் இன்னும் ஆறேழு மாதங்களில் நீ முற்றிலும் சினிக்காக மாறிவிடுவாய் என்றும், பைத்தியக்கார ஆஸ்பத்திரிதான் உனக்கு கதி என்றும் டாக்டரின் ரிபோர்ட் சொல்கிறது."

அவர் சற்று நிறுத்தினார். ராகேஷ் கண்ணிமைக்காமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"அதற்குப் பிறகு ரகசியமாக உன் அறையை சோதித்த போது நீ போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி விட்டிருப்பது தெரிந்தது. திரும்பவும் அதே சைக்கியாடிரிஸ்ட்டைப் போய் சந்தித்தேன். உன்னை யாராலும் தடுக்க முடியாது என்றும் தடுத்தால் அது இன்னும் தீமையில்தான் முடியும் என்றும் சொன்னார். ஆனால் திடீரென்று நீ சாதாரணமாக நடந்து கொள்ளத் தொடங்கினாய். அது எப்படி சாத்தியம்? விஞ்ஞானத்திற்கு எட்டாத அதிசயம் நிகழ்ந்தால்தான் அது சாத்தியம். அந்த சமயத்தில்தான் கௌரி தன் திருமணத்தைப் பற்றி முடிவு செய்தாள்.

"ஆனாலும் என் சந்தேகம் தீரவில்லை. நீ ஏதோ ரகசியக் கூட்டத்தில் சேர்ந்திருக்கிறாய். ராகேஷ்! இந்த உலகத்தில் உன் நன்மையைக் கருதக் கூடியவர் யாராவது இருந்தால் அது நான் ஒருத்தன்தான். உன் சிறுவயதில் நிகழ்ந்த சம்பவங்கள், அவை உன் மீது ஏற்படுத்திய பாதிப்புகள், எல்லாவற்றையும் என்னால் புரிந்து கொள்ள முடியும். சொல்லு ராகேஷ்! இது என்ன கும்பல்? நீ கலந்துகொள்ளும் அந்த ரகசியக் கூட்டம் என்ன? சொல்லாமல் தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைக்காதே. இன்று இல்லாவிட்டாலும் நாளைக்காவது என்னால் தெரிந்து கொள்ள முடியும். நீயாகவே சொல்லி விடுவது நல்லது."

ராகேஷ் கொஞ்சநேரம் பேசவில்லை. பிறகு எழுந்து நின்று "மாமா!" என்றான். அவன் குரல் நடுங்கியது. "எல்லா

விதத்திலேயும் சீரழிந்து போய்விட்டேன் மாமா. இனி திருந்த முயன்றாலும் முடியாது" என்றான்.

"அப்படிச் சொல்லாதே ராகேஷ்! உன்னைப் பற்றி என்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. உன் நன்மையைக் கருதித்தான் யாருக்குமே இந்த ரகசியத்தை நான் சொல்ல வில்லை."

"தாங்க்ஸ் மாமா! நான் . . . நான்." அவனால் பேச முடியவில்லை. கண்களை மூடிக் கொண்டான். உதடுகள் நடுங்கின.

பவானிசங்கர் அவனை நெருங்கினார். பரிவோடு இழுத்து அணைத்துக் கொண்டு "சொல்லுப்பா" என்றார்.

முதலில் அவருக்கு ஒன்றுமே தெரியவில்லை. பிறகு பகபகவென்று எரிந்தாற்போல் இருந்தது. வயிற்றுக்கு அடிபாகத்தில் ஏதோ கூர்மையான ஆயுதத்தால் குத்தினாற் போலவும், கிர்ரென்று சுழற்றினாற் போலவும். . .

சட்டென்று ஓரடி பின்வாங்கினார். ஆனால் ராகேஷ் அவரை அணைத்தபடியே மேலும் நெருங்கினான். "யாரிடமும் சொல்லாமல், மூடி மறைத்து வைத்துக் கொண்டதற்கு ரொம்ப தாங்க்ஸ் மாமா" என்று பேனா கத்தியால் மற்றொரு முறை குத்தினான்.

பவானிசங்கருக்கு அப்பொழுதுதான் வலி தெரிந்தது. ஊற்றிலிருந்து பீய்ச்சுவதுபோல் ரத்தம் வெளியே பாய்ந்தது. கையால் காயத்தை அழுத்திப் பிடித்துக் கொள்ள முயன்றார். ஆனாலும் பலனில்லை.

பாம்பின் வாயில் சிக்கிக் கொண்ட தவளை தன்னை விடுவித்துக் கொள்ளத் துடிதுடிக்கும் போராட்டத்தை ஆனந்தமாக வேடிக்கை பார்ப்பதுபோல் ராகேஷ் நிதானமாக பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு உயிர் துடிதுடித்தபடி உடலைவிட்டு வெளியேறுவதற்கு படும் பாட்டைக் கூட

அவன் சாதாரணமாக நோக்கக்கூடிய நிலைக்குத் தாழ்ந்து விட்டிருந்தான் என்றால் குட்டிச்சாத்தான் வேறு எங்கேயோ இல்லை. அவனுள்ளேதான் இருந்தது. அவன் இன்னொரு முறை குத்துவதற்கு முயற்சி செய்யவில்லை. சரியாக உயிர்நாடியைப் பார்த்து ஒரே ஒரு தடவை குத்தினான். அவ்வளவுதான்.

பவானிசங்கர் முழங்காலை ஊன்றியபடி கீழே சரிந்து விட்டார். உயிர் போய்க் கொண்டிருப்பது தெரிந்தது. கத்தினாலும் பிரயோஜனம் இருக்காது என்று தெரியும். கத்தவும் அவர் முயற்சி செய்யவில்லை. பாம்பிற்கு பால் வார்த்தோம் என்ற உண்மையை உணர்ந்த அதிர்ச்சியில் இருந்தார் அவர். அந்த நேரத்திலும் அவருக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது. தன் மகள் நல்ல முடிவை எடுத்துவிட்டாள். இந்த நயவஞ்சகனை திருமணம் செய்து கொள்ளாமல் இருந்தாளே, அதுவே பெரிய சந்தோஷம்.

ஆனால் அந்த மகிழ்ச்சியைக் கூட ராகேஷ் அவருக்கு விட்டுவைக்கவில்லை. "கிழவா!" என்றான் நக்கலாக. "நீ சொன்னாயே சாடிஸ்டுன்னு. அது உண்மைதான். ஆனால் அதைவிட சரியான வார்த்தை வேறொன்று இருக்கிறது. ஸ்கிஜோஃப்ரெனியா! ஆமாம் நான் சைக்கோபாத்தான். மேலுக்கு சமூகத்தில் கௌரவமான மனிதன். ஆனால் உள்ளூர உங்களையும், உங்கள் மகளையும் கண்டாலே வெறுப்பு எனக்கு. உங்கள் மகளை இதைவிட கொடூரமான முறையில் பழிவாங்கப் போகிறேன்.

"மிஸ்டர் பவானிசங்கர்! கவனமாக கேட்டுக் கொள். சற்று முன்னால் கேட்டாயே இவ்வளவு தீவிரமான மனநோயை எப்படி தாங்கிக் கொண்டாய் என்று? உண்மைதான். எந்த மருந்தாலும், எந்த போதை மருந்தாலும் கூட இதை குறைக்க முடியாது. ஆனால் இப்போ நான்

ஆரோக்கியமாகத்தான் இருக்கிறேன். இதற்குக் காரணம் என்ன தெரியுமா? உஸ்ஸோக்! ஆமாம். உஸ்ஸோக்..!"

பவானிசங்கர் ராகேஷையே பார்த்துக் கொண்டிருந்தார். அவனுள் இதுவரை கண்டிராத வேறு உருவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"உஸ்ஸோக் பிரபுவான குட்டிச்சாத்தான் அஷ்டா வக்கிரனின் உருவில் இந்த பூமிக்கு வரப் போகிறார். நாங்கள் அவனுக்கு உதவி செய்வோம். பிறந்ததும் தாயைக் கொன்று விடுவான். பிறந்த அன்றைக்கே தந்தையும் இறந்துவிடுவான். பெரியவன் ஆனதும் பிசாசுகளின் உதவியுடன் ராஜ்ஜியத்தை ஆளுவான். அந்த அஷ்டாவக்கிரன் பிறக்கப் போவது உன் மகளின் வயிற்றில்தான். புரிந்ததா? என்னை மறுத்துவிட்டு அந்த சித்தார்த்தாவைக் கல்யாணம் செய்து கொண்ட உன் மகளை எப்படியெல்லாம் பழிவாங்கப் போகிறேனோ தெரிந்துகொள். ஹா... ஹா... ஹா... ஹா" என்று உரத்த குரலில் சிரித்தான் ராகேஷ்.

தரை மீது இருந்த கம்பளம் ரத்தத்தால் நனைந்தது. மேஜைக்கு அருகில் தரையில் விழுந்து கிடந்தார் அவர். ரத்தத்தோடு உயிரும் கொஞ்சம் கொஞ்சமாக போய்க் கொண்டிருந்தது. வினாடிகள் தான் பாக்கி.

பத்து... ஒன்பது... எட்டு...

அவருக்கு தன் மகளின் நினைவு வந்தது. இந்த உலகில் எல்லோருமே நல்லவர்கள் என்று நம்பும் அப்பாவித்தனம்.

ஏழு... ஆறு... ஐந்து... நான்கு... சித்தார்த்தா நினைவுக்கு வந்தான். தன் மருமகனிடம் ஏதோ இனம் புரியாத சக்தி இருப்பதை என்றோ அவர் உணர்ந்து கொண்டார். இந்த நயவஞ்சகனை தன் மருமகன் கண்டுபிடித்துவிடுவானா? கண்டுபிடித்தாலும் என்ன பயன், முற்றிலும் குடி மூழ்கிவிட்ட

மூன்று ... இரண்டு... ஒன்று....

அவருடைய உயிர்போய்விட்டது.

ராகேஷ் கொஞ்ச நேரம், சலனமில்லாமல் அந்த உடலையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். பிறகு கதவைச் சாத்திவிட்டு வெளியே நடந்தான்.

பவானிசங்கரின் ஆபீஸ் மேஜைக்கு மேல்தட்டில் டிக்டாஃபோன் இருந்தது. தன் செகரெட்ரிக்கு அவர் அதில் தான் டிக்டேஷன் தருவார். அத்துடன் ஒரு டேப்ரிகார்டரும் இருந்தது. ராகேஷ் குத்தியதும் அவர் கீழே சரியத் தொடங்கியவர் மேஜையின் விளிம்பை சப்போர்ட்டுக்காக பிடித்துக் கொண்டார். டேப்ரிகார்டரின் பட்டன்கள் கைக்கு தட்டுப்பட்டன. ஆன் பண்ணிவிட்டுத் தரையில் சரிந்து விட்டார்.

ராகேஷ் அந்த அறையை விட்டுப் போனபிறகு கூட ரொம்ப நேரம் அந்த டேப் சுழன்று கொண்டிருந்தது. பிறகு டப் என்ற ஓசையுடன் அது நின்று விட்டது.

## 16

"**ஆ**ர்டிஃபிஷியல் இன் செமினேஷன் ஒரு பெண்ணின் மீது பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில்தான் கையாளப் பட்டது. ஜான் ஹண்டர் என்ற டாக்டர் ஆணிடமிருந்து வெளிப்பட்ட உயிரணுவை சிரிஞ்ச் மூலமாக பெண்ணுள் செலுத்துவதன் மூலம் கர்ப்பத்தை உண்டாக்கினார். ஆனால் இத்தகைய சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு. எத்தனையோ கேசுகளில் கணவனது மலட்டுத் தன்மையால், அவனுடைய உயிரணுக்களில் குழந்தையை

பிறப்பிக்கும் சக்தி இல்லாமை யால்தான் பெண்கள் மலடியாக இருந்துவிட நேரிடுகிறது. அதனால்தான் ஆர்டிஃபிஷியல் இன் செம்னேஷன் பை ஹஸ்பெண்ட் (A.I.H.) விட ஆர்டிஃபிஷியல் இன்செமினேஷன் பை டோனர் (A.I.D.) மிகவும் பிரபலமடைந்துவிட்டது. கணவன் மனைவிக்கே தெரியாத மூன்றாவது நபரின் வீரியத்தை தம்பதியரின் அனுமதியுடன் மனைவிக்குச் செலுத்துவதுதான் A.I.D."

சொற்பொழிவை நிறுத்திவிட்டு டாக்டர் வம்சீ கிருஷ்ணா ஹால் முழுவதையும் கண்களை சுழற்றிப் பார்த்தார். சுமார் இருபத்தைந்து டாக்டர்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஜெனடிக்ஸ் அது. அதில் ஆர்டிஃபிஷியல் இன்செமினேஷன் பிரிவு புதிதாக தொடங்கப் பட்டிருந்தது. அன்று அதைப் பற்றிப் பேசுவதற்காக டாக்டர் வம்சீகிருஷ்ணா அழைக்கப் பட்டிருந்தார். முப்பத்தைந்து வயது நிரம்பிய அந்த டாக்டர் இந்தியாவிலேயே ஜெனடிக் சயின்ஸில் முதல் நபராக கருதப்பட்டு வந்தார்.

அவர் மீண்டும் பேசத் தொடங்கினார் "தமக்குக் குழந்தைகள் இல்லையே, எந்த விதத்திலாவது குழந்தை பிறந்தால்போதும் என்ற தவிப்பு தம்பதிகளில் பெருகிவிட்டது. தன்னுடைய இயலாமைக்கும், மனைவியின் அதிருப்திக்கும் இடையே நலிந்து போகிறான் ஆண். வரம்பு மீறுவதற்கு ஒழுக்கக்கட்டுப்பாடு தடைபோடுகிறது. இந்தச் சூழ்நிலையில் A.I.D. கண்டுபிடிக்கப்பட்டதும் இதற்கு உடனே நல்ல வரவேற்பு கிடைத்துவிட்டது. இதில் ஒரு நன்மை என்னவென்றால் தன் மனைவிக்குச் செலுத்தப்பட்ட உயிரணு எந்த ஆணுடையது என்று கணவனுக்கும், குழந்தையின் தந்தை யார் என்று மனைவிக்கும் எந்தச் சூழ்நிலையிலும்

தெரியவேண்டிய அவசியம் இல்லை."

"1957லேயே அமெரிக்காவில் மட்டும் இதுபோல் ஒரு லட்சத்திற்கு மேல் குழந்தைகள் இந்த முறையில் பிறந்திருக்கிறார்கள் என்றால் மக்களுக்கிடையே இது எவ்வளவு பிரபலமடைந்திருக்கிறது என்று புரியும். ஆணின் வீரியம் ஃப்ரீஸ் செய்யும் முறை கண்டுபிடிக்கப்பட்ட பிறகு இந்த வேலை மேலும் சுலபமாகிவிட்டது. அதாவது நூறு வருடங்களுக்குப் பிறகு அமெரிக்காவில் ஒரு தம்பதியர் தமக்கு வேண்டிய முன்னாள் விளையாட்டு வீரனின் குழந்தை வேண்டுமென்றால் அதையும் பெற முடியும் என்று அர்த்தம். அஃப்கோர்ஸ், உயிரோடு இருந்தபோது அந்த விளையாட்டு வீரன் தன் வீரியத்தைத் தந்து அது பாதுகாக்கப் பட்டிருந்தால். . ."

சபையில் சிரிப்புச் சத்தம்.

"ஆனால் இதில் ஒரு சிக்கல் என்னவென்றால் புது வீரியம் செயல்படுவதுபோல் சேமித்து வைத்த வீரியம் அத்தனை சுறுசுறுப்பாக செயல்படாது. இந்தியாவில் இந்த A.I.D. யை பெருமளவிற்கு பிரபலம் அடைவதற்கு பாடுபட்டவர் டாக்டர் வித்யாசாகர். இன்று இந்த பிரிவுக்கு அவருடைய பெயரைச் சூட்டியது மிகவும் சந்தோஷப்பட வேண்டிய விஷயம். அவருடைய சிலையைத் திறந்து வைப்பதன் மூலம் இந்த இன்ஸ்டிட்டியூடில் இந்தப் பிரிவு தொடங்குகிறது."

உரையின் இடையில் தலைவர் பட்டனை அழுத்தியதும் சிலையின் மேலே இருந்த திரை கொஞ்சம் கொஞ்சமாக அகன்றது.

சபையில் கூடியிருந்த எல்லோரும் கைதட்டினார்கள்.

வம்சீகிருஷ்ணன் தன் சொற்பொழிவை மேலும்

தொடர்ந்தார். "நம் இந்தியர்களுக்கு ஒழுக்கக் கட்டுப்பாட்டில் நம்பிக்கை அதிகம். அதாவது அந்த வார்த்தைக்கு மதிப்பு தருவார்களே ஒழிய அந்தச் செயல்களுக்கு மதிப்பு தர மாட்டார்கள். வேண்டாத காரியங்களை செய்து கொண்டே ஒழுக்கம் கட்டுப்பாடு என்ற முக்காட்டை போட்டுக் கொள்வார்கள். நம் நாட்டில் செயற்கை முறையில் கர்ப்பம் தரித்தல் பற்றி தனிப்பட்ட முறையில் சட்டங்கள் எதுவும் இல்லை. பகவான் வர்ஸஸ் மகேஷ் என்ற கேஸில் கோர்ட்டு மிக கொடுமையான தீர்ப்பை வழங்கியது. கணவனுக்கு மலட்டுத் தன்மை இருந்து அவன் அனுமதியுடன் மனைவி செயற்கை முறையில் கருத்தரித்து பிறந்த குழந்தையை முறையற்ற வாரிசு என்று தீர்ப்பு அளித்தது. டாக்டர்களான நாம் இந்த தீர்ப்புக்கு எதிராக போராட வேண்டும். அவ்வாறு போராடியவர்தான் டாக்டர் வித்யாசாகர். அவர் மரணம் இந்தியாவுக்கு மட்டுமேயன்றி ஜெனடிக்ஸ் சயின்ஸுக்கே தீர்க்க முடியாத குறை. அவருடைய ஆன்மாவின் சாந்திக்காக இரண்டு நிமிடம் மௌன பிரார்த்தனை செலுத்துவதுடன் இந்தக் கூட்டம் நிறைவு பெறுகிறது."

சபையோர் மௌனமாக எழுந்து நின்று கொண்டார்கள். டாக்டர் வம்சீகிருஷ்ணா மேடையை விட்டு இறங்கி வந்து சக டாக்டர்களுடன் தேநீர் அருந்திக் கொண்டிருந்த பொழுது அதுவரையிலும் சபையின் கடைசி வரிசையில் உட்கார்ந் திருந்த ஒருவர் அவரிடம் வந்தார்.

"எனக்கு சில சந்தேகங்கள் இருக்கு. உங்களிடம் கேட்கலாம் என்று வந்தேன்" என்றார்.

வம்சீகிருஷ்ணா முறுவலுடன் "கண்டிப்பாக கேளுங்கள்" என்றார்.

"ஊஹூம். இங்கே வேண்டாம். இன்னும் இரண்டு நாட்கள் இருப்பீங்க இல்லையா? ஒருநாள் எங்கள் வீட்டுக்கு

டின்னருக்கு வரணும். சாவகாசமாக பேசுவோம்."

"நீங்க?"

"எந்த வித்யாசாகரைப் பற்றி நீங்கள் இதுவரை பேசினீங்களோ அந்த டாக்டரின் மகன் நான்."

வம்சீகிருஷ்ணா திகைத்துப் போனவராக அவரைப் பார்த்து "இவ்வளவு பெரிய விழா உங்க அப்பாவுக்காக நடக்கும்போது நீங்க மேடையில் அமராமல் பின்னால் எங்கேயோ போய் உட்கார்ந்து கொண்டீர்களே, ஏன்?" என்றார். அவர் குரலில் வியப்பு வெளிப்படையாய் தெரிந்தது.

"ஆர்டிஃபிஷியல் இன்செமினேஷனுக்கு நான் எதிரி என்பதால். உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ எங்க அப்பா சில வருடங்களுக்கு முன் ஹரீத்வார் ரிஷிகேஷ் முதலிய ஊர்களில் சுற்றிக் கொண்டிருந்தார். இறுதியில் அங்கேயே இறந்தார்."

"ஆமாம் தெரியும். நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அவர் தன் சாதனையில் உள்ள பிழைகளைத் தன் இறுதி காலத்தில் உணர்ந்து கொண்டு வேதாந்தியாக மாறிவிட்டார் என்று தோன்றுகிறது."

"ஊஹூம் இல்லை. அவர் வாழ்க்கையில் எதிர்பாராத அடி விழுந்தது. விவரம் கேட்காதீங்க. அது எங்கள் சொந்த விஷயம்."

"சாரி. அப்படி என்றால் சொல்லத் தேவையில்லை."

"டாக்டர் வித்யாசாகரின் மகன் என்று என்னை யாருக்குமே தெரியாது. முதலில் இந்த மாதிரி சிலை திறப்பு விழாவை எங்க அப்பாவே விரும்பியிருக்க மாட்டார்."

"நீங்க எதற்காக இப்படி ஆவேசப்படறீங்க?"

"ஆவேசமில்லை. இது போன்றவை எனக்கும் பிடிக்காது.

அது போகட்டும். நீங்க எங்க வீட்டுக்கு எப்போ வருவீங்க? ஒரு நாலைந்து மணி நேரம் என்னுடன் கழிக்க வசதிப்படுமா?"

"கண்டிப்பாக. உங்க வீடு எங்கே?"

"இங்கே இல்லை. இங்கிருந்து இருபதுமைல் தொலைவில் ஊர் எல்லையைத் தாண்டியிருக்கிறது. காரில் போகணும்."

"கண்டிப்பாக வருகிறேன். அது சரி. நீங்க செமினாருக்கு வந்திருப்பதால் நீங்களும் ஒரு டாக்டராகத்தான் இருக்கணும்."

"ஆமாம். தொழில் ரீதியாக டாக்டர்தான்."

"இத்தனை நேரமாக பேசிக் கொண்டிருந்தாலும் உங்கள் பெயரை தெரிந்து கொள்ளவே இல்லை பார்த்தீங்களா?" என்றார் வம்சீகிருஷ்ணா முறுவலுடன்.

"என் பெயர் பிரசாத். டாக்டர் ரங்கபிரசாத்."

★

**அ**வள் சிலையாக இருந்தாள். பார்வை எங்கேயோ சூனியத்தில் நிலைத்திருந்தது.

"அழு கௌரீ! இதயம் லேசாகும்படி அழுதுவிடு ப்ளீஸ்." சித்தார்த்தா சொன்னான்.

கிட்டத்தட்ட மூன்று நாட்களாய் அவள் அதே நிலையில் இருந்து வந்தாள். தூக்கமில்லை. வேதனையில்லை. எல்லா வற்றையும் கடந்த அதிர்ச்சி. அளவுகடந்த அதிர்ச்சி. தந்தையின் இறுதிச் சடங்குகளில் கூட சலனமில்லாமல் பங்கெடுத்துக் கொண்ட மனைவியைப் பார்த்தபோது சித்தார்த்தாவுக்கு கலக்கம் ஏற்பட்டது.

ஒருநாள் கழிந்தபிறகுதான் அவனுக்குப் புரிந்தது. கௌரியை இந்த சூழ்நிலையில் வைத்திருந்தால் மாற

மாட்டாள். அதனால் அன்றே மனைவியை அழைத்துக் கொண்டு கிராமத்திற்கு திரும்பிவிட்டான். எல்லா வேலை களையும் விட்டு விட்டு அவளுடனேயே இருந்து வந்தான். அவளைத் தன்னால் இயன்றவரை பழையபடி மாற்ற முயற்சி செய்தான்.

ஆனால் அவள் மாறவில்லை. அவன் கலக்கம் அதிகரித்தது. இதே நிலை நீடித்தால் அவள்கூட தனக்கு தரிக்காமல் போய்விடுவாள் போல் தோன்றியது.

பவானிசங்கர் பற்றி புலன் விசாரிக்க வந்த போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் பாத்ரூமிலிருந்து ரொம்ப நேரமாக மாமா வெளியே வராததால் வேலைக்காரர்களின் உதவியுடன் கதவைப் பிளந்து பார்த்தபொழுது அவர் ரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்தார் என்று ராகேஷ் தெரிவித்தான். கால் தடுக்கி விழுந்ததால் க்ளீனரின் கம்பி குத்தி விட்டிருக்கிறது என்றும் விவரித்தான். இன்ஸ்பெக்டர் வேலைக்காரர்களிடமிருந்து ஸ்டேட்மெண்ட் வாங்கிக் கொண்டு போய்விட்டார். அத்துடன் போலீசாரின் விசாரணை முடிந்துவிட்டது.

மூன்றாம் நாள் மாலையில் சித்தார்த்தா மனைவியிடம் "இப்படியே வெளியே காலாரப் போய்விட்டு வருவோமா?" என்று கேட்டான். அவள் சரி என்றோ வேண்டாம் என்றோ எதுவும் சொல்லாமல் ஒரு பதுமையைப் போல் அவனைப் பின் தொடர்ந்தாள். இருவரும் ஊருக்கு வெளியே வந்தார்கள்.

சூரியன் மலைக்குப் பின்னால் மறைந்துவிட்டான். கொஞ்சநேரத்தில் இருட்டியும் விட்டது. வயலுக்கு நடுவில் ஆழ்கிணற்றுக்கு அருகில் இருந்த பாறையின் மேல் உட்கார்ந்து இருந்தார்கள் அவ்விருவரும். அவள் கையைத் தன் கையில் ஏந்திக் கொண்டு பரிவோடு தடவித் தந்தவன் "கௌரீ! உன் வருத்தம் எனக்குப் புரிகிறது. ஆனால் நீ இந்த

மாதிரி நடந்துகொண்டால் எங்களுக்கு எப்படி இருக்கு தெரியுமா?" என்றாள்.

அவள் அதற்கு பதில் அளிக்கவில்லை.

"என்றாவது ஒருநாள் எல்லோரும் போக வேண்டியவர்கள்தான். நம்மைவிட வயதில் பெரியவர் என்பதால் முந்திக் கொண்டார். கௌரீ! நானும் உன்னைப் போலவே சிறுவயதிலிருந்தே தனியன். யாருமே என்னை சேர்த்துக் கொள்ளமாட்டார்கள் அம்மாவைத் தவிர. அப்பா போனது. உனக்கு எவ்வளவு சூனியத்தைத் தோற்றுவிக்கும்னு என்னால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் இந்தக் காரணத்தால் நீ என்னை விட்டுப் பிரிய நேர்ந்தால் என்னால் தாங்க முடியாது. ஐயோ! உனக்கு எப்படி எடுத்துச் சொல்வது? கௌரீ! நான் அவ்வளவு கெட்டிக்காரன் இல்லை. உன் தந்தையைப் போன்ற அனுபவம் மிகுந்தவன் இல்லை. உன் வாழ்க்கைக்கு சிறந்த வழிகாட்டியாக முடியாது என்னால்.

"ஆனால் என்னால் முடிந்தவரை உனக்கு எந்தக் குறையும் இல்லாமல் பார்த்துக் கொள்ளமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. ஆனால் உன்னை எப்படி நம்ப வைப்பது? இந்தக் கைகளைப் பார். உன்னைக் காப்பாற்ற கோட்டையைப் போல் எவ்வளவு பலமாக இருக்கின்றன என்று பார். என்னை நம்பு கௌரீ. ப்ளீஸ், என்னை நம்பு."

அப்பொழுதுதான் அவளுக்கு துக்கம் வந்தது. அணையை உடைத்துக் கொண்டு வெளியேறும் வெள்ளம்போல் துக்கம் கண்ணீராய் வெளி வரத் தொடங்கியது. உள்ளங்கையில் முகத்தை புதைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள்.

அவன் அவளைத் தேற்றுவதற்கு எந்த முயற்சியும் செய்ய வில்லை. எவ்வளவு அழுகிறாளோ அவ்வளவு நல்லது என்பதுபோல் அவள் கேசத்தைக் கோதியபடி இருந்தான்.

“உங்களுக்கு. . . . உங்களுக்குத் தெரியாது. நான் அப்பாவை எத்தனை நேசித்தேன் என்று. அவர்தான் என் குரு, தெய்வம் எல்லாமே. நானும் அப்பாவும் நல்ல நண்பர்களைப் போல். . .” விசும்பல் குறுக்கிட்டதால் அவளால் வார்த்தைகளை முடிக்க முடியவில்லை. இதயத்தில் லேசான வலி தொடங்கி தேகம் முழுவதும் பரவினாற் போல் இருந்தது. அவள் தலை அவன் மடியில் சரிந்தது.

“கௌரீ! கௌரீ!” என்றழைத்தான்.

அவளிடம் சலனமில்லை.

அவன் கலவரத்துடன் சுற்றிலும் பார்த்தான். இருள் நன்றாக பரவிவிட்டிருந்தது. மனித நடமாட்டமே இல்லை. சுற்றிலும் வயல்கள். தொலைவில் தெருவிளக்குகள் மினுக் மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தன. சுவற்றுக் கோழிகளின் சத்தத்தைத் தவிர வேறெந்த சத்தமும் இருக்கவில்லை.

அவன் உள்ளங்கையில் கொஞ்சம் தண்ணீர் எடுத்து வந்து அவள் முகத்தில் தெளித்துவிட்டு “கௌரீ!” என்றான் மறுபடியும்.

அதற்குள் தொலைவில் விளக்குகளின் வெளிச்சம் தெரிந்தது. ஏதோ ஒரு கார் வந்து கொண்டிருந்தது. சாதாரண மாக அந்த கிராமத்திற்கு கார் வராது. வருவது ராகேஷாகத் தான் இருக்கும் என்று நினைத்து கையை ஆட்டி நிறுத்தினான்.

ஆனால் காரிலிருந்தது வேறு இரண்டுபேர். வம்சீ கிருஷ்ணாவை ரங்கபிரசாத் டின்னருக்கு அழைத்து வந்து கொண்டிருந்தார்.

சித்தார்த்தா விஷயத்தைச் சொன்னதும் இருவரும் இறங்கி வந்தார்கள். அதற்குள் அவள் கொஞ்சம் தேறிக்

கொண்டாள். சித்தார்த்தா அவளை ஜாக்கிரதையாக காரில் ஏற்றினான். கார் சென்று கொண்டிருந்தபோது ரங்கபிரசாத் வம்சீ கிருஷ்ணாவை சித்தார்த்தாவுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

பத்து நிமிடங்களில் கார் ரங்கபிரசாத்தின் கிளினிக் முன்னால் வந்து நின்றது. ஊசி மருந்தை செலுத்துவதற்காக ரங்கபிரசாத் கௌரியை உள்ளே அழைத்துப் போனார். வம்சீ கிருஷ்ணா சித்தார்த்தா மட்டுமே இருந்தார்கள்.

"அழுது கொண்டே திடீரென்று மயக்கம் போட்டு விட்டாள்" என்றான் சித்தார்த்தா கலவரத்துடன். "அதிர்ஷ்ட வசமாக நீங்க அந்தப் பக்கமாக வந்தீங்க."

"உணர்ச்சி வசப்பட்டிருப்பாள். கவலைப்பட தேவையில்லை" என்றார் வம்சீகிருஷ்ணா.

அதற்குள் டாக்டர் உள்ளேயிருந்து வந்துவிட்டார். அவர் முகத்தில் முறுவல் படர்ந்திருந்தது. "கங்கிராட்சுலேஷன்ஸ் மிஸ்டர் சித்தார்த்தா! நீங்க தந்தையாகப் போறீங்க."

சித்தார்த்தா உடனே உள்பக்கம் பார்த்தான். கேதார கௌரி மெதுவாக வந்து கொண்டிருந்தாள். அவள் முகத்தில் நாணத்தின் செம்மை படர்ந்திருந்தது.

ரங்கபிரசாத் சிரித்துக் கொண்டே "தான் போய்விட்ட வேதனையை மறக்கச் செய்யணும் என்று உங்க அப்பாவே வந்துபிறக்கப் போகிறார் போலிருக்கு" என்றார்.

ரொம்ப நாட்களுக்குப் பிறகு கேதாரகௌரியின் முகத்தில் புன்னகை மலர்வதைக் கண்டு திருப்தியடைந்தான் சித்தார்த்தா. "தாங்க்ஸ் டாக்டர்" என்று கௌரியை அழைத்துக் கொண்டு கிளம்பினான். படியிறங்கும்போது அவள் கையைத் தன் கையில் ஏந்திக் கொண்டான். அவளும் தன்னை மறந்த நிலையில் அவனது தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

"**ஊ**ம். இனி சொல்லுங்கள்" என்றார் வம்சீகிருஷ்ணா.

"ஆர்டிஃபிஷியல் இன்செமினேஷன் பை டோனர் முறையை நான் ஏன் எதிர்க்கிறேன் என்றால். . . . அது ஒரு குடும்பத்தையே நாசமாக்கிவிட்டது. மூவருடைய வாழ்க்கையில் புகுந்து விளையாடிவிட்டது." ஆவேசமாக சொன்னார் ரங்கபிரசாத்.

"என்ன சொல்றீங்க? மூவருடைய வாழ்க்கை வீணாகிவிட்டதா? யார் அவர்கள்?" கேட்டார் வம்சீகிருஷ்ணா.

ரங்கபிரசாத் சொல்லத் தொடங்கினார்.

"எங்க அம்மாவுக்கும் அப்பாவுக்கும் திருமணமாகி ஐந்தாண்டுகள் வரை குழந்தை பிறக்கவில்லை. அம்மா கவலைப் பட்டுக் கொண்டிருந்த அந்த சமயத்தில்தான் அப்பா இந்த ஜெனடிக்ஸ் துறையில் அடியெடுத்து வைத்தார். திருமணமாகி பல ஆண்டுகளாக குழந்தையில்லாததால் அவர் தன் வீரியத்தைப் பரிசோதித்துப் பார்த்துக் கொண்டார். அதில் உயிரணு சுமார் 25% மட்டுமே இருந்தது தெரியவந்தது.

"ஆனால் அதற்காக அவர் மனம் தளர்ந்து போகவில்லை. மேலும் சிரத்தையோடு பரிசோதனைகள் செய்யத் தொடங் கினார். அவருக்கு இந்த பரிசோதனைகளில் டாக்டர் வில்லியம்ஸ் என்ற ஒரு இளைஞன் உதவி செய்து வந்தார். பெண்ணின் O.F.T. (Optimum Fertility Time) கண்டுபிடித்த முதல் விஞ்ஞானி அப்பாதான். இது தெரியாமல்தான் எவ்வளவோ வீரியத்தை வீணாக்க வேண்டியிருந்தது. ஒரு பெண்ணின் மாதவிடாய்க்கு முன்னால் சுமார் பதினைந்தாவது நாளில் கருமுட்டையானது கருவாக உருவாகத் தயாராக இருக்கும். சுமார் ஐந்து நாட்கள் வரையிலும் இந்த கருமுட்டை

உயிரோடு இருக்கும்.

“டாக்டர்களுக்கு இங்கே ஒரு சிக்கல் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. செயற்கை முறையில் கருவை உருவாக்குவதற்கு ஆணின் வீரியத்தைப் பரிசோதனைக் குழாயில் சேமித்து அதற்குப் பிறகு பெண்ணின் உடலுக்குள் அதைச் செலுத்த வேண்டும். ஆணிடமிருந்து வெளியே எடுக்கப்பட்ட வீரியம் சொற்ப நேரத்திற்குள்ளேயே உயிரை இழந்து விடுகிறது. நைட்ரஜன் திரவத்தில் மைனஸ் 196 டிகிரியில் குளிர்வித்து வைக்கப்படும் வீரியம் ஒருமுறை பெண்ணின் உடலுக்குள் நுழைந்ததுமே அந்த உஷ்ணத்திற்கு அதிலிருக்கும் உயிரணுக்கள் மடிந்து கொண்டிருந்தன. சாதாரண முறையில் உறவு நிகழும் போது இந்த பிரச்னை இல்லை. பாதுகாத்து வைத்த வீரியத்தின் மூலம் கரு உருவாக வேண்டும் என்றால் அது உயிரோடு இருக்கும் குறுகிய காலத்திற்குள் கருப்பையை அடைந்து கரு உற்பத்திக்கு வழிவகுக்க வேண்டும். அதனால் ஒரு பெண்ணை செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்ய வேண்டும் என்றால் இந்த ஐந்து நாளும் எவ்வளவோ அவுன்ஸ் வீரியத்தை டாக்டர்கள் சேகரித்து வைக்கவேண்டியிருந்தது.

“உண்மையில் கருமுட்டை தயார் நிலையில் இருந்தால் அதனை கருவாக மாற்றுவதற்கு ஒரே ஒரு உயிரணு போதுமானது. அவுன்ஸ் கணக்கான வீரியம் தேவையில்லை. சரியாய் அந்த சமயத்தில்தான் எங்க அப்பா O.F.T யைக் கண்டுபிடித்தார். பெண்ணின் உடலில் தோன்றும் மாற்றங்கள், ஹார்மோன் உற்பத்தியில் உண்டாகும் மாறுபாடுகள். . . இவற்றைத் தெரிந்து கொண்டு ஆணின் உயிரணுக்காக பெண்ணின் கருமுட்டையானது தவிக்கும் அந்த நேரத்தை மிகத் துல்லியமாக கண்டுபிடித்துவிட்டார். சரியாக அந்த நேரத்தில் ஒரே ஒரு உயிரணுவை உள்ளே செலுத்தினால் போதும்.

“தான் கண்டுபிடித்தது உண்மையா இல்லையா என்று சோதனை செய்து பார்க்க வேண்டும். அதற்குத் தன் மனைவியையே தேர்ந்தெடுத்துக் கொண்டார். ஏற்கனவே அவர்களுக்குத் திருமணமாகி ஐந்தாண்டுகள் முடிந்திருந்தன. குழந்தைகள் இல்லை. தன்னுடைய வீரியத்தில் உயிரணுக்கள் 25% தான் இருக்கு என்று அவருக்குத் தெரியும். தன் மனைவியின் O.F.T. யை துல்லியமாக கணக்கிட்டுக் கொண்டார். அதே சமயத்தில் அவருடைய வீரியத்திலிருந்து உயிரணுவை பிரித்தெடுத்தார் டாக்டர் வில்லியம்ஸ். அதை நவீன கருவியின் மூலம் மிக சொற்ப நேரத்திற்குள் மனைவியின் கருமுட்டையை அடையுமாறு அவள் உடலுக்குள் செலுத் தினார். இரண்டே மாதங்களில் அவள் கர்ப்பம் தரித்தாள். விஞ்ஞான உலகத்தில் புதிய அத்தியாயம் தோன்றியது. நியூயார்க்கில் இவ்விஷயமாக நடந்த கருத்தரங்கில் பலத்த வரவேற்பு கிடைத்தது.

“அதற்குப் பிறகு எத்தனையோ தம்பதியர் அவரிடம் வந்து சிகிச்சை பெற்றுக் குழந்தைப் பேறு அடைந்தார்கள். ஆணின் வீரியத்தில் சொற்ப உயிரணுக்கள் இருந்தாலும் போதும். அவர்களை தந்தையாக்கினார். உலகமே அவருக்குப் புகழ் மாலையை சூட்டியது.

“அந்தச் சமயத்தில்தான் நான் பிறந்தேன். அம்மா அப்பா என்னிடம் உயிரையே வைத்திருந்தார்கள். அப்பாவோ தன்னுடைய வெற்றியின் சின்னமாக என்னைக் கருதினார். தன்னுடைய குணாதிசயங்களையே கொண்டுள்ளதாக சொல்லி பூரித்துப் போனார். நான் வளர்ந்து பெரியவனாகி டாக்டருக்குப் படித்து முடித்தேன். க்ளினிக் ஆரம்பித்தேன். பிராக்டீஸும் நாளுக்கு நாள் முன்னேறியது. சரியாய் அந்த நேரத்தில்தான் புதருக்குள் மறைந்திருந்த பாம்பு கொத்தியது போல் ஒரு நிகழ்ச்சி நடந்தது!

“ஒருநாள் நொண்டிக் கொண்டே பிச்சைக்காரனைப்

போலிருந்த ஒரு ஆள் என்னிடம் வந்தான். அவன் பார்வை வித்தியாசமாக இருந்தது. அவன் என்னைத் தேடி வந்தது வியப்பை ஏற்படுத்தியது. பல நாட்களாக அவன் என்னை பின் தொடர்ந்து வருவதை நான் கவனித்திருக்கிறேன். காரணம் புரியவில்லை. இன்று அவனே நேரில் வந்தான்.

“என்ன வேண்டும்” என்று கேட்டேன். அவன் உடனே பதில் சொல்லவில்லை. கண்ணிமைக்காமல் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். மறுபடியும் கேட்டபோது “என் பெயர் வில்லியம்ஸ்” என்றான்.

“நான் ஆச்சரியமடைந்தேன். என் தந்தை தனக்கு வில்லியம்ஸ் உதவியதாகவும் பிற்பாடு விலாசம்கூட தராமல் எங்கேயோ போய்விட்டதாகவும் சொன்னது நினைவுக்கு வந்தது.

“அப்பா உங்களைப் பற்றி அடிக்கடிச் சொல்லிக் கொண்டே இருப்பார். இத்தனை வருடங்களாக எங்கே போய்விட்டீங்க? இருங்கள், அப்பாவை கூப்பிடுகிறேன்” என்று எழுந்து கொள்ளப்போனேன்.

“தேவையில்லை. உனக்காகத்தான் வந்தேன்.”

நான் வியப்புடன் ‘எனக்காகவா? என்ன விஷயம்?’ என்றேன்.

“அவர் பதில் சொல்லாமல் ஏதோ முணுமுணுத்துக் கொண்டார். எழுந்து வெளியே போகப் போனவர் திரும்பி வந்து என் கைகளைப் பிடித்துக் கொண்டு நீதான் என் மகன்” என்றார்.

“உங்களுக்கு மூளை கலங்கிவிட்டதா?” என்றேன் கோபமும் எரிச்சலும் மேலிட.

“இல்லையப்பா இல்லை. இருபத்தி ஐந்து வருடங்களுக்கு முன் உன் தந்தை செய்த சோதனைக்கு உதவியது நான்தான்.”

"ஆமாம். எனக்குத் தெரியும்" என்றேன். என்னுள் லேசாக ஏதோ சந்தேகம் உதிர்த்தது.

"உன் தந்தையின் வீரியத்தை சோதிக்கும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டது. உன் தந்தை மற்ற ஏற்பாடுகளை கவனித்துக் கொள்ளும் நேரத்தில் நான் சோதனை செய்து முடித்தேன். ஆனால் அவருடைய வீரியத்தில் உயிரணு ஒன்றுகூட இல்லை. அதற்குள் அவருக்கு மலட்டுத்தன்மை வந்துவிட்டிருந்தது.

"அந்த துரதிர்ஷ்டமான நேரத்தில்தான் நான் ஒரு முடிவுக்கு வந்தேன். பரிசோதனை குழாயை மாற்றிவிட்டேன். உன் தந்தையின் சோதனை அமோகமாக வெற்றியடைந்தது. சொற்ப உயிரணுக்களைக் கொண்டே கர்ப்பம் தரிக்கச் செய்யும் முறையை கண்டுபிடித்துவிட்டார். ஆனால் அந்த சொற்ப உயிரணுக்களும் என்னுடையதுதான்."

"என் கண்கள் இருட்டிக் கொண்டு வந்தன. மயக்கம் வரத் தொடங்கியது. என்னை அருமையாக வளர்த்த என் தந்தை. . . என் தந்தையல்ல. நோ. . . நோ. இது உண்மையல்ல. கண்களைத் திறந்தபோது எதிரே அவர் நின்று கொண்டிருந்தார்.

"கெட் அவுட்!" என்று கத்தினேன். "என் கைகள் உன்னைக் கொல்வதற்கு முன்னால் போய்விடு."

"அவர் நகரவில்லை. "என்மேல் தவறு இல்லை. உன் தந்தை குழந்தைப் பேற்றுக்கு தகுதியில்லாதவர் என்று சொல்லத் தயங்கினேன். அதுவரை அவர் தனக்கு இன்னும் 25% உயிரணுக்கள் இருப்பதாக பிரமையில் இருந்தார். ஆனால் அதுவே இவ்வளவு பெரிய மனப் போராட்டத்திற்கு வழிவகுக்கும் என்று நினைக்கவில்லை. உண்மையில் இந்த விஷயத்தை அன்றே மறந்துவிட்டேன். உன் தந்தை சாதித்தது சாதாரண வெற்றியில்லை. உலகமே அவரை புகழ்ந்தது. எத்தனையோ தம்பதிகள் அவருடைய சோதனை முறையில்

குழந்தை பாக்கியம் பெற்றார்கள். ஆனால் என்னை மட்டும் துரதிர்ஷ்டம் துரத்தி வந்தது. விபத்து ஒன்றில் முதுகெலும்பில் அடிபட்டு தாம்பத்திய வாழ்க்கைக்கு தகுதியில்லாதவனாகி விட்டேன். இது தெரிந்ததும் என்னுள் ஒரு ஆசை ராட்சச உருவம் தரித்து வளரத் தொடங்கி விட்டது. வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்துவிட்ட எனக்கு "எனக்கும் ஒரு மகன் இருக்கிறான். அவனைப் பார்க்க வேண்டும்" என்ற ஆசை ஏற்பட்டது. அந்த ஆசையினால் தான். . ." அவர் வார்த்தைகளை இன்னும் முடிக்கக் கூட இல்லை.

"உள்ளேயிருந்து தொப்பென்று சத்தம் கேட்டு உள்ளே ஓடினேன். என்னுடைய தாய் தரையில் விழுந்து கிடந்தாள். அவளுடைய தலை என் தந்தையின் மடியில் இருந்தது. இவ்வளவு கசப்பான உண்மையை தாங்கிக் கொள்ள முடியாமல் அவள் இதயம் நின்றுவிட்டது. பிழைத்திருந்தால் ஏற்படப் போகும் விளைவுகளை எதிர்கொள்ளும் துணிச்சல் இல்லாமல், இந்த பிரச்னைக்கு இதுதான் தீர்வு என்பது போலவும் அம்மாவின் முகம் அமைதியாக இருந்தது.

"டாக்டர் வில்லியம்ஸ் சிலையாக நின்றுவிட்டார். தான் வெளிப்படுத்திய உண்மை இவ்வளவு பயங்கரமான விளைவைத் தோற்றுவிக்கும் என்று அவர் கனவிலும் எதிர் பார்த்திருக்கமாட்டார். அவர் நல்ல உள்ளத்தோடுதான் செய்தார். ஆனால் விதி இவ்வாறு வக்கிரித்துவிட்டது. முகத்தைப் பொத்திக் கொண்டு வெறிபிடித்தவர்போல் நொண்டிக் கொண்டே வெளியேறிவிட்டார். அப்பா மட்டும் சூனியத்தைப் பார்த்தபடி அப்படியே உட்கார்ந்திருந்தார். அந்த அதிர்ச்சியிலிருந்து அவரால் மீளமுடியவில்லை. அதற்குப் பிறகு அவர் இமயமலைக்குக் கிளம்பிப்போனார். இப்பொழுது சொல்லுங்கள் வம்சீகிருஷ்ணா! இந்த செயற்கை முறை கருத்தரித்தல் முறை நல்லதுதானா?"

வம்சீகிருஷ்ணா அவரை இரக்கம் ததும்ப பார்த்தார். அவர் மனம் பாரமாகிவிட்டது. "ஒருக்கால் நீங்க மதுரையில் பிராக்டீஸை விட்டுவிட்டு இங்கே இந்த கிராமத்துக்கு வந்ததற்குக் கூட காரணம் இதுதான்னு நினைக்கிறேன்" என்றார்.

"ஆமாம். அதற்குப் பிறகு என்னால் அங்கே இருக்க முடியவில்லை. திருமணம், தாம்பத்திய வாழ்க்கை. . . இவற்றின் மீது ஆசை நலிந்து போய்விட்டது. ஒருவிதமான விரக்தி ஏற்பட்டுவிட்டது". வேதனையோடு சிரித்தார். "ஒவ்வொரு நிமிஷமும் நான் அந்நிய விதையிலிருந்து முளைத்தவன் என்ற எண்ணம் என்னை வாட்டிக் கொண்டே இருக்கும்."

"என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அதே நேரத்தில் இதை விஞ்ஞான வளர்ச்சியின் விந்தையான விளைவு என்ற ரீதியில் புரிந்து கொள்ள முயற்சி செய்யணும். இது ஒன்றும் மேஜிக் இல்லை மிஸ்டர் ரங்கபிரசாத்" என்றார் வம்சீகிருஷ்ணா.

## 18

மேஜிக் நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. ரவி ஏதோ விழாவில் கலந்துகொண்டபோது அவன் மெஜிஷியன் என்று தெரிந்தது. எல்லோரும் அவனை மேஜிக் பண்ணிக் காட்டும்படி வற்புறுத்தினார்கள்.

முதலில் தன் கையிலிருந்த நாணயத்தை மாயமாக்கிக் காட்டினான். பிறகு ஒரு நியூஸ் பேப்பரைக் கொண்டு வரச் சொன்னான். கூட்டத்திலிருந்த பெண் ஒருத்தி பழைய நியூஸ் பேப்பரைக் கொண்டு வந்து தந்தாள். அதை வாங்கி "இதிலிருக்கும் ஏதாவது ஒரு செய்தியைப் படியுங்கள்" என்று

பிரித்தவன் சட்டென்று நின்றுவிட்டான். அவன் முகத்தில் தோன்றிய மாறுபாட்டை கவனித்த அப்பெண் "என்ன விஷயம்?" என்று கேட்டாள்.

"இவர் . . . இவர்" என்றான் அதிலிருந்த போட்டோவைக் காண்பித்துக் கொண்டே.

அவள் அவன் கையிலிருந்த பேப்பரை வாங்கிப் பார்த்து விட்டு "இவரைத் தெரியாமல் என்ன? ஓஹோ! நீங்க பம்பாய் வாசி இல்லையா? இந்த ஊரில் பெரிய வியாபாரப்புள்ளி இவர். முந்தா நாள்தான் காலமானார். இவர் மகள் என் கிளாஸ்மேட்."

"கௌரிதானே?"

"ஆமாம். கேதாரகௌரிக்கு இந்தக் கோடையில்தான் கல்யாணம் நடந்தது. கிருஷ்ணாபுரத்தில் இருக்கிறாள்."

"கௌரிக்குக் கல்யாணம் கூட ஆகிவிட்டதா?"

"ஆகிவிட்டது. ஆமாம், ஏன் இப்படி கேட்கிறீங்க?" இவரை உங்களுக்குத் தெரியுமா?

"தெரியும். அவர் என் தந்தை."

★

**அ**வதார் பாபா!

இன்னொரு சைகிக். பாபாவின் அசல் பெயர் கிருஷ்ணன். பெற்றோர்கள் ரொம்ப ஏழை. ஒருமுறை விருந்தாளியாக வீட்டுக்கு வந்த சித்தி ஊருக்குக் கிளம்பியபோது "போகாதே சித்தி!" என்று அழத் தொடங்கினான். அவனுடைய அம்மாவும் மகனுக்கு பின்பாட்டு பாடினாள்.

அன்று சித்தி போயிருக்கவேண்டிய பஸ் விபத்துக் குள்ளாகி நிறைய பேர் இறந்து போனார்கள். அத்துடன் அந்த சித்தி கிருஷ்ணன்தான் தன் உயிரைக் காப்பாற்றியதாக பிரசாரம் செய்தாள்.

அவ்வளவுதான்! ஊர்மக்கள் அவன் நாக்கில் பிரம்மாவோ சரஸ்வதியோ குடியிருப்பதாக ஏகமனதாக முடிவு செய்து விட்டார்கள். அவனும் அதை நம்பினான். இதுபோன்ற செல்ஃப் ஹெலூசினேஷன் அவனுக்கு ரொம்ப லாபகரமாக இருந்தது. தான் கடவுளின் மறுஉருவம் என்ற பிரமையில் ஆழ்ந்து போய்விட்டான்.

அவன் தொட்டாலே நோய்குணமாகிவிடும் என்ற நம்பிக்கை மக்களில் வேரூன்றிவிட்டது. அதற்குப் பிறகு கிருஷ்ணன் அவதார பாபாவாக அழைக்கப்பட்டான். அவனுக்கு என்று சில சீடர்களும், தேவையான ஜோடனைகளும் வந்து சேர்ந்து கொண்டன.

'இண்டெலிஜெண்ட்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் அவதார் பாபாவைத் தம் பத்திரிகைக்காக புத்திசாலித்தனமாக பயன்படுத்திக் கொண்டார். 'வாசகர்களின் பிரச்னைகளுக்கு அவதார்பாபா தீர்வு சொல்லுவார்' என்று அறிக்கை விட்டார். அவ்வளவுதான். வண்டி வண்டியாய் வந்து சேர்ந்தன கடிதங்கள், 'எனக்கு எம்.எல்.ஏ. பதவி கிடைக்குமா?' என்பதி லிருந்து 'தலைமுடி கொட்டுவது எப்போது நிற்கும்?' என்பது வரையிலும். பத்திரிகையின் சர்குலேஷன் இரு மடங்காகி விட்டது.

மொத்தத்தில் அவதார்பாபா நாட்டில் பிரபலமடைந்து விட்டார். சயின்ஸ் இந்தியா பத்திரிகையில் வெளிவந்த ரங்கபிரசாதின் விநோத சிசுக்களின் பிறப்பைப் பற்றிய கட்டுரையைப் படித்த அவதார்பாபா அன்றே கிருஷ்ணா புரத்திற்கு கிளம்பினார்.

★

**பு**ரொபசர் புட்டண்ணா. இவர் மருத்துவக் கல்லூரியில் ஜெனடிக்ஸ் பிரிவில் புரொபசராக இருந்தார். ஜெனடிக்ஸ் என்ற வார்த்தை 'G'யிலிருந்து தொடங்குகிறதா அல்லது 'J'யிலிருந்து தொடங்குகிறதா என்று கேட்டால் சட்டென்று

ஒன்றுதான். தன் வாழ்நாளில் எப்படியாவது அமெரிக்கா வுக்குப் போக வேண்டும்.

எல்லா ஆசைகளையும்விட மனிதனை அதிகமாக வாட்டுவது புகழ் ஆசைதான். அமெரிக்கன் யூனிவர்சிடீயில் சொற்பொழிவு ஆற்றியோ அல்லது பேப்பர் படித்தோ அந்தப் போட்டோக்கள் இந்திய பத்திரிகையில் வெளியாகி கண்ணால் காண வேண்டும் என்ற விருப்பம் தன் வாழ்நாளில் நிறைவேறாது என்று தெரிந்துவிட்டது. ஆனாலும் அவர் முயற்சியை கைவிடவில்லை. அந்தச் சமயத்தில்தான் அவர் கிருஷ்ணாபுரத்தில் விநோத சிசுக்களின் ஜனனம் பற்றிய கட்டுரையைப் படித்தார். சட்டென்று அவர் மூளையில் ஏதோ பளிச்சிட்டது.

சில நாட்கள் முன்னால்தான் ஏதோ ஒரு மூன்றாம்தர ஆங்கில நாவலில் தண்ணீரில் கலந்த பாதரசம் போன்ற பொருட்கள் மியுடேஷனுக்கு வழிவகுத்து அதனால் குழந்தைகள் குறைபாடுகளோடு பிறப்பார்கள் என்று படித் திருந்தார். அவ்வளவு பெரிய புரொபசரான அவருக்கு ஃபேக்டரியிலிருந்து வெளிப்படும் கழிவுப் பொருட்களால் கேன்சர், டி.பி. போன்ற வியாதிகள்தான் ஏற்பட வழியுண்டே தவிர ஜீன்ஸ் மீது அவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தாது என்று தெரியவில்லை. இத்தனை நாட்களுக்குப்பிறகு தனக்கு இந்த மாதிரி ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருப்பதை எண்ணி மகிழ்ந்தார். கிருஷ்ணாபுரத்திற்கு போய் சோதிக்க முடிவு செய்தார்.

அமெரிக்காவில் இருந்த நண்பருக்கும், இந்தியாவில் தனக்கு உதவக் கூடிய சிலருக்கும் போன் செய்து எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டார். “இந்தியாவில் ஒரு கிராமத்தில் விதி செய்த சதி” என்ற தலைப்பில் தான் தயாரிக்கப் போகும் ரிப்போர்ட்டைப் படிக்க அவருக்கு அழைப்பு கிடைத்தது. மாணவர்கள் இருவரை உடன்

அழைத்துக் கொண்டு (ரிப்போர்ட்டை தன்னால் எழுத முடியாது என்பதால்) கிருஷ்ணாபுரத்திற்கு கிளம்பினார் புட்டண்ணா.

மொத்தத்தில் நாட்டின் எல்லா பகுதிகளிலிருந்தும் ஆட்கள் கிருஷ்ணாபுரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால் இவர்களுக்குத் தெரியாத விஷயம் ஒன்று இருந்தது. உஸ்ஸோக் இவர்களை கவனித்து வருகிறது என்பதுதான் அது.

★

**அ**வதார்பாபா அங்கே போய்ச் சேர்ந்ததும் கிராமமே எழுச்சியடைந்துவிட்டது. குறுகிய காலத்திற்குள் அவர் பெயர் பரவிவிட்டது. கோவில்களில் பூஜைகள் தொடங்கின. கிராம தேவதைகளுக்கு பலி கொடுத்தார்கள். கருவுற்றிருந்த பெண்களின் குடும்பங்களில் கலவரம் ஏற்படத் தொடங்கியது. இன்னும் ஓரிரண்டு பிறவிகள் இதே போல் பிறந்துவிட்டால் போதும் குடும்பங்களே சிதறிப் போக வேண்டியதுதான். மொத்தத்தில் அதுவரையிலும் அமைதியாக இருந்த கிருஷ்ணாபுரத்தில் இப்பொழுது பீதியும் கலவரமும் அதிகரித்துவிட்டன.

சரியாக அந்த நேரத்தில்தான் அவதார்பாபா அந்த கிராமத்திற்குள் காலடி எடுத்து வைத்தார். சில நாட்களிலேயே பாபாவின் பெயர் அந்த ஊரில் பிரபலமடைந்துவிட்டது.

ஒரே ஒரு சின்ன நிகழ்ச்சியின் மூலமாக.

★

**ம**ங்கம்மாவின் கையில் தாயத்தைக் கட்டினார் அவதார் பாபா. மங்கம்மாவின் கணவனும் சுற்றிலுமிருந்த மக்களும் அவரை பயபக்தியோடு பார்த்தார்கள்.

“இவளை நான் காப்பாற்றுகிறேன்” என்றார் அவதார்

பாபா. "தீய சக்திகளை எதிர்த்துப் போராடும்படி எனக்கு தெய்வத்திடமிருந்து உத்தரவு வந்திருக்கிறது. உங்க ஊர் மக்கள் கிராம தேவதைக்கு ஏதோ குறை வைத்துவிட்டார்கள். அதனால்தான் இந்த விபரீதம் நேர்ந்துவிட்டது."

கிராம மக்கள் மேலும் பயந்துபோய் அவரைப் பார்த்தார்கள்.

"பயப்படத் தேவையில்லை. இவளுக்கு எத்தனாவது மாதம்?"

"ஒன்பது முடிந்துவிட்டது சாமீ. இன்னிக்கோ நாளைக்கோ..."

"மங்கம்மா! நீ ஒரு பூவின் பெயரைச் சொல்லு."

"ரோஜாப் பூ சாமீ."

"பேஷ்! உனக்கு ஆண் குழந்தை பிறக்கப் போகிறது" என்று சீடன் பக்கம் திரும்பி "எல்லா ஏற்பாடுகளையும் செய்" என்றார். "மங்கம்மாவுக்கு நம் ஆசிரமத்திலேயே பிரசவம் நடக்கட்டும். ஆசிரமத்தைச் சுற்றிப் புனித நீரை தெளிக்கிறேன். எந்தப் பிசாசுதான் எப்படி நுழைந்துவிடும் என்று பார்த்து விடுகிறேன்" என்று எழுந்து கொண்டார். மக்கள் அவரை பக்தியோடு பார்த்தார்கள்.

மங்கம்மாவுக்கு ஆசிரம வளாகத்திலேயே ஒரு குடிசை போட்டுத் தரப்பட்டது. இது நடந்த இரண்டாவதுநாள், நள்ளிரவு நேரத்தில் அவளுக்கு இடுப்பு வலி எடுத்தது. அவதார்பாபா ஹோமம் நடத்தினார். விடியும் நேரத்தில் பிரசவம் ஆயிற்று. பத்து பவுண்ட் எடையுள்ள ஆரோக்கிய மான குழந்தை பிறந்தது.

மறுநாளிலிருந்து அவதார்பாபா அந்த கிராமத்திலிருந்த முக்கால்வாசி பேருக்கு கண்கண்ட தெய்வமாகிவிட்டார். எஞ்சிய கால்வாசி பேரும் அந்த ஊர் எம்.எல்.ஏ.வின் ஆட்கள்.

அவதார்பாபா மங்கம்மாவுக்கு தாயத்தைக் கட்டிவிட்ட போது தோற்றுப் போன அரசியல் தலைவர் ஒருவர் அந்தக் கூட்டத்தில் இருந்தார். அவர்தான் அருகிலிருந்து தாயத்தை கட்ட வைத்தார். அதனால் பதவியில் இருந்த எம்.எல்.ஏ. ஆட்களின் வீட்டுப் பெண்கள் யாருமே தாயத்தைக் கட்டிக் கொள்ளவில்லை.

அந்த எம்.எல்.ஏவுக்கு வலது கையான கங்குவின் மனைவிக்குக் கூட மாதம் நிரம்பிவிட்டது. ஆனால் போட்டி மனப்பான்மையால் மனைவியை பாபாவிடம் அழைத்துப் போகவில்லை. பத்தே நாட்களில் அவள் ஒரு உயிரற்ற குழந்தையைப் பெற்றாள். அந்தக் குழந்தைக்கு தலை இருக்க வேண்டிய இடத்தில் மாமிசப் பந்து போல் இருந்தது.

இந்தச் செய்தி அவ்வூர் முழுவதும் பரவிவிட்டது. அக்கம் பக்கத்து கிராமங்களுக்கும் செய்தி எட்டியது. மக்கள் வண்டியை கட்டிக் கொண்டும், கால்நடையாகவும் அந்த ஊருக்கு வர ஆரம்பித்தார்கள்.

பூ, பழம், தேங்காய் கடைகளும், பாபாவின் போட்டோக்களை விற்கும் கடைகளும் அங்கு முளைத்துவிட்டன.

அவதார்பாபாவை பொருட்படுத்த வேண்டாமென்றும் முடிந்தால் தம்மை யாரென்று வெளிப்படுத்திக் கொள்ளாமலேயே உதவி செய்யும்படி உஸ்ஸோக் மெம்பர்களுக்கு ஆணைகள் வந்து சேர்ந்தன. ஆனால் ராகேஷ் அதற்கு உடன்படவில்லை.

“அப்படி என்றால் நீ என்ன செய்யப் போகிறாய்?” கேட்டார் மகாதிரஷ்டா.

“பாபாவுக்கு உஸ்ஸோக்கின் பலத்தை காட்டப் போகிறேன்.”

“சரி. காட்டிக்கொள்.”

மகாதிரஷ்டா அவ்வளவு சுலபமாக ஒப்புக் கொண்டது ராகேஷுக்கு வியப்பை அளித்தது. நேராக பாபாவின் ஆசிரமத்திற்குப் போனான். அவன் ஜேபியில் ஊசி போன்ற ஒரு ஆயுதம் இருந்தது. அதை தொலைவிலிருந்து எறிந்தால் கூட போதும். அதிலிருக்கும் சயனைட் முனை ஆளைக் கொன்று விடும். யார் கொன்றார்கள், எங்கிருந்து வந்தது என்று கூட தெரிந்து கொள்ள முடியாது.

அவன் பாபாவை நெருங்கினான். இருவரின் பார்வையும் சந்தித்துக் கொண்டன. பாபா எழுந்து நின்று சிரித்தார். ராகேஷின் முகத்திலிருந்த ரத்தம் சுண்டிவிட்டது. சட்டென்று திரும்பி வந்துவிட்டான். நேராக போய் மகாதிரஷ்டாவைச் சந்தித்தான்.

“அவதார் பாபா ப்ளூ ஸ்கெலிடன் என்று நீங்கள் ஏன் என்னிடம் சொல்லவில்லை?”

“உன் கண்களாலேயே பார்த்து தெரிந்து கொள்ளணும் என்றுதான்.”

“எனக்குப் புரியவில்லை. இதெல்லாம் ஏன் நடக்கிறது?”

“அஷ்டாவக்கிரன் பூமியில் அவதரிப்பதற்கு முன்னால் இங்கே களத்தைத் தயார்ப்படுத்த வேண்டியிருக்கிறது. அதன் பொறுப்பு நம்மீதுதான் இருக்கு என்று முன்பே உன்னிடம் சொல்லியிருக்கிறேன். நம் எண்ணம் ஈடேறுவதற்கும், கேதாரகௌரி பிரசவிப்பதற்கும் இன்னும் சில மாதங்களே இருக்கின்றன. அதற்குள் பல குழந்தைகள் இந்த கிராமத்தில் பிறக்கக் கூடும். அவர்களுக்கும் அஷ்டாவக்கிரனுக்கு முன்னால் பிறக்கப் போகும் ஏழு விநோதக் குழந்தைகளுக்கும் சம்பந்தம் இல்லை. அதனை அவதார்பாபா தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறான். பண்ணிக் கொள்ளட்டுமே. அவனும் நம் ஆள்தான். அவனால் லாபமும் இருக்கு.”

“என்ன லாபம்?”

“அஷ்டாவக்கிரன் பிறப்பதற்கு முன்னாலிருந்தே மக்களை அவனுக்கு அடிபணிய வைக்கணும். அஷ்டாவக்கிரன் தங்களுடைய தெய்வம் என்று மக்களுக்கிடையே நம்பிக் கையை ஏற்படுத்தணும்.”

“கிருஷ்ணாபுரம் போன்ற சின்ன ஊரில் இருந்து கொண்டு ஒரு பாபாவால் எத்தனை பேரை நம் பக்கம் இழுக்க முடியும்?”

வெகுநாட்களுக்குப் பிறகு மகாதிரஷ்டா சிரித்தார். அவருடைய சிரிப்பில் வெற்றியின் எதிரொலி தென்பட்டது. திரும்பி அருகிலிருந்த சீடனை பார்த்தார். அவர் மனதைப் புரிந்து கொண்டவனைப் போல் அவன் உள்ளே போய் நாலைந்து நாளேடுகளைக் கொண்டு வந்தான். ராகேஷின் பார்வை அதன்மேல் விழுந்தது.

நியூயார்க் டைம்ஸ், லண்டன் நியூஸ், வர்ல்ட் டுடே பத்திரிகைகள் அவை. அதில் வெளியாகியிருந்தது:

“The Miracle Touch”

“The Faith-Healer from India”

ராகேஷ் நம்பமுடியாதவன் போல் மகாதிரஷ்டாவைப் பார்த்தான். அவரைப் பார்க்கும்போது முதல் தடவையாக அவனுக்கு பயம் ஏற்பட்டது. தன்னால் மகாதிரஷ்டாவை வெல்ல முடியாதோ என்ற சந்தேகமும் ஏற்பட்டது.

அவன் யோசனைகளை ஊகித்துவிட்டாற்போல் அவர் சொன்னார். “நம் ஆட்கள் எல்லா இடங்களிலும் ரகசியமாக இருந்துகொண்டு தங்களுக்கு இட்ட வேலைகளைச் செய்து வருகிறார்கள். ராகேஷ்! நாம்தான் கொஞ்சம் பின்தங்கி விட்டோம் என்று தோன்றுகிறது.”

"க்ஷுத்ரதட்சயாகம் பற்றித்தானே சொல்றீங்க? அதை என்னிடம் விடுங்கள்."

"நாளை இரவுதானே பௌர்ணமி?"

"நாளை இரவு முதல் யாகம் தொடங்கிவிடும்." எந்தச் சூழ்நிலையிலும் அது நடந்தே தீரும் என்பதுபோல் உறுதியாக சொன்னான் ராகேஷ்.

"உஸ்ஸோக்கில் எல்லோரும் ஒரு பங்கு என்றால் நீ ஒருத்தன் மட்டும் ஒரு பங்கு. எல்லோரையும் விட உன் மீதுதான் பொறுப்பு அதிகம். அஷ்டாவக்கிரனின் பிறப்புக்கு நீதான் மூலபுருஷன்."

தெரியும் என்பதுபோல் தலையை அசைத்தான் ராகேஷ்.

மகாதிரஷ்டா அஷ்டமூலபதார்த்தங்கள் கலந்த நீரில் ராகேஷை அய்யங்கன ஸ்னானம் செய்ய வைத்தார். ராகேஷ் ஒரு பலகையின் மீது உட்கார்ந்து கொண்டான். பலகையைச் சுற்றி மண்டையோடுகள் இருந்தன. நடுவில் ஹோமத் தீ. ஹோமத்தில் எரிந்து கொண்டிருந்த எலும்புகளின் சத்தம் அந்த நிசப்தத்தில் பயங்கரமாகக் கேட்டது.

ஹோமத்திலிருந்து எலும்பை வெளியே எடுத்தார் மகாதிரஷ்டா. "கார்கள், கீரர்கள், கிரகங்கள், நட்சத்திரங்கள், சரங்கள், அசரங்கள் எல்லோரும் கேளுங்கள். அஷ்டா வக்கிரனின் பிறப்புக்காக நாளைக்கு செய்யப் போகும் க்ஷுத்ரதட்ச யாகத்திற்கு கர்த்தாவாக ராகேஷ் என்ற இந்த இளைஞனை நியமிக்கிறேன். யாருக்காவது ஆட்சேபணை உண்டா?"

எங்கும் நிசப்தமாக இருந்தது. ராகேஷ் சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்தான். எல்லோரின் கண்களும் ஏதோ மயக்கத்தில் இருப்பது போல் பாதி மூடிய நிலையில் இருந்தன. உதடுகள் லேசாக அசைந்து கொண்டிருந்தன.

எல்லோரும் தங்களுக்குள் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்கள்.

பிரார்த்தனை முடிந்தது.

மகாதிரஷ்டா அவன் கையில் ஒரு தாயத்தைக் கட்டிவிட்டுச் சொன்னார். "ராகேஷ்! நாளைக்கு சந்திரோதய நேரத்தில் 'கிரது' தொடங்குகிறது. அது முடிந்ததும் நீ யாக புருஷனாகிவிடுவாய். இன்றிலிருந்து நாளை இரவு வானத்தில் சந்திரன் தோன்றி மறையும் வரையிலும் இந்த தாயத்து உன் கையில் இருக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் இதை உன் கையிலிருந்து கழற்றிவிடாதே."

ராகேஷ் தலையை அசைத்தான். ஹோமத்தின் முன்னால் உட்கார்ந்திருந்ததால் அவன் கண்கள் சிவந்திருந்தன.

"நான் இனி சாதாரண உலகத்திற்குத் திரும்பலாமா?"

"பேஷாக திரும்பலாம்."

அன்றே அவன் கேதாரகௌரியைச் சந்தித்து பணம் பெற்றுக் கொள்ள விரும்பினான்.

அவன் போனபொழுது அவள் முற்றத்தில் உட்கார்ந்தபடி அரிசியை பொறுக்கிக் கொண்டிருந்தாள். ஒரு கோடீஸ்வரரின் மகள் அவ்வாறு சின்னவீட்டில் உட்கார்ந்து கொண்டு அரிசியை பொறுக்குவதைப் பார்க்க வித்தியாசமாக இருந்தது. மனிதன் தன் கொள்கைகளுக்குத் தரும் மதிப்பிற்கு அது ஒரு எடுத்துக்காட்டு. ஆனால் ராகேஷ் இதை எதையும் கவனிக்கும் நிலையில் இல்லை.

"கௌரீ!" என்றான் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டு. "மாமா போன துக்கத்தால் இவ்வளவு நாளாக கேட்க முடியவில்லை. என் கூட்டாளிகள் அவசரப்படுகிறார்கள்."

"என்ன விஷயம் ராகேஷ்?"

"அதான். பிசினெஸ் தொடங்க பணம்." இழுத்தான்.

"அடடா! இதற்குப் போய் இவ்வளவு சங்கோஜம் எதுக்கு?" என்று அவள் பெட்டியிலிருந்து செக் புத்தகத்தை எடுத்தாள். "எவ்வளவு எழுதட்டும்?"

"அதான் சொன்னேனே, இரண்டு லட்சம்."

அவள் செக்கை எழுதினாள். அதுதான் அவள் தந்தையின் சொத்தில் முதல் முதலாக கைவைப்பது. அவளுக்கோ சித்தார்த்தாவுக்கோ தங்களுக்காக செலவழிப்போம் என்ற எண்ணமே வரவில்லை.

ராகேஷிற்கு பணம் தரும் விஷயமாக அவள் ஏற்கனவே சித்தார்த்தாவிடம் கேட்டாள்.

"மாமா உயிரோடு இருந்தால் எப்படியும் கொஞ்சம் சொத்து அவனுக்குக் கொடுத்திருப்பார். அவர் இல்லா விட்டாலும் தர வேண்டியது நம் கடமை. கொடு கௌரி" என்றான் சித்தார்த்தா.

அவள் அவனுக்கு செக்கைத் தந்து கொண்டிருந்தபோது வெளியே சந்தடி கேட்டது. அவள் வாசல் பக்கம் பார்த்தாள். தொலைவிலிருந்து நடந்துவந்து கொண்டு இருந்தான் அந்த ஆள். கையில் சின்ன பெட்டி இருந்தது. முகம் மலர தத்தளித்தாள். "நீங்க. . . நீ. . . நீ. . ." என்றாள்.

அவன் ஆம் என்பது போல் தலையை அசைத்தான்.

அவ்வளவுதான். ஒரே பாய்ச்சலில் ஓடிப்போய் அவனைக் கட்டிக் கொண்டாள். "அண்ணா! ரவி அண்ணா!" ஹோ வென்று கதறிவிட்டாள்.

"அப்பா போய்விட்டார் அண்ணா!" அவள் விசும் பினாள். அண்ணனைப் பார்த்ததும் தந்தையில்லாத துக்கம் கண்ணீரை வரவழைத்தது.

"தெரியும். அதான் வந்தேன். அழாதே கௌரீ! நான் இருக்கிறேன் உனக்கு. நான்தான் வந்துவிட்டேனே." ரவி தங்கையின் தலையைத் தடவிக் கொடுத்தான்.

ராகேஷ் பொறுமையின்றி நெளிந்தான். அங்கிருந்து நகரப் போனான். அதற்குள் தேறிக் கொண்ட கௌரி அவனை அழைத்து அண்ணனுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். ரவி வீட்டை விட்டுப் போன அடுத்த ஆண்டுதான் ராகேஷ் அந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

"நீங்க என்ன செய்யறீங்க?" கைகுலுக்கிவிட்டு கேட்டான் ராகேஷ்.

ரவி ராகேஷைக் கூர்ந்து கவனித்தான். அவன் கண்களுக்கு ராகேஷிடம் ஏதோ அவலட்சணம் தென்பட்டது. அது என்ன?

"நீங்க என் கேள்விக்குப் பதிலே சொல்லவில்லையே?"

ரவி உடனே "நானா? நான் ஒரு மெஜிஷியன்" என்றான்.

ராகேஷ் உரத்த குரலில் சிரித்துவிட்டு "மெஜிஷியனா? அதுவும் ஒரு தொழிலா?" என்று திரும்பவும் சிரித்தான்.

ரவி பேசவில்லை.

"எங்கே? ஏதாவது சின்ன மேஜிக் செய்து காட்டுங்கள் பார்ப்போம். மேஜிக் என்றால் கண்கட்டுவித்தைதானே? பொருட்களை மாயம் செய்வதுதானே?"

ரவி அவனை வெறுப்புடன் பார்த்தான். சுமார் பதினைந்து வருடங்களுக்குப் பிறகு அண்ணனும் தங்கையும் சந்தித்துக் கொள்கிறார்கள். தந்தை இறந்து போன துக்கத்தை பரஸ்பரம் தேற்றிக் கொள்ள வேண்டிய நிலை இது. இப்பொழுது ஏதாவது மேஜிக் செய்து காட்டச் சொல்லி கேட்கிறான். இவனுக்குக் கொஞ்சமாவது பண்பாடு

இருக்கிறதா?

ரவி அவன் மார்பின் மேல் லேசாக தட்டிவிட்டு "செக் ஷாடோ" என்று அவன் வலது கரத்தை தன் கையில் எடுத்துக் கொண்டு "இன்னொரு சமயம் எப்பொழுதாவது காட்டு கிறேன்" என்று கை குலுக்கினான்.

"நானும் சும்மாதான் கேட்டேன்" என்று ராகேஷ் அங்கிருந்து புறப்பட்டான். அவன் மனம் முழுவதும் உல்லாசமாயிருந்தது. இவ்வளவு சுலபமாக கௌரி பணத்தைத் தந்துவிடுவாள் என்று நினைக்கவில்லை. ரவி வருவதற்கு முன்பே தன் வேலை முடிந்துவிட்டது சந்தோஷமாக இருந்தது.

மயானத்திற்குள் நுழையப் போனவன் யதேச்சையாக ஜேபியைத் தடவிப் பார்த்துக் கொண்டவன் திடுக்கிட்டான். சட்டைப் பையில் செக்கை காணவில்லை.

ரவி 'செக் ஷாடோ' என்று தன் சட்டைப் பையைத் தொட்டது நினைவுக்கு வந்தது. ஏதோ சந்தேகம் வரவே சட்டென்று கையைப் பார்த்துக் கொண்டான். அவன் முகத்திலிருந்த ரத்தமெல்லாம் சுண்டிவிட்டது. நடுங்கி விட்டான்.

கையிலிருந்த தாயத்தையும் காணவில்லை. சந்திரன் உதிக்கப் போவதற்கு அறிகுறியாய் அப்பொழுதுதான் வானத்தில் ஒரு வெண்ணிறக் கீற்று வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

ராகேஷ் ஓடத் தொடங்கினான். சந்திரோதயம் ஆவதற்குள் போய் எப்படியாவது ரவியிடமிருந்து செக்கையும் தாயத்தையும் திருப்பி வாங்கிவிட வேண்டும். தன்னை முட்டாளாக்கிவிட்ட ரவியின் மேல் ஆத்திரமாய் வந்தது அவனுக்கு.

“உன்னைப் பார்த்து எவ்வளவு நாளாச்சு? நீ வந்து விட்டதை என்னால் இன்னும் நம்பவே முடியவில்லை.”

ரவி முறுவலுடன் கேட்டுக் கொண்டிருந்தான். தந்தையின் நினைவுகளிலிருந்து கொஞ்சம் தேறியிருந்தாள் கௌரி.

“அப்பா இருந்தபோதே வந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? உனக்குத் தெரியாது. அப்பாவுக்கு உன்னிடம் பிரியம் அதிகம். நீ போன பிறகு ரொம்ப தளர்ந்துவிட்டார்.”

ரவி பேச்சை மாற்றியபடி “இந்த செக் கொடுத்தாயே? என்ன விஷயம்?” என்று கேட்டான்.

“ராகேஷ் கேட்டான். அப்பா இருந்திருந்தால் கொடுத் திருப்பார்.”

“ஆனால் இப்போ இது என் சொத்து இல்லையா? அவனுக்கு நீ எப்படித் தர முடியும்?”

கேதாரகௌரி சிரித்தாள். மெதுவாக அருகில் வந்து தரையில் மண்டியிட்டு அமர்ந்து கொண்டு அண்ணனின் மடியில் தலையை வைத்தபடி கண்களை மூடிக்கொண்டாள். அவளுக்கு அந்த நேரத்தில் சொந்தம் என்று ஒருவன் வந்தது ரொம்ப சந்தோஷமாக இருந்தது. காதலிக்கும் கணவன் இருந்தாலும் பிறந்த வீட்டு மனிதர்கள் என்று யாருமே இல்லாதது எவ்வளவு குறை என்று அனுபவித்தவர்களுக்குத் தான் புரியும்.

“உன் சொத்தையும், பணத்தையும் நான் எடுத்து தானம் பண்ணிவிடக் கூடாது. அவ்வளவுதானே” என்று சிரித்தாள்.

“அது இல்லை. நீ பாத்திரம் அறிந்து பிச்சைபோடணும்

இல்லையா? ஏனோ அந்த ராகேஷைப் பார்த்தால் எனக்கு நல்ல அபிப்பிராயம் ஏற்படவில்லை."

"அப்படிச் சொல்லாதே. ராகேஷைப் பற்றி உனக்குத் தெரியாது" என்றவள் தான் சித்தார்த்தாவைத் திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்து தந்தையிடம் கேட்டதையும், ராகேஷும் அதற்கு ஒப்புக் கொண்டதையும் சொன்னாள். "ரொம்ப நல்ல மனசு அவனுக்கு."

ரவி அதற்கு பதிலளிக்கவில்லை. "இதென்ன தாயத்து? அவனுக்கு சுவாமி, பூதம் இவற்றில் நம்பிக்கை இருக்கிறதா?" என்று கேட்டான்.

"யாருக்குத் தெரியும்? இந்த ஊரில் புதிதாக பாபா ஒருவர் வந்து சேர்ந்திருக்கிறார். அவர் கட்டிவிட்டிருப்பார். ஒருக்கால் சீக்கிரமாக கல்யாணம் ஆகட்டும் என்பதற்காக இருக்குமோ என்னவோ? அதுசரி, நீ எப்போ கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாய்?"

"சரிதான்போ. இங்கே எனக்கே லாட்டரி. மனைவி ஒரு கேடா?"

"ஏன் உனக்கென்ன குறைச்சல்? நானே உனக்கு நல்ல பெண்ணாகப் பார்த்து. . ."

"இந்த பட்டிக்காட்டிலா?"

"ஏன்? இந்த கிராமத்துக்கு என்ன குறைச்சல்? விவசாயக் கல்லூரி மாணவிகள் கூட இங்கே வருவார்கள் தெரியுமா?"

"மறுபடியும் எப்போ வருவார்கள்?"

"அடேயப்பா! மாணவிகள் என்றவுடன் எத்தனை ஆர்வம் வந்துவிட்டது?"

"சும்மாதான் கேட்டேன்."

"நாளைக்கோ அதற்கு அடுத்த நாளோ வரலாம். ஆறு

இப்பொழுதே சொல்லிவிட்டேன். அவர்கள் மீது உன்னுடைய மேஜிக் டிரிக் எல்லாம் வெச்சுக்காதே."

"அது சரி. நீ எனக்கு மருமகனைத் தரப்போகிறாயா மருமகளையா?"

அவன் திடீரென்று பேச்சை மாற்றி அவ்வாறு கேட்டதும் அவள் வெட்கமடைந்தவளாக பதிலே சொல்லவில்லை.

"எனக்கு நல்ல வெகுமானம் தந்தாயானால் வயிற்றில் இருப்பது பெண்ணாக இருந்தாலும் சரி ஆணாக மாற்றி விடுகிறேன். சொல்லு என்ன தருவாய்?"

"உன் மகளுக்குத் தந்து கல்யாணம் செய்து வைக்கிறேன்."

"அந்த மாதிரி நெருங்கிய உறவுக்குள் கல்யாணம் செய்து கொள்ளக்கூடாது என்று ஜெனடிக் சயின்ஸ் சொல்கிறது."

ஜெனடிக்ஸ் பற்றி பேச்சு வந்ததும் அவள் முகம் பயத்தால் வாடியது. அதை முற்றிலும் பயம் என்று சொல்லிவிட முடியாது. அபசகுணம் போன்ற உணர்வு அதற்குமுன்னால் நடந்த ஒரு சம்பவம்.

அவதார் பாபாவின் பெயர் அந்த ஊரில் பிரபலமாகி விட்டது. சித்தார்த்தாவின் தாய்க்கு பாபாக்கள், சாதுக்கள் மீது கொஞ்சம் நம்பிக்கை உண்டு. மருமகளை அழைத்துக் கொண்டு பாபாவிடம் போனாள். கௌரிக்கு நம்பிக்கை இல்லா விட்டாலும் மாமியாரின் திருப்திக்காக போனாள்.

அவர்கள் போனபொழுது பக்தர்களின் கேள்விகளுக்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தார் பாபா. ஒவ்வொருவராய் போய் அவருக்கு முன்னால் அமர்ந்து கொண்டு காகிதத்தில் கேள்வியை எழுதித் தருவார்கள். அவர் பதில் சொல்லுவார். ஒரு எண், ஒரு பூ, ஒரு நிறம். . . இவற்றைச் சொன்னால் பாபா

அவர்களின் எதிர்காலப் பலனைச் சொல்லுவார்.

கௌரியின் முறை வந்தது. காகிதத்தில் பதினாலு, ரோஜாப்பூ, வெள்ளை என்று எழுதினாள்.

மாமியார் பாபாவிடம் கேட்டாள். "ஆணா பெண்ணா?" என்று.

அவதார்பாபா கண்களை மூடிக்கொண்டு கணக்கிட்டார். கண்ணுக்குத் தெரியாத தெய்வத்தோடு பேசுவது போல் அவர் புருவம் உயர்ந்தது. சீடர்களும், கூடியிருந்த மக்களும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். எங்கும் நிசப்தம் நிலவியிருந்தது. அவர் மெதுவாக கண்களைத் திறந்து "பெண் குழந்தை" என்றார்.

சித்தார்த்தாவின் தாய் முகம் மலர அவருக்கு காணிக் கையை செலுத்திவிட்டு மருமகளோடு வீட்டிற்கு வந்து விட்டாள்.

கௌரிக்கு மட்டும் இதேதோ நாடகம் போல் தோன்றியது. இவ்வளவு சுலபமாக அவரால் எப்படி சொல்ல முடிகிறது. நான்கு நாட்கள் குழம்பித் தவித்தவள் ஒரு தீர்மானத்திற்கு வந்தாள். தான் செய்யப் போவது பெரிய சாகசம் என்றும், மலையுடன் மோதப் போகிறோம் என்றும் அவளுக்குத் தெரியும்.

நான்கு நாட்களுக்குப் பிறகு அவள் அதே நேரத்திற்கு மறுபடியும் போனாள். அவள் போன பொழுது அதே நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது.

புரொபசர் புட்டண்ணா கேள்வி கேட்டுக் கொண் டிருந்தார். பாபா பதிலளித்துக் கொண்டிருந்தார்.

"நிச்சயமாக அடுத்த மாதம் உனக்கு வெளிநாட்டுப் பயணம் இருக்கு அப்பனே! அங்கே உனக்கு அமோகமான வரவேற்பு கிடைக்கும். மக்கள் மகிழ்ந்து கொண்டாடி

பாராட்டுவார்கள்."

அந்த கிழ புரொபசரின் முகம் பிரகாசமாயிற்று. பாபாவின் கால்களில் விழுந்து வணங்கினார். அதற்குள் அவள் முறை வந்தது.

பதிமூன்று, ஊமத்தம்பூ, சிவப்பு நிறம் என்று எழுதிக் கொடுத்துவிட்டு "எனக்கு பெண் குழந்தையா அல்லது ஆண் குழந்தையா சுவாமி?" என்று கேட்டாள்.

பாபா கொஞ்சம் நேரம் கண்களை மூடிக் கொண்டு பிறகு திறந்து "ஆண் குழந்தை" என்றாள்.

கூடியிருந்த மக்கள் மேலும் பக்தியோடு அவரைப் பார்த்தார்கள். 'கால்களில் விழுந்து வணங்கு' என்பது போல் ஜாடை காட்டினார்கள்.

அவள் பர்ஸிலிருந்து இன்னொரு காகிதத்தை வெளியே எடுத்தாள். பணிவு கலந்த குரலில் "நான்கு நாட்களுக்கு முன்னால் நான் வந்திருந்தேன் சுவாமி! அப்போ பெண் குழந்தை பிறக்கும்னு சொன்னீங்களே?" என்று அந்த காகிதத்தை அவர் முன்னால் போட்டாள்.

ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம் திடீரென்று அங்கே வந்து சூழ்ந்து கொண்டது.

பாபாவுக்கு அவள் சொன்னது புரிய கொஞ்ச நேரமாயிற்று. முகம் சிவக்க "என்ன சொல்கிறாய் நீ?" என்றார் கோபமாக.

அவள் நிதானமான குரலில் "மக்களை ஏமாற்றுவதை நிறுத்துங்கள் என்று வேண்டிக் கொள்கிறேன் சுவாமீ! அவ்வளவுதான்" என்றாள்.

"இந்த முட்டாளைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுங்கள்" என்று உத்தரவிட்டார் பாபா. அதற்குள் சீடன் ஒருவன் அவள் கையைப் பிடித்து இழுக்கப் போனான்.

ஒரே உதறலில் அவள் கையை விடுவித்துக் கொண்டு சட்டென்று எழுந்து நின்றாள். "முட்டாள் நான் இல்லை. இவர்கள்தான்" என்று சுற்றிலுமிருந்த மக்களை சுட்டிக்காட்டி விட்டு "பதினாலு என்ற எண்ணும், ரோஜாப்பூவும், வெள்ளை நிறமும் சேர்ந்து வயிற்றில் இருப்பது பெண் குழந்தை என்று தீர்மானித்தால் அவற்றை கைகூப்பி வணங்கணும். அந்தக் குழந்தையை நான்கு நாட்களில் ஆணாக மாற்றிவிடக் கூடிய சக்தி ஊமத்தம் பூவுக்கு இருக்குமானால் நாம் எல்லோரும் தெய்வத்தை வணங்குவதை விட்டுவிட்டு ஊமத்தம் பூக்களைத்தான் வணங்கணும்" என்றாள் ஆவேசமாக.

அவதார்பாபா ஆவேசத்தோடு எழுந்து கொண்டு "மிகப் புனிதமான ஜோதிட சாஸ்திரத்தையே ஏளனம் செய்த நீ விரைவிலேயே அதற்குத் தகுந்த தண்டனையை அனுபவிப்பாய். இதோ பார். . . இதுதான் என் சாபம்" என்று கமண்டலத்திலிருந்து நீரை எடுத்து அவள் மேல் தெளித்து விட்டு "உன் வயிற்றில் அஷ்டாவக்கிரன் பிறக்கக் கடவதாக. பிறந்ததுமே அவன் உன்னையும் உன் கணவனையும் கொல்லக் கடவதாக. பிரம்மதேவனே வந்தாலும் கூட தடுக்க முடியாமல் போகக் கடவதாக" என்றார்.

அங்கு கூடியிருந்த மக்கள் எல்லோரும் ஆரவாரம் செய்யத் தொடங்கினார்கள். அவர் கொடுத்த சாபத்தைவிட மக்களின் அஞ்ஞானம்தான் அவளுக்கு வேதனையைத் தந்தது. சுற்றிலு மிருந்தவர்கள் கைகளைக் கூப்பி செய்யும் பிரார்த்தனையும், நடுங்கும் அவர்களுடைய தேகங்களும் அவளுக்கு மேலும் அருவருப்பை ஏற்படுத்தின.

என்றும் கோபம் கொள்ளாத அவள் ஆவேசத்தோடு அவர் கையிலிருந்த கமண்டலத்தைப் பிடுங்கிக் கொண்டு அவர் மேலேயே அந்த நீரை கவிழ்த்துவிட்டு "இந்த நீருக்கு

மட்டும் அந்த சக்தி இருக்குமானால் இரண்டே நாளில் உன் பேச்சு ஒடுங்கிப் போகக் கடவதாக. இதுதான் என் சாபம்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டாள்.

வந்த பிறகுதான் பயம் ஏற்பட்டது மாமியார் ஏதாவது சொல்லுவாளோ என்று. ஆனால் ஆச்சரியம், அவள் ஒன்றுமே சொல்லவில்லை. சித்தார்த்தா மட்டும் "நமக்கு எதுக்கு இந்த வம்பெல்லாம் கௌரீ" என்றான். அவள் மௌனமாக இருந்தாள்.

"மக்களை ஏமாற்றுபவர்கள் எங்கேயும்தான் இருப் பார்கள். அவ்வளவு பேரையும் தடுத்து விடணும் என்று நாம் கங்கணம் கட்டிக் கொள்ள முடியுமா? இவர்கள் போலியாக இருக்கலாம். ஆனால் ஓரிரு மகாபுருஷர்களும் இல்லாமல் இல்லையே?"

குறைந்தபட்சம் இது ஏமாற்றுவேலை என்றாவது ஒப்புக் கொண்டானே என்று திருப்தியடைந்தாள் அவள். பிறகு அந்தச் சம்பவத்தை மறந்தே போய்விட்டாள். திரும்பவும் அண்ணன் பேச்சால் அந்த சம்பவம் நினைவுக்கு வந்தது.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு கிராமத்தில் எல்லோரும் அவளை ஒரு விதமாக பார்க்கத் தொடங்கினார்கள். அவ்வப்பொழுது வீட்டிற்கு வருபவர்கள்கூட வராமல் நின்று விட்டதை கவனித்து உள்ளூர வருத்தப்பட்டாள். கிராம மக்கள் அப்படித்தான் இருப்பார்கள் என்று மனதைச் சமாதானப் படுத்திக் கொள்ள நினைத்தாலும் முடியவில்லை.

அதனால்தான் அந்த நேரத்தில் அண்ணனைப் பார்த்ததும் நடந்ததையெல்லாம் சொல்லிவிட்டு "எனக்கு இப்பொழு தெல்லாம் ரொம்ப பயமாக இருக்கிறது அண்ணா. ஏன் என்று எனக்கே தெரியவில்லை" என்றாள்.

"சரி சரி. நீ இந்த மாதிரி அனாவசியமான எண்ணங்களை எல்லாம் மனதில் வைத்துக் கொள்ளாதே. உனக்கு ஒன்றும்

கெடுதல் நேராது" என்றான்.

"ஆனால் அந்த அவதார் பாபாவின் மகிமை நாளுக்கு நாள் பரவிக் கொண்டே வருகிறது. ஊமை ஒருத்தனுக்கு பேச்சு வந்ததாம். கூனனைத் தொட்டதும் முதுகு நிமிர்ந்ததாம்."

"அதையும் பார்த்துவிடுகிறேன்" என்றான் ரவி. தங்கைக்கு நிகழ்ந்த அநியாயத்திற்கு அவன் அப்பொழுதே பழி வாங்கி விடத் துடித்தான். அந்த நிமிடமே ரவிக்கும், பாபாவுக்கும் நடுவில் போட்டி தொடங்கிவிட்டது.

அவன் ஏதோ சொல்லவந்தபோது ராகேஷ் அங்கே வேகமாக வந்தான். ஆயாசத்துடன் மூச்சிரைக்க வந்தவன் "என் தாயத்து?" என்றான். ரவி அவனை மேலும் அழ வைக்க நினைத்தான். ஆனால் கௌரி தடுத்துவிட்டு தாயத்தை எடுத்து தந்தாள்.

ரவி முறுவலுடன் "இப்படி ஓட்டமும் நடையுமாக வந்தது தாயத்துக்காக மட்டும்தானா அல்லது இது என்னவாகி விட்டதோ என்ற பயமா?" என்று தன் பையிலிருந்த செக்கையும் எடுத்துக் கொடுத்தான்.

மலர்ந்த முகத்துடன் அதையும் வாங்கிக் கொண்டு "உண்மையில் நீ பெரிய ஆள்தான்" என்றான். தாயத்தைக் கட்டிக்கொள்ள அவன் அவஸ்தை பட்டபோது கௌரி முன் வந்து சரியாக கட்டிவிட்டாள்.

"போய் வருகிறேன்." வந்த வேகத்திலேயே திரும்பினான் ராகேஷ்.

ரவி அவன் போன திசையையே பார்த்துக் கொண்டிருந்தான். இரண்டு லட்சத்திற்கான செக்கைத் திரும்பப் பெற்றுக்கொண்டதை விட தாயத்து திரும்பக் கிடைத்ததற்கே ராகேஷ் அதிகம் சந்தோஷப்பட்டது வெளிப்படையாக தெரிந்தது. தாயத்தின் பேரில் ராகேஷ் காட்டிய பரபரப்பான

ஆர்வத்திற்கு என்ன காரணம்?

ரவிக்கு தன் பத்திரிகை காரியாலயத்தின் நூலகத்தில் ரொம்ப நாட்களுக்கு முன்னால் படித்த ஒரு புத்தகம் நினைவுக்கு வந்தது. "மாஜிக் ஆஃப் அக்கல்ட்" என்பது அப்புத்தகத்தின் பெயர். அதில் ஒரு இடத்தில் படித்த வரிகள் "நிஷ்டையில் இருக்கும் மந்திரவாதி பௌர்ணமியன்று கையில் தாயத்துடன் இருக்க வேண்டும்."

ஆனால் அதற்குள் தன் யோசனையை எண்ணித் தானே சிரித்துக் கொண்டான் ரவி. தனக்கு ஏன்தான் இந்த வேண்டாத யோசனைகள் வருகின்றனவோ? ராகேஷ் என்ன மந்திர வாதியா? அல்லது ஹோமம் நடத்துபவனா?

## 20

**ம**யானத்தில் ஹோமம் தொடங்கப்பட்டது. ஹோமத்திற்கு முன்னால் ராகேஷ் உட்கார்ந்திருந்தான். சடங்குகளில் தலையிடாமல் தானும் ஒரு பார்வையாளராக பார்த்துக் கொண்டிருந்தார் மகாதிரஷ்டா. தொலைவில் சுமார் இருபதுபேர் உஸ்ஸோக் மெம்பர்கள் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள். தீயில் ரத்தத்தைத் தர்ப்பணம் செய்ததும் தீ மேலே எழும்பியது.

அவன் க்ஷுத்ட்சயாகம் செய்து முடிக்கும் வரையிலும் சலனமில்லாமல் இருந்த சூழ்நிலையில் பூஜை முடிந்து காற்று வேகமாக வீசியது. சூழ்நிலையே மாறிவிட்டது.

சரியாக அதே சமயத்தில் கேதாரகௌரி ஏதோ அசைந்தாற்போல் இருக்கவே விழிப்பு ஏற்பட்டு, சட்டென்று சுற்றிலும் பார்த்தாள். அவளுக்கு சிரிப்பு வந்தது. அசைந்தது அவள் வயிற்றிலிருந்த குழந்தைதான். அந்த அனுபவம் அவளுக்கு புதிதாக இதமாக இருந்தது. திரும்பிக் கணவனைப்

பார்த்தாள். ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். அவனுக்கு விழிப்பு ஏற்படாதவாறு அவன் கன்னத்தில் இதழ்களைப் பதித்தாள். உள்ளே திரும்பவும் அசைவு. இந்த முறை சற்று பலமாக.

அதே நேரத்தில் அங்கே உஸ்ஸோக் மெம்பர்கள் தம்தம் ரத்தத்தை அர்ப்பணம் செய்து கொண்டிருந்தார்கள். இங்கே வயிற்றுக்குள் குழந்தை கொஞ்சம் கொஞ்சமாக வேகத்தை அதிகரித்து அசைந்தது. கேதாரகௌரி "ஏண்டா கண்ணா! இதற்குள் உனக்கு இத்தனை பொறாமை ஏன்? வெளியே வந்ததும் எங்களிருவரின் அன்பும் உனக்குத்தானே?" என்றாள், சமாதானம் செய்வதுபோல். உள்ளே குழந்தை இதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளாததுபோல் சண்டித்தனம் செய்தது.

அவள் கணவனைப் பார்த்தாள். தான் பாதி அவன் பாதி. பாதிப்பாதி கலந்த முழு உருவம். யாருடைய ஜாடை வரும்? தன்னைப் போலவா கணவனைப் போலவா? அவனைப் போல் கடவுளை நம்புவானா அல்லது தன்னைப் போல் கடவுள் இல்லை என்று வாதம் புரிவானா? ஏதேதோ எண்ணங்கள் கௌரியின் மனதில்.

அங்கே இறுதி ரத்தச் சொட்டை ஹோமத்தில் வார்த்து விட்டு மகாதிரஷ்டா ராகேஷை யாக புருஷனாக அறிவித்தார்.

இங்கே வயிற்றில் இருந்த குழந்தை உலகத்தில் உள்ள சக்தியெல்லாம் ஒன்றாக திரட்டிக் கொண்டது போல் வேகமாக புரண்டது. வலி தாங்கமுடியாமல் கௌரியின் கண்களில் நீர் திரையிட்டது. விடியட்டும் பார்ப்போம் என்று எண்ணியவளாக வலியைப் பொறுத்துக் கொண்டு கண்களை மூடிக்கொண்டாள்.

★

**பொ**ல பொலவென்று விடிந்து கொண்டிருந்தது. மயானத்தில் சடங்கு முடியும் கட்டத்தை நெருங்கியது. உஸ்ஸோக் மெம்பர்கள் எல்லோரும் கலைந்து போகத் தொடங்கினார்கள். ராகேஷ் மட்டும் மூன்று நாட்கள் அங்கேயே கழிக்க வேண்டும். அங்கேயே கேசரி வித்தையைப் பழக வேண்டும்.

உறக்கமில்லாமல் அவன் கண்கள் சிவந்திருந்தன. அவன் பார்வை தொலைவில் நின்றபடி தன்னையே பார்த்துக் கொண்டிருந்த மகாதிரஷ்டாவின் மேல் நிலைத்தது. இருவர் பார்வையும் கலந்தன. ராகேஷ் தலையைத் திருப்பிக் கொண்டான். மகாதிரஷ்டா அங்கிருந்து கிளம்பிப் போக முற்பட்டார். ராகேஷின் உதடுகளில் குரூரப் புன்னகை நெளிந்தது. இரவில் எப்பொழுதோ எரித்த பிணத்தின் சிதையிலிருந்து புகை மேலே எழும்பிக் கொண்டிருந்தது.

தூக்கம் கண்களைச் சுழற்றிக் கொண்டு வந்ததால் அங்கிருந்த சமாதியின் மேல் படுக்கப் போனான். எங்கிருந்தோ மெல்லிய சத்தம் கேட்டது. அவன் முதலில் கவனிக்கவில்லை. இலைகளின் வழியாக வெளிப்பட்ட காற்று விதவிதமாக ஒலிகளுடன் பேசுவதுபோல் தோன்றியது. சட்டென்று ராகேஷ் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். காதுகளைத் தீட்டிக் கொண்டான்.

யாரோ தன்னை கூப்பிடுவதுபோல், வா. . . வா என்று. ஆனால் அது தனி தினுசாக இருந்தது. நிச்சயமாக அது சாதாரண காற்றைப் போல் இல்லை. இலைகள் கூட அசைய வில்லை. ஆனால் சத்தம் மட்டும் வந்து கொண்டிருந்தது.

அவன் கனவில் எழுந்து நடப்பவன்போல் நடந்து செல்லத் தொடங்கினான். மயானத்தின் எல்லையை வந்து சேர்ந்தான். அங்கே பெரிய பெரிய மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன. தும்பைச் செடிகள் புதராய் மண்டிக்

கிடந்தன. அவன் எதையும் பொருட்படுத்தவில்லை. கண்ணுக்குப் புலப்படாத உருவம் ஏதோ தன்னை அழைத்துச் செல்வது போல் நடந்து போய்க் கொண்டிருந்தான்.

திடீரென்று அழைப்பு நின்றுவிட்டது. அவன் நின்றான். அந்த நிசப்தத்திலிருந்து அவனுக்கு ஓரடி முன்னால் பூமியிலிருந்து தூசி சுழன்று மேலே கிளம்பியது. பார்த்துக் கொண்டிருந்த போதே அந்தச் சுழல் மரக்கிளைகளுக்கிடையே போய்ச் சேர்ந்தது. அவன் நடுங்கிக் கொண்டே நம்ப முடியாதவன் போல் கண்களை விரித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். மரக்கிளைக்கு நடுவிலிருந்து மிக மெல்லிய குரலில் தெளிவின்றி கேட்கத் தொடங்கியது.

“ராகேஷ்! குட்டிச் சாத்தானின் வாரிசு அஷ்டாவக்கிரன் பூமிக்கு வரும் வேளை நெருங்கிவிட்டது. தாய் தந்தையரைக் கொன்றுவிட்டுப் பிறக்கும் அஷ்டாவக்கிரனை எட்டாண்டுகள் முடியும் வரை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பு உன்னுடையதுதான். இந்த நிமிஷத்திலிருந்து நீயும் எங்கள் பூதகணங்களுக்குள் ஒருவன். அதற்கு கைமாற்றாய் உனக்கு மனோரூப வித்தையை அருளுகிறார்கள் பஞ்சபூதங்கள். ஏற்றுக்கொள்.”

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. இன்னும் அவன் பிரமையிலிருந்து விடுபடவில்லை. யாரோ கை நீட்டி அடித்தாற்போல் காற்று வந்து அவன் முகத்தில் அறைந்தது. மயக்கம் வந்தாற் போல் அவன் கீழே விழுந்தான்.

அவனுக்கு நினைவு வந்தபோது வானத்தில் நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. சுமார் பன்னிரெண்டு மணி நேரம் அவன் அவ்வாறு விழுந்து கிடந்திருக்கிறான்.

அப்பொழுது மகாதிரஷ்டா ஒரு சிறிய தொன்னையில் அவனுக்காக மந்திரித்த மாமிச உணவைக் கொண்டு வந்து வைத்தார்.

ராகேஷ் எழுந்து உட்கார்ந்தான். மகாதிரஷ்டாவின் முகத்தை கூர்ந்து நோக்கினான்.

'சாப்பிடு ராகேஷ்! இன்னும் எவ்வளவு நாள் உனக்கு நாங்கள் பணிவிடை செய்யப் போகிறோம்? இந்தச் சடங்குடன் நீ ஒழியப் போகும் நாளும் நெருங்கிவிட்டது. அஷ்டாவக்கிரன் தோன்றிய மறுவினாடியே நீ பூண்டோடு அழிந்துவிடுவாய்.' மகாதிரஷ்டாவின் மனதிலிருந்த திட்டம் அவரது முகத்தில் நன்றாக தெரிந்தது ராகேஷுக்கு.

திடுக்கிட்டான் ராகேஷ். மகாதிரஷ்டாவின் மனதில் இருப்பதை கண்ணாடியைப் போல் தன்னால் தெரிந்து கொள்ள முடிகிறதே? மனோரூப வித்தையை அருளுவது என்பதன் அர்த்தம் இதுதானோ?

அதாவது தான் இப்பொழுது மகாதிரஷ்டாவுக்குச் சமமானவன். ஆனால் இந்த விஷயம் மற்றவர்களுக்குத் தெரிவதை ராகேஷ் விரும்பவில்லை. அவனுடைய எதிர் பார்ப்பு முழுவதும் அஷ்டாவக்கிரனின் வருகையில்தான் இருந்தது.

★

"கிருஷ்ணாபுரத்து விக்ருத சிசுக்களின் ஜனனத்திற்குப் பின்னால் உள்ள ஜெனடிக் காரணத்தை நான் கண்டுபிடித்து விட்டேன்" என்றார் புரொபசர் புட்டண்ணா.

ரங்கபிரசாத் மௌனமாக அவரைப் பார்ததார். அவ்வூரில் படித்தவர்களின் எண்ணிக்கை மிகவும் சொற்பம் என்பதால் புட்டண்ணாவுக்கு தன் ஆராய்ச்சியைப் பற்றி பேசுவதற்கு ரங்கபிரசாத் போன்ற நம்பிக்கையான ஆள் வேறு யாரும் கிடைக்கவில்லை.

"இதுபோன்ற குறைகளுடன் குழந்தைகள் உருவாவதற்கு காரணம் ம்யுடேஷன்ஸ். இது இரண்டு விதம். பாயிண்ட்

ம்யுடேஷன்ஸ், க்ரோமோஜோம்ஸ் மாறுபாடு." தனக்கு எதிரே இருந்தது ஒரு டாக்டர் என்பதை மறந்து சிறுவனுக்கு எடுத்துச் சொல்வது போல் விவரிக்கப் போனார் புட்டண்ணா.

"கிருஷ்ணாபுரத்துக்கு பதினைந்து மைல் தூரத்திலுள்ள பேக்டரியிலிருந்து வெளியேறும் கழிவுநீர் கால்வாயில் கலந்து இந்தப் பக்கமாக பாய்கிறது. இந்த தண்ணீரில் உள்ள ட்ரிமெதில்க்ஸானதைன்தான் இந்த விபரீதங்களுக்குக் காரணம்."

"நீங்க சொல்கிற அந்த கால்வாய் வெறும் கிருஷ்ணா புரத்தை நோக்கி மட்டுமே இல்லை. இன்னும் நூறு மைல் தூரம் பாய்கிறது. பின்னே அந்தத் தண்ணீரைக் குடித்தவர்களுக் கெல்லாம் நீங்க சொன்னாற் போல் குறையுள்ள சிசுக்கள் பிறந்திருக்கணுமே?"

மிகச் சாதாரணமாக கேட்டுக் கொண்டிருந்த ரங்கபிரசாத் அது போன்ற கேள்வியைக் கேட்டதும் புட்டண்ணாவின் முகம் சிறுத்துவிட்டது. ஆனாலும் உடனே தேறிக் கொண்டு "உதாரணமாக ஓரிடத்திலிருந்து ரேடியோ ஆக்டிவ் கதிர்கள் பரப்பப்படுகின்றன என்று வைத்துக் கொள்ளுங்கள். அதன் பாதிப்பு எல்லோர் மீதும் ஒரே மாதிரியாக இருக்காது. பலவீனமானவர்கள் முதலில் பாதிக்கப்படுவார்கள்."

"அப்படி என்றால் அப்படிப்பட்ட பலவீனமானவர்கள் கிருஷ்ணாபுரத்தில்தான் இருக்காங்கன்னு சொல்றீங்களா?"

புட்டண்ணா மீண்டும் திணறினார். சூழ்நிலையை மாற்ற எண்ணி "உங்களுக்குச் சரியாக புரியாது என்றுதான் சாதாரண பாஷையில் சொன்னேன். அமெரிக்காவில் நான் படிக்கப் போகும் ஆராய்ச்சிக் கட்டுரையைக் கொஞ்சம் பாருங்கள்" என்றபடி சில போட்டோக்களையும் பைலையும்

ரங்கபிரசாத் முன்னால் போட்டார். திகைப்புடன் அவற்றைப் பார்த்தார் ரங்கபிரசாத். கிருஷ்ணாபுரத்தில் இதுவரையில் பிறந்த விக்ருத சிசுக்களின் போட்டோக்கள் அவை. புட்டண்ணா படிக்கத் தொடங்கினார். "இவ்வாறு பிறந்த சிசுக்களின் தாய்மார்கள் அனைவருமே கூலி வேலை செய்யும் பெண்கள்தாம். இந்தியாவில் பெரும்பான்மையான கிராமங்களில் சரியான மருத்துவ வசதி கிடையாது. ஆனால் கிருஷ்ணாபுரம் கிராமம் மட்டும் மாறுபட்டது. இங்கே மக்களுக்கு இலவசமாக வைத்தியம் செய்ய டாக்டர் இருக்கிறார். மக்களிடமிருந்து ஒரு பைசா கூட வாங்காமல் பிரசவ கேஸிலிருந்து எக்ஸ்ரே வரையிலும் இலவசமாக சேவை புரிகிறார்."

கேட்டுக் கொண்டிருந்த ரங்கபிரசாதின் முகம் சிவந்தது. புட்டண்ணா எதிலிருந்து எதற்கு முடிச்சுப் போடுகிறார் என்று புரிந்ததும் பதைபதைத்தார். அதை எதுவும் கவனிக்காமல் புட்டண்ணா சொல்லிக் கொண்டே போனார்.

"தன்னிடம் வந்த கர்ப்பிணி பெண்களின்மீது டாக்டர் ரங்கபிரசாத் தவறுதலாய் எக்ஸ்ரே மிஷினை பயன்படுத்தி. "

"நிறுத்துங்கள். இது அநியாயம்." அந்த அறையே எதிரொலிக்கும்படி கத்தினார் ரங்கபிரசாத்.

"இதில் உங்கள் மேல் எந்த குற்றமும் சொல்லவில்லையே நான்? ஒரு டாக்டராக நீங்க உங்கள் கடமையைச் செய்தீங்க. ஆனால் அறியாமையால். . ."

"முட்டாள்தனம்!" அதே குரலில் கத்தினார் ரங்கபிரசாத். "அறியாமை என்னுடையது இல்லை. உங்களுடையதுதான். கர்ப்பிணிப் பெண்ணை எக்ஸ்ரே எடுப்பதற்கும் அதற்கு முன்பே அவளுள் சேர்ந்துவிட்ட வீரிய

அணுக்களில் இருக்கும் ம்யுடேஷன்ஸ்க்கும் என்ன சம்பந்தம்? உங்கள் மேல் மான நஷ்ட வழக்கு போடப் போகிறேன்." ஆவேசத்தால் ரங்கபிரசாதின் குரல் நடுங்கியது.

திடீரென்று புட்டண்ணாவிடம் மாறுதல் தோன்றியது. "நீங்கள் என்னை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அமெரிக்காவில் யாருக்குமே உங்களைப் பற்றியோ, உங்கள் பெயரோ கூடத் தெரியாது. வெறுமே உங்கள் பெயரை பயன்படுத்திக் கொள்ளப் போகிறேன். அவ்வளவுதான்."

ரங்கபிரசாத் அந்த ஆராய்ச்சி பேப்பர்களை வாங்கிப் பார்த்தார். அதிலுள்ள போட்டோக்களைக் காட்டி "இந்த ஆறு போட்டோக்களும் உங்களுக்கு எப்படி கிடைத்தன? ஏனென்றால் எங்களுக்கே முதல் மூன்று குழந்தைகளின் போட்டோக்களும் கிடைக்கவில்லையே?" என்றார்.

ரங்கபிரசாத் அத்தனை நிதானமாக பேசியதும் புட்டண்ணாவுக்கு தைரியம் வந்தது. குனிந்து ரகசியம் சொல்வது போல் "நிஜக் குழந்தைகளுக்கும் இந்த போட்டோக் களுக்கும் சம்பந்தமில்லை. அமெரிக்காவில் அவர்களுக்குக் காட்டுவதற்காக சும்மா இவற்றை எடுத்துப் போகிறேன். அமெரிக்காவில் எங்கோ மூலையில் நான் எதையோ செய்தால் உங்களுக்கு இங்கே எந்த பிரச்னையும் வரப் போவதில்லையே? உங்களுக்கும் ஏதாவது பணம் தந்துவிடுகிறேன்."

"ஏற்கனவே நம் நாட்டின் மேல் வெளிநாட்டுக் காரர்களுக்கு ரொம்ப இளப்பமான எண்ணம். உங்களைப் போன்றவர்கள் அதை மேலும் அதிகமாக்கறீங்க. நீங்க சொன்னதை எல்லாம் அவர்கள் நம்புவார்கள் என்று எப்படி நினைக்கிறீங்க?" என்றார் ரங்கபிரசாத் கோபத்தை அடக்கிக் கொண்டே.

"ஏன் நம்பமாட்டார்கள்?"

"நீங்க ஜெனடிக்ஸ் புரொபசராய் எப்படித்தான் ஆனீங்களோ எனக்குப் புரியவில்லை. நீங்கள் காட்டிய போட்டோக்கள், உங்கள் தியரி எல்லாமே எகண்ட்ரோ பிளாஸ்டிக் ட்வார்ஃப் சம்பந்தப்பட்டது. இந்த மாதிரி கேசுகளில் 4 x 10 டு தி பவர் ஆஃப் மைனஸ் பைவ் என்று ஜெனடிக்ஸில் பால பாடம் படித்தவர்களுக்குக் கூடத் தெரியும். கிருஷ்ணாபுரத்தில் அந்த மாதிரி சிசுக்கள் ஆறு பிறந்திருக்கு என்றால் சுமார் 1,50,000 பேர் கர்ப்பிணிக்கள் இருந்திருக்கணும் என்று அர்த்தம். நீங்க அமெரிக்காவில் என்ன சொல்லப் போறீங்க? டாக்டர் ரங்கபிரசாத் இத்தனை பெண்களின் மேலும் எக்ஸ்ரேயைப் பயன்படுத்தினார் என்று சொல்லப் போறீங்களா? இந்தியாவில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் கோடிக்கணக்கான ஜனத்தொகை உண்டு என்றும் அதில் ஒவ்வொரு ஆண்டும் 1,50,000 பேர் கருத்தரிக்கிறார்கள் என்றும், எல்லோருக்கும் டாக்டர் ரங்கபிரசாத் ஒருவர்தான் வைத்தியம் செய்தார் என்றும் சொல்லப் போறீங்களா?"

புரொபசர் புட்டண்ணா அதிர்ந்துவிட்டார். மிகச் சாதாரணமாக தென்படும் இந்த டாக்டர் தனக்குத் தெரியாத மரபணுவியல் பற்றி ரொம்ப சாதாரணமாக சொல்கிறாரே?

"டாக்டர் ரங்கபிரசாத்! உண்மையிலேயே நீங்கள் கெட்டிக்காரரர். உங்களுக்கு கௌரவப் பட்டம் வழங்கச் சொல்கிறேன்."

"அதற்குப் பதிலாக இந்த ஆறு தாய்மார்களுக்கும் நான் ரேடியேஷன் தந்ததாக ஒப்புக் கொள்ளணும் இல்லையா?"

புட்டண்ணா பதில் சொல்லவில்லை.

ரங்கபிரசாத் எழுந்து கொண்டார். "நீங்க அமெரிக்கா வுக்கு கிளம்பின அடுத்த நிமிடமே அங்கே இருக்கும் நம் தூதரகத்தோடு நான் பேசுகிறேன். உங்களுடைய சொற்

பொழிவை ரிக்கார்ட் பண்ணும்படிச் செய்கிறேன். ஒரு பொய்யை எவ்வளவு அழகாக ஜோடித்து சொல்றீங்கன்னு நிரூபிக்கிறேன். நீங்கள் திரும்பி வருவதற்குள் செக்ஷன் 420 கீழே உங்களை அரெஸ்ட் பண்ண வாரெண்ட் தயாராக இருக்கும்படி செய்கிறேன்."

புட்டண்ணா எழுந்து நின்று "அவ்வளவுதான் என் கிறீங்களா?" என்றார்.

"அவ்வளவுதான்."

"அதையும் பார்த்துவிடுகிறேன். இந்த பிறப்புகளுக் கெல்லாம் மூலகாரணம் நீங்கதான் என்று நிரூபிக்காவிட்டால் என் பெயர் புட்டண்ணா இல்லை" என்று கூறிவிட்டு அந்தக் கிழ புரொபசர் விடுவிடென்று அங்கிருந்து வெளியே வந்தார். படியிறங்கி கீழே வந்தவர் அந்தக் கட்டிடத்தை ஒருமுறை திரும்பிப் பார்த்தார்.

அவர் மனக்கண் முன்னால் ஒரு காட்சி நிழலாடியது. ஆயிரக்கணக்கான மக்கள் கும்பல் கும்பலாக கூடி வந்து ரங்கபிரசாதை அடித்து உதைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர் உடைகள் கிழிந்துவிட்டன. மேனியிலிருந்து ரத்தம் வழிகிறது. ஆத்திரமடைந்த மக்கள் அவரை வெட்டிப் போடுகிறார்கள்.

புட்டண்ணாவின் உதடுகளில் குரூரப் புன்னகை நெளிந்தது. தலையைச் சிலிர்த்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்.

மக்களைத் தூண்டிவிட்டு கலகத்தைத் தோற்றுவிக்கக் கூடியவன் அந்த ஊரில் ஒரே ஒரு ஆள்தான். ஆமாம், அவருடைய உதவியை பெற்றுக் கொள்ள வேண்டும். தான் சமர்ப்பிக்கப் போகும் காணிக்கைக்காகவாவது அவர் இந்த காரியத்தைச் செய்யாமல் இருக்கமாட்டார். அதற்குப் பிறகு அமெரிக்காவில் தன்னுடைய தியரியை யாராலுமே மறுத்து

காரியத்தை செய்து தரக்கூடிய அந்த நபர் யாரோ இல்லை.

அவதார்பாபா!

## 21

முடிவில்லாத குழப்பத்தில் ஆழ்ந்தான் ரவி. கிருஷ்ணா புரத்தில் ஆறு விக்ருத சிசுக்கள் பிறந்தன. ஆனால் அதே சமயத்தில் நான்கு ஆரோக்யமான குழந்தைகளும் பிறந்தன. அப்படி ஆரோக்கியமாகப் பிறந்த நான்கு குழந்தைகளின் தாய்மார்களுக்கு அவதார்பாபா தாயத்து கட்டியிருந்தார். பாபா தாயத்து கட்டாத தாய்மார்களுக்கு மட்டுமே விகாரமான குழந்தைகள் பிறந்திருக்கின்றன. இது எப்படி சாத்தியமாயிற்று?

அவதார் பாபாவுக்கு உண்மையில் என்ன சக்தி யிருக்கிறது? இந்தக் கேள்விக்கு பதில் சொல்லக் கூடியவர் அவதார் பாபா ஒருவர்தான் என்றால் எப்படியாவது அவர் வாயிலிருந்து அந்த ரகசியத்தை வெளியில் கொண்டு வர வேண்டும். அவருடைய சாபத்தால் தன் தங்கையின் வயிற்றில் விக்ருதமான குழந்தை மட்டும் பிறந்துவிட்டால் அவன் சும்மாயிருக்கமாட்டான். அவரை கண்டந் துண்டமாக வெட்டிப் போடுவான்.

ஒரு தீர்மானத்திற்கு வந்தவனாக அவன் அங்கிருந்து நகர்ந்தான்.

★

“கௌரீ! உனக்காக பிரசாதம் கொண்டு வந்திருக்கிறேன்” என்று தான் கொண்டு வந்த பொட்டலத்தைப் பிரித்தான் ராகேஷ். உள்ளே சாம்பல்

இருந்தது. "கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக் கொள்" என்றான்.

க்ஷுதட்சயாகத்தின் இறுதி கட்டம் முடிந்ததும் எடுத்துக் கொண்ட சாம்பல் அது. அவள் அதைச் சாப்பிட்டால் போதும், அவன் வேலை முடிந்தாற்போல்.

அவளுக்கு இந்த மாதிரி பிரசாதங்களின் மேல் நம்பிக்கை இல்லை. இருந்தாலும் அவனுடைய திருப்திக்காக பெற்றுக் கொண்டாள்.

"ரவி சொத்தையெல்லாம் தன் கட்சிக்கே நன்கொடை யாய் தந்துவிட்டானாமே? " கேட்டான்.

"ஆமாம். எதற்காக கேட்கிறாய்?"

"அது இல்லை கௌரீ. அதில் உனக்கும் பங்கு உண்டு. மாமா நம் இருவரையும் ஒன்றாக நினைக்கவில்லையா?" என்றான் ராகேஷ்.

"என்னிடம் கேட்டான். உன் இஷ்டம் என்ன வேண்டு மானாலும் பண்ணிக்கொள் என்று சொல்லிவிட்டேன்."

அவன் ஏதோ சொல்ல வாயைத் திறப்பதற்குள் கலகல வென்று சிரித்தபடி நான்கு பெண்கள் உள்ளே வந்தார்கள். கௌரி மலர்ந்த முகத்துடன் அவர்களை உள்ளே அழைத்துப் போனாள். 'ராவே' புரோகிராமுக்கு வந்த மாணவிகள் அவர்கள்.

வெளியே ராகேஷ் தனியாக நின்றான். கேதார கௌரியின் மூலம் சொத்தில் கொஞ்சம் கறந்துவிடலாம் என்று ஆசைப் பட்டது நிறைவேறாது போலிருந்தது. அவன் ஆத்திரத்துடன் கையை ஓங்கிக் குத்திக் கொண்டான். பணத்தின் தேவை அதிகமாக இருந்தது.

இன்னும் ஒரு மாதம்தான் பாக்கியிருந்தது. அதற்குள் உஸ்ஸோக் அங்கத்தினர்களை முடிந்தவரையில் தன்பால்

இழுத்துக் கொள்ள வேண்டும். சாத்தான் தனக்களித்த வித்தையால் ஒவ்வொரு அங்கத்தினரின் மனதில் என்ன இருக்கிறது என்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

அந்தக் காரியத்தை முதலில் அவதார்பாபாவிடமிருந்து தொடங்க வேண்டும். அவர் இப்பொழுது நிறைய சம்பாதித்து விட்டார். அவர் தன்பக்கம் வந்துவிட்டால் பணப்பிரச்னை இருக்காது.

அவன் வெளியே போகக் கிளம்பியபோது சட்டென்று நினைவுக்கு வந்தது. கேதாரகௌரி அந்த பிரசாத சாம்பலைச் சாப்பிட்டாளா இல்லையா? உடனே உள்ளே போனான். வந்த பெண்களுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள் கௌரி. அவனைப் பார்த்ததும் "என்ன ராகேஷ்?" என்று கேட்டாள்.

"நான் தந்த பிரசாதத்தைச் சாப்பிட்டாயா?"

"சாப்பிட்டாற்போல்தான் நினைவு."

"அதில்லை கௌரீ. ரொம்ப கஷ்டப்பட்டு கொண்டு வந்தேன். புனிதமானது" என்றான்.

"வாயில் போட்டுக் கொண்ட மாதிரி நினைவு. மீதியிருந்ததை பொட்டலத்துடன் இங்கேதான் வைத்தேன்" என்று ஜன்னலைக் காட்டினாள்.

ராகேஷ் ஜன்னலைப் பார்த்தான். அங்கே ஒன்றையும் காணவில்லை. கௌரி அவனை சந்தேகத்துடன் பார்த்துவிட்டு "சாப்பிட்டேனா இல்லையா என்று சரியாக நினைவு இல்லை. போகட்டும் விடு" என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள்.

ராகேஷ் கோபத்துடன் செய்வதறியாமல் நின்று விட்டான்.

★

ரவி 'ராவே' புரோகிராமுக்கு வந்த மாணவிகளுக்கு மேஜிக் செய்து காட்டினான். அவர்கள் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். மேஜிக் முடிந்ததும் வந்த பெண்களில் ஒருத்தியைத் தவிர எல்லோரும் போய்விட்டார்கள். அந்தப் பெண் ரவியிடம் வந்து "என் பெயர் ரஞ்சிதா. உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் நான் ஒரு மேஜிக் செய்து காட்டட்டுமா?" என்றாள்.

"மேஜிக்கா? நீங்களா?" என்றான் ரவி நம்பமுடியாதவன் போல்.

அழகான வட்டமுகத்துடன் அஜந்தா சிலை போல் இருந்தாள்.

"மேஜிக் என்றால் உங்கள் அளவுக்கு இல்லை. எங்க முன்னோர்கள் இந்த வித்தையைப் பயன்படுத்தி பேய்களை ஓட்டியிருக்கிறார்கள். சாதாரண சூழ்நிலையில் இதைப் பண்ணக்கூடாது. ஆனாலும் உங்களுக்கு செய்து காட்டுகிறேன்."

"நான் நம்பவில்லை."

"எதை நம்பவில்லை?"

"பேய்களை நம்பமாட்டேன்" என்றான் அவன்.

ரஞ்சிதா ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து உள்ளங்கையில் வைத்துக் கொண்டாள். கையை மூடாமல் திறந்தபடி வைத்துக் கொண்டு "மிஸ்டர் ரவீ! சாரி. . . உங்களுடைய புனை பெயர் என்ன? ஷாடோதானே? மிஸ்டர் ஷாடோ! இந்த நாணயத்தையே பாருங்கள். இப்போது இது மாயமாகிக் கொண்டு இருக்கிறது உங்கள் கண் முன்னாலேயே" என்றாள்.

உள்ளங்கையிலிருந்த ரூபாய் நாணயம் மெல்ல மெல்ல மறைந்து போயிற்று.

ரவி அதிர்ந்து போனான். மிக அனுபவசாலியான அந்த மெஜிஷியன் கூட, விரல்களை அசைக்காமலேயே அவள் செய்த அந்த மேஜிக்கைப் பார்த்துத் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

இது நிச்சயமாக தந்திரமில்லை. நாணயம் கொஞ்சம் கொஞ்சமாக கரைந்து போவதைக் கண்ணால் பார்த்தான். மனிதனை மீறிய சக்தியா இது? உண்மைதானா. . .

அதற்குள் ரஞ்சிதாவின் குரல் மீண்டும் ஒலித்தது. "இதில் டால்டன் தியரி எதுவும் இல்லை. இந்த பரந்த உலகில் எங்கே போய் தேடினாலும் உங்களுக்கு அந்த நாணயம் தென்படாது. ஆவிகள் அதைத் தமக்குள் ஐக்கியமாக்கிக் கொண்டுவிட்டன." அவள் கண்களை மூடிக் கொண்டே மேலும் சொன்னாள். "மிஸ்டர் ஷாடோ! இதுவரையில் நீங்க நிறைய பேரை அழ வைத்திருக்கீங்க. அதற்கு பதிலாய் நான் உங்கள் மேல் நடவடிக்கை எடுக்கப் போகிறேன். பார்த்துக் கொண்டே இருங்கள். உங்களிடமிருந்து ஒரு முக்கியமான உறுப்பு மாயமாகிவிடப் போகிறது" என்றாள்.

ரவி தன்னையும் அறியாமல் எதிரில் இருந்த கண்ணாடியில் பார்த்துக் கொண்டான். கண், மூக்கு, காது எல்லாம் சரியாகத்தான் இருந்தன. ரஞ்சிதாவின் பார்வை தன் கைமேல் இருப்பதைப் பார்த்து சட்டென்று கையைத் தூக்கிப் பார்த்துக் கொண்டான்.

வலது கையில் ஆள்காட்டி விரல் இல்லை. ஆள்காட்டி விரல்தான். அவன் கலவரத்தோடு தொட்டு பார்த்துக் கொண்டான். உண்மையாகவே இல்லை.

அவன் பதற்றமடைந்தான். அதுவரையிலும் அவனையே கவனித்துக் கொண்டிருந்த கேதாரகௌரி சட்டென்று அருகில் வந்து "என்ன நடந்தது?" என்றாள். அவன் பதில் சொல்லாமல் கையை உயர்த்தினான்.

ஏன்? என்ன விஷயம்?" புரியாமல் கேட்டாள்.

"என்... என் ஆள்காட்டி விரல்..."

"அதற்கென்ன வந்தது? நன்றாகத்தானே இருக்கு."

அவன் ரஞ்சிதாவின் பக்கம் பார்த்தான். அதுவரையிலும் சீரியஸாக இருப்பது போல் நடித்துக் கொண்டிருந்தவள் மெல்லச் சிரித்தாள். அவன் பார்வை திரும்பவும் கையில் மீது பட்டது.

ஆள்காட்டிவிரல் எப்போதும் போல் இருந்தது.

★

"இது எப்படி சாத்தியமாயிற்று?" அவன் ஒரு மணி நேரமாக கெஞ்சியும் ரஞ்சிதா அசைந்து கொடுக்கவில்லை. அவன் விடாமல் நச்சரித்தான்.

ரஞ்சிதா முறுவலுடன் தன் கைக்கடியாரத்தைக் காட்டி, "இதுதான் காரணம்" என்றாள்.

ரவி வியப்புடன் "இது என்ன?" என்றான்.

"சாதாரண கைக்கடியாரம்தான். ஆனால் தேவைப்பட்ட போது மோனோடோனில் ஆடியபிள் வைப்ரேஷனைத் தரும். சுமார் இரண்டடி தொலைவுக்குள் அந்த எல்லையில் இருப்பவர்களை நம் குரலுக்கு வசப்படுத்திவிடும்."

"மைகாட்!"

"தெரியாதவரையில்தான் அதிசயம். தெரிந்துவிட்டால் தந்திரம்."

"மார்க்கெட்டுக்கு எப்போ வந்தது இது?"

"இன்னும் வரவில்லை. என்னுடைய சின்ன தாத்தா கண்டுபிடித்தார் இதை. பிரபல ஹிப்னாடிஸ்ட் புரொபசர் ஜெயதேவ். எண்பது வயதாகிறது அவருக்கு. சிறு வயதில் நான் ரொம்ப டல்லாக இருப்பேனாம். தாத்தா தினமும்

என்னை ஹிப்னாடிக் ட்ரான்ஸில் ஆழ்த்தி என்னை மாற்றிவிட்டார். இப்போ ஒருமுறை கேட்டால் போதும் எவ்வளவு பெரிய வாக்கியமாக இருந்தாலும் சரி, அதைத் திருப்பிச் சொல்லி விடுவேன்."

"எங்கே இதைச் சொல்லுங்க பார்ப்போம்" என்று நீளமாக ஒரு வாக்கியத்தைச் சொன்னான்.

அவள் ஒரு எழுத்து பிசகாமல் அப்படியே ஒப்பித்தாள்.

"பிரமாதம்" என்று தன்னையும்மீறி ஒரு குரல் கொடுத்தான் ரவி.

ரஞ்சிதா சிரித்துவிட்டு "தாங்க்யூ" என்றாள். ரவியும் சிரித்தபடி "சரி, எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?" என்றான்.

"நானா? என்ன உதவி?" சந்தேகத்தோடு பார்த்தாள்.

"என் தங்கை கேதாரகௌரிக்கு அவதார் பாபா ஏதோ சாபம் கொடுத்திருக்கிறாராம். அதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கு என்று பார்த்து விடணும். என்னுடன் சேர்ந்து அவருடைய ஆசிரமத்திற்கு வரமுடியுமா?"

"வந்து என்ன செய்யணும்?"

"ஐந்து மாத கார்ப்பிணிபோல் என்னுடன் அங்கே வர வேண்டும்."

"வாட்!"

"என் மனைவியாய் உங்களை அங்கே அழைத்துப் போய். . ."

"கன்னம் பழுத்து விடும் ஜாக்கிரதை!"

"நீங்க அனாவசியமாக கோபித்துக் கொள்ளாதீங்க, மிஸ் ரஞ்சிதா! கவனமாக கேளுங்கள். இதெல்லாம் நாடகம்தான், என் அருமை தங்கையைக் காப்பாற்றுவதற்காக.

எத்தனையோ கபட மந்திரவாதிகளை எதிர்த்து நின்றிருக்கும் புரொபசர் ஜெயதேவின் பேத்தியான உங்களுக்கு இது ஒரு கடமையைப் போல்."

"நிறுத்துங்கள். செண்டிமெண்ட் நாடகம் வேண்டாம். எப்போ போகணும்?"

"அப்படி என்றால் ஒப்புக் கொண்ட மாதிரிதானே? தாங்க்யூ. நாளைக்கு நீங்க புடவை கட்டிக்காதீங்க."

"என்ன?" கண்கள் சிவக்க பார்த்தாள்.

"ஐ மீன் சல்வார் கமீஸ் போட்டுக் கொள்ளுங்கள். அதில்தான் வயிறு நன்றாகத் தெரியும்."

"இந்த மாதிரி பைத்தியக்காரத்தனமான யோசனைகளைச் சொன்னால் வரவே மாட்டேன்."

"அப்படிச் சொல்லாதீங்க. உங்கள் விருப்பம் போலவே வாங்க. நாம் நாளைக்குப் போவோம்."

★

**அ**வதார் பாபாவை தரிசிக்க பக்தர்கள் கூடியிருந்தார்கள். அந்த வரிசையில் ராகேஷும் நின்றிருந்தான். அவனுக்குப் பின்னால் ஒரு சிறுமி, புட்டண்ணா, அவர்களுக்கும் பின்னால் ரவி ரஞ்சிதா இருவரும் நின்று கொண்டிருந்தார்கள்.

ராகேஷின் முறை வந்தது. பாபா ராகேஷையே பார்த்தார். அவனை அடையாளம் புரிந்தாற்போல் தலையை அசைத்தார். மற்ற பக்தர்களைப் போலவே ராகேஷும் தன் கேள்வியை நீட்டினான். பாபா அதை வாங்கிப் படித்துவிட்டு "சரி" என்றார். ராகேஷ் நீட்டிய தாளில் 'இன்று மாலை உஸ்ஸோக் கூட்டம் இருக்கிறது. வரவேண்டும்' என்றிருந்தது.

பாபா சரி என்று சொன்னதுமே ராகேஷ் அங்கிருந்து போய்விடவில்லை. பாபாவின் கண்களைக் கூர்ந்து

பார்த்தான்.

'உஸ்ஸோக்கின் எதிர்காலத் தலைவன் இவன். அஷ்டாவக்கிரனை வளர்த்து ஆளாக்கப் போகும் பிரதம கணங்களுக்கெல்லாம் தலைமையானவன். மகாதிரஷ்டாவுக்குப் பிறகு அந்த ஸ்தானத்தை கைப்பற்றப் போகிறவன். இவனுக்கு உஸ்ஸோக் அங்கத்தினர்கள் எல்லோரும் கீழ்பட்டு இருக்க வேண்டும். மகாதிரஷ்டாவின் மரணத்திற்கு வழி வகுக்க வேண்டும்.'

மனோ ரூபவித்தையின் மூலம் அவதார் பாபா மனதில் உள்ள எண்ணங்களைக் கண்டுபிடித்துவிட்டான் ராகேஷ். பாபாவும் தன் பக்கம்தான். தனக்கு மகத்தான வெற்றி! மகாதிரஷ்டாவின் மீது அவதார் பாபாவுக்குக் கூட விரோதம்தான். அஷ்டாவக்கிரன் பிறக்க இன்னும் ஒரு மாதம்தான் இருக்கிறது. அதற்குரிய நிலைமையை தனக்கு அனுகூலமாக மாற்றிக் கொள்ள வேண்டும். முடிந்தால் மகாதிரஷ்டாவை அதற்குள் கொன்றுவிட வேண்டும்.

ராகேஷ் திருப்தியுடன் க்யூவை விட்டு நகர்ந்து ஒரு மூலையில் நின்று கொண்டான். அவதார் பாபாவைத் தன்னோடு மாலையில் கூட்டத்திற்குக் கூட்டிச் செல்ல வேண்டும் என்று நினைத்திருந்தான். இப்பொழுது பாபாவின் எண்ணமும் தெரிந்துவிட்டதால் அவருடன் வெளிப் படையாக பேசமுடியும்.

ராகேஷின் முறை முடிந்ததும் அந்த கூனிச் சிறுமி பாபாவை அணுகினாள். பாபா அந்தச் சிறுமியைப் பார்த்துச் சிரித்தார்.

"சகல உலகத்தையும் ரட்சிப்பவர் கடவுள் ஒருத்தர்தான். அந்தக் கடவுளின் மறு உருவம் நானேதான். உங்கள் கஷ்டங்களைத் தீர்க்கவே வந்திருப்பவன். முழுமனதுடன் என்னை நம்புங்கள். உங்கள் கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்துவிடும்" என்று அச்சிறுமியின் முதுகின் மேல் கையால்

தடவிக் கொடுத்து "எங்கே நிமிர்ந்து நில்" என்றார்.

அவள் தலையைக் கொஞ்சம் தூக்கினாள்.

இன்னும் . . .

இன்னும் .. .

விசித்திரம்!

அவள் தலை மேலே நிமிர்ந்தது. அவளுடைய கூன் சரியாகிவிட்டது.

அங்கிருந்த அனைவரும் திக்பிரமை அடைந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவற்றை எதுவும் நம்பாத ரவி கூட ஒரு நிமிஷம் சிலையாக நின்றுவிட்டான். வெளிநாட்டுக்காரர்கள் மளமளவென்று போட்டோ எடுத்துக் கொண்டார்கள்.

புரொபசர் புட்டண்ணா பாபாவின் கால்களில் விழுந்தார். அவர் தன் பிரச்னையைச் சொல்வதற்கு முன்பே பாபா அவர் தலைமீது கையை வைத்து "அப்பனே! உன் முதல் விருப்பம் உடனே நிறைவேறிவிடும். உன் இரண்டாவது விருப்பம் நிறைவேற கொஞ்ச நாள் காத்திருக்கணும். ஒரு மாதம் பொறுத்துக் கொள். கிருஷ்ணாபுரத்து மக்களே உன் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பார்கள். உன் எதிரியை கூண்டோடு கைலாயம் அனுப்புவார்கள்" என்றார்.

புட்டண்ணாவின் கண்களிலிருந்து பொல பொல வென்று கண்ணீர் வந்தது. வாய்விட்டு சொல்லாமலேயே மனதில் இருப்பதை பாபா புரிந்து கொண்டுவிட்டதால் ஏற்பட்ட திகைப்பினாலோ என்னவோ முகத்தில் ஒரு விதமான ஜொலிப்பு தென்பட்டது. இன்னொரு முறை பாபாவின் கால்களில் விழுந்து வணங்கினார்.

ரவிக்கு ஆச்சரியமாக இருந்தது. எப்படி இதெல்லாம் நிகழ்கிறது? மக்கள் நம்புவதுபோல் இந்த பாபாவுக்கு திவ்ய சக்தி இருக்கிறதா? தான் நினைத்துக் கொண்டிருப்பது போல்

இவர் கபட சன்னியாசி இல்லையா?

★

**மா**றுவேடமிட்டுச் சென்றிருந்த ரஞ்சிதா ரவியின் முறை வந்துவிட்டது.

ரவி பாபாவின் முன்னால் வந்து லேசாக குனிந்து ஏதோ சொல்ல வருவதற்குள் பாபா "மூடனே!" என்றார். அவன் சட்டென்று நிமிர்ந்தான்.

அதற்குள் பாபா ரஞ்சிதாவைத் திரும்பிப் பார்த்து "பெண்ணாக இருந்து கொண்டு பெரிய சாகசமெல்லாம் செய்யத் துணிந்து விட்டாய். கல்யாணமாகாமலேயே கர்ப்பிணியைப் போல் வந்து நின்று பிறக்குப் போகும் குழந்தையைப் பற்றிக் கேள்வி கேட்க துணிந்துவிட்டாய். அதன் பலனை அனுபவிப்பாய். சத்யோகர்பத்தைச் சுமக்கக் கடவாய். விவாகம் ஆகாமலேயே சூலுற்று அதற்குக் காரணம் தெரியாமல், சமூகத்திற்கு பதில் சொல்ல முடியாமல் மன வேதனையுடன் குன்றிப் போய்விடுவாய். மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தியை சவால்விட்ட நீ, எந்த உடலுறவும் இல்லாமலேயே வந்த கர்ப்பத்திற்கு பதில் சொல்ல முடியாமல் பைத்தியம் பிடித்து அலைவாய். இதுதான் உன் எதிர்காலம். இனி நீ போகலாம்" என்றார் கடுமையான குரலில்.,

அந்த இடத்தில் ஆரவாரம் எழும்பியது. ரவி சிலையாக நின்றுவிட்டான். தான் விளையாட்டாக செய்யப் போனது இந்த மாதிரி வினையாக மாறிவிடும் என்று அவன் கனவிலும் கருதவில்லை. அங்கிருந்த பக்தர்கள் இவ்விருவரையும் சுட்டெரிப்பதுபோல் பார்த்தார்கள். அங்கேயே கொன்று போட்டு விடணும் என்பது போல் துடித்தார்கள்.

ரஞ்சிதாவின் நிலையோ கேட்கவே வேண்டாம். அதுவரையில் தன்னம்பிக்கையுடன் நின்று கொண்டிருந்

தவளுக்கு அவதார் பாபாவிடமிருந்து ஏதோ சக்தி வந்து தன்னைச் சூழ்ந்து கொண்டு விட்டது போல் பிரமை ஏற்பட்டது. அந்த இடத்திலேயே நினைவு தப்பி கீழே விழுந்தாள்.

ஒரு பக்கம் எழுச்சி கொண்ட மக்கள். மறுபக்கம் மயக்கம் போட்டு விழுந்து கிடக்கும் பெண். நிலைமை ரொம்ப அலங்கோலமாகிவிட்டது. ஆனால் அதிர்ஷ்டவசமாக கவர்னருக்கு சம்பந்தப்பட்ட செக்யூரிடீ ஃபோர்ஸ் அங்கே இருந்ததால் ரவியுடன் அவளை வெளியே அனுப்பி வைக்க முடிந்தது.

ஆசிரமத்திற்கு வெளியே இருப்பவர்களுக்கு இந்த விஷயம் தெரிவதற்குள் அவளைச் சட்டென்று அழைத்து வந்து விட்டான் ரவி. அப்படியும் ஒரு மணி நேரத்திற்குள் இந்த விஷயம் ஊர் முழுவதும் தீயைப் போல் பரவிவிட்டது.

ஒவ்வொருவரும் அந்தப் பெண்ணை வெறுப்போடும், பயத்தோடும் பார்க்கத் தொடங்கினார்கள்.

மறுநாளே ரஞ்சிதாவின் பெற்றோர்கள் ஊரிலிருந்து வந்தார்கள். சூனியத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு பைத்தியம் பிடித்தவள் போல் இருந்த மகளை அழைத்துக் கொண்டு பட்டினத்திற்குப் போய்விட்டார்கள்.

ரவியின் நிலைமையை விவரிக்க வார்த்தைகளே இல்லை. சாதாரணமாக ஆரம்பித்தது ஆபத்தில் கொண்டு போய்விட்டது. இதற்கெல்லாம் அவன்தான் காரணம்.

இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறான்?

நாசமாகிவிட்ட ஒரு பெண்ணின் வாழ்க்கையை எப்படி சரியாக்குவான்? அவதார் பாபாவை எப்படி பழி வாங்க முடியும்? இவ்வளவு சிக்கலான முடிச்சை எப்படி அவிழ்க்கப் போகிறான்?

அன்று மாலை உஸ்ஸோக் கூட்டம் நடந்தது. அஷ்டாவக்கிரன் பிறப்பதற்கு முன்னால் கூடும் கடைசிக் கூட்டம் அதுவாகவே இருக்கலாம். அதனால் மெம்பர்கள் மகாதிரஷ்டாவின் சொற்பொழிவைக் கேட்க ஆர்வத்துடன் காத்திருந்தார்கள்.

மகாதிரஷ்டா சொற்பொழிவைத் தொடங்கினார். "அஷ்டாவக்கிரன் பிறக்கும் வரையிலும் இந்த ரகசியத்தை பாதுகாத்தால் போதும். பிறந்து ஒரு பாதுகாப்பான இடத்தைச் சேர்ந்த பிறகு உலகத்திற்கு இந்த விஷயத்தை வெளிப் படுத்துவோம். அதற்குள் முக்கால்வாசி பேர் நம் பக்கத்திற்கு வந்து விடுவார்கள். மீதியுள்ள கால்வாசிபேர் பிசாசு கணங்களால் செத்துமடிவார்கள்" என்று சொல்லிவிட்டு அவதார்பாபாவின் பக்கம் திரும்பி "பாபா! இன்று காலையில் உன் ஆசிரம வளாகத்தில் நடந்த சம்பவத்திற்கு நீ என்ன பதில் சொல்லப் போகிறாய்?" என்று கேட்டார்.

சபையில் திடீரென்று சலசலப்பு ஏற்பட்டது. பாபா எழுந்து நின்றார். "ரொம்ப சின்ன சம்பவம் அது" என்றார்.

"பாபா! நீ எவ்வளவோ அற்புதங்களைச் செய்கிறாய். மக்களை நம்ப வைத்து சாத்தான் மூலம் உன் கையால் பல நோய்களை குணமாக்கிக் காட்டுகிறாய். தன்னை நம்பியவர் களுக்குத்தான் இனி இவ்வுலகத்தில் சந்தோஷமும் அமைதியும் கிட்டும் என்பதை நிரூபிப்பதற்காக சாத்தான் உனக்குப் பல அற்புத சக்திகளை வழங்கியிருக்கிறது. மக்கள் உன்னை தெய்வமாக கொண்டாடுகிறார்கள். அஷ்டாவக்கிரனுக்கு எட்டு வயது வரும்போது சாத்தான் மன்னனின் ஆட்சிக்கு உலகமே தயாராகிவிடும். அந்த மாதிரி மக்களைத் தயார் செய்யும் பொறுப்பு உன்னைச் சேர்ந்தது.

அப்படியிருக்கும் போது நீ சொன்ன விஷயம் ஏதாவது நடக்காமல் போனால் உன் மேல் அவநம்பிக்கை ஏற்பட்டுவிடும் இல்லையா? பின்னே அந்தப் பெண்ணுக்கு சத்யோ கர்ப்பம் வரும் என்று எப்படி சாபம் கொடுத்தாய்? அது சாத்தியம்தானா?"

பாபா ஏதோ சொல்ல வாயைத் திறப்பதற்குள் ராகேஷ் குறுக்கிட்டு "நான் சொல்கிறேன்" என்றான்.

சபையோர் அதிர்ச்சியடைந்தார்கள்.

மகாதிரஷ்டாவின் கேள்விக்கு மற்றொருவர் இடை புகுந்து பதிலளிப்பதாவது? உஸ்ஸோக் வரலாற்றிலேயே இது வரை நடந்ததில்லை.

ராகேஷ் சொன்னான். "வந்தது கல்யாணம் ஆகாத பெண் என்றும், கர்ப்பிணி போல் நடிக்கிறாள் என்றும் பாபாவுக்குச் சொன்னது நான்தான். பக்கத்திலிருந்த இளைஞனைக் கூட எங்கேயோ பார்த்திருக்கிறேன். ஒருக்கால் வேஷம் மாற்றிக் கொண்டு வந்திருப்பான். எது என்னவானால் என்ன? அவர்களின் உண்மை சொரூபத்தை கண்டுபிடித்து விட்டதால் மக்களுக்கு பாபாவின்மேல் நம்பிக்கை அதிகரித்துவிட்டது."

"ஆனால் நாளைக்கு அந்தப் பெண்ணுக்கு கர்ப்பம் வரவில்லை என்றால்?" என்ற மகாதிரஷ்டாவின் கேள்விக்கு "வரும்" என்றார் பாபா.

அதுவரை நிசப்தமாக இருந்த சபையில் சலசலப்பு தொடங்கியது. அவதார் பாபா நிதானமாக அத்தனை உறுதியோடு சொன்னதைக் கேட்டு அவர்களுக்கு ஆச்சரிய மாக இருந்தது. பாபா மகாதிரஷ்டாவை நோக்கி "மகாதிரஷ்டா! உண்மையை வெளிப்படுத்த வேண்டிய தருணம் வந்துவிட்டது என்று நினைக்கிறேன்" என்றார்.

மகாதிரஷ்டா மௌனமாக தலையை அசைத்ததும்

பாபா சபையோரைப் பார்த்து சொல்லத் தொடங்கினார்.

"சபையோரே! ஒரு வருடத்திற்கு முன்பு வரை நான் கடவுளை நம்பியவன் இல்லை. ஒருநாள் உறங்கிக் கொண்டிருந்த போது தொலைவிலிருந்து 'வா... வா...' என்று ஒரு அழைப்பு கேட்டது. சுயநினைவு இல்லாதவன் போல் அப்படியே எழுந்து நடந்தேன். நினைவு வந்தபோது நள்ளிரவு தாண்டிவிட்டது. மயானத்தில் இருந்தேன். அங்கே எப்படி வந்தேன் என்று நான் ஆச்சரியத்துடன் திரும்பிப் போக முயன்றபோது காற்று என்னோடு பேசியது. அப்பொழுது தான் இந்த உஸ்ஸோக் சங்கத்தைப் பற்றி எனக்குத் தெரிய வந்தது. சாத்தான் இந்த பூமிக்கு வருவதற்குள் அதற்கு சாதகமான சூழ்நிலையை தோற்றுவிக்குமாறு அசரீரி என்னை பணித்தது. இது எப்படி சாத்தியம் என்று கேட்டேன். ஆவிகள் அப்பொழுதே தம் சக்தியை எனக்கு வழங்கி விட்டிருந்தன போலும். என்னுள் ஏதோ புரியாத உத்வேகம் ஏற்பட்டது. அமாவாசையன்று அவதார்பாபாவைச் சந்திக்கும்படி ஆவிகள் எனக்கு ஆணையிட்டன. அப்பொழுது அடுத்த அமாவாசைக்கு இன்னும் இருபத்தி இரண்டு நாட்கள் இருந்தன.

"நண்பர்களே! அந்த இருபத்தி இரண்டு நாட்களிலும் என்னுள் பல மாறுதல்கள் தோன்றின. பதினைந்து நாட்கள் போவதற்குள் நண்பர்கள் கூட என்னை அடையாளம் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு மாறிவிட்டேன். அமாவாசை யன்று அவதார்பாபாவின் ஆசிரமத்திற்குப் போனேன். எப்போதும் மக்கள் கூட்டம் நிரம்பி வழியும் அந்த எல்லையில் அன்று ஏதோ மாயாஜாலம் நேர்ந்தாற்போல் யாருமே இல்லை. உள்ளே போனேன். ஆசிரமத்தின் நடுமையத்தில் அவதார் பாபா விழுந்து கிடந்தார். ஆவிகள் அவருடைய ரத்தத்தை உறிஞ்சிவிட்டன போலும். அவர் தேகம் வெளுத்து உயிரற்று விழுந்து கிடந்தது.

"அப்பொழுது மறுபடியும் அசரீரியின் குரல் கேட்டது.

‘இன்றைய தினத்திலிருந்து நீ தான் அவதார்பாபா! மக்களுக்கிடையே அஷ்டாவக்கிரனின் பால் பக்தியை வளர்த்து வா. உஸ்ஸோக்கில் ஒரு ஆளுக்குக் கட்டுப்பட்டு அவன் ஆணையின்படி நடந்துகொள். அவன்தான் அஷ்டாவக்கிரனின் ராஜ்யத்தில் சகல பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்வான்.’

“என்னையும் அறியாமல் கண்ணாடியில் பார்த்துக் கொண்டேன். கண்ணாடியில் தெரிந்த என் உருவத்தைப் பார்த்து திடுக்கிட்டேன். இந்த இருபத்தி இரண்டு நாட்களில் அப்படியே அவதார்பாபாவைப் போல் மாறியிருந்தேன்.

“அந்த நேரத்திலிருந்தே நான் அவதார் பாபாவாகி விட்டேன். நாள்பட்ட வியாதிகள் கூட என் கைபட்டதுமே குணமாகத் தொடங்கின. நான் சொன்னதெல்லாம் பலிக்க ஆரம்பித்தன” என்று நிறுத்தினார்.

ராகேஷ் வியப்படைந்தான். எந்த அசரீரி தன்னுடன் பேசியதோ அதுவே பாபாவிடமும் பேசியிருக்கிறது.

அவதார்பாபா மேலும் தொடர்ந்தார். “இன்றைக்கு அந்தப் பெண்ணும் பையனும் தம்பதியைப் போல் என்னிடம் வரவே கோபம் தாங்க முடியவில்லை என்னால். சாபம் கொடுத்துவிட்டேன். இவ்வளவு நாளாக உதவி செய்து வந்த பூதசக்திகளே இதற்கும் உதவும் என்று நம்புகிறேன். பார்ப்போம்” என்று கூறிவிட்டு உட்கார்ந்து கொண்டார் அவதார் பாபா.

மகாதிரஷ்டா எழுந்து பேசத் தொடங்கினார். “பாபா மட்டுமே இல்லை. இதே போல் பல துறைகளில் தேர்ந்தவர்கள் நிறைய பேர் உஸ்ஸோக்கில் இருக்கிறார்கள். இன்னும் சேர்ந்து கொண்டே இருக்கிறார்கள் தெய்வத்தை விட பிசாசுகளே எளிதில் உதவுகின்றன என்ற எண்ணத்தை மக்களிடையே தோற்றுவித்து விட்டால் போதும், மாறிவிடுவார்கள். அவர்களுக்கு வேண்டியது தம் பிரச்னைகள் சீக்கிரத்தில் தீர்ந்து விட வேண்டும்.

அப்பொழுது ஒரு ஆள் வந்து மகாதிரஷ்டாவிடம் ஒரு சீட்டைக் கொடுத்தான். அதைப் படித்ததும் மகாதிரஷ்டாவின் முகம் மலர்ந்தது. அவதார் பாபாவைப் பார்த்து "பாபா! நாட்டின் ஆஸ்தான ஜோதிடராக நீ நியமிக்கப் பட்டிருக்கிறாய். அது மட்டுமே இல்லை. முதலமைச்சருக்கு ஆலோசகராகவும்" என்று தெரிவித்தார்.

பாபா எழுந்து நின்று நன்றியைத் தெரிவித்துவிட்டு "மகாதிரஷ்டா! புட்டண்ணாவின் விஷயம்?" என்று கேட்டார்.

மகாதிரஷ்டா சொன்னார். "கிருஷ்ணாபுரத்தில் நிகழும் எட்டாவது பிரசவம் கேதாரகௌரியுடையது. அது ரங்க பிரசாத் ஆஸ்பத்திரியில் நடக்கும். பிரசவ நேரத்தில் சித்தார்த்தாவும் அங்கே இருக்கும்படி நான் பார்த்துக் கொள்கிறேன். அந்த நேரத்தில் மக்கள் அங்கே கும்பல் கும்பலாக கூடியிருப்பார்கள். பாபா மக்களைப் பார்த்து ஒருசின்ன சைகை காட்டிவிட்டால் போதும். உடனே அவர்கள் நரிகளாக, ஓநாய்களாக மாறி ஆஸ்பத்திரியை நிர்மூலமாக்கிவிடுவார்கள். ரங்கபிரசாதையும், சித்தார்த் தாவையும் அடித்தே கொன்றுவிடுவார்கள். என் உத்தேசத்தில் அஷ்டாவக்கிரன் பிறந்ததுமே தந்தையைக் கொன்று பீதியை உண்டாக்கப் போகிறான் என்றால் இதுதான்."

சபையில் பலத்த கை தட்டல் எழும்பியது. சபை முடிந்தது. எல்லோரும் எழுந்து வெளியே போகத் தொடங்கினார்கள். பாபாவும் ராகேஷும் வாசலுக்கு வெளியில் சந்தித்துக் கொண்டார்கள்.

ராகேஷ் குரலைத் தாழ்த்திக் கொண்டு "நாம் கொஞ்சம் தனியாக பேச வேண்டும்" என்றான்.

பாபாவும் அதே குரலில் "எனக்குத் தெரியும். நாம் இவ்விஷயத்தைப் பற்றி பரஸ்பரம் பேசிக் கொள்ளத் தேவையில்லை. அஷ்டாவக்கிரன் பிறக்கும் வரையில் நீ ஜாக்கிரதையாக இரு. முக்கியமாக மகாதிரஷ்டாவுக்கு முன்னால் மனதை கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்" என்று சொல்லிவிட்டு விடுவிடென்று அங்கிருந்து போய் விட்டார்.

ராகேஷ் சிலையாய் நின்றுவிட்டான்.

★

"மன்னிப்பு கேட்டுக் கொள்வதற்குக் கூட எனக்கு தகுதியில்லை. ஆனால் ஒரு விஷயம் மட்டும் நீங்கள் நம்புங்கள். நான் எந்த கெட்ட எண்ணத்துடனும் உங்கள் பேத்தியை அங்கே அழைத்துப் போகவில்லை. அவர் கபட பாபா என்று நினைத்து அவருடைய குட்டை வெளிப்படுத்துவதற்காக ரஞ்சிதாவின் உதவியை நாடினேன். அவ்வளவுதான். இப்படி ஆகும் என்று கனவிலும் நினைக்கவில்லை."

புரொபசர் ஜெயதேவ் நிமிர்ந்து பார்த்தார். விஷயம் தம் வரைக்கும் வந்ததும் எவ்வளவு திடச்சித்தம் கொண்டவர்களாக இருந்தாலும் மனதளவில் உறுதியாக இல்லாவிட்டால் அதீதசக்திகளை நம்பி விடுவார்கள் என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு எடுத்துக்காட்டு.

ரவி வியப்படைந்தான். "தவறு ரஞ்சிதாவுடையது என்று சொல்றீங்களா?" என்றான்.

"ரஞ்சிதாவை மட்டுமே இல்லை. எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். நாத்திகவாதிகளாக இருந்த எங்கள் குடும்பத்தார் தற்போது என்ன செய்து வருகிறார்கள் தெரியுமா? தர்காவுக்கு அழைத்துப் போய் அவள் கையில் தாயத்து கட்ட வைத்திருக்கிறார்கள்" என்று சொன்னவர் எழுந்து ஜன்னல்

வழியாக வெளியில் பார்த்துக் கொண்டே "உடல் ரீதியான சம்பந்தம் இல்லாமல் ஒரு பாபாவின் வார்த்தைகளின் காரணமாக ஒரு பெண்ணிற்கு கர்ப்பம் வந்துவிடும் என்று பயப்படுவது, அப்படி வராமல் தடுப்பதற்காக தாயத்து கட்டுவது இரண்டுமே கேலிக்கூத்துதான். சொன்னால் யார் கேட்டுக் கொள்ளப் போகிறார்கள்?" என்றார் பெருமூச்சு விட்டுக் கொண்டே.

ரவியின் முகம் மலர்ந்தது. "குறைந்தபட்சம் நீங்க என்னை நம்புறீங்க இல்லையா?"

"இங்கே என்னுடைய நம்பிக்கை முக்கியம் இல்லை. ரஞ்சிதாவின் வார்த்தை அவளை அந்த அதிர்ச்சியிலிருந்து வெளியில் கொண்டு வரணும். மறுபடியும் அவளை கிருஷ்ணா புரத்துக்கு அழைத்துப் போகணும். அவள் தவறு எதுவும் செய்யவில்லை என்று கூட படிக்கும் மாணவ மாணவிகளுக்கு நடுவில் நிரூபணமாகணும். உண்மையில் அவள் செய்தது துணிச்சலான காரியம். தன்னளவில் ஒரு காரியத்தை செய்ய முயற்சி செய்து அதில் தோற்றுப் போய் விட்டாள். ஆனால் அவளை யார் புரிந்து கொள்ளப் போகிறார்கள்? நாளைக்கு அவள் மறுபடியும் கல்லூரிக்குப் போனால் சக மாணவர்களே அவளை கேலியாக பார்ப்பார்கள். மென்மையான மனம் படைத்த அவளால் இதையெல்லாம் எப்படி தாங்கிக் கொள்ள முடியும்? விபரீதமாக ஏதாவது. . ." என்றவர் ஒரு நிமிடம் நின்று "ரவீ! நீ ரஞ்சிதாவைத் திருமணம் செய்து கொள்" என்றார்.

அதுவரையிலும் சாதாரணமாக கேட்டுக் கொண்டிருந்த ரவி திடுக்கிட்டு "என்ன?" என்றான்.

"ஆமாம். உனக்கு ஆட்சேபணையில்லாத பட்சத்தில்."

அதற்குள் தேறிக் கொண்ட ரவி "ஆட்சேபணையா? இதைவிட சந்தோஷமான விஷயம் வேறு இருக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. ஆட்சேபணை ஏதாவது

இருந்தால் ரஞ்சிதாவுக்குத்தான் இருக்கணும்."

"ரஞ்சிதாவுக்கு ஆட்சேபணை இருக்காது என்றே நினைக்கிறேன். அவள் பெற்றோருக்கும் இருக்காது. பவானி சங்கரை எங்களுக்கு நன்றாகவே தெரியும்" என்றார் ஜெயதேவ்.

ரவி சட்டென்று குறுக்கிட்டு "முதலில் ஒரு விஷயத்தை தெளிவுபடுத்த விரும்புகிறேன். அப்பாவின் சொத்து எனக்கு வரப் போவதில்லை. எல்லாமே கட்சிக்குப் போய்விடும். அந்த விஷயத்தைத் தெரிவித்துவிட்டு, அவளுடைய பெற்றோர்கள் ஒப்புக் கொண்டால்தான் இந்த திருமணம் நடக்கும். என்னுடைய சந்தோஷத்திற்காக கொள்கையை விட்டுக் கொடுக்க முடியாது."

ஜெயதேவ் சிரித்தார். "இதெல்லாம் எனக்கு முன்னாடியே தெரியும். ரஞ்சிதாவின் தாய்க்கு பணத்தாசை அதிகம். ஆனால் இந்த நிலைமையில் அவளும் தடை சொல்லுவாள் என்று நான் நினைக்கவில்லை" என்றார்.

ரவி கையைக் குலுக்கிவிட்டு "போய் வருகிறேன்" என்றான்.

ஜெயதேவும் எழுந்து கொண்டார். "எவ்வளவு சீக்கிரத்தில் இந்தத் திருமணம் முடிகிறதோ, அவ்வளவு நல்லது."

"அடுத்த மாதம் என் தங்கைக்கு பிரசவம். அதற்கும் அடுத்த மாதம் வைத்துக் கொள்ளலாம்."

"தட்ஸ் குட். இந்த விஷயம் தெரிந்தாலே ரஞ்சிதா பாதி குணமாகிவிடுவாள் என்று நினைக்கிறேன்."

"நானும் அப்படியே நினைக்கிறேன். வருகிறேன்."

"நல்லது."

ரவி கேட்டைத் திறந்து கொண்டு வெளியே சென்றான். ஜன்னலுக்கு அந்தப் பக்கம் நின்றபடி அவர்களுடைய உரையாடலை கேட்டுக் கொண்டிருந்த ரஞ்சிதா சிரிப்பை அடக்க முடியாமல் அவஸ்தைப்பட்டாள். எதிர்பாராத விதமாக உரையாடல் திருமணம் பக்கம் திரும்பியதும் வெட்கப்பட்டுக் கொண்டு உள்ளே நகர்ந்தாள்.

விஷயம் இப்படித்தான் முடியும் என்று ஓரளவுக்கு ஊகித்தாலும் இவ்வளவு சீக்கிரமாக இந்த பிரஸ்தாபனை வரும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. பணத்திடம் மோகம் கொண்ட தன் தாயை 'மகளுக்குத் திருமணமே ஆகாதோ' என்ற நிலைக்குக் கொண்டு போனால் தவிர ரவி போன்ற ஆசாமியை மாப்பிள்ளையாக்கிக் கொள்ள சம்மதிக்க மாட்டாள் என்று முன்பே ஊகித்துவிட்டாள். ரவியைப் போன்ற அழகான, புத்திசாலித்தனம் மிகுந்த இளைஞனுக்காக எவ்வளவு தூரத்திற்கும் பெண்கள் துணிவார்கள் என்பதை ரஞ்சிதா நிரூபித்துவிட்டாள்.

★

அஷ்டாவக்கிரனை வளர்த்து ஆளாக்குவதற்கு நிறைய பணம் தேவைப்படும் என்று ராகேஷுக்குத் தெரியும். கேதாரகௌளரியை இப்பொழுதே கேட்டு பெற்றுக் கொண்டு விட வேண்டும் என்ற பரபரப்பில் பட்டணத்திற்குப் புறப்பட்டான். கேதாரகௌளரி அப்பொழுது பட்டணத்தில் ரவியோடு இருந்தாள்.

அதே நேரத்தில் ரவியின் வீட்டில் ரஞ்சிதாவும் ரவியும் சாமான்களை மூட்டை கட்டி வைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த பெரிய பங்களாவை தான் சார்ந்திருந்த கட்சிக் காரியாலயத்திற்கு கொடுத்துவிட்டான்.

எதிர்கால தம்பதிகள் என்பதால் அவ்விருவரும் கலந்து பழகியதை ஒருவரும் தவறாக எடுத்துக் கொள்ளவில்லை. சில

சாமான்களை தேகார கௌரிக்குத் தந்துவிட்டான் ரவி. தந்தையின் வரவு செலவு கணக்குகளை எல்லாம் பார்த்து முடிவு செய்ய நான்கு நாட்கள் பிடித்தன. வியாபாரத்தை நல்ல விலைக்கு விற்றுவிட்டான். சொந்த கால்களில் நின்று பிழைத்துக் கொள்ள அவன் முடிவு செய்திருந்தான். அந்தப் பணத்தையும் கட்சிக்கே தந்துவிட்டான்.

ரஞ்சிதாவுக்கு அவனுடைய கொள்கைகள் மிகவும் பிடித்திருந்தன. அவளும் கட்சிக்கு ஒத்துழைக்க முன் வந்தாள்.

பவானிசங்கரின் ஆபீஸ் அறையிலிருந்த சாமான்களை தனியாக எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள் அவள். சற்று முன்னால்தான் அசதியோடு போய்ப் படுத்துக் கொண்டான் ரவி.

ஒவ்வொரு பொருளாக எடுத்து குறித்துக் கொண்டு தனியாக வைத்துக் கொண்டிருந்தவளின் கண்களில் டேப் ரிகார்டரும், டிக்டாஃபோனும் தென்பட்டன. அதையும் தந்து விடலாம். ஆனால் காசெட்டை மட்டும் வைத்துக் கொள்ளலாம் என்று நினைத்தாள். பவானிசங்கர் தன் செகரெட்ரிக்குக் கடைசியாக சொன்ன கடிதமோ ஆணையோ அதில் இருக்கக்கூடும். அவருடைய நினைவாக பாதுகாக்க வேண்டும். அதில் என்ன இருக்கிறது என்று பார்ப்பதற்காக பட்டனை அழுத்தி ரிவைண்ட் செய்து ப்ளே பட்டனை அழுத்தினாள்.

ஏதோ பொத்தென்று கீழே விழுந்த சத்தம். எதையோ நகர்த்துவது போன்ற ஓசை. பிறகு குரல். . .

"கிழவனே! நீ சொன்னாயே சாடிஸ்ட் என்று, அது உண்மைதான். ஆம். நான் சைக்கோபாத்தான். கவனமாக கேள். உன் மகளை இதைவிட கொடூரமாக பழிவாங்கப் போகிறேன். குட்டிச் சாத்தான் அஷ்டாவக்கிரன் உருவத்தில் இந்த பூமிக்கு வரப்போகிறான். பிறந்ததுமே தாயைக்

கொல்லப்போகிறான். அந்த அஷ்டாவக்கிரன் பிறக்கப் போவது உன் மகளின் வயிற்றில்தான்."

பட்டனை நிறுத்திய ரஞ்சிதா பேயறைந்தவள் போல் ஆனாள். கண்கள் நிலை குத்திவிட்டன. சட்டென்று ரவியிடம் சொல்வதற்கு எழுந்தாள்.

அதே நேரம் ராகேஷ் அவ்வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தான். ஆபீஸ் அறையிலிருந்து தன் குரலைப் போல் கேட்டதும் வாசலில் அப்படியே நின்று விட்டான். அவனுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான்.

அவள் அந்தப் பக்கமாக திரும்பி நின்று கொண் டிருந்தாள். டேப் ரிகார்டர் கண்ணுக்கு தென்பட்டது. அது பவானிசங்கருடையது என்று அவனுக்குத் தெரியும். சட்டென்று விஷயம் புரிந்துவிட்டது அவனுக்கு. தன்பேச்சு டேப்பில் பதிவாகி விட்டிருக்கிறது.

வேறு யாராவதாக இருந்தால் அந்த நேரத்தில் வெலவெலத்துப் போயிருப்பார்கள். ஆனால் உடம்பெல்லாம் விஷம் நிறைந்த ராகேஷ் சற்றும் கலங்கவில்லை. அந்த அறையில் வேறு யாராவது இருக்கிறார்களா என்று பரிசீலித்தான். அங்கேயும், வராண்டாவிலேயும் யாரையும் காணவில்லை. வேலைக்காரர்களை எல்லாம் ரவி என்றோ நிறுத்தியிருந்தான். எங்கும் ஆளரவமின்றியிருந்தது.

ரஞ்சிதா டேப்பிலிருந்த பேச்சை முழுவதும் கேட்காம லேயே ரவியை எழுப்ப அவசர அவசரமாக வெளியே வந்தாள்.

ராகேஷ் அவளைக் கொல்ல முடிவு செய்துவிட்டான். தன் சம்பந்தப்பட்ட விஷயம் கொஞ்சமாவது வெளிப்பட்டு விட்டதாக சந்தேகம் ஏற்பட்டாலும் அந்த நபரை

நிதாட்சண்யமாக கொன்று விடுவது அவனுக்குக் கைவந்த கலையாகி விட்டது. ஆபீஸ் அறைக்கு பக்கத்திலேயே இருந்த இரும்புக் கழியை கையில் ஏந்தி நிசப்தமாக கதவுக்கு பக்கத்தில் பதுங்கியிருந்தான். அவள் வெளியே வந்ததுதான் தாமதம், அவள் தலையில் இரும்புக் கழியால் ஓங்கி அடித்தான். வீலென்று கத்துவதற்குள் மற்றொரு அடி. அவள் கீழே சரிந்து விழுந்து கொண்டிருந்தபோது மறுபடியும் அடிப்பதற்காக கழியை ஓங்கினான். அந்த அடி மட்டும் பட்டிருந்தால் அவள் தலை இரண்டாக பிளந்திருக்கும். ஆனால் அதற்குள் தொலைவில் சந்தடி கேட்டது. அந்தப் பக்கமாக பார்த்தான். ரவி வந்து கொண்டிருந்தான்.

சட்டென்று ஆபீஸ் மேஜைக்குப் பின்னால் பதுங்கிக் கொண்டான் ராகேஷ். அவன் கை இரும்புக் கழியை மேலும் அழுத்தமாக பற்றிக் கொண்டது. ரவி உள்ளே வந்தால் அவன் உயிரையும் எடுத்துவிட முடிவு செய்தான்.

ரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்தவளைப் பார்த்ததும் ரவி "ரஞ்சிதா!" என்று கலவரத்துடன் குனிந்தான். அவன் சந்தேகம் யாராவது திருடன் வந்திருப்பானோ என்றுதான். ஆபீஸ் அறைக்குள் நுழைந்து மேலாக நோட்டமிட்டான். வைத்தது வைத்தபடியே இருந்தன.

மேஜைக்குப் பின்னாலிருந்த ராகேஷ் மூச்சை அடக்கிக் கொண்டான். ரவி மட்டும் ஓரடி முன்னோக்கி வைத்திருந்தால் போதும் மேலே பாய்ந்து கொன்றுவிட எண்ணியிருந்தான்.

ஆனால் அவ்வாறு நிகழவில்லை. ரவி சட்டென்று திரும்பி ரஞ்சிதாவிடம் சென்று அவளை அப்படியே அலாக்காகத் தூக்கிக் கொண்டு காரை நோக்கி ஓடினான். அந்த சமயத்தில் அவன் வீட்டைப் பற்றிக் கூட கவலைப்படவில்லை.

கார் கிளம்பி வேகமாக மறைந்தது. அது தொலைவில்

போய் மறைந்தது தெரிந்ததும் ராகேஷ் எழுந்தான். அவன் கையில் டேப்ரிகார்டர் இருந்தது. அதை எடுத்துக் கொண்டு தோட்டத்திற்கு போனான். சுற்றிலும் யாருமில்லை என்று உறுதி செய்து கொண்டு டேப் பட்டனை அழுத்தினான்.

“. . . .புரிந்ததா. என்னை மறுத்துவிட்டு அந்த சித்தார்த்தாவை . . .” என்று கேட்டது. அதுவரையிலும் கேட்டிருப்பாள் போலும். உடனே டேப்பை ரிவைண்ட் செய்து முதலிலிருந்து கேட்டான். எங்கேயும் அவன் பெயர் பிரஸ்தாபிக்கப் படவில்லை. அவன் காசெட்டை எடுத்து நெருப்புக்குச்சியைக் கிழித்து பற்றவைத்தான். புஸ்ஸென்று தீ பரவியது. முற்றிலும் எரிந்து முடியும் வரையில் அங்கேயே நின்று கொண்டிருந்தான். பிறகு டேப்ரிகார்டரை எடுத்துக் கொண்டு ஆபீஸ் அறைக்கு வந்தான். அதை இருந்த இடத்திலேயே வைத்துவிட்டான்.

அவன் கொஞ்சமும் தடுமாறவில்லை. ரஞ்சிதாவுக்கு நினைவு திரும்ப இரண்டு மூன்று மணி நேரம் ஆகலாம். ரஞ்சிதா என்றுமே அவனிடம் பேசியதில்லை. அதனால் அந்தக் குரலை அடையாளம் தெரிந்து கொண்டிருக்கமாட்டாள். அந்த உரையாடலில் எங்குமே கொலை பற்றிய பிரஸ்தாபனை இல்லை. அதனால் பவானிசங்கரின் கடைசி நேரத்தில் அந்தப் பேச்சு பதிவாகியிருக்கிறது என்றோ, பவானிசங்கர் ஆபீஸ் அறையில் கொலை செய்யப்பட்டார் என்றோ அந்தப் பேச்சிலிருந்து தெரிய வாய்ப்பு இல்லை. ஆனாலும் அவன் அலட்சியமாக இருக்க விரும்பவில்லை. உடனே ஆஸ்பத்திரிக்குக் கிளம்பினான். ஒருக்கால் ரஞ்சிதா நினைவு வந்த பிறகு சந்தேகத்திற்கு இடம் தரும் வகையில் ஸ்டேட்மெண்ட் ஏதாவது கொடுக்கத் தொடங்கினால் அந்த இடத்திலேயே கொன்றுவிட தீர்மானித்தான். தேவைப் பட்டால் ரவியையும்! அவன் பேண்ட் ஜேபியில் ரிவால்வர் தயாராக இருந்தது.

ஒருக்கால் அதனைப் பயன்படுத்த தேவையில்லாமல் போகலாம். ஏனெனில் அவனுக்குப் பின்னால் இரண்டு வேட்டை நாய்கள் நடந்து வந்து கொண்டிருந்தன. சுமார் மூன்றடி உயரமுள்ள நாய்கள் அவை. ஒரு மனிதனைக் கொன்றுவிட அவற்றுக்கு இரண்டே வினாடிகள் போதும்.

## 23

“**ப**வதி பிட் சாம் தேஹி... மாதா அன்னபூர்ணேஸ்வரி!”

நடு மதிய வேளை அது. வெயில் நெருப்பாய் தகித்துக் கொண்டிருந்தது. ஒரு சிலரைத் தவிர கிராமமே உறங்கிக் கொண்டிருந்தது.

“அன்னபூரணி தாயே! ஒரு கவளம் பிச்சை போடம்மா.”

கேதாரகௌரி படுக்கையிலிருந்து எழுந்து கொள்ளா மலேயே “போய் வா” என்றாள் அசதியோடு. பிரசவ நாள் நெருங்க நெருங்க அவளுக்கு சோர்வு அதிகரித்தது.

“அம்மா! ஒரு நாளைக்கு மூன்று வீடுகளுக்கு மேல் கேட்பது என் வழக்கமில்லை. பிச்சையெடுத்த ஊரிலும் ராபொழுதைக் கழிக்கவும் கூடாது. ஏற்கனவே இரண்டு வீடுகளில் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். இது மூன்றாவது வீடு. பசியுடனேயே ஊரைவிட்டு போகச் சொல்கிறாயா தாயே?”

அந்த வார்த்தைகளில் இருந்த தூய்மையால் கலவரப் பட்ட கேதாரகௌரி படுக்கையில் இருந்தபடியே ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தாள்.

ஆஜானுபாகுவாய் துறவியைப் போல் இருந்தான்.

அவள் உள்ளே போய் இருந்ததைக் கொண்டு வந்து போட்டாள். அவள் குனிந்தபோது வாழைமரம் குலையோடு பாரமாக சாய்வது போல் இருந்தது.

கண்கள் பனிக்க பரிவோடு அவளைப் பார்த்தவன் "நல்லபடியாக ஆண் குழந்தையை பெற்றெடு தாயே" என்றான் ஆசீர்வாதம் செய்வது போல். காலியான பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கௌரி திரும்பப் போனாள்.

அவன் பார்வை அவள் வயிற்றின் மீது பட்டது. வேடனின் அம்பு பட்ட மான் போல் துடிதுடித்தான்.

"இங்கேயா? இங்குதானா?" என்று முணுமுணுத்தான். அவன் முகம் வெளிறிப் போயிற்று. கண்களில் கலவரம் நன்றாகத் தெரிந்தது.

தன்னையும் அறியாமல் ஓரடி பின் வாங்கினான். "கருச்சிதைவு ஆகிவிட வேண்டும். பெரிய உயிருக்கு ஆபத்து வந்தாலும் சரி. இந்தக் குழந்தை பூமிக்கு வரக் கூடாது." முணுமுணுத்தான்.

அவளுக்குப் புரியவில்லை. "என்ன?" என்றாள். அவசர அவசரமாகச் சொன்னான். "குட்டிச் சாத்தான் அஷ்டா வக்கிரனின் ரூபத்தில் பூமிக்கு வராமல் தடுக்க வேண்டு மென்றால் மந்திரஜலம் தேவை. பஞ்சமகா யாகங்களான தேவ, மனித, பித்ரு தேவதா, பூத, பிரம்ம யாகங்களில் ஏதேனும் ஒன்றைச் செய்து காஷ்மோரா பூமிக்கு வராமல் தடுக்கும் வழியைத் தெரிந்து கொள்ளச் சொல். சமயம் அதிகம் இல்லை. இன்னும் கொஞ்ச நாள்தான்" என்று அங்கிருந்து கோபமாக போய்விட்டான்.

கௌரி அப்படியே நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு சிரிப்பு வந்தது. இதையெல்லாம் நம்புகிற பெண் இல்லை அவள். சிரித்துக் கொண்டே உள்ளே போய்விட்டாள். அதற்குப் பிறகு கணவன் வந்ததும் அந்த விஷயத்தை மறந்தே போய் விட்டாள்.

★

ஜன்னல் வழியாய் ஓசைப்படுத்தாமல் உள்ளே எட்டிப்

பார்த்தான் ராகேஷ். அதற்குள் கால்மணி ஆகிவிட்டது. டாக்டர் பாண்டேஜ் கட்டிவிட்டு இஞ்ஜக்ஷன் செய்தார். "நல்லவேளை. தலைமுடி அடர்த்தியாக இருந்ததால் காப்பாற்றப்பட்டுவிட்டாள். பயத்தால் நினைவு தப்பிவிட்டது. அவ்வளவுதான். கொஞ்சநேரத்தில் சரியாகிவிடுவாள்" என்று வெளியே போய்விட்டார்.

ராகேஷ் ஜன்னலுக்கு அருகிலேயே நின்றிருந்தான். அதற்குள் ரவியின் குரல் பதட்டமாக கேட்டது. "எப்படி இருக்கு ரஞ்சிதா?"

"இட்ஸ் ஆல் ரைட். நன்றாகத்தான் இருக்கிறேன்."

"என்ன நடந்தது?"

"மாமாவின் அறையில் பொருட்கள் ஒவ்வொன்றாய் எடுத்து வைத்துக் கொண்டிருந்தேன். டேப்ரிகார்டர் தென் பட்டது. கடைசியாக பேசிய பேச்சு ஏதாவது இருக்குமோன்னு போட்டுப் பார்த்தேன். அதில். . . அதில். . ." பயத்தினால் வாய் குழறியது.

ஜன்னலுக்கு அப்பால் நின்றபடி கேட்டுக் கொண்டிருந்த ராகேஷின் உள்ளங்கை முறுக்கேறியது. சுற்றிலும் பார்த்தான். எங்கும் ஆளரவமில்லை. அங்கிருந்து சுடுவது ரிஸ்க்தான். ஆனால் வேறு வழியில்லை. அதற்குள் உள்ளேயிருந்து மறுபடியும் ரவியின் குரல் கேட்டது. "அதில் . . . அதில் என்ன இருக்கிறது?"

"அதில் குட்டிச் சாத்தான் என்று ஏதோ இருந்தது."

"குட்டிச் சாத்தானா? அப்புறம்?" என்று பரபரக்கக் கேட்டான் ரவி.

அவள் நினைவு படுத்திக் கொள்ள முயன்றபோது தாங்க முடியாத தலைவலி வந்துவிட்டது. "எனக்கு நினைவு இல்லை" என்றாள் தலையைச் சிலிர்த்துக் கொண்டு.

ராகேஷ் நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டான். ரஞ்சிதா தன்னுடைய குரலை டேப்ரிகார்டரில் அடையாளம் தெரிந்து கொள்ளவில்லை. அதுபோதும். கேசட்டையும் எரித்துவிட்ட பிறகு எந்த சாட்சியமும் எஞ்சியிருக்காது. கொலை என்ற விஷயம் வெளிப்பட வாய்ப்பு இல்லை. திருடன் எவனாவது உள்ளே நுழைந்து ரஞ்சிதாவின் தலையில் அடித்துவிட்டு ஒன்றும் கிடைக்காமல் ஓடிவிட்டான் போலும் என்று எல்லோரும் நினைத்துக் கொள்வார்கள்.

"நினைவு இல்லையா? போகட்டும் விடு" என்று ரவி சொன்னது கேட்டது.

ராகேஷின் முகம் மலர்ந்தது. இனி அங்கே தனக்கு வேலை இல்லை என்று நகர்ந்தான். அவன் வாழ்நாளிலேயே செய்த பெரும் பிழை அதுதான், ரவியைத் தவறாக எடைபோட்டது.

"சரி நினைவு இல்லாவிட்டால் போகட்டும் விடு" என்று அப்போதைக்குச் சொல்லிவிட்டானே தவிர அவன் யோசித்துக் கொண்டுதான் இருந்தான். குட்டிச் சாத்தான் என்ற வார்த்தை தந்தையின் டேப்ரிகார்டரில் ஏன் வர வேண்டும்?

தலையில் காயத்துடன் அதிர்ச்சியோடு படுத்திருக்கும் ரஞ்சிதாவை அந்த சமயத்தில் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று விட்டுவிட்டான். இரண்டு நாட்களுக்குப் பிறகு அந்த பேச்சை மறுபடியும் எடுத்தான்.

ரஞ்சிதா அவனை குழப்பத்துடன் பார்த்தாள். "எனக்கு நினைவு இல்லை."

"அப்படிச் சொல்லிவிட்டால் போதாது. நினைவு படுத்திப் பாரு."

“ஏதோ வயிற்றில் பிறப்பது, சைக்கோபாத் இது போன்ற வார்த்தைகள் கேட்டன. கோர்வையாக சொல்லும் அளவுக்கு எனக்கு நினைவு இல்லை.”

“ரஞ்சிதா! நீயோ நினைவாற்றலில் புலி. இது கூடவா உன்னால் முடியாது? சம்பந்தமே இல்லாத வார்த்தைகளைக் கூட ஞாபகம் வைத்துக் கொள்ள முடிந்த உன்னால் நாலு வரிகளை நினைவுபடுத்திக் கொள்ள முடியாது என்றால் என்னால் நம்ப முடியவில்லை. நினைவுபடுத்திப் பாரேன் ப்ளீஸ்.”

அவள் கண்களை மூடிக் கொண்டாள். ரவி தூண்டி விட்டதில் அவளுள் ஏதோ சக்தி பிறந்தாற்போல் இருந்தது. சக்தியெல்லாம் திரட்டிக் கொண்டு யோசிக்கத் தொடங்கினாள்.

மேகத்திரை விலகினாற் போல். . . வெளிச்சம் வெளிப்பட்டாற் போல். . .

அவள் கண்களை மூடிக் கொண்டே சொல்லத் தொடங்கினாள். அவள் மூளையின் அடிவாரத்தில் எங்கேயோ புதையுண்டு கிடந்தவை வெள்ளப் பிரவாகமாக வெளிவரத் தொடங்கின.

“உஸ்ஸோக் பிரபுவான குட்டிச் சாத்தான் அஷ்டாவக்கிரன் உருவத்தில் இந்த பூமிக்கு வரப் போகிறான். நாங்கள் அவனுக்கு உதவி புரிகிறோம். பிறந்ததுமே தாயைக் கொன்று விடுவான். பிறந்த அன்றே தந்தையும் இறந்து போவார். பெரியவன் ஆனதும் பிசாசுகளின் உதவியுடன் ராஜியத்தை ஆளப் போகிறான். கேள்! அந்த அஷ்டாவக்கிரன் பிறக்கப் போவது உன் மகளின் வயிற்றில்தான்.”

ரவி சிலையாகிவிட்டான். இவ்வார்த்தைகள், தன் தந்தையின் முன்னிலையில் பதிவாகியிருக்கின்றன. ஒருக்கால் ஆதரவற்ற நிலையில் அவர் இதை பதிவு செய்திருக்க

வேண்டும். அவன் யோசித்தது அதைப் பற்றியில்லை. தன் தங்கையின் வயிற்றில் பிறக்கப் போகும் சிசுவைப் பற்றித்தான்.

அஷ்டாவக்கிரன்!

இந்தப் பெயரை இதற்கு முன்பே கேட்ட நினைவு. எங்கே? எ.. ங். .. கே?

சட்டென்று நினைவுக்கு வந்தது. அவதார் பாபா தன் தங்கைக்கு சாபம் கொடுத்தபோது இந்த வார்த்தையைத்தான் உபயோகித்தார். அஷ்டாவக்கிரன்! இங்கே தந்தையின் முன்னிலையிலும், அங்கே அவதார் பாபா வாயிலிருந்தும் ஒரே மாதிரி வெளிவந்தது யதேச்சையாகவா அல்லது இதற்குப் பின்னால் ஏதாவது காரணம் இருக்கிறதா? தன் தந்தை இந்த விஷயத்தை பதிவு செய்த பிறகு யாரிடமும் சொல்லாமல் ஏன் அந்த காசட்டை அப்படியே வைத்திருந்தார்? மகள் சம்பந்தப் பட்ட விஷயத்தில் அத்தனை அலட்சியமாக இருந்திருக்க மாட்டாரே?

அப்படியிருக்கும்போது சாவகாசமாக பாத்ரூமுக்குள் நுழைந்து குளித்துக் கொண்டிருக்க மாட்டார்.

ஏதோ தோன்றவே அவன் வேகமாக வீட்டை அடைந்தான். தந்தை இறந்தது முதல், வீடு அப்படியேதான் இருந்தது. பாத்ரூமும் . . . உடைந்த கதவுகளும்.

காவல்துறையும் ரொம்ப அக்கறை எடுத்துக் கொள்ள வில்லை. அவன் கதவைப் பரிசீலித்தான். அவன் சந்தேகம் சரியாக இருந்தது. உள் பக்கத் தாழ்ப்பாள் உடைய வில்லை. உண்மையில் வேலைக்காரர்கள் கதவை உடைத்துக் கொண்டு பாத்ரூமுக்குள் நுழைந்திருந்தால் உள்தாழ்ப்பாள் உடைந் திருக்கவேண்டுமே?

அவன் மேற்கொண்டு தாமதிக்கவில்லை. வேலைக் காரர்களின் விலாசத்தைத் தேடிக் கொண்டு போனான். பவானி சங்கர் இறந்து போனதும் எல்லோரும் போய்

விட்டார்கள். முதல் வேலைக்காரன் அந்த முகவரியிலேயே இல்லை. எங்கே போனான் என்று யாருக்குமே தெரியவில்லை.

இரண்டாவது ஆளும் வீட்டைக் காலி செய்து விட்டுப் போயிருந்தான். "எங்கே போனான் என்று உங்களுக்குத் தெரியுமா?" அந்த வீட்டிற்குப் புதிதாக குடி வந்தவர்களை விசாரித்தான் ரவி.

"ஏதோ ஊரின் பெயர் சொன்னான். லெட்டர் ஏதாவது வந்தால் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். வந்து வாங்கிக் கொள்கிறேன் என்று சொன்னான்" என்றாள் அந்தம்மாள்.

"எந்த ஊரு?" பதற்றத்தோடு கேட்டான் ரவி.

"ஏதோ ஊர். . . நினைவுக்கு வந்து விட்டது. கிருஷ்ணாபுரம்."

ஷாக் அடித்தாற் போல் இருந்தது ரவிக்கு. கிருஷ்ணா புரத்தில் அவன் தேடிச் செல்லும் ஆள் மட்டும் கிடைத்து விட்டால் தன் தந்தையின் மரணத்தின் போது நிகழ்ந்த அத்தனையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

கிருஷ்ணாபுரம்!

அவதார்பாபா இருக்கும் ஊர். தன் தங்கை இருக்கும் ஊர். ஆறு விக்ருத சிசுக்கள் பிறந்த ஊர்.

அவன் முடிச்சை அவிழ்க்கத் தொடங்கிவிட்டான். மூட்டைக்குள் இருக்கப் போவதைத்தான் காணப் போகிறானோ அல்லது உலகத்தின் எதிர்காலத்தைத்தான் துப்புத் துலக்கப்போகிறானோ - இன்னும் பதினைந்து நாட்களில் தெரிந்துவிடும்.

★

ரவி கிருஷ்ணாபுரம் போய்ச் சேரும் வரையில் யோசனையில் மூழ்கியிருந்தான்.

கிறார்கள். ஏன் என்று தெரியவில்லை. அதில் ஒருத்தன் கிருஷ்ணாபுரத்திற்கு ஜாகை மாறிவிட்டான்.

திடீரென்று அண்ணனைப் பார்த்த கௌரி கலவரமடைந்தாள். "ரஞ்சிதாவுக்கு எப்படி இருக்கு அண்ணா?" என்று கவலையுடன் கேட்டாள்.

"நன்றாகத்தான் இருக்கிறாள்" என்று பொதுவாக சற்று நேரம் உரையாடினான். மாலையில் தற்செயலாக கேட்பது போல் தங்கையிடம் கேட்டான். "அன்றைக்கு அவதார்பாபா என்ன சொன்னார்?"

"என்றைக்கு?"

"அதான் நீ கேள்வி கேட்கப் போனாயே, அன்றைக்கு."

"ஏதோ அஷ்டாவக்கிரன் என்று. . ."

அப்படி என்றால் அவன் நினைத்தது சரிதான். ரஞ்சிதா டேப்ரிகார்டரில் கேட்டதுதான் அவதார்பாபாவின் வாயிலிருந்தும் வந்திருக்கிறது.

'உஸ்ஸோக் பிரபுவான குட்டிச்சாத்தான் அஷ்டாவக்கிரனின் உருவத்தில் இந்த பூமிக்கு வரப் போகிறான்.'

குட்டிச் சாத்தான் என்றால் பிசாசு என்று தெரியும். தெரிய வேண்டியது ஒன்றுதான்.

உஸ்ஸோக் என்றால் என்ன? டேப்பில் பேசியது அவதார்பாபா இல்லை. இருந்தால் ரஞ்சிதாவுக்கு அந்தக் குரல் அடையாளம் தெரிந்திருக்கும். ஆக மொத்தம் இரண்டு பேருக்கு நிச்சயமாக உஸ்ஸோக் என்றால் என்னவென்று தெரியும். ஒருத்தன் அவதார் பாபா. இன்னொருத்தன்?

சட்டென்று ஒரு யோசனை வந்தது. கொஞ்சம்

சிக்கலான யோசனை. எட்டாத கனி. குறி தவறியும் போகலாம். ஆனால் இந்தச் சமயத்தில் இதை விட வேறு வழியில்லை.

அவன் ஆசிரமத்தை நோக்கி நடந்தான்.

சீடர்களைத் தவிர வேறு எந்த பக்தர் கூட்டத்தையும் காணவில்லை. இன்னும் பாபாவின் தரிசன வேளை நெருங்கவில்லை. அவன் இங்கும் அங்கும் பார்த்தான். யாரும் பார்க்கவில்லை என்று உறுதி செய்து கொண்டு தான் கொண்டு வந்த கரித்துண்டால் சுவற்றின் மேல் கண்ணில் படும்படி எழுதினான் -

'உஸ்ஸோக்' என்று.

## 24

**டா**க்டர் ரங்கபிரசாத் உள் அறையிலிருந்து வெளியே வந்தார். உள்ளே லேடி டாக்டர் கௌரியிடம் பேசிக் கொண்டு இருந்தாள்.

"எப்படி இருக்கிறாள்?" வெளியே உட்கார்ந்திருந்த சித்தார்த்தா கேட்டான்.

"இன்னும் ஒரே வாரம்தான்" என்றார் டாக்டர் ரங்கபிரசாத்.

சித்தார்த்தா காலண்டரைப் பார்த்தான். ஏழு நாட்களைக் கூட்டிப் பார்த்துவிட்டு "சரியாக அமாவாசை அன்றைக்கு போலிருக்கு" என்றான்.

அதற்குள் லேடி டாக்டர் உள்ளேயிருந்து வந்தாள். ரங்கபிரசாத் அவளிடம் ஏதோ கேட்டார். சித்தார்த்தாவுக்கு அந்த மெடிகல் சொற்கள் சரியாக புரியவில்லை. இருந்தாலும் ஏதோ பிரச்னை இருப்பது போல் ஊகித்து "என்ன விஷயம்?" என்றான் ரங்கபிரசாதிடம்.

"இரட்டைக் குழந்தையோன்னு சந்தேகமாக இருக்கு. டெலிவரிக்கு பட்டணத்திற்கு அழைத்துப்போவது நல்லது" என்றாள் லேடி டாக்டர்.

"கண்டிப்பாக அழைத்துப்போகிறேன்" என்றான் சித்தார்த்தா.

"ஏன்?" கேட்டாள் கௌரி மெதுவாக உள்ளேயிருந்து நடந்து வந்தபடி.

"அங்கே இன்னும் சௌகரியமாக இருக்கும். இந்த கிராமத்தில் அவசரமாக ஏதாவது வேண்டும் என்றால் கிடைக்காது இல்லையா?" என்றான் சித்தார்த்தா.

கௌரி ரங்கபிரசாத் பக்கம் திரும்பி "இங்கே உங்களுக்குக் கிடைக்காத சௌகரியம் என்ன டாக்டர்?" என்று கேட்டாள்.

சித்தார்த்தா குறுக்கிட்டு "டாக்டர் இரட்டை குழந்தையாக இருக்கலாம் என்று சந்தேகப்படுகிறார். அதனால் பட்டணமாக இருந்தால் வசதியாக இருக்கும் என்றுதான்" என்றான்.

"எத்தனையோ இரட்டைக் குழந்தைகள் பிறந்த போதும், அதைவிட கஷ்டமான பிரசவ கேஸுகளையும் இந்த ஆஸ்பத்திரியில் பார்த்திருக்கீங்களே டாக்டர்" என்றாள் கௌரி.

சித்தார்த்தாவுக்கு கோபம் வந்தது. "அதனால்தான் இங்கே வேண்டாம் என்கிறேன்" என்றான் சற்று உரத்த குரலில்.

கௌரி நிதானமாக நிமிர்ந்து கணவனைப் பார்த்தாள். பிறகு ரங்கபிரசாதை நோக்கி "நீங்க இந்த ஆஸ்பத்திரியில் பிரசவ கேஸ் பார்த்து எவ்வளவு நாளாச்சு டாக்டர்?" என்று கேட்டாள்.

சம்பந்தமில்லாத அந்தக் கேள்விக்கு ரங்கபிரசாத் பதிலளிக்கவில்லை. கௌரி சொல்லத் தொடங்கினாள்.

“ஒரு காலத்தில் இந்த ஆஸ்பத்திரியில் நோயாளிகளின் கூட்டம் நிரம்பி வழிந்தது. டாக்டரின் கைபட்டாலே போதும் என்று நினைப்பார்கள் நோயாளிகள். அந்தக் கூட்டத்தை சமாளிக்க இன்னொரு லேடீ டாக்டரையும் உதவிக்கு சேர்த்துக் கொண்டீங்க. ஆனால் இப்போ பாருங்கள். இந்த ஆஸ்பத்திரி எப்படி வெலவெலத்துப் போய்விட்டது? ஓரிருவரைத் தவிர யாருமே இல்லை. நேற்று முந்தா நாள் வரையில் படையெடுத்து வந்து கொண்டிருந்த மக்களை இன்று தடுத்து நிறுத்துவது எது? மூடநம்பிக்கை! ஆம். . . மூடநம்பிக்கைதான். இன்றைக்கோ நாளைக்கோ குழந்தை பிறக்கப் போகும் தருணத்திலிருந்த பெண்கள் மூவர் கிராமத்தை விட்டுப் போய்விட்டார்கள். கூலி வேலை செய்து பிழைப்பவர்கள். பண வசதியில்லாதவர்கள். ஆனாலும் மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டு போய்விட்டார்கள். இன்றைக்கு நாமும் போய்விடலாம் என்று சொல்றீங்க. உண்மையான காரணம் வசதி போறாது என்பது இல்லை. ஆறு விக்ருத சிசுக்கள் பிறந்துவிட்டார்கள். நமக்கு என்ன ஆகுமோ என்ற பயம். எங்கே சொல்லுங்கள் பார்ப்போம், இரட்டை குழந்தைகள் பிறக்கிறதற்குத் தகுந்த வசதியில்லாத ஆஸ்பத்திரியா இது? நீங்க சொல்கிற அந்த நவீன கருவிகள் எல்லாம் பட்டணத்து ஆஸ்பத்திரியில் உண்மையாகவே இருக்கின்றனவா? இருக்குன்னு நேர்மையாக ஒப்புக் கொண்டால் கண்டிப்பாக வருகிறேன். ஆனால் இல்லை யென்று உங்களுக்கும் தெரியும். பிழைக்கிற குழந்தை எங்கேயும் பிழைக்கும்” என்று அருகில் வந்தாள்.

“எல்லாவற்றையும் விட்டுவிட்டு வந்து இந்த கிராமத்தில் பிராக்டீஸ் செய்து கொண்டு இருக்கிறார். ஏழைக்கு இரங்குபவர் என்றும், கண்கண்ட தெய்வம் என்றும் இதுவரை போற்றி வந்த நோயாளிகள் இன்று நிலைமை கொஞ்சம் மாறியதுமே காணாமல் போய்விட்டார்கள். பட்டிணத்தில் நவீன வசதிகள் இருக்கு என்று சொல்லிக்

கொண்டு மனசாட்சியை மறந்துவிட்டு நான் வரத் தயாராக இல்லை. இந்த ஆஸ்பத்திரியில்தான் நான் குழந்தையை பெற்றுக் கொள்ளப் போகிறேன். நர்ஸுகளுடன் சேர்ந்து எல்லோரும் பயந்து போய் ஓடினாலும் ஓடிப் போகட்டும். நான் மட்டும் வரமுடியாது. இந்த ஆஸ்பத்திரியில் நான் ஒருத்தி மட்டுமே இருக்க நேர்ந்தாலும் சரி. உங்களுக்கு நம்பிக்கை தருவதற்காக நான் இங்கேயே இருப்பேன். இந்த உலகமே எதிர்த்து வந்தாலும் சரி" என்று மூச்சு விடாமல் சொல்லிவிட்டு நகர்ந்தாள் கௌரி.

நிறைமாத கர்ப்பிணி அப்படி அசைந்து நடந்து போவதைக் கண்ட போது இமயத்தைக் கூட நடுநடுங்கச் செய்து ஆவேசத்தோடு பூமிக்கு வந்து குதித்த கங்கையின் நினைவுதான் வந்தது.

ரங்கபிரசாத் அப்படியே மலைத்துப் போய் நின்று விட்டார். அவர் உள்ளத்தில் இனம்புரியாத உருக்கம் நிரம்பி வழிந்தது. சித்தார்த்தா கலவரத்தோடு மனைவியைப் பின் தொடர்ந்து போனான்.

★

இரண்டு நாட்களாக ரவி அங்கேயே மறைவில் நின்றபடி வருவோர் போவோர்களை எல்லாம் கவனித்து வந்தான். ஒரு விவரமும் கிடைக்கவில்லை. சரியான உணவும், தூக்கமும் இல்லாமல் மயக்கம் வரும் போல் இருந்தது அவனுக்கு. ஆனாலும் அவன் காத்திருந்தது வீண் போகவில்லை.

மூன்றாவது நாள் நடுத்தர வயது ஆண் ஒருத்தன், ஒல்லியாக இருந்தவனின் பார்வை, சுவரின் மேல் பட்டது. உடனே அவன் முகத்தில் மாறுதல் தெரிந்தது. க்யூவை விட்டுச் சட்டென்று விலகி சுவரருகில் வந்து கூர்ந்து கவனித்தான்.

ரவி ஏதோ வேலையிருப்பது போல் மெல்ல அவனை அணுகி தாழ்ந்த குரலில் "உஸ்ஸோக்" என்றான்.

எலும்புக் கூடு போல் ஒல்லியாக இருந்த அந்த ஆள் திடுக்கிட்டான். ரவி அங்கிருந்து வெளியே வந்து விட்டான். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு திரும்பிப் பார்த்தபோது அவன் தன்னைப் பின் தொடர்ந்து வருவது தென்பட்டது. இருவரும் சந்தடியில்லாத இடத்தை அடைந்ததும் "சொல் நண்பனே!" என்றான் அவன்.

என்ன சொல்வது என்று புரியாமல் ரவி மறுபடியும் "உஸ்ஸோக்" என்றான்.

"என்ன? மறுபடியும் ஏதாவது மீட்டிங்கா?"

ரவிக்கு ஏதோ ஆதாரம் கிடைத்தாற் போல் இருந்தது. "அதுதான். எப்போ என்று தெரியாது. அதைப் பற்றி கேட்கத்தான் வந்தேன்" என்றான். அந்த இடம் முழுவதும் இருளில் மூழ்கியிருந்தது. தொலைவில் மனிதர்கள் மங்கலாக தெரிந்தார்கள்.

"போய் அவதார்பாபாவைக் கேட்டுக் கொண்டு வருகிறேன்" என்று போனான் அவன். ரவியின் இதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது. ஐந்து நிமிடங்களில் திரும்பி வந்தவன் "இப்போ எந்த மீட்டிங்கும் இல்லையாம்" என்றான்.

"அப்படியா" என்றான் ரவி.

"அது சரி. நீ பிளாக் ஸ்கெலிடனா?"

"இல்லை."

"பின்னே?" சந்தேகத்தோடு பார்த்தான் அவன்.

"உஸ்ஸோக்கில் சேர விரும்புகிறேன். ஒரு நண்பன் சேர்த்து விடுவதாகச் சொன்னான். சமீபத்தில் இறந்து விட்டான்."

"எல்லா சோதனையும் முடிந்துவிட்டதா?"

"ஆம். பூர்வாங்க சோதனையெல்லாம் முடிந்துவிட்டது. சேர வேண்டியதுதான் பாக்கி. அதற்குள் இப்படி ஆகி விட்டது."

"உன் நண்பனின் பெயர்?"

"ராம்சிங்."

பவானிசங்கரின் வேலைக்காரரின் பெயர் அது. ரவிக்கு தான் இருட்டில் அம்பை எய்திக் கொண்டிருக்கிறான் என்று தெரியும். அது சரியான இடத்தில் போய் தைத்துக் கொண்டது என்று தெரியாது.

"உஸ்ஸோக்கில் சேர விரும்புகிறாயா?" திரும்பவும் கேட்டான் அவன்.

"ஆமாம். ராம்சிங் எல்லா பரிசோதனைகளையும் முடித்துவிட்டு உஸ்ஸோக் பற்றியும் சொல்லியிருக்கிறான்."

"ஆனாலும் எல்லாவற்றையும் விடப் பெரிய பரிசோதனை உஸ்ஸோக்கில் சேருவதற்கு முன்னால் இருக்கும். அதற்குத் தயாராக இரு."

"பரிசோதனையா? என்ன அது?"

"இத்தனை சொன்னவன் அதைச் சொல்லவில்லையா?"

"இல்லையே?"

"மனதில் ஏதாவது கபடம் வைத்துக் கொண்டு வந்தாலோ, இதைப் பற்றி ஏதாவது சந்தேகம் உனக்கு இருந்தாலோ உஸ்ஸோக்கில் இருக்கும் ரெட் ஸ்கெலிடன்கள் வைக்கும் சோதனையில் உன் மனதில் உள்ள ரகசியமெல்லாம் வெளியே வந்து விடும். அதற்குத் தயாராக இரு. நாளைக்கே உன்னை அழைத்துக் கொண்டு போகிறேன்."

ரவி தலையை அசைத்தான்.

"நண்பனே! நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி. அஷ்டாவக்கிரன்

இன்னும் ஐந்து நாளில் பிறக்கப் போகிறான். குட்டிச் சாத்தானை நம்பாதவர்கள் எல்லோரும் உஸ்ஸோக்கால் கொல்லப்படுவார்கள். கடைசி நேரத்தில் நீ இதில் வந்து சேரப் போகிறாய். அதனால்தான் நீ அதிர்ஷ்டசாலி என்கிறேன்."

ரவிக்கு தலை சுற்றுவது போல் இருந்தது. 'ஐந்து நாட்களில் அஷ்டாவக்கிரன் பிறக்கப் போகிறான்' என்ற வாக்கியம்தான் திரும்பத் திரும்ப அவன் நினைவில் சுழன்றது. டாக்டர் ரங்கபிரசாத் சொன்னபடி பார்த்தாலும் கௌரியின் பிரசவத்திற்கு இன்னும் ஐந்து நாட்கள்தான் இருந்தன.

பாபாவின் சாபமும் அதுதான். காசெட்டில் இருந்ததும் அதுதான். சரியாக ஐந்தே நாட்கள். இவ்வளவு பேர் இத்தனை கோணங்களிலிருந்து சொன்ன ஒரே வார்த்தை! இதில் உண்மை உண்டா? அப்படி என்றால் தன் அருமை தங்கை இறந்து விடுவாளா?

கூடாது. அப்படி நடக்கக் கூடாது. சிந்தனையில் மூழ்கியிருந்த ரவியை அந்த மனிதனின் குரல் தடுத்தது.

"என்ன யோசிக்கிறாய்? நாளைக்கு இதே சமயத்திற்கு இங்கே வந்து அழைத்துப் போகிறேன். தயாராக இரு."

சரி என்பதுபோல் தலையை அசைத்தான் ரவி.

★

"**நீ** இந்த மாதிரி பிடிவாதம் பிடிக்கக் கூடாது கௌரீ! இத்தனை பேர் சொல்வதைக் கேட்காமல் இங்கே இருக்கிறேன் என்று சொல்வது முட்டாள்தனமில்லையா?" சித்தார்த்தா கோபமாக கேட்டான்.

"ப்ளீஸ். . . . கோபப்படாதீங்க. நிதானமாக யோசித்துப் பாருங்க. பிரச்னை நம் வரைக்கும் வந்ததால் நீங்க கொஞ்சம் பயந்துட்டீங்க. நாமே இப்படி பயந்தால் அப்புறம் தெருவில்

போகும் பிச்சைக்காரன் கூட வீட்டு வாசலில் வந்து நின்று 'அஷ்டாவக்கிரன். . . காஷ்மோரா'ன்னு பயமுறுத்தத் தொடங்கிவிடுவான்" என்றாள் கௌரி.

அவள் முடிக்கக் கூட இல்லை. அதற்குள் அவன் சட்டென்று நிமிர்ந்து "காஷ்மோராவா? அதென்ன?" என்றான். அவன் குரல் அந்த அறையில் கிறீச்சென்று ஒலித்தது. அவன் திடீரென்று அவ்வாறு மாறியது அவளுக்கு பயமாக இருந்தது. அந்த திடீர் மாற்றத்திற்குக் காரணம் புரியவில்லை.

"எவனோ ஒரு பிச்சைக்காரன் ஒருநாள் ஏதோ சொன்னான். காஷ்மோராவோ அஷ்டாவக்கிரனோ எனக்குத் தெரியாது. சரியாக நினைவு இல்லை" என்று அவள் அன்று நடந்ததைச் சொன்னாள்.

அதைக் கேட்டதும் சித்தார்த்தாவின் முகம் வாடிவிட்டது. "எங்கே? அவன் எங்கே இருக்கிறான்?"

அவள் தலை குனிந்தபடி "ஒரு நாளைக்கு மூன்று வீடுகளுக்கு மேல் யாசிக்கமாட்டானாம். பிட்சை கேட்ட ஊரில் அன்றிரவைக் கழிக்க மாட்டானாம். அப்படிச் சொன்னது மட்டும் நினைவு இருக்கு" என்றாள்.

தன் வார்த்தைகள் கணவனைத் திருப்திப் படுத்தாததை உணர்ந்தாள். அவன் சட்டென்று அங்கிருந்து வேகமாக போய்விட்டான். அவள் தனித்து நின்றாள்.

கணவனின் கண்களில் தெரிந்த கலவரம், கிருஷ்ணா புரத்தில் விக்ருத சிசுக்களின் ஜனனம், அவதார் பாபாவின் சாபம், சுற்றிலும் பீதியடைந்த மக்கள், கடைசியாக பிட்சைக்கு வந்தவன் ஏதோ சொன்னது, ஒன்பது மாதப் போராட்டம் இவ்வளவு நாள் கழித்து அவளுக்கே சந்தேகம் வந்தது. தன் யோசனைதான் தவறோ என்று. இந்த விஷயத்தில் தனக்கு தைரியம் சொல்லக் கூடியவர்கள் யார்? அண்ணன் ரவியைக்

காணவில்லை. அணையத் தயாராக இருக்கும் மெழுகு வர்த்தியை அணையாமல் உள்ளங்கையால் தடுத்து நிறுத்து வதற்கு ஒருவர் தேவை. அவளுக்கு நினைவு வந்த நபர் டாக்டர் ரங்கபிரசாத்தான்.

★

"**அ**வனுக்காக நிறைய இடங்களில் தேடினேன். சமயம் கூட அதிகமாக இல்லை. என்னதான் நடக்கப் போகிறது? எனக்குக் குழப்பமாக இருக்கிறது. இந்த நிலைமையில் நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும்." வேண்டுகோள் விடுப்பதுபோல் சொன்னான் சித்தார்த்தா.

ஜெயதேவ் பதில் சொல்லவில்லை. மௌனமாக யோசித்துக் கொண்டிருந்தார். ரஞ்சிதாவின் மூலமாக சித்தார்த்தாவின் குடும்பம் அவருக்கு அறிமுகமாகியிருந்தது.

ஜெயதேவ் சொன்னார். "பல வருடங்களுக்கு முன்னால் என் நண்பன் ஸ்ரீதர் தன் மகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக காத்ரா என்ற மந்திரவாதியைக் கொன்றான். ஆனால் துளசியின் உடல் நலக் குறைவுக்குக் காரணம் காஷ்மோரா இல்லை என்றும், அவளுடைய ஹெலூசினேஷனுக்கு சீனிவாச பிள்ளை செய்த ப்ரெயின் வாஷ்தான் என்றும் இன்றும் நான் கருதுகிறேன்."

"புரொபசர் சார்!" நடுவிலேயே பேச்சை தடுத்து நிறுத்தினான் சித்தார்த்தா. "இங்கே பிரச்னை என்னவென்றால் அன்று காத்ராவின் யாகத்திற்கு பங்கம் விளைவிக்காமல் இருந்திருந்தால் துளசி பிழைத்திருக்க மாட்டாளோ என்னவோ! ஒருக்கால் துளசி இறந்து போயிருந்தால் என்ன செய்து இருப்பீங்க? அவளுடைய மரணத்திற்கு வேறொரு காரணம் தேடியிருப்பீங்க. என் மனைவி, குழந்தையின் வாழ்க்கை இது. ஏதாவது பரிகாரம் சொல்லுங்கள்."

ஜெயதேவுக்கு சித்தார்த்தாவைப் பார்த்தால் இரக்கமாக இருந்தது. "எனக்கு இதைப் பற்றி அதிகமாகத் தெரியாது. வேண்டுமானால் உங்களுக்கு ஒரு புத்தகத்தைத் தருகிறேன்" என்றார்.

சித்தார்த்தா சட்டென்று நிமிர்ந்து "என்ன புத்தகம்?" என்றான்.

"தாந்த்ரீக வித்தைகளைப் பற்றிய புத்தகம் 'தந்த்ரா'. உங்களுக்கு வேண்டிய விவரங்கள் இதில் கிடைக்கக் கூடும்" என்று புத்தகத்தை எடுத்துக் கொடுத்தார்.

சித்தார்த்தா நடுங்கும் விரல்களால் பக்கங்களைத் திருப்பினான். அவன் இதயம் வேகமாக துடித்துக் கொண்டிருந்தது; அவன் பார்வை ஓரிடத்தில் நிலைத்தது.

காஷ்மோரா - க்ஷுத்ர கணாதிபதி, குட்டிச்சாத்தானின் அம்சம்.

அவ்வளவுதான் இருந்தது. ஏமாற்றத்துடன் எழுந்து கொள்ளப் போனவன் திடீரென்று ஏதோ நினைப்பு வந்து மறுபடியும் புத்தகத்தைப் புரட்டினான்.

'அஷ்டாவக்கிரன்'

நின்ற வாக்கிலேயே படிக்கத் தொடங்கினான். 'க்ஷுத்ர கணாதிபதி காஷ்மோரா மூன்றாவது முறை துயில் கலையும் போது அஷ்டாவக்கிரனாக பிறவியெடுப்பான். பிறக்கும் போதே தாயை, தந்தையைக் கொன்றுவிடுவான். ஓநாய்களின் பராமரிப்பில் வளர்ந்து ஆளாகி பூமியில் சாத்தானின் ராஜ்ஜியத்தை நிலைநாட்டுவான். அவன் வருகைக்கு முன்னால் அதே கிராமத்தில் வரிசையாக விக்ருத சிசுக்கள் பிறப்பார்கள். பிரதம கணாதிபதிகள் அஷ்டாவக்கிரனுக்கு துணையாக இருப்பார்கள். குட்டிச் சாத்தானை நம்பியவர்கள் மட்டுமே அவனுடைய ராஜ்ஜியத்தில் சகல சுகங்களையும் அனுபவிப் பார்கள்.'

சித்தார்த்தாவின் முகம் ரத்தம் வற்றிவிட்டாற்போல் வெளிறிவிட்டது.

## 25

**டா**க்டர் ரங்கபிரசாத் ரொம்ப நேரம் அப்படியே நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்.

கணவனுடன் கிளம்பிப் போன கௌரி இரண்டு மணி நேரத்திற்கெல்லாம் திரும்பவும் தன்னிடம் வந்தது அவருக்கு வியப்பை ஏற்படுத்தியது. அவள் முகத்தைப் பார்த்தால் ஏதோ சச்சரவு நிகழ்ந்தாற்போல் இருந்தது.

அவர் ஊகம் சரியாக இருந்தது. கௌரி தனக்கும் கணவனுக்குமிடையே நிகழ்ந்த வாக்கு வாதத்தை விவரமாகச் சொன்னாள். "யாரோ சந்யாசி ஒருவன் சொன்ன வார்த்தையைப் பிடித்துக் கொண்டு என் கணவர் அப்படி பயந்து ஓடியதைப் பார்த்து முன்பாக இருந்தால் சிரித்திருப்பேன் நான். ஆனால் இப்போ நிலைமை அந்த மாதிரி இல்லை. கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கத் தோன்றுகிறது. இந்தச் சூழ்நிலையில் எனக்குக் கொஞ்சம் தைரியம் சொல்லக் கூடியவர் நீங்க ஒருத்தர்தான். என்னை ஒரு தங்கையாய் நினைத்து சொல்லுங்கள். நான் என்ன செய்யட்டும்?"

ரங்கபிரசாத் உயிரற்ற சிரிப்பை உதிர்த்தார். என்ன செய்வதென்று அவருக்கே தெரியவில்லையே? எதைச் சொன்னாலும் வயிற்றில் இருக்கும் குழந்தை மாறப் போவதில்லை. "எனக்கு இரண்டுநாள் அவகாசம் வேண்டும். யோசித்துச் சொல்கிறேன்" என்று சொல்லி அவளை அனுப்பி விட்டார்.

பிறகு மீண்டும் யோசனையில் ஆழ்ந்தார். ஆஸ்துமாவுக்கு இதுவரை சரியான மருந்து கண்டு பிடிக்க வில்லை. அப்படிப் பட்ட நோயைக் கூட ஹிப்னாடிஸம்

மூலமாக குணப் படுத்துகிறோம் என்று விளம்பரம் செய்கிறார்கள். எந்த டாக்டர் பட்டமும் இல்லாமல் பாலியல் சார்ந்த நோய்களை குணமாக்குவதாக போஸ்டர்கள் ஒட்டுகிறார்கள் சிலர். இந்தப் பிரிவைச் சேர்ந்த ஆசாமியாக இருப்பார் அவதார் பாபா என்று ரங்கபிரசாத் இத்தனை நாளாக எண்ணியிருந்தார். ஆனால் ரவி சொன்ன விஷயங்களைக் கேட்ட போது மூளை குழம்பிப் போய்விட்டது. தன் கண் முன்னாலேயே 'மிராகிள் டச்' மூலம் அவதார்பாபா கூனியை நேராக்கியதைப் பார்த் தானாம். ஆஸ்துமா நோயாளி ஒருவன் பாபாவின் மகிமையால் குணம் பெற்றுவிட்டானாம். இதெல்லாம் அவனுடைய கண்முன்னாலேயே நடந்ததாம். எப்படி நடந்திருக்கும்?

இதெல்லாம் உண்மையாக இருந்தால் கேவலம் தன்னுடைய முட்டாள்தனத்தினால்தான் தான் இதை எதிர்க்கிறோமா? சித்தார்த்தாவின் அபிப்பிராயம் சரியானதா? பாபாவிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டு கௌரியின் கையில் தாயத்து கட்டிவிட்டால் அவளுக்கு ஆரோக்கியமான குழந்தை பிறக்குமோ? தன்னிடம் மருத்துவம் பார்த்துக் கொள்ளும் நோயாளிகளுக்குத்தான் இந்த மாதிரி குழந்தைகள் பிறக்கின்றனவா? எந்த முடிவுக்கும் வர முடியவில்லை அவரால்.

சட்டென்று அவருக்கு ஒரு யோசனை வந்தது. கிராமத்தில் தன்னிடம் சிகிச்சைக்கு வந்து, பயந்து பட்டணத்திற்குப் போன கர்ப்பிணி பெண்கள் மூவரில் இருவர் பாபாவிடம் தாயத்து கட்டிக் கொண்டார்கள். ஒருத்திக்கு மட்டும் பாபா தாயத்து கட்டவில்லை. அவள் தெய்வக் குற்றம் பண்ணியிருந்ததால் தாயத்து கட்டிக் கொள்ள அருகதை இல்லாதவள் என்று சொல்லி விட்டாராம். அவள் கணவன் எவ்வளவு மன்றாடியும் பலன்

இல்லாமல் போயிற்று. ஏமாற்றத்துடன் அடுத்த ஊரில் பிரசவம் பார்த்துக் கொள்ளப் போய்விட்டார்கள்.

என்ன நடந்ததென்று அங்கே போய் பார்த்தால்?

அந்த யோசனை வந்ததும் அவர் மேற்கொண்டு தாமதிக்க வில்லை. அடுத்த கிராமத்து ஆஸ்பத்திரிக்குப் போனார். கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல் அந்த கர்ப்பிணியின் கணவனே அவர் கண்ணில் பட்டான்.

தன்னைக் கண்டு பயந்து தன் கிளினிக்கை விட்டு ஓடி வந்திருக்கிறார்கள் இவர்கள். இப்பொழுது தான் கண்ணில் பட்டால் 'இங்கேயும் வந்து விட்டானே' என்று அஞ்சக் கூடும். அப்பாவியான அவர்களை இந்த நேரத்தில் கூட வருத்தப் படுத்த வேண்டுமா?

அங்கிருந்து லேபர் ரூமுக்கு பின்பக்கமாக நுழைந்து உள்ளே போனார். ரங்கபிரசாதை அந்த ஆஸ்பத்திரியில் இருந்த டாக்டர்கள் எல்லோருக்குமே தெரியும். உள்ளே அந்தப் பெண் பிரசவ வேதனையில் இருந்தாள். டாக்டர் வனஜாட்சி அங்கே இருந்தாள்.

ரங்கபிரசாதைப் பார்த்துவிட்டு "ரொம்ப நேரமாக முயற்சி செய்கிறோம். இன்னும் அசைந்து கொடுக்கவில்லை டாக்டர்" என்றாள். அதற்குள் கர்ப்பிணி பெண்ணிடம் அசைவு தென்பட்டதால் அவ்விருவரின் பார்வையும் அந்தப் பக்கம் திரும்பியது. நர்ஸ் ஓடிப் போய் உதவினாள்.

முதலில் கால்கள் வெளி வந்தன.

ரங்க பிரசாத் மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டார். ஏதோ சங்கடமான உணர்வு. அதற்குள் குழந்தை முழுவதுமாக வெளியே வந்துவிட்டது.

ரங்கபிரசாத் தன்னையறியாமல் ஓரடி பின் வாங்கினார். என்னதான் அனுபவசாலியாக இருந்தும் ஒரு நிமிஷம்

ஒன்றும் புரியாமல் வனஜாட்சி விழித்தாள்.

தாய் இறந்துவிட்டது புரிந்தது.

பிறந்த எந்தக் குழந்தையுமே அதுபோல் செய்திருக்காது. அந்தக் குழந்தை கால்களை மடக்கி உட்கார்ந்திருந்தது. கண்கள் திறந்திருந்தன. நர்ஸ் குழந்தையை கையில் எடுக்க பயந்தாள். இதயத்தின் அடியிலிருந்து ரகசியங்களை சோதிப்பது போல் இருந்தது அந்தப் பார்வை. பிறகு சிரித்தது. 'எட்டாவது ஆள் வரப் போகிறான்' என்று கட்டியம் கூறுவது போல் இருந்தது, அந்தச் சிரிப்பு. அதன் தலை ஆடிக் கொண்டிருந்தது.

வாழ்க்கையில் முதல் தடவையாக ரங்கபிரசாத் மனதில் பயம் ஏற்பட்டது. பாபாவின் வார்த்தைகள் உண்மைதானா? அஷ்டாவக்கிரன் தோன்றப் போகிறானா? அதற்குக் கடைசிச் சான்று இதுதானா? கேதாரகௌரியின் கர்ப்பத்தில்தான் அவன் இருக்கிறானா?

பூமிக்கு வந்த காரியம் முடிந்துவிட்டாற் போல் அந்தக் குழந்தையின் தலை தொங்கிவிட்டது. உயிர் போய்விட்டது.

டாக்டர் ரங்கபிரசாத் ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தார். மயானத்திலிருந்து திரும்பியவரைப் போல் அவர் முகம் களையிழந்திருந்தது.

★

"**எ**னக்கு பயமாக இருக்கு" என்றாள் ரஞ்சிதா.

ரவி மௌனமாக இருந்தான்.

"அவ்வளவு ரகசியமாக அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். எந்த சூழ்நிலையிலும் தம் ரகசியம் வெளிப் படாது என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது நீ அங்கே போவது நல்லது இல்லை. எனக்கு பயமாக இருக்கு" என்றாள் ரஞ்சிதா.

ரவி எழுந்து கொண்டான். "போய் வருகிறேன் ரஞ்சிதா" என்றான்.

தான் அதுவரை சொன்னது அவன் காதில் வாங்கிக் கொள்ளவில்லை என்பதை உணர்ந்து "வேறுவழி இல்லையா? போய்த்தான் ஆக வேண்டுமா?" என்று கேட்டாள்.

"போய்த்தான் ஆகணும் ரஞ்சிதா. நான் செய்யப் போவது சாகசம்தான் என்றும், புலிக் கூண்டில் காலடி எடுத்து வைக்கிறேன் என்றும் தெரியும். ஆனால் வேறு வழியில்லை. இந்தப் பிரச்னை என் தங்கைக்கு சம்பந்தப்பட்ட விஷயமாக இல்லாமல் இருந்தால் நான் இத்தனை ரிஸ்க் எடுத்துக் கொண்டு இருக்க மாட்டேன்."

அவள் மௌனமாக இருந்தாள்.

"சாரி ரஞ்சிதா! என் முடிவு உனக்கு முட்டாள்தனமாகத் தோன்றலாம். ஆனால் நான் உஸ்ஸோக்கில் சேர்ந்துதான் ஆகணும். அந்த அஷ்டாவக்கிரனைப் பற்றித் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும். என்னைத் தடுக்காதே."

இனி என்ன சொன்னாலும் அவன் கேட்கப் போவ தில்லை என்று தெரிந்து கொண்டாள். அவனை நெருங்கி வந்தாள். மனித உருவில் இருக்கும் அந்த அரக்கர்கள் இவனைத் தெரிந்து கொண்டுவிட்டால் போதும், இதுதான் கடைசியாக பார்ப்பது.

அவளையும் அறியாமல் கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்கள் உருண்டோடின. ஆனால் அதை அவன் காணாதவாறு மறைத்துக் கொண்டாள். அவன் அவளைத் தன் அருகில் இழுத்துக் கொண்டான். அவள் இதழ்களில் மென்மை யாக முத்தம் பதித்துவிட்டு "ஒருக்கால் எனக்கேதாவது ஆகிவிட்டால் அனாவசியமாக கலங்கிப் போகாதே. என்னுடன் ஏற்பட்ட நட்பை ஒரு கனவாக

கழிக்க முயற்சி செய். அப்படி ஏதாவது நடந்துவிட்டால் இதுதான் என் இறுதிப் பரிசு" என்று மற்றொரு முறை இதழ்களைப் பதித்தான்.

அவன் வார்த்தைகள் அவள் வேதனையை அதிகரித்தன. அரும்பாடுபட்டு அடக்கிக் கொண்டாள். தன் கைக் கடியாரத்தை எடுத்து அவனுக்குக் கட்டினாள். "என் நினைவாக உன் கையில் இருக்கட்டும்" என்றாள்.

அவன் சிரித்தான். பதிலுக்கு அவளும் சிரித்தாள். ஆனால் அந்தச் சிரிப்பில் உயிரில்லை. ஒருக்கால் அவனால் திரும்பி வர முடியாமல் போகலாம்.

"வருகிறேன். நேரமாகிவிட்டது" என்று வெளியே வந்தான். அவள் அப்படியே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள். மெல்ல மெல்ல அவன் உருவம் அவள் பார்வையிலிருந்து தேய்ந்து மறைந்தது.

★

**ஆ**ளரவமற்ற அந்த எல்லையில் அவனுக்காகக் காத்திருந்தான் பிளாக் ஸ்கெலிடன். "போவோமா?" என்றான்.

ரவி தலையை அசைத்தான்.

அதே இருண்ட குறுகிய தெரு. இருவரும் பாழடைந்த அந்த வீட்டிற்கு முன்னால் வந்து நின்றார்கள். பிளாக் ஸ்கெலிடன் கதவைத் தட்டினான். உள்ளேயிருந்து ஆள் வரும் சத்தம் கேட்டது.

கதவு திறந்து கொண்டது. இருவரும் உள்ளே நுழைந்தார்கள். "மனதை தூய்மையாக வைத்துக் கொள். கேட்டதற்குச் சரியான பதிலைச் சொல்லு. பொய் சொல்ல நினைத்தாலும் உன்னால் முடியாது." பிளாக் ஸ்கெலிடன் எச்சரித்தான்.

அதற்குள் வெண்ணிற ஆடையணிந்த கிழவன் ஒருவன் வந்தான். உள்ளே விசாலமான ஹால். மயான அமைதி தாண்டவமாடிக் கொண்டிருந்தது அங்கே.

ஹாலுக்கு நடுவில் ஒரு மேடை. அதன் மேல் இரும்பு சக்கரம் பொருத்தப் பட்டிருந்தது. மேலே கூரிய கத்தி தொங்கிக் கொண்டிருந்தது. கழுத்தை வைக்க துளையிருந்தது.

இருவரின் கைகளும் பின்னுக்குச் சேர்த்துக் கட்டப் பட்டன. "உஸ்ஸோக்கை ஏமாற்றும் எண்ணம் உனக்கு இருந்தால் உன் கழுத்தும், உன்னை அழைத்து வந்ததற்காக என் தலையும் வெட்டப்பட்டுவிடும்" என்றான் அவன்.

ரவி பேசவில்லை. ஏதோ அரூப சக்தி தன் மனதை ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டது போல் இருந்தது. மனதை கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றான். முடியவில்லை.

"நண்பனே! உன் பெயர்?"

ரவி பொய் சொல்ல நினைத்தான். ஆனால் ஏதோ கண்ணுக்குப் புலப்படாத சக்தியோ அல்லது ஏதோ புரிபடாத ஒலியலைகளோ 'உண்மையைச் சொல்லிவிடு' என்று அழுத்துவதுபோல் இருந்தது. மனம் கட்டுப்பாட்டை இழக்கத் தொடங்கியது.

உண்மையைச் சொல்லாவிட்டால் அந்தக் கத்தி கழுத்தில் இறங்கிவிடும். தடுமாறிக் கொண்டே "ரவி" என்றான். அவன் நெற்றியில் வியர்த்துக் கொட்டியது. தான் தோற்றுக் கொண்டிருக்கிறோம் என்று புரிந்துவிட்டது. அந்த அரூப சக்தியை எப்படி எதிர்த்து நிற்பது? உண்மையில் பிசாசுகள் உண்டா? உஸ்ஸோக் அவற்றுக்கு பக்கபலமாக இருந்து உதவுகிறதா? இரண்டாவது கேள்வியைக் கேட்கப் போகிறார்கள். தன்னால் உண்மையை மறைத்து வைக்க முடியாது. தன் முடிவு நெருங்கிவிட்டது என்று நினைத்தான்.

சட்டென்று ரஞ்சிதா கொடுத்த கைக்கடிகாரம்

நினைவுக்கு வந்தது. கடியாரத்திலிருந்து வரும் சானிக் ஒலியலைகளைப் பற்றி விவரித்திருந்தாள் ரஞ்சிதா.

அந்த ஒலியலைகளை இப்பொழுது இந்த தீய சக்திகளுக்கு எதிராக பயன்படுத்தினால்?

அவன் மேற்கொண்டு தாமதிக்கவில்லை. கையைப் பின்னாலிருந்து அசைக்கத் தொடங்கினான். கட்டப்பட்டு இருந்ததால் கைகளை அசைப்பது சிரமமாக இருந்தது. ஆனாலும் இது உயிர் போராட்டம். வலியை பொறுத்துக் கொண்டு எப்படியோ கடியாரத்தில் விசையை அழுத்தினான். கொஞ்சம் கொஞ்சமாக சத்தம் தேய்ந்து மறைந்துவிட்டது. காதில் சத்தம் விழுவது நின்றுவிட்டதே தவிர மூளை அதன் அலைகளை இன்னும் கிரகித்துக்கொண்டுதான் இருந்தது. அதுவரை அந்த அறையில் சூழ்ந்திருந்த சங்கடமான சூழ்நிலை சற்று விலகியது.

அவன் மனதால் ரஞ்சிதாவைப் பாராட்டினான். உஸ்ஸோக்கில் சேரப் போகும் நபர்களை அவர்கள் எப்படியாவது உண்மையைச் சொல்ல வைத்து விடுவார்கள் என்று அவன் சொன்னதை வைத்துக் கொண்டு அது ஒலியலைகளுக்கு சம்பந்தப்பட்டதாக இருக்கும் என்று ஊகித்து பரிசளிப்பது போல் கையில் வாட்சைக் கட்டி அனுப்பிய தன் சிநேகிதி . . . தன் வருங்கால மனைவி. . . தன்னை இந்த விதத்தில் காப்பாற்றியிருக்கிறாள்.

அதைத் தொடர்ந்து அவன் எல்லா கேள்விகளுக்கும் பதிலளித்தான். சுமார் ஒரு மணி நேரம் அவனைக் கேள்விகள் கேட்ட பிறகு அவனை மெம்பராக சேர்த்துக் கொண்டதாக தெரிவித்தார்கள்.

கிழவன் அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றான். அடர்ந்து பரவிக் கிடந்த புகை மண்டலத்திலிருந்து யாரோ விளக்கைப் பிடித்துக் கொண்டு வருவது போல் மெல்லிய

ஒளிக்கீற்று அருகில் வரத் தொடங்கியது. ஒரு தாம்பாளத்தில் ரப்பர் முத்திரை போன்ற மண்டையோடு எரிந்து கொண் டிருந்தது. வேலைக்காரன் தாம்பாளத்தைக் கீழே வைத்துவிட்டு மௌனமாக அங்கிருந்து போய்விட்டான்.

"என்ன இது?" கேட்டான் ரவி.

"உஸ்ஸோக்கின் முத்திரை நண்பனே! இந்த நிமிடத்தி லிருந்து உலகத்தில் எந்த மூலை முடுக்கில் நீ இருந்தாலும் சரி, உன் சக மெம்பர்கள் இந்த முத்திரையால் உன்னை அடையாளம் கண்டு கொள்வார்கள். அதே போல் நீயும் மற்றவர்களை அடையாளம் கண்டு கொள்வாய்."

ரவியின் விரல்கள் கைக்கடியாரத்தில் விசையை அழுத்தின. கிழவன் மயக்கத்தில் ஆழ இரண்டு நிமிடங்கள் ஆகும். அதுவரை அவனை நிறுத்தி வைக்க உரையாடலை நீடித்தான்.

"நீங்கள் யாரு?"

"நான் ரெட் ஸ்கெலிடன். உன் வேலையைப் பார்த்து உனக்கு பதவி உயர்வு கிடைக்கும். கொஞ்சம் கொஞ்சமாக முன்னுக்கு வருவாய். ரெட் ஸ்கெலிடனாக இருப்பவர்கள் மட்டும்தான் மகாதிரஷ்டாவுடன் நெருங்கிப் பழக முடியும்."

"மகாதிரஷ்டா!" நாலைந்து முறை சொல்லிப் பார்த்துக் கொண்டான் ரவி.

அதற்குள் கிழவன் எரியும் மண்டையோட்டை இடுக்கி யால் பிடித்துக் கொண்டு "தயாராகி விட்டாயா?" என்றான்.

"இதென்ன சுவாமீ? இப்பொழுதுதானே முத்திரையைக் குத்தினீங்க" என்றான் ரவி. அப்படிச் சொல்லிவிட்டானே தவிர அவன் இதயம் வேகமாக துடித்துக் கொண்டிருந்தது. இது அவனுக்கு இன்னொரு சவால்.

"குத்திவிட்டேனா?"

ஆமாம். இதோ பாருங்கள்" என்று அருகில் சென்றவன் வாட்சை கிழவனுக்கு சமீபத்தில் கொண்டு போனான்.

"ஆமாம் ஆமாம்" என்றான் கிழவன். ரவி நிம்மதியாக மூச்சுவிட்டுக் கொண்டான்.

★

இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஜெனடிக்ஸ்.

அவர் விசாலமான படிகளைத் தாண்டி ரிசப்ஷன் கௌண்டரை வந்தடைந்தார். "டாக்டர் வம்சீகிருஷ்ணா இருக்கிறாரா?" என்று கேட்டார்.

"இருக்கிறார். நீங்க?"

"டாக்டர் ரங்கபிரசாத்."

ரிசப்ஷனிஸ்ட் இண்டர்காமில் பேசிவிட்டு "உள்ளே போங்க. அதோ அந்த அறையில் இருக்கிறார்" என்றாள். ரங்கபிரசாத் அந்த அறைக்குள் நுழையப் போன பொழுது உள்ளேயிருந்து ஒரு பெண் அவசர அவசரமாக வெளியே வந்தவள் அவர் மேலே வந்து மோதிக் கொண்டாள். இருவரும் ஒரே சமயத்தில் "சாரி" என்றார்கள். அவளை நிமிர்ந்து பார்த்த ரங்கபிரசாத் ஒரு வினாடி மூச்சு விட மறந்து போனார். அவள் வயது இருபத்தெட்டு இருக்கலாம். வயது ஏற ஏற கம்பீரமும் கூடாவிட்டால் பெண்களின் அழகு குறைந்து போய்விடும். அந்த ரகசியத்தை உணர்ந்த பெண்கள் ரொம்ப சிலர்தான். அந்த மிகச் சிலரில் அவள் ஒருத்தி.

ரங்கபிரசாத்துக்கு வாழ்நாளிலேயே முதல்முறையாக தான் எதை இழந்து விட்டோம் என்று அப்பொழுதுதான் புரியத் தொடங்கியது. அதற்கு முன்பு வரை காதல் ஏற்பட சிறிய சம்பவமே போதுமானது என்றோ அல்லது கண்டதும் காதல் கொண்டார்கள் என்றோ யாராவது சொன்னால் தனக்குள் சிரித்துக் கொள்வார். ஆனால் இப்பொழுது

அனுபவ பூர்வமாக உணர்ந்தார்.

ஆனால் இவையெல்லாம் ஒரு வினாடி நேரம்தான். அடுத்த நிமிடமே டாக்டர் ரங்கபிரசாதாக மாறிவிட்டார். இன்னொரு முறை "சாரி" என்றார்.

"பரவாயில்லை."

"என் பெயர் ரங்கபிரசாத்."

"எனக்கு உங்களைத் தெரியும். உங்க ஜுனியர்தான் நான். என் பெயர் நிவேதிதா. டாக்டர் நிவேதிதா."

"கிளாட் டு மீட் யூ."

"ஸேம் டு யூ" என்று முறுவலித்தாள். "வம்சீ கிருஷ்ணா உங்களுக்காக காத்திருக்கிறார்" என்றாள்.

"வருகிறேன்" என்று அவர் உள்ளே போனார்.

வம்சீகிருஷ்ணா அவரைப் பார்த்துவிட்டு நாற்காலியை விட்டு எழுந்து வரவேற்றார். பொதுவாக கொஞ்ச நேரம் பேசிக் கொண்டு இருந்துவிட்டு பிறகு ரங்கபிரசாத் தான் வந்த காரியத்தைச் சொன்னார்.

"இதுவரை கிருஷ்ணாபுரத்து தம்பதிகளை மட்டுமே சோதித்து அவர்களின் பழக்கவழக்கங்கள், உறவு முறைகள் ஏதாவது இந்த மாதிரி விக்ருத சிசு ஜனனங்களுக்குக் காரணமாக இருக்குமோ என்று ஆராய்ந்து வந்தேன். எந்த தம்பதியரும் ஒரே மாதிரி இல்லை. அதனால் வேறு எங்கேயாவது இதுபோல் விக்ருத சிசுக்கள் பிறந்தால் அந்த விவரங்கள் உங்களிடம் இருந்தால் சொல்லுங்களேன்."

"எங்களிடமா? இல்லையே?"

ரங்கபிரசாத் மனமொடிந்து போனார். ஆனாலும் விடாமல் "உங்களுடையது ஜெனடிக்ஸ் இன்ஸ்டிட்யூட் இல்லையா? இது போன்ற விவரங்கள் சேகரித்து வைத்துக் கொள்ள மாட்டீர்களா?" என்று கேட்டார்.

“இல்லை டாக்டர். ஏதாவது ரொம்ப புதுமையான விஷயமாக இருந்தால் தவிர அக்கறை எடுத்துக் கொள்ள மாட்டோம். உதாரணமாக கிருஷ்ணாபுரத்தில் பிறந்த விக்ருத சிசுக்கள் பற்றிய குறிப்பெல்லாம் எங்களிடம் இருக்கு.”

“அது எங்களிடமும் இருக்கு. எனக்கு வேண்டியது வேறு ஏதாவது இருந்தால் மட்டும். . .”

“சாரி டாக்டர்.”

ரங்கபிரசாத் எழுந்து கொண்டார். “கிளம்புகிறேன்” என்றார்.

வம்சீகிருஷ்ணா ஆர்வத்துடன் “என்ன ஆச்சு? உங்க ஊர் ரகசியம் ஏதாவது வெளிப்பட்டதா?” என்று கேட்டார்.

“இல்லை. இன்னொரு பிரசவம் ஆகிவிட்டால் அதற்குப் பிறகு எதுவும் தேவைப்படாது” என்று வெளியே வந்து விட்டார்.

அவரைப் பார்த்த நிவேதிதா முறுவலித்தாள். ரங்கபிரசாதின் சிந்தனை அங்கேயில்லை. எத்தனையோ ஆர்வத்துடன் வந்தவருக்கு ஏமாற்றம்தான் கிடைத்தது.

“என்ன அவ்வளவு ஆழ்ந்த யோசனை?” கேட்டாள் நிவேதிதா.

ரங்கபிரசாத் தான் வந்த காரியத்தைச் சொன்னதும் “அந்த மாதிரி விவரங்கள் என்னிடம் உள்ளன” என்றாள் நிவேதிதா.

ரங்கபிரசாதிற்கு திடீரென்று உற்சாகம் பொங்கி வந்தது. “உங்களிடம் இருக்கா?” என்றார் துள்ளிக் குதித்தபடி.

“சிலருக்கு தபால் தலைகள் சேகரிக்கும் பழக்கம் இருப்பது போல் இந்த மாதிரி விஷயங்களை எல்லாம் சேகரித்து நோட்ஸாக எழுதி வைத்துக் கொள்வது என்னுடைய ஹாபீ.”

அந்தக் குறிப்புகளை எனக்குத் தரமுடியுமா?

"இங்கே இல்லை. பம்பாயில் வைத்திருக்கிறேன். நான் இங்கே வேலையில் சேர்ந்து இப்பொழுதுதான் ஒரு மாதமாகிறது. இன்றைக்குத்தான் வீட்டுச் சாமான்களை எடுத்து வருவதற்காக பம்பாய்க்குப் போகிறேன்."

"எப்போ திரும்பி வருவீங்க?"

"ஒரு வாரமாகலாம். உங்க போன் நம்பரைக் கொடுங்கள். போனதுமே போன் செய்கிறேன். உங்களுக்குத் தேவையானது பெயர்கள் மட்டும்தானே?"

"வெறும் பெயர்கள் மட்டுமில்லை. கண்ஜெனிடிகல் மால்ஃபார்மேஷனுக்கு ஏதாவது காரணம் உண்டா? அந்தக் குழந்தையின் பெற்றோர் விவரம், வெனீரியல்ஸ் வரலாறு எல்லாம் தெரிந்து கொள்ளணும். முதலில் பெயர், ஊர், விலாசத்தைச் சொல்லுங்கள். மற்றதை நானே சேகரித்துக் கொள்கிறேன்" என்றார். ஒரு காகிதத்தில் தன் போன் நம்பரைக் குறித்துக் கொடுத்தார்.

போன் நம்பரை பெற்றுக் கொண்டே "நீங்க கேட்ட விவரங்களை எல்லாம் கொடுத்தால் எனக்கென்ன பரிசு தருவீங்க?" குறும்பாக கேட்டாள்.

அதுவரை கம்பீரமாக இருந்த அவர் துடிப்பும் துள்ளலுமாக "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்றார்.

"ஹெலிகாப்டர்!"

"மைகாட்! அதிகபட்சம் ஐஸ்க்ரீம் வாங்கித் தரமுடியும். அவ்வளவுதான்."

"எனக்கு பட்டர் ஸ்காட்ச் என்றால் ரொம்பப் பிடிக்கும்."

"ஓ.கே." என்றார் படியிறங்கிக் கொண்டே.

கிருஷ்ணாபுரத்திற்கு போய்ச் சேர்ந்த இரண்டு நாட்கள் வரையிலும் போனுக்காக எதிர்பார்த்தார் ரங்கபிரசாத்.

வரவில்லை. வரும் என்ற நம்பிக்கைகூட இல்லை. சிலர் நேரில் பேசும்போது ஒருவிதமாக நடந்து கொள்வார்கள். ஆனால் அதன்படி செய்யமாட்டார்கள். நிவேதிதா கூட அந்த மாதிரி ஒரு பெண்தான் என்று நினைக்கும்போது அவர் மனம் சங்கடப்பட்டது. குறைந்தபட்சம் அவள் போன் பண்ணி னாலாவது அவளை இன்னொரு முறை சந்திக்க முடியுமோ என்ற ஆசை இதயத்தில் இழையோடியக் கொண்டிருந்தது. அவள் இந்த சந்திப்பைக் கொஞ்சமும் நினைவு வைத்துக் கொள்ள வில்லை என்றும் இதற்குக் கொஞ்சமும் முக்கியத்துவம் தரவில்லை என்றும் உணர்ந்ததும் இதயத்தில் வேதனை பரவியது.

## 26

கௌரிக்கு பிரசவநாள் நெருங்கிவிட்டதால் நர்ஸிங் ஹோமிலேயே இருப்பது நல்லது என்று பட்டது. மாமியார் கூடவே வந்து அவளை ஆஸ்பத்திரியில் சேர்த்தாள். இருவரும் அங்கேயே இருந்தார்கள்.

ரங்கபிரசாதுக்கு அலுப்பாக இருந்தது. கொஞ்சம் கோபம்கூட வந்தது. இந்த மாதிரி நேரத்தில் கணவன் சித்தார்த்தா, அண்ணன் ரவி இருவரையுமே காண முடிய வில்லை. இந்த இக்கட்டான நேரத்தில் எங்குதான் போனார்களோ?

கேதார கௌரிக்கும் அதே வருத்தம்தான். ரங்கபிரசாத் மட்டுமே அவளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தார்.

இன்னும் பொழுது விடியக் கூட இல்லை. படுக்கையில் இருந்த ரங்கபிரசாத் போன் ஒலித்ததைக் கேட்டு ரிசீவரை கையில் எடுத்து "ஹலோ" என்றார்.

மறுமுனையில் குரல் ஒலித்தது. "நான்தான் நிவேதிதா."

போர்த்தியிருந்த போர்வையை உதறித் தள்ளிவிட்டு கட்டிலில் எழுந்து உட்கார்ந்தவர் "என்ன இவ்வளவு தாமதமாக்கிவிட்டீர்களே?" என்று கேட்டார். அவர் குரலில் ஆர்வமும் மகிழ்ச்சியும் போட்டியிட்டன.

"அதேபோன்ற பிரசவக் கேஸ் ஒன்றைக் கண்டு பிடித்தேன்."

"யாரு?"

"அகர்வால், மிஸெஸ் பிரதிமா அகர்வால். பம்பாயில் ஓஷன் வ்யூ நர்ஸிங் ஹோமில் இரண்டு வருடங்களுக்கு முன்னால் பிரசவம் நடந்தது."

"இதைச் சொல்லத்தான் மூன்று நாட்கள் பிடித்ததா?"

"ப்ளீஸ். கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் கேட்டது போல் குழந்தையின் பெற்றோர் விவரம், மற்ற விவரங்களும் தெரிந்து கொள்ளணும் என்றுதான். அதோடு பம்பாயிலேயே நடந்த பிரசவம் என்பதால் நாமே கண்டு பிடிக்கலாமே என்றுதான் அலைந்தேன். அந்த வேலை யாகத்தான் அகர்வால் சேட்டைப் போய்ப் பார்த்தேன்."

கேட்டுக் கொண்டிருந்த ரங்கபிரசாத் இந்த உலகத்தி லேயே இல்லை. தனக்காக அந்தப் பெண் இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டு உழைத்தது. . .

"பிறகு என்ன நடந்தது?" பரபரப்புடன் கேட்டார்.

பதிலுக்கு நிவேதிதாவின் குரல் ஒலித்தது. "மிஸெஸ் பிரதிமா அகர்வாலுக்கு பிரசவம் நிகழ்ந்த மூன்றாவது மாதமே பைத்தியம் பிடித்துவிட்டது."

யாரோ சாட்டையால் அடித்தாற்போலிருந்தது. "வாட்!" என்று கத்திவிட்டார் ரங்கபிரசாத்.

"ஆமாம். அவளை கபாடியா மெண்டல் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். அவள் கொஞ்சம் கொஞ்சமாக குணமாகிக் கொண்டிருக்கிற சமயம். இரண்டு நாய்கள் அவள் மேல் பாய்ந்து கழுத்தைக் கடித்துச் சாகடித்துவிட்டன."

"என்ன?"

"ஆமாம். கேட்டதுமே எனக்கு வேடிக்கையாகத்தான் இருந்தது. நாய்கள் கடிக்கும். ஆனால் கொல்லாது. இந்தக் கேஸில் தெளிவாய் அந்த மாதிரி பதிவாகியிருக்கிறது. நேற்று மாலை முழுவதும் போலீஸ் ஸ்டேஷனில் இதே காரியமாக பழியாய்க் கிடந்து அந்த கேஸ் சம்பந்தப்பட்ட போட்டோக்களை எல்லாம் பார்த்தேன்."

"போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூடப் போனீங்களா?"

"பின்னே? ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டால் ஒழுங்காக செய்து முடிக்கணும் இல்லையா? அதிலும் டாக்டர் ரங்கபிரசாதுடன் சேர்ந்து ஐஸ்க்ரீம் சாப்பிடுவது என்றால் சும்மாவா?" அவள் குரல் குறும்பாக ஒலித்தது.

ரங்கபிரசாத் மட்டும் யோசனையில் மூழ்கிவிட்டார். அவர் யோசனை ஓரிடத்தில் நின்றுவிட்டது. பிரதிமா அகர்வாலைக் கூட நாய்கள்தான் கொன்று இருக்கின்றன.

★

**உ**ஸ்ஸோக் மெம்பர்கள் அவதார் பாபாவைச் சந்திப்பதற்கு க்யூவில் நிற்க வேண்டியதில்லை. ஆசிரமத்திற்கு பின்பக்கமாக சென்று மெயின் ஹாலுக்கு வந்தான் ரவி. பட்டு மெத்தையில் சாய்ந்தவாறு அந்தப் பக்கமாக பார்த்தபடி உட்கார்ந்திருந்தார் அவதார் பாபா. இலவச தரிசன வேளை என்பதால் க்யூவில் ஒவ்வொருவராய் வந்து பாபாவை தரிசித்து விட்டு காணிக்கையைச் செலுத்திவிட்டுப் போய்க் கொண் டிருந்தார்கள். பாபா கையை உயர்த்தினார். க்யூ நின்றுவிட்டது.

பாபா திரும்பிப் பார்க்காமலேயே “வா ஷாடோ! வா” என்றார். ரவி சிலையாகிவிட்டான். அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. பின்னால் திரும்பிப் பார்க்காமலேயே கூப்பிட்டதற்காக அல்ல. புனைப்பெயரிட்டு அழைத்ததற்கு.

இனி தொலைந்தோம் என்று நினைத்துக் கொண்டான். அத்தனை பேருக்கு நடுவில் ஒண்டியாக எதிர்த்து நின்று தப்பித்துக் கொண்டு போவதற்கு அவன் சினிமா ஹீரோ இல்லையே? பாபா சின்ன சைகை காட்டினால் போதும். இந்த மக்களே பொங்கியெழுந்து கையை காலை உடைத்துப் போட்டு விடுவார்கள்.

மனதில் இருப்பதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் ஜாக்கிரதையாக அருகில் சென்றான்.

“தெரியும் இல்லையா? உன் தங்கையின் வயிற்றில் அஷ்டாவக்கிரன் பிறக்கப் போகிறான்” என்றார் பாபா.

ரவிக்கு வியப்பாக இருந்தது தன்னிடம் அவர் அதைச் சொன்னது.

“பிறந்ததுமே தாயையும் தந்தையையும் கொன்று விடுவான்.”

ரவி பதில் சொல்லவில்லை. அவன் கைகள் இறுகிக் கொண்டன.

அதற்குள் பாபா சொன்னார். “அப்படியும் நீ உஸ்ஸோக்கில் சேர்ந்திருப்பது உன் முன் யோசனையைக் காட்டுகிறது. எதிர் காலத்தில் சகல சௌக்கியங்களையும் அனுபவிக்கப் போகிறாய். அண்ணன் தங்கை உறவு, பந்த பாசம் இதெல்லாம் ரொம்பச் சின்ன விஷயங்கள். குட்டிச்சாத்தான் ஒன்றுதான் நம்மைக் காப்பாற்றப் போகிறது. நீ அதைத் தெரிந்து கொண்டதில் எனக்கு ரொம்ப சந்தோஷம்.”

ரவிக்கு ஒன்று புரிந்தது. தான் உஸ்ஸோக்கில் சேர்ந்தது பாபாவுக்கு எட்டியிருக்கிறது. தன்னைப் பார்த்ததும் கேதார கௌரியின் அண்ணன் என்றும் புரிந்து கொண்டு விட்டார். உஸ்ஸோக்கின் மேல் பாபாவுக்கு இருந்த நம்பிக்கை. உஸ்ஸோக்கில் சேர்ந்த ஒவ்வொருவரும் மனதிலிருப்பதைச் சொல்லிவிடுவார்கள் என்ற நம்பிக்கை இவர்களிடம் ஆழமாக பதிந்து விட்டிருக்கிறது. அதனால்தான் தங்கையைக் கூட உதறிவிட்டு அவன் உஸ்ஸோக்கில் சேர்ந்து விட்டதாக கருதிவிட்டார். அந்த பிரமையிலேயே அவர் இருக்கட்டும்.

மெதுவாக மண்டியிட்டு அமர்ந்து கொண்டு "நாளை மறுநாள் உஸ்ஸோக் கூட்டம் இருக்கிறது. அதைத் தெரி விக்கத்தான் என்னை அனுப்பியிருக்கிறார்கள்" என்றான்.

"சரி."

"போய் வருகிறேன்" என்று எழுந்து கொண்டான் ரவி. பாபாவின் கையசைப்பில் மறுபடியும் க்யூ நகரத் தொடங்கியது.

திரும்பி நடக்கத் தொடங்கிய ரவி அதிர்ச்சி யடைந்தவனாக அப்படியே நின்றுவிட்டான்.

சில நாட்களுக்கு முன்னால் தன் கண்முன்னாலேயே பாபாவின் மகிமையால் குணமாக்கப்பட்ட கூனிச் சிறுமி க்யூவில் மெதுவாக நகர்ந்து வந்து கொண்டிருந்தாள்.

அவளுக்கு கூன் இல்லை.

ஆனால் அவள் இந்த முறை குருடியைப் போல் தட்டுத் தடுமாறிக் கொண்டே நடந்து வந்து கொண்டிருந்தாள்.

★

**ப**ரபரப்புடன் போனை எடுத்தார் ரங்கபிரசாத். "ஹலோ!"

மறுமுனையில் நிவேதிதா.

அவளுடைய போனுக்காகவே காத்திருந்த ரங்கபிரசாத் சட்டென்று "சொல்லுங்கள். ஏதாவது முன்னேற்றம் இருக்கிறதா?" என்று கேட்டார்.

"கொஞ்சம் இருக்கு. கொஞ்சம் இல்லை. இருப்பதை முதலில் சொல்லட்டுமா? இல்லாததை முதலில் சொல் லட்டுமா?"

"தீயதை முதலில் சொல்லிவிட்டுப் பிறகு நல்லதைச் சொல்லுங்கள். அந்த திருப்தியாவது கிடைக்குமே."

"பிரதிமாவின் கணவன் அகர்வாலை சில கேள்விகள் கேட்டேன். எந்த கேள்விக்கும் அவரால் சரியாக பதில் சொல்ல முடியவில்லை. அது அவருடைய தவறு இல்லை. அவருக்கு பிசினெஸ் தவிர வேறு எதுவுமே தெரியாது. அதனால் அந்த விஷயம் அப்படியே நின்றுவிட்டது."

"சரி. நல்ல செய்தி என்ன? அதைச் சொல்லுங்கள் சீக்கிரமாய்." "பிரதிமா தமிழ் பெண்தான். அகர்வாலை மணந்து கொண்டு பிரதிமா அகர்வாலாகியிருக்கிறாள்."

'இதுதான் நல்ல விஷயமா' என்று கேட்க நினைத்தவர் அவள் முகம் வாடிவிடுமே என்றுபேச்சை மாற்றிக் கொண்டே "சரி, வேறு ஏதாவது உண்டா?" என்றார்.

"இன்றைக்கு மறுபடியும் அகர்வாலிடம் போகப் போகிறேன். இதுதான் கடைசி முயற்சி. நான் ஒன்று சொல்லட்டுமா?"

"என்ன?"

"எங்கேயோ கிருஷ்ணாபுரத்தில் பிறந்த குழந்தைகளுக்கும் எப்பொழுதோ விக்ருத சிசுவைப் பெற்ற பிரதிமா அகர்வாலுக்கும் எந்த சம்பந்தமும் இருக்க வாய்ப்பு இல்லை. நாம் இருட்டு அறையில் இல்லாத கறுப்புப்

பூனையைத் தேடுகிறோமோ என்று தோன்றுகிறது."

"ஆமாம். ரொம்பவும் அலைய வேண்டாம். உங்கள் வேலை முடிந்ததும் பம்பாயிலிருந்து வந்துவிடுங்கள். இதற்காக தங்கவேண்டாம்." அலுப்புடன் போனை வைத்துவிட்டார்.

★

**அ**வதார் பாபாவிடமிருந்து உஸ்ஸோக் காரியாலயத்தை நோக்கி வந்து கொண்டிருந்த ரவி யோசிக்கத் தொடங்கினான். அவன் மனதில் இப்பொழுது குழப்பம் ஓரளவுக்கு நீங்கியது. பாபாவிடம் வரும் பக்தர்களில் பாதி பேருக்கு மேல் உஸ்ஸோக் ஆட்கள்தான் என்று புரிந்ததும் ஒரு ரகசியம் விடுபட்டாற் போல் இருந்தது.

இனி உஸ்ஸோக் பற்றி சோதிக்க வேண்டியதுதான் பாக்கி. அது உண்மையாகவே பூததேவதைகளை வழிபடும், மந்திர தந்திரங்களை பின்பற்றும் ஒரு கூட்டமா என்று தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வளவு பேரும் அஷ்டாவக்கிரனைப் பற்றிச் சொல்லும்போது அது உண்மையாகத்தான் இருக்க வேண்டும். அதுமட்டும் உண்மையாகிவிட்டால் தன் தங்கையும் சித்தார்த்தாவும் . . . ஐயோ!

அதற்கு மேல் அவனால் யோசிக்க முடியவில்லை.

குழம்பியபடியே உஸ்ஸோக் காரியாலயத்தின் படிகளை ஏறினான். அவனுக்கு வியப்பாக இருந்தது. வெளியே அத்தனை பாழடைந்து ஆளரவமின்றி தோன்றும் அந்த பங்களாவின் மூடிய கதவுக்குப் பின்னால் உலகத்தையே நடுநடுங்கச் செய்யும் ஒரு நபரின் பிறப்புக்காக இடைவிடாத உழைப்பு நடந்து கொண்டிருக்கிறது என்பதை யாராலுமே கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாது.

அவன் உள்ளே நுழைந்தான். அவன் உஸ்ஸோக்கில்

சேர்ந்தபொழுது கேள்விகளைக் கேட்ட கிழவன் அங்கே அவனுக்காக காத்திருந்தான். ரவியைப் பார்த்துவிட்டு "என்ன? பாபாவிடம் சொன்னாயா?" என்று கேட்டான்.

ரவி ஆம் என்பது போல் தலையை அசைத்தான்.

"என்னுடன் வா" என்று கிழவன் முன்னால் நடந்தான். ரவி பின் தொடர்ந்தான். இருவரும் ஒரு சிறிய ஹாலுக்குள் நுழைந்தார்கள். அந்த ஹாலில் சுமார் முப்பது பேர் கூடியிருந்தார்கள். முன்னால் ஒரு பெரியவர் நின்று கொண்டிருந்தார். அவருடைய நிழல் மேடையின் மீது நீளமாய் விழுந்து கொண்டிருந்தது. அவரைப் பார்க்கவே பயமாக இருந்தது.

"அவர்தான் மகாதிரஷ்டா" என்றான் கிழவன், பின் வரிசையில் உட்கார்ந்து கொண்டே. ரவி மகாதிரஷ்டாவையே பார்த்தான். மகாதிரஷ்டா சொல்லத் தொடங்கினார்.

"அஷ்டாவக்கிரனின் பிறப்பைப் பற்றி சித்தார்த்தாவுக்கு ஒரு சந்நியாசியின் மூலம் தெரிந்துவிட்டது. இந்த சந்யாசி சிவானந்தரின் சீடர். அஷ்டாவக்கிரனின் பிறப்பைத் தடுக்க தனக்கு சிவானந்தர் உதவுவார் என்ற நம்பிக்கையில் சித்தார்த்தா இமயமலைக்குக் கிளம்பியிருக்கிறான். ஆனால் சுவாமி சிவானந்தரை நான் ரொம்ப நாட்களுக்கு முன்பே கொன்று விட்டேன் என்று அவனுக்குத் தெரியாது. சொல்லப் போனால் இருண்ட இமயமலை குகைகளுக்கு நடுவில் சிவானந்தர் இறந்துவிட்ட செய்தி உலகத்திற்கே தெரியாது. எப்படியும் சித்தார்த்தா ஏமாற்றத்துடன் திரும்பி விடுவான். அதனால் ராகேஷ்..."

கேட்டுக் கொண்டிருந்த ரவி திடுக்கிட்டான். முன் வரிசையில் ஒரு ஆள் எழுந்து நின்றான்.

"நீ உடனே புறப்பட்டுச் சென்று சித்தார்த்தாவைச்

ரிஷிகேஷுக்குச் செல்லும் வழியில் இருக்கிறான். நீ செய்ய வேண்டியதெல்லாம் சித்தார்த்தாவை சிவானந்தரின் ஆசிரமத் திற்கு அழைத்துச் சென்று அவர் இறந்துவிட்ட செய்தியைத் தெரியப்படுத்த வேண்டியது ஒன்றுதான். பிறகு அவனுக்கு நல்ல வார்த்தைகளை சொல்லி இங்கே அழைத்து வர வேண்டும். அஷ்டாவக்கிரன் பிறக்கப் போகும் சமயத்தில் சித்தார்த்தா இங்கே இருந்தாக வேண்டும். சித்தார்த்தாவின் சாவு இங்கேதான் நிகழணும்."

முன் வரிசையில் நின்று கொண்டிருந்தவன் தலையை அசைத்தான்.

"உடனே கிளம்பு."

அந்த ஆள் வாசலைத் தாண்டப் போனபொழுது வெளிச்சம் அவன் மேல்பட்டது. ரவி அவனை அடையாளம் புரிந்து கொண்டான்.

அவன்தான் ராகேஷ்!

ரவி திகைத்துப் போனான். அப்பொழுதே ஓடிப் போய் அவன் உயிரை எடுக்க வேண்டும் போல் ஆவேசம் ஏற்பட்டது. நம்பிக்கைத் துரோகி! மனித உருவில் இருக்கும் அரக்கன். இவ்வளவு நாளாக தம்மோடு வளையவந்து கொண்டிருந்த ராகேஷ் இப்படிப்பட்டவனா?

"ராகேஷ்!" மறுபடியும் அழைத்தார் மகாதிரஷ்டா. "ஒருவேளை உரிய நேரத்திற்குள் சித்தார்த்தாவை இங்கே அழைத்து வர முடியவில்லை என்றால் அவனை அந்த மலை பிரதேசத்திலேயே கொன்றுவிடு. இங்கே அஷ்டாவக்கிரன் பிறந்ததுமே அந்த விஷயம் உனக்கு தெரியப்படுத்தப்படும். உடனே அங்கே அவன் கதையை முடித்துவிடு."

சரி என்பது போல் தலையை அசைத்துவிட்டு ராகேஷ் வெளியே நடந்தான்.

ரவி யோசிக்கத் தொடங்கினான். தன்னை வெளிப்படுத்திக் கொள்ள இது சமயமில்லை. அங்கே சித்தார்த்தாவின் உயிருக்கு ஆபத்து! என்ன செய்வது?

ராகேஷ் கிளம்பிப் போனதும் கதவுகள் மூடிக் கொண்டன. மகாதிரஷ்டா சொற்பொழிவைத் தொடர்ந்தார்.

## 27

ரவி யோசித்துக் கொண்டிருந்தான். உஸ்ஸோக்கிற்கு தற்சமயம் பணப்பிரச்னை இல்லை. ஹெலிகாப்டர் இருந்தால் டேராடூனில் இறங்கிக் கொண்டு அங்கிருந்து இமயமலைக்கு இரண்டு மணி நேரப் பயணம்.

ஆனால் ரவிக்குப் புரியாதது ஒன்றுதான். சுவாமி சிவானந்தரை எப்படியும் கொன்றுவிட்டதால் சித்தார்த்தா அங்கே போனாலும் லாபம் இல்லை. கேதாரகௌரியின் பிரசவ நேரத்தில் அவன் எங்கேயிருந்தாலும் திரும்பி வந்து விடப் போகிறான். பின்னே அவ்வளவு தூரம் ராகேஷை அனுப்ப வேண்டிய காரணம் என்ன? ஒரு வேளை சித்தார்த்தா திரும்பி வராவிட்டால் அந்த மலைப் பிரதேசத்திலேயே கொன்று விடுவதற்காக இருக்குமோ? ஏனோ அது நம்பத் தகுந்ததாகத் தோன்றவில்லை.

எது எதுவானாலும் ஆபத்து காத்திருக்கிறது என்று சித்தார்த்தாவை எச்சரிக்க வேண்டும். எப்படி?

மகாதிரஷ்டா தன் சொற்பொழிவை தொடர்ந்தார். நேரம் ஆக ஆக ஆபத்து நெருங்கிக் கொண்டிருந்ததை உணர்ந்தான் ரவி. இனி என்ன நேர்ந்தாலும் சரி என்று எழுந்துநின்றான். மகாதிரஷ்டாவின் பார்வை அவன் மேல் பட்டது. கேள்விக் குறியுடன் அவனை ஏறிட்டார்.

"ராகேஷுடன் சேர்ந்து நானும் போகிறேன்."

"ஏன்?"

ரவி தொண்டையைக் கனைத்துக் கொண்டான். "சித்தார்த்தாவைப் பழி வாங்கணும் என்று எனக்கு ரொம்ப நாளைய எண்ணம். இந்த விதத்தில் அதைத் தீர்த்துக் கொள்ளப் போகிறேன்."

"உன் பகையின் காரணம்?"

"கேதாரகெளரி என் தங்கை என்பதால்."

சபையில் இருந்தவர்கள் திடீரென்று தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டார்கள். அந்த ஹாலில் சந்தடி எழும்பியது. மகாதிரஷ்டா கையை உயர்த்தினார். சபையோர் நிசப்தமானார்கள்.

"இப்படி வா."

இருக்கை வரிசைகளைத் தாண்டிக் கொண்டு அவர் முன்னால் போய் நின்றான் ரவி. தான் புலியின் வாயில் தலையிடுகிறோம் என்று அவனுக்குத் தெரியும். ஆனால் சித்தார்த்தாவைக் காப்பாற்ற வேறு வழியில்லை.

"சித்தார்த்தா இறந்து விடுவான். அத்துடன் உன் தங்கையும் இறந்துவிடப் போகிறாள். தெரியுமா உனக்கு?"

ரவி தலையை அசைத்தான். "எனக்கும் என் குடும்பத்துக்கும் சம்பந்தமே இல்லை. சிறு வயதிலேயே நான் வீட்டை விட்டு ஓடிப் போய்விட்டேன். என் தந்தையின் மரணத்தைப் பற்றிப் பேப்பரில் பார்த்துவிட்டுச் சொத்துக்காகத்தான் திரும்பி வந்தேன். சித்தார்த்தா சொத்தை என்னிடம் ஒப்படைக்க மறுத்துவிட்டான். பணத்திற்காக எதையும் செய்ய நான் தயார். இறுதியில் தங்கையாக இருந்தாலும் சரி கொன்றுவிடுவேன். உஸ்ஸோக்கிற்காக என் உயிரையும் தருவேன்."

சபையில் மீண்டும் சலசலப்பு ஏற்பட்டது. மகாதிரஷ்டா

கையை உயர்த்தியதும் சபையில் ஆரவாரம் அடங்கியது.

ரவி அரும்பாடுபட்டு கோபத்தை அடக்கிக் கொண்டிருந்தான். மற்றவர்களின் மனதில் இருப்பதை உள்ளது உள்ளபடி தெரிந்து கொள்ளும் சக்தி உஸ்ஸோக்கில் சிலருக்கு இருக்கு என்று முன்பே அறிந்திருந்தான் அவன். ஆனால் அது அந்தந்த நபர்களின் பிரமைதான். இல்லாவிட்டால் தன் உடலில் உஸ்ஸோக்கின் அடையாள சின்னம் இல்லாததை மகாதிரஷ்டா என்றோ கண்டுபிடித்திருக்க வேண்டுமே? ஆனால் இதுவரை கண்டு பிடிக்கவில்லையே?

அதுதான் ரவியின் துணிச்சல்!

அதற்குள் மகாதிரஷ்டா சொன்னார். "சித்தார்த்தாவைக் கொலை செய்ய நீ போக வேண்டியதில்லை ரவி. அஷ்டாவக்கிரனின் ஜனன சமயத்தில் அவனே இங்கே வந்து சேர்ந்துவிடுவான். தானே அஷ்டாவக்கிரனின் கையில் சாகப் போகிறான்."

"அப்படி என்றால் ராகேஷ்?"

"ராகேஷ் சித்தார்த்தாவைக் கொல்லமாட்டான். அஷ்டாவக்கிரனின் ஜனன நேரத்திற்குள் அவன் வந்து சேராவிட்டால் வேறு வழியில்லாத நிலையில் அவனைக் கொல்லுவான். ஆனால் அப்படி நடக்காது. ராகேஷை ரிஷிகேசில் சந்திக்கப் போகும் நேபாளி ஷெர்பாவுக்கு இமயப் பிரதேசம் முழுவதும் அத்துப்படி. சித்தார்த்தாவுக்கு கொஞ்சமும் சந்தேகம் ஏற்படாதபடி அழைத்துப் போய் சிவானந்தரின் ஆசிரமத்தை தரிசிக்கச் செய்துவிட்டு உரிய நேரத்தில் இருவரையும் அனுப்பி வைத்துவிடுவான்."

சொல்லி முடித்துவிட்டு மகாதிரஷ்டா ஓரடிமுன் நோக்கி வைத்தார். ரவியின் உடல் தன்னையறியாமல் சிலிர்த்தது.

இனி இதைப் பற்றிப் பேசத் தேவையில்லை என்பது

போல் மகாதிரஷ்டா சபையோரை நோக்கி ஆணையிடத் தொடங்கினார்.

"ஹரி நாம்!"

இரண்டாவது வரிசையிலிருந்து ஒருவன் எழுந்து நின்றான்.

"அஷ்டாவக்கிரன் பிறக்க வேண்டிய நேரம் நெருங்கி விட்டது. அதற்குப் பெரிய தடையாக இருக்கும் ஒன்றை நீ ஒழிக்க வேண்டும்."

ஹரிநாம் கட்டளைக்காகக் காத்திருந்தான்.

"பட்டணத்தின் நடுமையத்தில் ஒரு பெரிய கோவில் இருக்கிறது. அதை நிர்மூலமாக்க வேண்டும். அந்த எல்லையில் கோவில் எதுவும் இருக்கக் கூடாது. உன்னுடன் இன்னும் நாலு பேரை அழைத்துப் போ. இன்றிரவோ அல்லது நாளை இரவோ இந்தக் காரியம் முடிந்தாகணும்."

கேட்டுக் கொண்டிருந்த ரவியின் ரத்தம் கொதித்தது. கோவில் எல்லையில் என்ன நடந்தாலும் இந்துக்கள் சும்மாயிருக்கமாட்டார்கள். அவர்கள் சந்தேகம் முதலில் முஸ்லிம்கள் மேல்தான் விழும். அதனால் கலகம் நேரிடும். உஸ்ஸோக் மெம்பர்களுக்கு இரண்டு வார்த்தைகள்தான் தெரியும். ஒன்று ஆவேசம். மற்றொன்று தியாகம்.

சபை முடிந்தது. ஒவ்வொருவராக எழுந்து வெளியே போனார்கள். ஹால் காலியாகிவிட்டது. அவன்தான் கடைசி ஆள். அவன் வாசலைத் தாண்டப் போனபொழுது பின்னாலிருந்து குரல் கேட்டது "ரவி!" என்று. அவன் திரும்பிப் பார்த்தான். மேடையில் அதே இடத்தில் நின்று கொண்டிருந்தார் மகாதிரஷ்டா.

"இப்படி வா" என்று அழைத்தார்.

ரவிக்கு ஆச்சரியமாக இருந்தது. பேசாமல் அவரைப் பின்

தொடர்ந்தான். மகாதிரஷ்டா பின் பக்கமாக இருந்த விசாலமான இருண்ட வராண்டாவில் நடக்கத் தொடங்கினார்.

"உன் தங்கையின் மீது உனக்கு அவ்வளவு வெறுப்பா?" மகாதிரஷ்டா கேட்டார்.

"ஆமாம்."

அதைக் கேட்டதும் மகாதிரஷ்டாவின் உதடுகளில் குறுநகை படர்ந்தது.

"சித்தார்த்தாவைக் கொல்வதற்காக நீ இமயமலைக்குப் போகிறேன் என்கிறாய் இல்லையா?"

"ஆமாம்."

நடந்து கொண்டிருந்த மகாதிரஷ்டாவின் முகத்தில் அதே குறுநகை. ஏதோ சங்கடமான உணர்வு ரவியை ஆட்கொண்டது. முதல் முதலாக தான் ஏதோ தவறு இழைத்து விட்டோமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. அதை ஒன்றையும் கவனிக்காதவராய் அவர் சொல்லிக் கொண்டே போனார்.

"புரொபசர் புட்டண்ணா உஸ்ஸோக் சேர்ந்த ஆள். அவருக்கு டாக்டர் ரங்கபிரசாத் மேல் ரொம்ப வெறுப்பு. அதேபோல் அவதார்பாபாவுக்கு உன் தங்கை கௌரியின் மீது கோபம். புட்டண்ணா பாபாவிடம் மக்களைக் கொண்டு ரங்கபிரசாதின் நர்சிங் ஹோமை நிர்மூலமாக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார். பக்தர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவது பாபாவின் கடமை இல்லையா?" என்று கேட்டுவிட்டு திரும்பவும் சிரித்தார்.

"சாத்தான் பிறப்பதற்கு ரங்கபிரசாத் தன் ஆஸ்பத்திரியில் உதவி செய்கிறார் என்றும், அதனை எதிர்க்க வேண்டிய கடமை மக்களைச் சேர்ந்தது என்றும் பாபா ஒரு வார்த்தை சொன்னால் போதும். மக்கள் எழுச்சி கொண்டு பந்தாடி விடுவார்கள். அந்த வேலையை பாபா நாளை இரவு

செய்யப் போகிறார். மக்கள் தீவட்டிகளுடன் ரங்கபிரசாதின் க்ளினிக்கைச் சூழ்ந்து கொண்டு விடுவார்கள். க்ளினிக்கை நெருப்பு வைத்துக் கொளுத்தி விடுவார்கள். உன் தங்கையை மட்டும் விட்டு வைப்பார்களா? போகட்டும், உனக்கு விட்டுக் கொடுத்தால் நீ கொன்றுவிடுகிறாயா?"

ரவி பதில் பேசவில்லை. எங்கேயோ ஏதோ நிகழ்ந்திருக்கிறது.

"அஷ்டாவக்கிரன் பிறக்கும் வரை உன் தங்கையின் உயிருக்குப் பாதுகாப்பு தரப்படும். அந்த சமயத்தில் நாம் அங்கே இருக்க வேண்டும். அப்பொழுதுதான் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து சாகலாம்" என்று முடித்த போது வராண்டாவைத் தாண்டி ஹாலுக்கு வந்தார்கள்.

அந்த ஹாலில் விளக்கின் வெளிச்சம் கண்ணைப் பறித்தது. ரொம்ப பெரிய ஹால் அது. நட்ட நடுவில் ஒரே ஒரு நாற்காலி போடப்பட்டிருந்தது. அதில் உட்கார்ந்திருந்த நபரைப் பார்த்து ரவி தன்னையறியாமல் ஓரடி பின்னுக்கு நகர்ந்து, "ரஞ்சிதா!" என்றான் நடுங்கும் குரலில்.

ரஞ்சிதா நிமிர்ந்து பார்க்கவில்லை. தன்னோடு சேர்ந்து காதலனையும் ஆபத்தில் இழுத்துவிட்டோமே என்று தளர்ந்து போய் பேச்சு மூச்சில்லாமல் சிலையாக உட்கார்ந்திருந்தாள்.

ரவி அதிர்ச்சியடைந்தவனாய் நின்று விட்டான். பின்னாலிருந்து மகாதிரஷ்டாவின் குரல் கேட்டது.

"ராகேஷ் டேப்ரிகார்டரைப் பற்றிச் சொன்னான். உஸ்ஸோக் ரகசியத்தை அங்கத்தினர்கள் யாருமே வெளியே சொல்லிவிட மாட்டார்கள். ஆனால் அளவு கடந்த ஆவேசம் அவனை எல்லை மீறச் செய்துவிட்டது. ரஞ்சிதா அந்த விஷயத்தை மறந்துவிட்டாள் என்றும், அதனால் அவளைக் கொல்லாமல் விட்டதாகவும் ராகேஷ் சொன்னபோது

சந்தேகம் ஏற்பட்டது எனக்கு. ரஞ்சிதாவை நான் கவனித்துக் கொள்வதாக ராகேஷிடம் சொல்லிவிட்டு என்னுடைய ஆட்களை அனுப்பினேன். பாவம் சின்னப்பெண்தானே! இரண்டே நிமிஷத்தில் எல்லாவற்றையும் கக்கிவிட்டாள். பிறகு நான் கூட்டத்திற்கு வந்துவிட்டேன். ஒன்றும் தெரியாத அப்பாவி போல் நீ நடித்ததைப் பார்க்கும்போது சிரிப்புத்தான் வந்தது" என்று மேலும் சிரித்தார்.

ரவி தன்னையே நொந்து கொண்டான். ரஞ்சிதாவை யாரும் பொருட்படுத்த மாட்டார்கள் என்று நினைத் திருந்தான். உஸ்ஸோக்கைத் தவறாக எடை போட்டு விட்டான்.

அதற்குள் மகாத்ரஷ்டா அவனருகில் வந்து கை நீட்டியபடி "டியர் ரவீ! உன் கைக்கடியாரத்தை இப்படிக் கொடு. உஸ்ஸோக்கை இதுவரை யாருமே ஏமாற்றியதில்லை. முதல் முறையாக ஏமாற்றத் துணிந்தவனுக்கு எந்த மாதிரியான தண்டனை கொடுக்கணும் என்று யோசித்து முடிவு எடுக்கணும். அதுவரை எங்கள் விருந்தினராக இருங்கள்" என்றார்.

கைக்கடியாரத்தை எடுத்துக் கொண்டு மகாத்ரஷ்டா போய்விட்டார். ரவி அவளிடம் நெருங்கி "ரஞ்சிதா!" என்றான்.

அதுவரையிலும் நிசப்தமாக உட்கார்ந்திருந்தவள் "இதெல்லாம் என்னால்தான். என்னால்தானே வந்தது" என்று ஹோவென்று கதறிவிட்டாள், அவன் கைகளில் முகத்தைப் பொத்திக் கொண்டு.

"அழாதே ரஞ்சிதா" அவன் தேற்ற முயன்றான்.

ஹாலில் ஒரு மூலையில் கெலடின் அவர்களை வரவேற்பது போல் இருந்தது. மந்திரவாதியின் கையில் சிக்கி சித்திரவதை அனுபவிப்பதைவிட அதற்குள் தலையைக்

கொடுத்து சாவதே மேல் என்று நினைத்தான் அவன்.

அதே நேரத்தில் ரங்கபிரசாத் வீட்டில் போன் ஒலித்தது. மறுமுனையில் நிவேதிதா பேசினாள்.

"அகர்வாலின் பி.ஏ.வைப் பார்த்தேன். நான் உதிர்த்த ஒரு முறுவல் நன்றாக வேலை செய்தது. உடனே அவன் அகர்வாலின் தாயிடம் அழைத்துப் போய் அறிமுகம் செய்து வைத்தான். அந்தம்மாள் ரொம்ப வெகுளி. மருமகள் இறந்து போனதிலிருந்து பூட்டிக் கிடந்த அறையைத் திறந்து காண்பித்தாள். உள்ளே சில டயரிகள் கிடைத்தன" என்றாள்.

ரங்கபிரசாத் துடிப்புடன் "அந்த டயரியிலிருந்து ஏதாவது துப்பு கிடைத்ததா?" என்று கேட்டார்.

"பிரதிமா ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். தமிழ் நாட்டைச் சேர்ந்தவள். பணத்திற்காகவே அகர்வாலை திருமணம் செய்து கொண்டு பம்பாய்க்குப்போயிருக்கிறாள்."

"அப்படியா."

"அகர்வால் ஒரு இம்பொடெண்ட்."

"வாட்!"

"ஆமாம். பிரதிமாவின் டயரியில் அது தெளிவாக இருக்கிறது."

ரங்கபிரசாத் ரிசீவரை பிடித்துக்கொண்டு கொஞ்ச நேரம் அப்படியே நின்றுவிட்டார். பிறகு தன் முட்டாள்தனத்தை நினைத்து தனக்குள் சிரித்தபடி "இதுதானா க்ளூ?" என்றார்.

"ஆமாம்."

"இதை வைத்துக் கொண்டு நம்மால் எதை நிரூபிக்க முடியும்? கிருஷ்ணாபுரத்தில் பிறந்த ஏழு விக்ருதப் பிறவிகளின் தந்தையும் மலடு இல்லையே? அத்துடன் கணவன் மலடாக இருந்தால் மனைவிக்கு விக்ருத சிசுக்கள்

பிறக்கும் என்று எந்த ஜெனடிக்ஸ் சாத்திரத்திலும் சொல்லப்படவில்லையே?" மனம் தளர்ந்து போனவராக சொன்னார்.

"அவ்வளவுதான் என்கிறீர்களா?"

"அவ்வளவுதான். புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்ந்துவிட்டோம்."

"நான் இன்னும் அந்த டயரியை முழுவதும் படிக்க வில்லை. படித்ததும் மறுபடியும் போன் செய்கிறேன். சரி இந்த விஷயத்தை இனி விட்டுவிடுவோம். எப்படி இருக்கீங்க?"

"சிக்!" என்றார்.

"ஏன்? எதுக்கு?"

"கேதார கௌரியின் பிரசவம் நெருங்கிவிட்டது. சித்தார்த்தாவும், ரவியும் எங்கே போனார்களோ தெரியவில்லை. ஊர் முழுவதும் கலவரமாக இருக்கிறது. மக்கள் என்னைக் குற்றவாளியைப் போல் பார்க்கிறார்கள். சிக் இல்லாமல் பின்னே எப்படி இருக்கும்?"

"சின்ன கவிதை ஒன்று சொல்லட்டுமா?"

"என்ன?"

"Do not feel sick
Take the last letter
Kick the third letter
Keep the second letter
Double the first letter."

"எனக்கு ஒன்றுமே புரியவில்லையே?"

"யோசித்துப் பாருங்கள், புரியும். யாருக்கும் சொல்லாதீங்க. மாலை பிளைட்டில் வருகிறேன்" என்று போனை வைத்துவிட்டாள் நிவேதிதா.

சிறு வயதில் பிரதிமா திருநெல்வேலியில் பெற்றோருடன் வசித்து வந்தாள். கல்லூரி படிப்பு முடிந்ததுமே தாய் தந்தை இருவரும் ஒரு விபத்தில் இறந்துவிட்டார்கள். எப்படியோ பம்பாயில் ஒரு கம்பெனியில் வேலை கிடைக்கவே பம்பாய்க்கு வந்து விட்டாள். ஜெகதீஷ் என்ற இளைஞனைக் காதலித்தாள். இருவரும் ஓருயிர் ஈருடலாக நேசித்து வந்தார்கள்.

சரியாக அந்த நேரத்தில்தான் ஜெகதீஷ்க்கு தமிழ் சினிமாவில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. சென்னைக்கு வந்து சில படங்களில் நடித்துக் குறுகிய காலத்திலேயே புகழ் பெற்றுவிட்டான். பெயரும் புகழும் பரவத் தொடங்கியதில் பிரதிமாவை சில நாட்கள் மறந்துவிட்டிருந்தான். ஆனாலும் பிரதிமாவைத் தவிர அவனால் வேறு எந்தப் பெண்ணையும் காதலிக்க முடியவில்லை. அதனால் பிரதிமாவை சென்னைக்கே வரச் சொல்லியும், அவளை மணந்து கொள்வதாகவும் தெரிவித்துக் கடிதம் எழுதியிருந்தான். ஆனால் அந்தக் கடிதம் அவள் கைக்குக் கிடைக்காமல் போய்விட்டது. ஏன் என்றால் அதற்குள் அவள் அந்த வேலையை விட்டுவிட்டு டெல்லியில் வேறு வேலைக்குப் போய்ச் சேர்ந்துவிட்டாள்.

டெல்லிக்கு வந்து சேர்ந்தபிறகும் பிரதிமாவால் ஜெகதீஷை மறக்க முடியவில்லை. தனிமை அவளை மிகவும் பாதித்தது. அந்தச் சமயத்தில்தான் பம்பாயிலிருந்து கடிதம் ரிடைரக்ட் செய்யப்பட்டு டெல்லி விலாசத்திற்கு வந்து சேர்ந்தது. உடனே ஜெகதீஷுக்கு கடிதம் எழுதினாள். தன்னால் இனி இந்த தனிமையை தாங்க முடியாது என்றும் அடுத்த வாரமே சென்னைக்கு வந்துவிடப் போவதாகவும் அதில் குறிப்பிட்டிருந்தாள். தான் வரப்போகும் நேரத்தை

தெரியப் படுத்துவதற்காக சென்னைக்கு போன் செய்தாள். சரியாய் ஒரு மணி நேரத்திற்கு முன்னால்தான் சினிமா ஷூட்டிங்கில் நடந்த விபத்தில் ஜெகதீஷ் மரணமடைந்தான் என்று மறுமுனையி லிருந்து செய்தி கிடைத்தது.

பிரதிமா மனமொடிந்து போனாள். அவளுக்கு சித்தப் பிரமை ஏற்பட்டது. கொஞ்சநாளில் அது சரியானதும் பிரதிமா அகர்வாலை சந்திக்க நேர்ந்தது. அகர்வால் தன்னை மணந்து கொள்ளும்படி கேட்டபோது தனக்கும் ஒரு துணை தேவைப் பட்டதால் பிரதிமா அவனை மணக்கச் சம்மதித்தாள்.

அகர்வாலுடன் திருமணமாகி பம்பாய்க்குச் சென்ற ஒரு மாதத்திற்குள் பிரதிமாவுக்குத் தெரிந்துவிட்டது, அவன் ஆண் மகன் இல்லையென்று. ஆனாலும் அவள் அதற்காக வருந்த வில்லை. உண்மையில் அகர்வாலுக்கு சமூகத்தில் தன் அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு மனைவி வேண்டியிருந்தது. பக்கத்தில் ஒரு பெண் இருந்தால் தனக்குப் பெருமை என்ற எண்ணத்தில்தான் அவன் பிரதிமாவை மணக்க விரும்பினான். திருமணத்திற்கு முன்பே அவளைப் பற்றி விசாரித்து திருப்தி அடைந்தான். தன்னால் எப்படியும் தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுபடமுடியாது என்பதால் கற்பைப் பற்றி அதிகம் பொருட்படுத்தாத அவளை மணந்து கொண்டால் பெரிய பெரிய சர்கிளில் தன்னுடைய வேலைகளை முடிப்பதற்கு அவள் துணையாக இருப்பாள் என்று நினைத்தான். அந்த வழியில் குழந்தை உண்டாகி விட்டாலும் தன் குழந்தையாக வளரட்டும் என்று எண்ணினான். ஆனால் அவள் அதற்கு சம்மதிக்கவில்லை. ஒரு காலத்தில் வாழ்க்கைக்காக, படிப்புச் செலவுகளுக்காக அவள் ஆண்களுடன் சுற்றியதுண்டு. ஆனால் ஒரு கோடீஸ்வரரின் மனைவியாக இருந்து கொண்டு அந்த காரியத்தைச் செய்ய அவள் சம்மதிக்கவில்லை. கணவன் மனைவிக்குமிடையே

பிரச்னைகள் வரத் தொடங்கின.

கணவன் மூலமாக தனக்கு தாம்பத்ய சுகம் கிடைக்காத போதிலும் அவள் வேறு ஆண்களை விரும்பவில்லை. ஆனால் கணவனே அவளை அச்செயலுக்குத் தூண்டியபோது அவளால் தாங்க முடியாமல் போய்விட்டது. குழந்தை வேண்டும் என்ற துடிப்பில் இருந்த அகர்வால் அவளை வேறு ஆண்மகனுடன் தொடர்பு படுத்த முன் வந்தபோது வெகுண்ட அவள் தனக்கு விவாகரத்து தந்து விடும்படியும், தன்னுடைய படிப்பை வைத்துக் கொண்டு எங்கேயாவது உழைத்துப் பிழைத்துக் கொள்வதாகவும் சொன்னாள். அகர்வால் அதற்கு சம்மதிக்கவில்லை. அவன் கௌரவம் குறுக்கிட்டது.

இவ்விதமாக சண்டையும் சச்சரவுமாக ஆறுமாதங்கள் கழிந்தன. இறுதியில் அகர்வால் ஜெனடிக்ஸ் இன்ஸ்டிட்யூட்டுக்குப் போனான். செயற்கை முறை கருத்தரித்தல் பற்றி தெரிந்து கொண்டான்.

விஷயத்தைச் சொல்லாமல் மனைவியை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்றான். ஆனால் அவளிடம் சொல்லாமல் மறைத்து வைத்து ஆர்டிஃபிஷியல் இன் செமினேஷன் செய்வதற்கு டாக்டர் வம்சிகிருஷ்ணா ஒப்புக் கொள்ளவில்லை. விஷயம் தெரிந்ததும் பிரதிமா வெகுண்டாள். தனக்குத் தெரியாமல் இந்த ஏற்பாட்டிற்கு முன் வந்த கணவனை டாக்டரின் முன்னிலையிலேயே உண்டு இல்லை என்று ஆக்கிவிட்டாள். அவமானத்தால் கூனிக் குறுகிவிட்ட அகர்வால் மனைவியை அழைத்துக் கொண்டு அன்றே பம்பாய்க்கு போய்விட்டான்.

அதற்குப் பிறகு ஆறுமாதங்கள் கழித்து பிரதிமா அகர்வால் கர்ப்பம் தரித்தாள்.

★

படித்துக் கொண்டிருந்த ரங்கபிரசாத் திடுக்கிட்டார்.

"என்ன ஆச்சு?" கேட்டாள் நிவேதிதா. பிரதிமா அகர்வாலின் டயரியைப் பார்த்து ரிப்போர்ட் தயாரித்திருந்தாள் அவள். அதனால் எந்த லாபமும் இருக்கப் போவதில்லை என்று தெரிந்த போதிலும் இந்த கடைசி வாக்கியம்தான் அவருள் ஆர்வத்தைத் தூண்டிவிட்டது.

"இது... இது எப்படி நிகழ்ந்திருக்கும்?" என்று கேட்டார்.

"எனக்கும் அதுதான் சந்தேகமாக இருக்கு."

"இதைப் பற்றி டயரியில் எந்த குறிப்பும் இல்லையா?"

"பிரதிமாவுக்கு ரொம்ப விரிவாக டயரி எழுதும் பழக்கம் இல்லை. ஆங்காங்கே சில வரிகளை எழுதியிருக்கிறாள். பம்பாயிலிருந்து வந்ததுமே நான் நேராக எங்கள் இன்ஸ்ட்டிட்யூட்டுக்குப் போனேன். ரிஜிஸ்டரில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் அகர்வால் தம்பதியர் வந்திருப்பதாக குறிப்பு இருக்கிறது. ஆனால் கணவன் மனைவி இருவரில் யாருக்காவது ஆட்சேபணை இருந்தாலும் செயற்கை முறை கருத்தரித்தலை செய்யக் கூடாது என்பது எங்களுடைய விதி முறைகளில் ஒன்று. அதனால் அதைச் செய்து கொள்ளாமலேயே திரும்பிப் போய்விட்டார்கள் அவர்கள்."

"ஆனால் அதற்குப் பிறகு பிரதிமா அகர்வால் கருத்தரித்திருக்கிறாள்."

"ஆம்."

"அப்படி என்றால் அகர்வால் அவளை அப்புறமாக சம்மதிக்க வைத்திருக்க வேண்டும்."

"இல்லை."

"இல்லாவிட்டால் பலவந்தமாக யாரை விட்டாவது கற்பழிக்கச் செய்திருக்கணும்."

அதுவும் இல்லை. ஏன் என்றால் அதற்குப் பிறகு பிரதிமா அகர்வால் ரொம்ப சந்தோஷமாக இருந்திருக்கிறாள். டயரியில் கூட 'இன்றைக்கு டாக்டர் என்னைப் பரிசோதித்து விட்டு நான் கருவுற்று இருப்பதாக தெரிவித்தார். ரொம்ப சந்தோஷமாக இருந்தது. இந்த விதத்திலேயாவது என் வாழ்க்கையில் சற்று ஒளி ஏற்பட்டிருக்கிறது' என்று எழுதி யிருக்கிறாள். அந்த ஒன்பது மாதங்களும் அவள் சந்தோஷ மாகத்தான் இருந்திருக்கிறாள். விக்ருத சிசு பிறந்ததும் மூளை கலங்கிவிட்டது மறுபடியும். அதன்படி பார்த்தால் அவள் விருப்பத்திற்கு மாறாக எதுவும் நடந்திருக்க வாய்ப்பு இல்லை."

"ரொம்ப குழப்பமாக இருக்கிறது. இதைப்பற்றி அகர்வால் என்ன சொல்கிறான்?"

"அவனுக்கு நான் இந்த டயரியை எடுத்து வந்ததே தெரியாது. இன்னொரு முறை அவனைச் சந்திக்க முயன்றால் சுட்டுத் தள்ளிவிடுவான். தான் ஒரு இம்பொடெண்ட் என்று வெளியே தெரிய நேர்ந்தால் யார்தான் சும்மா இருப்பார்கள்?"

ரங்கபிரசாத் யோசனையில் ஆழ்ந்தார். கொஞ்ச நேரம் கழித்து "பிரதிமாவுக்கு இரண்டாவது தடவை எப்பொழுது பைத்தியம் பிடித்தது?" என்று கேட்டார்.

"பிரசவம் ஆன பிறகு."

"மெண்டல் ஆஸ்பத்திரியில் அவளைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா?"

"கொஞ்சம் குணமாகத் தொடங்கிய நேரத்தில் அவள் எப்பொழுது பார்த்தாலும் எஸ்.எஸ்.ஏ. என்று புலம்பி வந்தாளாம். அந்த சமயத்தில்தான் நாய்கள் அவள் மீது பாய்ந்து குதறி கொன்று விட்டனவாம்" என்றாள் நிவேதிதா.

ரங்கபிரசாத் சட்டென்று "என்ன? எஸ்.எஸ்.ஏ.வா?"

என்றார்.

"அந்த மாதிரிதான் ஏதோ வார்த்தையாம். உடனே நான் இந்த வார்த்தைக்கும் அகர்வாலுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோன்னு சந்தேகப்பட்டு நேரில் போய் விசாரிக்க பயந்து போனில் 'S.S.A. பற்றி' உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" என்று கேட்டேன்.

"என்ன சொன்னான்?"

"நீங்க யாருன்னு கேட்டான். உங்களுக்குத் தேவையில்லை என்றேன். உடனே போனை வைத்துவிட்டான். அதனால் இதில் ஏதோ மர்மம் இருக்கும் என்று தோன்றுகிறது."

"இன்னொரு முறை போன் செய்து பார்ப்போமா?" என்றபடி ரங்கபிரசாத் அகர்வால் நம்பரை அழுத்தினார். உடனே தொடர்பு கிடைத்தது.

"ஹலோ மிஸ்டர் அகர்வால்!" என்றார்.

"ஸ்பீக்கிங்."

"எஸ்.எஸ்.ஏ."

"என்ன?"

வேறு என்ன பேசுவது என்று தெரியாமல் மறுபடியும் "எஸ்.எஸ்.ஏ." என்றார்.

"முந்தாநாள் போன் செய்தது நீங்கள்தானா?" மறு முனையிலிருந்து கிணற்றுக்குள்ளிருந்து வந்தாற்போல் கேட்டது.

அவன் கேட்டது நிவேதிதா செய்த போனைப் பற்றித்தான் என்று ஊகித்து "ஆமாம். எங்கள் ஆள்தான்" என்றார்.

"சொல்லுங்க. என்ன வேண்டும்?" அவன் குரலில் சலிப்பு

வேறு என்ன கேட்பதென்று புரியாமல் "உங்களிடம் பேசணும்" என்றார்.

"மிஸ்டர்! நீங்க யாரு என்று எனக்குத் தெரியாது. எப்போதோ இரண்டு வருடங்களுக்கு முந்திய காண்ட்ராக்ட் அது. நீங்க செய்த மோசடிக்கு வேறு யாராவதாக இருந்தால் கொன்று குவித்திருப்பார்கள். மான மரியாதைக்கு அஞ்சி சும்மா இருந்துவிட்டேன் நான். உங்களிடம் கொஞ்சமாவது நேர்மையிருந்தால் என் இரண்டு லட்சத்தையும் திருப்பித் தந்துவிடுங்கள்."

"இரண்டு லட்சமா?"

"ஆமாம். என் மனைவிக்கு ஜெகதீஷின் மேல் இருந்த காதலை நீங்க இவ்வளவு நன்றாக காஷ் செய்து கொண்டு ஏமாற்றுவீங்க என்று நான் நினைக்கவில்லை. எனக்கு இப்பொழுதுதான் சந்தேகமே வருகிறது."

"என்ன?"

"அது தன்னுடைய வீரியம்தான் என்று ஜெகதீஷ் தந்த பாண்ட் உண்மையானதுதானா இல்லையா என்று!" கோபமாகச் சொல்லிவிட்டு மறுமுனையில் போனை வைத்து விட்டார்.

ரங்கபிரசாத் சிலையாகிவிட்டார். நிவேதிதா பக்கம் திரும்பி "நிவேதிதா! உனக்குத் தெரிந்த நம்பிக்கையான நண்பர்கள் யாராவது பம்பாயில் இருக்கிறார்களா?" என்று கேட்டார்.

அவள் புரியாமல் "ஏன்?" என்று கேட்டாள்.

"சொல்கிறேன். சின்ன உதவி தேவைப்படுகிறது சீக்கிரமாக யோசி" என்றார்.

★

தரை முழுவதும் பஞ்சுத் துகள்கள் பரப்பியது போல எங்கும் பனி படர்ந்திருந்தது. சுற்றிலும் பனிமலைகள். நடுவில் சாலையின் சுவடு கறுப்பாக தென்பட்டது.

பஸ் அங்கே நின்றது. அவர்கள் மூன்று பேரும் அங்கே இறங்கினார்கள். பத்ரிநாத் போகும் பஸ் அது. அந்த இடத்தில் ஸ்டாப் இல்லை என்றாலும் பயணிகளின் விருப்பத்திற்கு ஏற்ப டிரைவர் அங்கே நிறுத்தினான். திரும்பி வரும்போது அதே இடத்தில் காத்திருப்பதாகச் சொல்லி அவர்கள் கொஞ்சம் பணம் தந்ததும் டிரைவர் ஒப்புக் கொண்டான். அங்கிருந்து பத்ரிநாத்க்கு பன்னிரெண்டு மணி நேரப் பயணம். போய் திரும்பி வருவதற்கு மூன்று நாட்கள் ஆகும். அதற்குள் சிவானந்த சுவாமிகளின் ஆசிரமத்திற்கு போய் வந்துவிடலாம் என்று நினைத்தான் சித்தார்த்தா.

பஸ் மூவரையும் இறக்கிவிட்டு கிளம்பி தொலைவில் மறைந்துவிட்டது. சித்தார்த்தாவுக்கு மலையேற்றம் பற்றி ஓரளவுக்கு தெரியும். ராகேஷுக்கு ஒன்றுமே தெரியாது. கிழக்கிலிருந்து வீசிக் கொண்டிருந்த குளிர் காற்று எலும்பு களையும் நடுங்கச் செய்து கொண்டிருந்தது. ஒரு முறை நிமிர்ந்து எதிரே இருந்த மலையின் உச்சியைப் பார்த்துவிட்டு நடக்கத் தொடங்கினார்கள் மூவரும். முன்னா ஷெர்பா, நேபாளி வழிகாட்டி ஊன்று கோல்களால் பனியில் குத்திக் கொண்டே நடந்தான். ஷுக்கள் பனியில் புதைந்து போய்க் கொண்டிருந்தன.

மலைமீது விழுந்த சூரிய வெளிச்சத்தைப் பார்த்து "நாம் அந்தப் பக்கம் தானே போகணும்?" என்றான் சித்தார்தா. ஷெர்பா சிரித்துவிட்டு "பனிப்பிரதேசத்தில் கிழக்கு, வெளிச்சம் வரும் திசைக்கு எதிர் திசையில் இருக்கும்" என்றான்.

ஏறக்குறைய மூன்று மணி நேரம் நடந்த பிறகு அவர்கள் மலையுச்சியின் பின் பகுதியை அடைந்தார்கள். "இன்னும்

மூன்று மணி நேரம்தான்" என்றான் ஷெர்பா. சித்தார்த்தா சந்தோஷப்பட்டான். தான் நினைத்ததைவிட ஒருநாள் முன்னாலேயே பயணம் முடிந்துவிடும்.

திடீரென்று காற்றின் வேகம் அதிகரித்தது. பனிப்புயல் வீசியது. சுற்றிலும் வெண்மையாக பனிப்படலம். காதுகளில் காற்றின் பேரிரைச்சல். நல்ல வேளையாக இரண்டு நிமிடங்களில் அதன் தீவிரம் குறைந்துவிட்டது.

அந்த இரண்டு நிமிடங்களில் நிலைமை மோசமாகி விட்டது. அவலாஞ்ச் (பனிப்புயல்) வீசும்போது சாய்வாக நிற்க வேண்டும். அந்த விஷயம் ராகேஷுக்குத் தெரியாது. கண்களில் பனித்துகள்களுடன் மணலும் புகுந்துவிட்டதில் தான் சாசுவதமாக குருடனாகிவிட்டோம் என்று பயந்தான் ராகேஷ். இரண்டு கைகளாலும் கண்களைக் கசக்கப் போனான். அவன் மட்டும் அப்படிச் செய்திருந்தால் உண்மையிலேயே குருடனாகி விட்டிருப்பான்.

அதற்குள் "நில்!" என்ற குரல் கேட்டது. அது சித்தார்த்தாவின் குரல். அவன் எதற்காக சொன்னான் என்று தெரியாவிட்டாலும் ராகேஷ் அப்படியே நின்று விட்டான். அதற்குள் மூடிய அவன் கண்களுக்கு மேல் ஏதோ தூள் தடவப்படுவதை உணர்ந்தான்.

"என்ன இது?" கேட்டான்.

"சாம்பல்." சித்தார்த்தாவின் குரல் கேட்டது. "எங்கேயோ படித்தேன். சாம்பல் பனித்துகள்களிலிருந்து கண்களை பாதுகாக்கும் என்று."

பக்கத்திலிருந்து ஷெர்பா சிரிக்கும் சத்தம் கேட்டது. "உங்களுக்கு நிறைய விஷயங்கள் தெரிந்திருக்கே?" என்றான் ஹிந்தியில். அவன் சிரிப்பில் ஏதோ செயற்கைத்தனம் கலந்திருப் பதை சித்தார்த்தா கவனித்தான். ராகேஷ் உணரவில்லை.

"இன்னும் எவ்வளவு தூரம்?" சித்தார்த்தா கேட்டான்.

"மேலும் இரண்டு மணி நேரம்."

"பின்னே கிட்டே என்று சொன்னாயே?"

"பனியில் ரொம்ப நேரம் நடந்தாற் போல் தோன்றும். ஆனால் தூரம் குறையாது."

அதற்குள் ராகேஷின் பார்வை கொஞ்சம் சீரடைந்தது. "கொஞ்சம் டீ குடிப்போமா?" என்றான்.

ஷெர்பா குழியைத் தோண்டி அதில் அடுப்பை மூட்டினான். குளிர்ந்த சூழ்நிலையில் தண்ணீர் சுடுவதற்கு ரொம்ப நேரம் பிடித்தது.

சித்தார்த்தாவுக்கு ஷெர்பாவின் பேச்சில் எங்கேயோ அபசுரம் தொனித்தது. முதலில் சொன்னபடி பார்த்தால் பஸ் நின்ற இடத்திலிருந்து ஒற்றையடி பாதை ஒன்று மலையைச் சுற்றிக் கொண்டு போகும். மலைக்குப் பின்னால் சிவானந்தரின் ஆசிரமம். ஜனநடமாட்டம் உள்ள பிரதேசம். இதுதான் ஷெர்பா சொன்னது.

ஆனால் இங்கே அப்படி எதுவும் தென்படவில்லை. சுற்றிலும் பனி... பனி... பனி மட்டும்தான்.

தொலைவில் மலைமீது பெரிய பனிப்பாறை ஒன்று உடைந்து கீழே சரிவது தென்பட்டது. தன்னையும் அறியாமல் சித்தார்த்தாவின் உடல் சிலிர்த்தது. இந்த மாதிரி வந்து தான் தவறு செய்துவிட்டோமோ என்று தோன்றியது.

முதலில் ஷெர்பாவும், அவனுக்குப் பின்னால் ராகேஷும், சித்தார்த்தாவும் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

"இன்னும் எவ்வளவு தூரம்?" என்றான் ராகேஷ்.

ஷெர்பா பதில் சொல்லவில்லை. நிமிர்ந்து பார்த்த ராகேஷ் சிலையாகிவிட்டான். ஷெர்பாவின் கையில்

ரிவால்வர் பளபளத்தது. உரத்த குரலில் சிரித்தான். “ராகேஷ்! உஸ்ஸோக்கிற்கு நீ செய்ய வேண்டிய உதவி முடிந்துவிட்டது. உன்னைக் கொல்லச் சொல்லி ஆணை வந்திருக்கிறது. தயாராக இரு” என்று கத்தினான்.

ராகேஷுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. ஹோ வென்று வீசும் காற்றுக்கு நடுவில் உஸ்ஸோக்கின் பெயரைக் கேட்டதும் திடுக்கிட்டவனாக சித்தார்த்தாவின் பக்கம் பார்த்தான்.

அவன் தடுமாற்றத்தை புரிந்து கொண்டாற்போல் ஷெர்பா மேலும் சிரித்தான். “மகாதிரஷ்டாவின் ஆணையின் படி உன்னை இங்கேயே கொன்றுவிடப் போகிறேன்.”

சதுரங்க ஆட்டத்தில் மகாதிரஷ்டா கடைசி காயை நகர்த்தி தன்னை வீழ்த்திவிட்டது ராகேஷுக்குப் புரிந்தது. தன்னையும் அறியாமல் ஓரடி பின்னால் நகர்ந்தான்.

“எங்கே போகப் போகிறாய் ராகேஷ்? எத்தனை தூரம் ஓடினாலும் இந்த பனிப்பிரதேசத்தில் மனித சஞ்சாரம் இருக்காது. அஷ்டாவக்கிரனின் பிறப்புக்காக கௌரியின் மூலமாக அத்தனை சடங்குகளும் செய்ய வைத்ததற்கு நன்றி. அதே போல் மகாதிரஷ்டாவுக்கு தீங்கு செய்ய நினைத்ததற்கு இந்த தண்டனையை ஏற்றுக் கொள்” என்று ரிவால்வரை குறிபார்த்தான். சித்தார்த்தா பக்கம் திரும்பி “உன்னைக் காப்பாற்றக் கூடிய சிவானந்த சுவாமிகள் என்றோ இறந்து விட்டார். அஷ்டாவக்கிரனின் பிறப்பை யாராலும் தடுக்க முடியாது. நீயும் மரணத்தைச் சந்திக்கத் தயாராக இரு” என்றான்.

சித்தார்த்தா ராகேஷ் பக்கம் பார்த்தான். இந்த அதிர்ச்சி யிலிருந்து மீளாதது போல் அவன் முகம் வெளிறிப் போயிருந்தது. இத்தனை காலமும் தான் செய்து வந்தது சித்தார்த்தாவுக்கு தெரிந்து போய்விட்டதால் ஏற்பட்ட

அதிர்ச்சியாகவும் இருக்கலாம்.

சித்தார்த்தா கண்களை மூடிக் கொண்டான். திடீரென்று காற்றின் வேகம் அதிகரித்தது. கண்கள் மூடியிருந்த நிலையிலேயே கைகளை உயர்த்தப் போனான்.

“டாம்” என்று ரிவால்வர் வெடித்த சத்தம் கேட்டது. காலடியில் நிலம் நழுவினாற்போல் இருந்தது.

கண்களைத் திறந்து பார்த்தான்.

அவலாஞ்சி!

அந்தக் காட்சியைப் பார்த்து சித்தார்த்தா திக்பிரமை அடைந்தான். பூமி இரண்டாகப் பிளந்துவிட்டது போல் பனி பள்ளத்தாக்கில் நழுவிக் கொண்டிருந்தது. அதற்குள் மறுபடியும் ரிவால்வர் வெடித்த சத்தம் கேட்டது. சித்தார்த்தா தலையைத் திருப்பிப் பார்த்தான்.

ஷெர்பாவின் கை மட்டும் வெளியே தென்பட்டுக் கொண்டிருந்தது. கையில் கறுப்பு நிற ரிவால்வர். முகமும், உடலும் பனியால் மூடப்பட்டிருந்தன. மரணத்தை தவிர்க்க முடியாது என்று தெரிந்த பிறகும் அவன் ஆள்காட்டிவிரல் தன்னிச்சையாக ட்ரிக்கரை அழுத்திக் கொண்டிருந்தது. ஆறு தடவை ஒலித்துவிட்டு ரிவால்வர் நின்றுவிட்டது.

அதற்குள் பனி அவன் கையையும் மூடிவிட்டது.

சித்தார்த்தா இன்னும் மீளவில்லை. தனக்கு இரண்டடி தொலைவில் ஒரு மனிதன் உயிரோடு சமாதியாகி விட்டான் என்றால் அவனால் நம்பவே முடியவில்லை.

அதற்குள் மறுபடியும் காலடியில் நிலம் நடுங்கியது. தொலைவில் வானமும், பூமியும் சந்திக்கும் இடத்தில் உயரமான மலை உச்சியிலிருந்து பனிப்பாறை ஒன்று கீழே விழுந்து கொண்டிருந்தது.

சித்தார்த்தா சுற்றிலும் பார்த்தான். அப்பொழுதுதான்

ராகேஷ் அவன் கண்ணில் பட்டான். பனியில் சொருகப் பட்டிருந்த யாக்ஸை பிடித்தபடி காற்றில் ஊசலாடிக் கொண்டிருந்தான். அவனுடைய கனத்தைத் தாங்க முடியாமல் யாக்ஸ் எந்த நிமிடம் வேண்டுமானாலும் பெயர்ந்துவிடும் போல் இருந்தது. அது மட்டும் நிகழ்ந்தால் ராகேஷ் பல ஆயிரம் அடிகள் ஆழமுள்ள பள்ளத்தாக்கில் விழுவது நிச்சயம்.

சித்தார்த்தாவின் பார்வை காலடியில் கிடந்த கயிற்றின்மேல் விழுந்தது. முதுகில் மாட்டிக் கொள்ளும் இரண்டு பைகள், கயிறு இவைதான் எஞ்சியிருந்தன.

ராகேஷ் உயிர் மீது இருக்கும் பயத்தில் வீலென்று கத்தினான். சித்தார்த்தா பத்தடி முன்னால் வைத்து பள்ளத் தாக்கில் எட்டிப் பார்த்தான். எந்த நிமிடம் வேண்டுமானாலும் ராகேஷின் பிடி நழுவி விடும் போல் இருந்தது.

சித்தார்த்தா பையிலிருந்து ஆணியை எடுத்து பனிப் பாறையில் அடித்தான். காற்று வேகமாக வீசிக் கொண் டிருந்தது. ஆணியில் கயிற்றைக் கட்டி ஒரு முனையை எடுத்து ராகேஷின் பக்கமாக வீசினான். மற்றொரு நுனியை தான் பிடித்துக் கொண்டான்.

கயிறு பக்கமாக வந்து தொங்கியதும் ராகேஷ் நிமிர்ந்து பார்த்தான். இருவரின் கண்களும் சந்தித்துக் கொண்டன. “உன்னுடன் அந்த யாக்ஸையும் எடுத்து வா.” சித்தார்த்தா கத்தினான். கைகளில் கிளவுஸ் இருந்த போதிலும் குளிரில் விரல்கள் மரத்துப் போய்விட்டன. தோல் ஆங்காங்கே வழண்டு போய்விட்டது. மேலே வந்து கொண்டிருந்த ராகேஷுக்கு கை கொடுத்து இழுத்தான் சித்தார்த்தா. மூச்சு இரைக்க ராகேஷ் நின்று கொண்டிருந்தான். சித்தார்த்தாவின் பக்கம் பார்க்கவே அவனுக்கு பயமாக இருந்தது. தனக்கு

அவன் கை கொடுத்து உதவி செய்தது ஆச்சரியமாகவும் இருந்தது.

ஆனால் சித்தார்த்தா எதையும் பொருட்படுத்தவில்லை. ராகேஷ் மேலே வந்ததும் யாக்ஸுக்கு கயிற்றை கட்டி பள்ளத் தாக்கிற்கு அந்தப் பக்கம் வீசினான். இரண்டு மூன்று முறை முயற்சி செய்தபிறகு அது பலமாக புதைந்து கொண்டதை உறுதி செய்து கொண்டு கயிற்றின் உதவியோடு அந்த பக்கமாக போனான். தான் போய் சேர்ந்ததும் ராகேஷ் பக்கம் கயிற்றை வீசி எறிந்தான்.

ராகேஷ் யோசித்தான். எல்லாம் தெரிந்துவிட்ட பிறகு சித்தார்த்தாவிடமிருந்து தப்பித்துக் கொண்டு போகணும் என்றால் இதுதான் நல்ல சமயம்.

"முட்டாளே! சீக்கிரம் வா" என்று சித்தார்த்தாவின் குரல் கேட்டது. வேறு எதையும் யோசிக்காமல் ராகேஷும் அந்தப் பக்கம் தாவினான். அவன் கையில் பேக்கைக் கொடுத்துவிட்டு "ஓடு. சீக்கிரம்" என்று கத்தினான் சித்தார்த்தா.

பெரிய பனிப்பாறை ஒன்று இடிந்து விழுந்து அவர்கள் சற்று முன்னால் நின்று கொண்டிருந்த இடத்தின் வழியாக நழுவி பள்ளத்தாக்கை மறைத்துவிட்டது.

அவர்களால் தங்கள் கண்களையே நம்ப முடியவில்லை. மேலே கறுத்த வானத்தையும், கீழே வெண்மை நிற பனியையும் பார்த்துக் கொண்டு அப்படியே நின்றுவிட்டார்கள். எது கிழக்கு என்று தெரியவில்லை. ஏறத்தாழ ஐந்து நிமிடங்கள் கழித்து மேகங்களுக்கு நடுவில் சூரியன் மங்கலாக தென் பட்டான். தெற்கு பக்கமாக பயணத்தை மேற்கொண்டார்கள். ஏறத்தாழ நான்கு மணி நேரம் நடந்திருப்பார்கள். சீக்கிரமாக ஊருக்குத் திரும்ப வேண்டும் என்ற எண்ணம்தான் இருவரிடமும் மேலோங்கியிருந்தது. ராகேஷுக்கு சந்தேகமாக இருந்தது,

ஒருக்கால் ஷெர்பா சொன்னது சித்தார்த்தாவின் காதில் விழவில்லையோ என்று.

“வேகமாக நடக்கணும். இருட்டுவதற்குள் மலையைத் தாண்டி அந்தப் பக்கம் போய்விட வேண்டும். இல்லை என்றால் இந்தப் பனியில் இரவை கழிப்பது ரொம்ப கஷ்டம்” என்றான் சித்தார்த்தா.

ராகேஷ் அவ்வளவு தூரத்திற்கு யோசிக்கவில்லை. மாலை ஆவதற்குள் சாலையை அடைந்துவிடுவோம் என்றும், சூடாக டீயை குடித்துக் கொண்டே பஸ்ஸில் திரும்பிவிடுவோம் என்றும் யோசித்துக் கொண்டிருந்தான். எதிரே மற்றொரு பனிமலை தென்பட்டதும் இருவரையும் சோர்வு ஆட் கொண்டது. வேறு வழியில்லாமல் சித்தார்த்தாவுடன் சேர்ந்து ஏறத் தொடங்கினான்.

திடீரென்று அவன் கால்கள் நகர மறுத்தன. “ஐந்து நிமிடங்கள் ஓய்வு எடுத்துக் கொண்டு போகலாம்” என்றான்.

முன்னால் போய்க் கொண்டிருந்த சித்தார்த்தா நின்று எதுக்கு என்பது போல் பார்த்தான்.

“கால்கள் மரத்துப் போய்விட்டன.”

சித்தார்த்தாவின் முகத்தில் மாறுதல் தென்பட்டது. வேகமாக அருகில் வந்து “ஷூக்களைக் கழற்று சீக்கிரம்” என்றான்.

அவன் சந்தேகப்பட்டது உண்மைதான். ராகேஷின் பாதங்கள் இரத்த ஓட்டம் இல்லாததால் வெளிறிப்போய் இருந்தன.

“ஃபிராஸ்ட் பைட்!” என்றான் சித்தார்த்தா. “வேகமாக தேய்த்துவிடு” என்று அவன் காலை தன் கைகளில் எடுத்துக் கொண்டு வேகமாக தேய்த்தான். சிறிது நேரம் கழித்து இரத்தம் பாயத் தொடங்கியது. மரத்துப் போய்விட்டிருந்த கால் விரல்களில் திடீரென்று இரத்தம் பாய்ந்ததும் ஆயிரம்

ஊசிகளால் குத்துவதுபோல் வலியெடுத்தது. வலி தாங்க முடியாமல் கத்தினான்.

சித்தார்த்தா எதையும் பொருட்படுத்தாமல் ராகேஷின் உள்ளங்கால்களை தேய்த்துக் கொண்டே இருந்தான். இனி பரவாயில்லை என்று தோன்றிய பிறகு எழுந்து கொண்டே சொன்னான். "பனியில் நடக்கும் போது ஜாக்கிரதையாக இருக்கணும். கைகால் விரல்களை, மூக்கை, காது மடல்களை தேய்த்து விட்டுக் கொள்ளணும். இல்லாவிட்டால் இரத்த ஓட்டம் இல்லாமல் அழுகிப் போய்விடும்."

ராகேஷ் ஷுக்களை அணிந்து கொண்ட பிறகு மறுபடியும் பயணத்தைத் தொடர்ந்தார்கள். மேகங்களுக்கு பின்னால் சூரியன் மறைந்தான்.

இன்னும் பத்தடி தொலைவில் மலையின் உச்சி தென் பட்டதும் சித்தார்த்தாவைத் தாண்டிக் கொண்டு ராகேஷ் வேகமாக அங்கே சென்றான். சித்தார்த்தாவும் பின்னாலேயே வந்து சேர்ந்தான். மேற்கு திசையில் மறைந்து கொண்டிருந்த சூரியன் கடைசி முறையாக தரிசனம் தந்தான். சுற்றிலும் இருந்த சூழ்நிலையை, மறைந்து கொண்டிருந்த சூரியனை பார்த்த பிறகு அவர்களுக்கு தங்களுடைய தவறு புரிந்துவிட்டது. பனிமலை பிரதேசத்தில் வெளிச்சம் எதிர் திசையில் விழும். அதனால் தெற்கு என்று நினைத்து மேற்கு திசையில் பயணம் செய்திருக்கிறார்கள்.

சுற்றிலும் மலைகள், பனி படர்ந்த குன்றுகள். பார்த்துக் கொண்டிருந்த போது இருள் சூழந்து கொண்டு விட்டது. பயங்கரமான நிசப்தம் பரவிக் கிடந்தது. போறாத குறைக்கு குளிர்வேறு வாட்டிக் கொண்டிருந்தது.

**ச**ரியாக அதே நேரத்தில் நர்ஸிங்ஹோமில் படுத்திருந்த கேதாரகௌளரி இனம் புரியாத கலவரத்தில் ஆழ்ந்திருந்தாள். அவள் யோசனை எல்லாம் கணவனை சுற்றியே இருந்தது. ரவி திடீரென்று இந்த நேரத்தில் காணாமல் போனது அவள் கலவரத்தை அதிகப்படுத்தியது.

அவள் சிந்தனைகளைச் சிதறடித்தபடி டாக்டர் ரங்கபிரசாத் உள்ளே வந்தார். "குட் ஈவினிங்" என்றார்.

அவள் அவரை நிமிர்ந்து பார்த்து "என் கேசில் உங்க அபிப்பிராயம் என்ன டாக்டர்? சாதாரண பிரசவமா அல்லது சிசேரியனா?" என்று கேட்டாள் திடீரென்று.

ரங்கபிரசாத் வியப்புடன் "உங்களுக்கு ஏன் திடீரென்று இந்த மாதிரியான சந்தேகம் வந்தது?" என்று கேட்டார்.

"வயிற்றுக்குள் குழந்தை பெரிசாக இருப்பது போல் உணருகிறேன்."

"பிரசவநாள் நெருங்க நெருங்க பாரமாக இருப்பது சகஜம்தானே? என்னால் முடிந்ததையெல்லாம் கண்டிப்பாக செய்வேன்" என்று சொல்லிவிட்டு வெளியே வந்தார் அவர். அவளை திருப்திப் படுத்துவதற்காக அப்படிச் சொல்லி விட்டாரே தவிர எக்ஸ்ரேயைப் பார்த்தபோது கடந்த பத்து நாட்களில் அளவுக்கு அதிகமாக வளர்ந்திருந்த சிசுவைப் பார்த்து கலவரமடைந்திருந்தார் அவரும்.

★

**க**லவரமடைந்திருந்தாள் ரஞ்சிதா. ஒரு மாமிசப் பிண்டத்தைப் போல் உள்ளே வந்து விழுந்த ரவியிடம் ஒரே பாய்ச்சலாக ஓடி வந்தாள். ரவி பாரமாக மூச்சு விட்டுக் கொண்டிருந்தான். அவன் உடலில் எந்த காயமும் இல்லை ஆனால் சக்தியெல்லாம் போய்விட்டாற் போல் இருந்தது.

அவர்களை அந்த அறையில் அடைத்து முப்பத்தாறு மணி நேரம் ஆகியிருந்தது. முதல்நாள் கூட அதே நேரத்தில் அவனை வெளியே அழைத்துச் சென்று அரைமணி நேரம் கழித்து கொண்டு வந்து போட்டார்கள். இன்றைக்கு ஒரு மணி நேரம் கழித்து.

தம்மை அவர்கள் என்னதான் செய்யப் போகிறார்கள்? ரஞ்சிதாவுக்கு பயமாக இருந்தது. துக்கமும் வந்தது.

அதற்குள் ரவி அசைந்தாற்போல் இருந்தது. அவள் குனிந்து அவன் முகத்தைத் துடைத்தாள். அவன் களைப்புடன் 'தாகம்' என்று சைகை காட்டினான். அந்த அறையில் மூலையில் இருந்த பானையிலிருந்து தண்ணீரை எடுத்து வந்து தந்தாள்.

சிறிது நேரத்தில் கொஞ்சம் தேறிக் கொண்டாள். மெதுவாக கண்களைத் திறந்தான். மெல்லிய குரலில் சொன்னான். "அவர்கள் என்னை ப்ரெயின் வாஷ் செய்கிறார்கள்." சொல்லிவிட்டு மறுபடியும் மயக்கத்தில் ஆழ்ந்துவிட்டான்.

★

**தூ**ணில் சாய்ந்தபடி நின்றிருந்த ரங்கபிரசாத் பின்னால் காலடிச் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தார். பார்வதி. . . சித்தார்த்தாவின் தாய்.

"இந்த இரவு நேரத்தில் எங்கே போறீங்கம்மா?" என்று கேட்டார்.

"துணிமணி கொண்டு வர மறந்துவிட்டேன். வீட்டிற்குப் போய் எடுத்து வரணும்" என்றவள் அவரும் படியிறங்கித் தன் பின்னாடி வருவதைப் பார்த்துவிட்டு "நீயும் எதுக்கு தம்பீ?"

"பரவாயில்லை. இருட்டில் தனியாக போகு வேண்டாமே என்றுதான்" என்று அவளோடு கூட நடக்கத்

தொடங்கினார்.

சிறிது நேரத்தில் வீட்டை அடைந்தார்கள். "இப்படி உட்காரு தம்பீ. இரண்டே நிமிஷத்தில் வந்து விடுகிறேன்" என்று அவள் உள்ளே போனாள். அவர் உட்காராமல் தாழ்வாரத்தில் படர்ந்திருந்த கொடிகளை பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்.

"கொஞ்சம் காபி, டீ ஏதாவது குடிக்கிறாயா தம்பீ?" உள்ளேயிருந்து கேட்டது குரல்.

"வேண்டாம் அம்மா" என்று திரும்பியவரின் பார்வை நிலைப்படிக்கு மேல் மாட்டியிருந்த பெரிய போட்டோவின் மீது விழுந்தது. முதலில் சின்ன சந்தேகம். உற்றுப் பார்த்தவர் திடுக்கிட்டார். அந்த போட்டோவில் இருப்பது. . .

வில்லியம்ஸ்!

இந்த போட்டோ இங்கே எப்படி வந்தது?

அதற்குள் பார்வதி வெளியில் வரவே "இது யாருடைய போட்டோ?" என்று கேட்டார்.

"என் மருமகளோட அப்பாவின் போட்டோ. சமீபத்தில்தான் காலமானார். பவானிசங்கர் என்று பெயர்."

தான் பார்த்த வில்லியம்ஸின் தோற்றம் நினைவுக்கு வந்தது. பவானிசங்கர் நொண்டியும் இல்லை. டாக்டரும் இல்லை.

ஆஸ்பத்திரிக்கு வந்ததுமே நேராக கேதாரகெளரி இருந்த அறைக்குப் போனார். அவள் உறங்கிக் கொண்டிருந்தாள். எழுப்பிக் கேட்பது பண்பு இல்லை என்று தோன்றியது. ஆனால் விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அவரை நிலை கொள்ளாமல் செய்தது.

லேசாக புரண்டு படுத்த கௌரி வாசலில் ரங்கபிரசாத் நின்று கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு "என்ன விஷயம்

டாக்டர்?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை. இப்பொழுதுதான் உங்க மாமியாருடன் சேர்ந்து உங்க வீட்டுக்குப் போனேன். அங்கே உங்க அப்பாவின் போட்டோவைப் பார்த்தேன். எங்க அப்பாவிடம் அசிஸ்டெண்டாக ஒரு டாக்டர் இருந்தார். பெயர் வில்லியம்ஸ். அவருக்கும் உங்க அப்பாவுக்கும் ஜாடை ஒத்துப் போகிறது, இரண்டு பேரும் ஒருவர்தானோ என்று நினைக்கும் அளவுக்கு. இது எப்படி சாத்தியம் என்று புரியவில்லை."

"டாக்டர் வில்லியம்ஸ் என்னுடைய பெரியப்பா" என்றாள் கௌரி. "பெரியப்பா இளம் வயதிலேயே மதம் மாறியவர்."

ரங்கபிரசாத் காதுகளில் மேற்கொண்டு எதுவும் விழவில்லை. கேதார கௌரியையே பார்த்துக் கொண்டிருந்தார். அவள் தன் சிற்றப்பாவின் மகள்! எத்தனை இனிமையான செய்தி! ஆனால் வெளியில் சொல்லிக் கொள்ள முடியாத கசப்பான உண்மை.

"ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க?"

"ஒன்றுமில்லை."

அவர் மௌனத்தை வேறுவிதமாக புரிந்து கொண்ட அவள், "எங்க அப்பாவுக்கும் அவருக்கும் உருவ ஒற்றுமை ஒரே மாதிரி இருக்கும். கடைசி காலத்தில் எங்களுடன் வந்து தங்கி, சாகும் வரை எங்களோடயேதான் இருந்தார்." என்றாள்.

"இறந்து போய்விட்டாரா?" என்னதான் மறுத்தாலும் ரங்கபிரசாதின் குரலில் வேதனை எட்டிப் பார்த்தது.

"ஆமாம். வெறிநாய் கடித்து இறந்துவிட்டார்."

வெளியே போகத் திரும்பிய ரங்கபிரசாத் அதிர்ச்சி யடைந்தாற்போல் நின்றுவிட்டார்.

★

ரஞ்சிதாவை அவர்கள் ஒரு விசாலமான ஹாலுக்கு அழைத்துப் போனார்கள். ஹாலைத் தாண்டி ஒரு சிறிய அறைக்குள் நுழைந்தார்கள். அங்கே இருந்தார் மகாதிரஷ்டா.

அவளைப் பார்த்துச் சிரித்தார். தப்பித்துப் போக முடியாத முயல்குட்டியைப் புலி பார்க்கும் பார்வை அது.

"உன் கதையை நேற்றே முடித்திருக்கணும். ஆனால் அவதார் பாபா கேட்டுக் கொண்டதால் இன்று வரை தள்ளிப் போடப்பட்டது. உண்மையைச் சொல்லு. உன் காதலன் ரவி எங்கள் கூட்டத்தில் சேருவதற்காக போட்ட இந்தத் திட்டம் உங்களைத் தவிர இன்னும் யாருக்குத் தெரியும்?"

அவள் பேசவில்லை.

இரண்டாவது முறை கேட்டும் அவள் வாயைத் திறக்காததால் அருகில் வந்து கன்னத்தில் ஓங்கி அறைந்தார். அவள் கண்களில் நீர் சுழன்றது. "யாருக்கும் தெரியாது" என்றாள்.

மகாதிரஷ்டா அருகில் இருந்த ரெட் ஸ்கெலிடனைப் பார்த்தார். அவன் லை டிடெக்டர் மூலமாக பரிசோதித்து விட்டு அவள் உண்மைதான் பேசுகிறாள் என்று உறுதிப் படுத்தினான்.

மகாதிரஷ்டாவின் முகத்தில் நிம்மதி தெரிந்தது. ரஞ்சிதாவைப் பார்த்து "உங்களைப் போன்ற இளம் தலைமுறைக்கு கடவுள் மீதோ, பேய்கள் மீதோ நம்பிக்கை இருக்காது. அனுபவத்தால்தான் உங்களால் மாற முடியும். நாளை இரவு பன்னிரெண்டு மணிக்கு மயானத்தின் நடுமையத்தில் அஷ்டாவக்கிரன் பிறக்கப் போகிறான். கேதார

கௌரியும், சித்தார்த்தாவும் இறந்துவிடப் போகிறார்கள். மும்மூர்த்திகளே வந்தாலும் அதைத் தடுக்க முடியாது" என்றார்.

சுபாவத்திலேயே தைரியசாலியான ரஞ்சிதா கூட அந்தக் குரலில் தென்பட்ட கடுமையைக் கண்டு லேசாக நடுங்கினாள்.

"ரஞ்சிதா! அவதார் பாபாவுக்கு உன்மீது ஆசை இருப்பது போல் தெரிகிறது. அதைத் தீர்த்துவிட்டு உஸ்ஸோக்கில் சேர்ந்துவிடுவது ஒன்றுதான் உனக்கும் பிழைக்கும் வழி. அதற்காக பொய் சொல்லி தப்பித்துக் கொள்ள முடியாது. அது எங்களுக்குத் தெரிந்து போய்விடும். உன்னுடைய பதில் என்ன?"

"எதிராளியின் மனதில் என்ன இருக்கு என்று உங்களால் தெரிந்து கொள்ள முடியும் இல்லையா? இதையும் அப்படியே தெரிந்து கொள்ளுங்களேன்." ஏளனமாகச் சொன்னாள்.

மகாதிரஷ்டாவின் முகம் கடினமாக மாறியது. "அப்படி யென்றால் சரி. இந்த விஷயத்தை நீயும் அவதார் பாபாவும் பேசி தீர்த்துக் கொள்ளுங்கள். நான் அதில் தலையிட மாட்டேன்" என்றவர் பக்கத்திலிருந்தவனைப் பார்த்து, "இவளை பாபாவிடம் அழைத்துச் செல்லுங்கள். உயிரோடு விட்டு வைக்கலாமா அல்லது கதையை முடித்து விடலாமா என்று அரைமணிக்குள் சொல்லிவிடச் சொல்லுங்கள். வீணாக நேரத்தைக் கடத்த வேண்டாம்" என்று எச்சரித்தார்.

ரஞ்சிதாவுக்கு சந்தேகம் ஏற்பட்டது. அவதார் பாபா தன்னை விரும்புவதும், அதற்காகத் தன்னைக் கொல்லாமல் விடுவதும் இதெல்லாம் ஏதோ சினிமாத் தனமாகத் தோன்றினாலும் உண்மை விஷயம் அது இல்லை. வேறு ஏதோ இருக்கிறது. அது என்ன? தன்னிடமிருந்து இவர்கள் எதை எதிர்பார்க்கிறார்கள்? அவர்கள் அவளை மற்றொரு

அலங்கரிக்கப்பட்டிருந்தது. டிரெஸ்ஸிங் டேபிள், கட்டில் . . .

கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார் அவதார் பாபா. “வா ரஞ்சிதா! ரொம்ப நாட்களுக்குப் பிறகு சந்தித்துக் கொள்கிறோம் இல்லையா?” என்றார் சிரித்துக் கொண்டே.

அவள் மௌனமாக இருந்தாள்.

“மகாதிரஷ்டா விஷயத்தைச் சொல்லியிருப்பார். உன் முடிவு என்ன?”

“உன்னை நான் மட்டுமே இல்லை, எந்தப் பெண்ணும் விரும்பமாட்டாள்” என்றாள் வெறுப்புடன்.

அவர் முகத்தில் சிரிப்பு மாறவில்லை. தாடியை நீவி விட்டுக் கொண்டே சொல்லத் தொடங்கினார். “உஸ்ஸோக்கில் இருக்கும் எல்லோருக்குமே தெரியும் நான் பாபா இல்லை என்றும், அசல் பாபாவை சைத்தான் கொன்றுவிட்டது என்றும். அன்றைய தினத்திலிருந்துதான் நான் பாபாவாக மாறினேன். என் மகிமையால் நிறைய பேரை உஸ்ஸோக்கில் சேர்த்து சாத்தானின் சாம்ராஜ்ஜியம் உருவாக உதவுவதுதான் என் நோக்கம்.”

“உண்மையில் நீ யார்?”

“நான் யார் என்று தெரிந்து கொள்ள விருப்பமா உனக்கு?”

அவர் குரலில் திடீரென்று மாறுதல் தோன்றியது. அதுவரை பேசியது பாபா போலும், இப்பொழுதோ அடக்கி வைத்துக் கொண்டிருந்த ஏதோ சக்தி வெளிப்பட்டாற் போலும் மாறுபட்ட குரலாக இருந்தது.

அவள் தன் எண்ணங்களை அடக்கிக் கொண்டு “சாத்தான் ராஜ்ஜியம், உஸ்ஸோக் இதைப் பற்றியெல்லாம்

கேட்டால் அழுவதா சிரிப்பதா என்று எனக்குத் தெரிய வில்லை. என் அபிப்பிராயம் என்னவென்றால் நீங்கள் எல்லோரும் ஏதோ பெரிய பிரமையில் ஆழ்ந்திருக்கீங்க. அவ்வளவுதான்" என்றாள்.

பாபா கடகடவென்று சிரித்துவிட்டு "நானும் பிரமையில் ஆழ்ந்திருப்பதாக நினைக்கிறாயா?" என்றார்.

"எல்லோரையும் விட நீதான் அதிக பிரமையில் ஆழ்ந்திருப்பதாக தோன்றுகிறது."

அவர் சட்டென்று அவளை நோக்கித் திரும்பி "இப்போ சொல்லு. நானும் அதே பிரமையில் ஆழ்ந்திருப்பதாக நினைக்கிறாயா?" என்றார்.

அவள் மூச்சு விடவும் மறந்துவிட்டாள். வாயிலிருந்து வார்த்தை வெளிவர மறுத்தது. "நீயா?" என்றாள் எப்படியோ வாய் திறந்து.

அவர் சிரித்தார். "நான்தான். இப்போ சொல். அஷ்டாவக்கிரன் பிறப்பதில் ஏதாவது சந்தேகம் இருக்கிறதா?"

அவள் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. அவளுக்குப் பயமாக இருந்தது. அங்கிருந்து ஓடிவிட வேண்டும் என்ற தவிப்பு மனதை ஆக்ரமித்துக் கொண்டது.

ராகேஷ், புட்டண்ணா போன்றவர்கள் உஸ்ஸோக்கில் சேர்ந்த காரணம், அஷ்டாவக்கிரனின் பிறப்புக்காக மகாதிரஷ்டா காட்டும் நோக்கம் எல்லாமே புரிந்தன. எப்படியோ சக்தியெல்லாம் திரட்டிக் கொண்டு நடுங்கும் குரலுடன் கேட்டாள். "நீ தான் பாபா என்று ராகேஷுக்கோ, ரங்கபிரசாதிற்கோ தெரியுமா?"

"தெரிய வாய்ப்பு இல்லை. அதுமட்டுமில்லை. இன்னும் ஓரிரண்டு நாட்களில் ரவி கூட பழைய விஷயங்களை

முற்றிலும் மறந்துவிடுவான். உஸ்ஸோக் மக்கள் உன்னைக் கொல்லாமல் காப்பாற்றக் கூடியவன் நான் ஒருத்தன்தான். முட்டாள்தனமாக யோசிக்காதே. உஸ்ஸோக்கில் சேர்ந்துவிடு."

"நான் உஸ்ஸோக்கில் சேர்ந்தால் ரவியை விட்டு விடுவீர்களா?"

அவதார்பாபா சிரித்தார். "ரவி எப்பொழுதோ உஸ்ஸோக்கில் சேர்ந்துவிட்டான். இன்னும் ஓரிரண்டு இஞ்ஜக்ஷன்தான் பாக்கி."

"அப்படி என்றால் என்னையும் அது போலவே சேர்த்துக் கொள்ளலாமே? ஏன் இந்த மாதிரி கெஞ்சணும்?"

"ப்ரெயின் வாஷ் செய்யப்பட்ட நபர் சாவி கொடுத்த பொம்மையைப் போல் நாம் சொன்னதை எல்லாமே செய்வானே தவிர சொந்தமாக யோசித்துப் பார்க்கமாட்டான். எனக்கு நீ நீயாக இருக்க வேண்டும். மரப்பொம்மை தேவையில்லை. உஸ்ஸோக் மறுத்த போதிலும் உன்னைக் காப்பாற்ற நினைப்பது அதற்காகத்தான்."

அவள் வெறுப்புடன் பார்த்தாள்.

"சொல்லு ரஞ்சிதா. நேரமாகிக் கொண்டிருக்கிறது."

"உன் விருப்பம் போலவே நடக்கட்டும்" என்றாள் அவள்.

அவதார் பாபா அவளை வியப்புடன் பார்த்தார்.

"ஆமாம். உயிர் போகும் நிலையில் வேறு என்ன செய்ய முடியும்?" என்றாள் தலை குனிந்தபடி.

"குட்!"

“ராகேஷ்! நாம் உடனே கிளம்பியாகணும். பனிப்புயல் வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன” என்றான் சித்தார்த்தா.

“என்னால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது, இங்கேயே இறந்து போனாலும் சரி.”

“ராகேஷ்!” சித்தார்த்தாவின் குரல் திடமாக ஒலித்தது. “இது போன்ற தனிமையான சூழ்நிலையில் மனதை தளர விடக் கூடாது. மனம் தளர்ந்துபோனால் பைத்தியம் பிடித்துவிடும். மனதை தெம்பாக வைத்துக் கொள்.”

ராகேஷ் வியப்புடன் சித்தார்த்தாவின் பக்கம் பார்த்தான். கயிறு அறுத்துவிட்டதால் அவன் கைகள் சிவந்து இரத்த பிளறாய் இருந்தன.

“கிளம்பு ராகேஷ்! சமயம் அதிகம் இல்லை” என்றான் சித்தார்த்தா.

நடந்து போகும்போது யாக்ஸுக்குள் ஏதோ தட்டுப் பட்டது. ராகேஷ் குனிந்து பனியில் புதைந்துகிடந்த அந்தப் பொருளை வெளியே எடுக்க முயன்றான். வெளியே வந்த பொருளைப் பார்த்து வீலென்று கத்திவிட்டான்.

அது ஒரு கை!

சித்தார்த்தா திகைத்துப் போனாலும் உடனே தேறிக் கொண்டான். சுற்றிலும் இருந்த பனியை விலக்கி உடலை வெளியே எடுத்தான்.

அந்த உடல் ஷெர்பாவுடையது. பனியில் புதைந் திருந்ததால் எந்த மாற்றமும் அடையாமல் அப்படியே இருந்தது. உடல் மட்டும் விறைத்துப் போயிருந்தது.

அது இல்லை அவர்கள் யோசித்துக் கொண்டிருந்தது. எங்கிருந்து புறப்பட்டார்களோ அதே இடத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். அதாவது மறுபடியும் மனித உலகிற்கு போவது என்பது அசாத்தியம்.

இந்த உண்மை புரிந்ததும் ராகேஷ் முழங்காலில் சரிந்து விட்டான். சித்தார்த்தா குனிந்து ஷெர்பாவின் உடைகளை நீக்கி ராகேஷுக்குப் போர்த்திவிட்டு மறுபடியும் தேடிக் கொண்டிருந்தான். ஷெர்பாவின் உடைகளை அணிந்து கொண்டதும் ராகேஷின் உடலில் புதிதாக சூடு பிறந்தது. ஷெர்பாவின் பையை வெளியே எடுத்தான் சித்தார்த்தா. அதில் டீ தயாரிப்பதற்கான பொருட்கள், லைட்டர், மற்ற கருவிகள் இருந்தன.

"ஓரளவுக்கு நாம் அதிர்ஷ்டசாலிகள்தான்" என்றான் சித்தார்த்தா அடுப்பை மூட்டிக் கொண்டே. பத்து நிமிடங்களில் டீ தயாராகிவிட்டது. முப்பத்தாறு மணி நேரமாக எதுவுமே சாப்பிடாததால் டீ தேவாமிருதமாக இருந்தது.

"மணி என்ன?" ராகேஷ் கேட்டான்.

"பதினொன்றரை."

விடியலுக்கு இன்னும் ஆறுமணி நேரம் இருந்தது. ராகேஷுக்கு தூக்கம் கண்களைச் சுழற்றிக் கொண்டு வந்தது. தூக்கத்தில் ஆழப் போகும்போது இதயம் நடுங்குவது போல் பெரிய சத்தம் கேட்டது. அவர்கள் தங்கியிருந்த குகை நடுங்கியது.

ராகேஷ் நடுங்கிக் கொண்டே வெளியே ஓடப் போனான். "நோ!" கத்திக் கொண்டே சித்தார்த்தா அவனைத் தடுத்தான். தோளைப் பற்றி இழுத்ததில் ராகேஷ் பின்னால் சரிந்தான். பனிப்பாறை அவர்கள் தங்கியிருந்த குகைக்கு வெளியே சரிந்து கொண்டே விழுந்தது. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு

அவ்விருவரும் உள்ளேயே இருந்தார்கள்.

ராகேஷ் முகத்தை மூடிக் கொண்டு முழங்காலில் புதைத்துக் கொண்டான்.

"அட! என்ன ஆச்சு?" என்றான் சித்தார்த்தா ராகேஷின் காலைப் பார்த்துக் கொண்டே.

ராகேஷின் காலிலிருந்து ரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தது. சற்று முன் கீழே விழுந்த போது ஏற்பட்ட காயம் அது. ராகேஷும் அப்பொழுதுதான்அதைக் கவனித்தான்.

"இத்தனை பெரிய காயம் பட்டாலும் வலி தெரியவில்லையா?" சித்தார்த்தா கேட்டான்.

இல்லை என்பதுபோல் ராகேஷ் தலையை அசைத்தான். சித்தார்த்தாவுக்கு ஏதோ சந்தேகம் வந்தது. கத்தியால் ராகேஷின் முழங்காலில் அழுத்திக் கொண்டே "வலி தெரிகிறதா?" என்று கேட்டான்.

இல்லை என்றான் ராகேஷ். மேலும் இரண்டு நிமிடங்கள் பரிசோதித்தான் சித்தார்த்தா.

"என்ன விஷயம்?" ராகேஷ் பதற்றத்துடன் கேட்டான்.

சித்தார்த்தா பதில் சொல்லவில்லை.

"எனக்குத் தெரியும். இது. . . இது ஃபிராஸ்ட்பைட்!" வெறிபிடித்தவன் போல் கத்தினான் ராகேஷ்.

சித்தார்த்தா மறுத்துப் பேசவில்லை. பொய் சொல்வதால் எந்த பிரயோஜனமும் இல்லை. ஒருக்கால் நாகரீக உலகில் திரும்பி காலடி எடுத்து வைத்தால் தாமதம் செய்யாமல் அவன் காலை தொடை வரையிலும் நீக்க வேண்டும். வேறு வழியில்லை. அந்த விஷயம் ராகேஷுக்கும் புரிந்துவிட்டது. அவன் அழுது கொண்டிருந்தான்.

சித்தார்த்தா அவனை அருகில் இழுத்து அணைத்துக்

கொண்டான். சிறுபிள்ளையைப் போல் கதறிவிட்டான் ராகேஷ். காலங்காலமாய் சேர்ந்துவிட்ட துக்கம் ஒரே திரியாக வெளிப்பட்டது போல் கண்ணீர் வெளியேறியது.

சித்தார்த்தா அவனைத் தடுக்கவில்லை. முழுவதுமாக அழுது தீர்க்கட்டும் என்று காத்திருந்தான். அவன் ஆவேசம், துக்கம் கொஞ்சம் குறைந்திருக்கிறது என்று தோன்றியபிறகு முதுகை தட்டிக் கொண்டே "பயப்படாதே ராகேஷ்! நாம் இந்த இடத்தை விட்டு வெளியேற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு" என்றான்.

ராகேஷ் பதில் சொல்லவில்லை.

"இனி உன் காலைப் பற்றி என்கிறாயா. . ."

"இல்லை இல்லை." கத்தினான் ராகேஷ். அவன் முகத்தில் இதுவரையில் காணாத ஆவேசம் தென்பட்டது. "உனக்குத் தெரியாது சித்தார்த்தா நான் எவ்வளவு கெட்டவன் என்று. கேதாரகௌரி என்னைத் திருமணம் செய்து கொள்ளவில்லை என்ற கோபத்தில் அவள் வயிற்றில் அஷ்டாவக்கிரன் பிறக்க வேண்டும் என்பதற்காக நான் செய்த முயற்சிகள். . ."

"தெரியும்" நிதானமான குரலில் சொன்னான் சித்தார்த்தா. "எங்கள் திருமண நாளன்று உன் ஆள்காட்டி விரல் ரத்தத்தால் தாலிக் கயிற்றை நீ தொட்டது, கௌரிக்கு நீ அணிவித்த மோதிரம் என்னுள் சந்தேகத்தை தோற்றுவித்தன. ஏதோ செய்வினை செய்ய வைக்கிறாய் என்று நினைத்தேன். ஆனால் அஷ்டாவக்கிரனின் பிறப்புக்காக என்று அப்பொழுது தெரியாது. சில நாட்களுக்கு முன்னால்தான் தெரியவந்தது, அஷ்டாவக்கிரன் பிறந்ததுமே பெற்றோரைக் கொல்வான் என்றும், அவனுடைய வருகைக்காக ஒரு கூட்டம் முயற்சி செய்கிறதென்றும். அப்படியும் நீ என்னுடன் இமயமலைக்கு

வருவதாகச் சொன்னபோது நான் மறுக்கவில்லை. என் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அதான் உன்னை என்னுடன் அழைத்து வந்தேன்."

ராகேஷ் சிலையாகிவிட்டான். தான் கேட்டது கனவா உண்மையா என்று அவனுக்குப் புரியவில்லை. சித்தார்த்தாவுக்கு முன்னாடியே எல்லாம் தெரியும், அப்படியும் கருணையுடன் தன்னைக் காப்பாற்றியிருக்கிறான். "ஏன்?" அந்தக் கேள்வியைக் கேட்கும்போது அவன் குரல் நடுங்கியது.

சித்தார்த்தா முறுவலித்தான். "எனக்கு விஷயம் தெரிய வந்தபோது, உன் மீது சந்தேகம் உறுதியானபோது, கௌரிக்கு ஆறாவது மாதம். எனக்கு வேண்டியது அவளைக் காப் பாற்றுவது. உன்னைத் தண்டிப்பது அல்ல. என் எதிரிகளை, எனக்கு தீங்கு செய்ய நினைப்பவர்களை நான் என்றுமே பொருட்படுத்தமாட்டேன். என் நினைப்பு எல்லாம் கௌரியை எப்படி காப்பாற்றிக் கொள்வது என்றுதான்."

ராகேஷ் முதல் பகுதியை மட்டும்கேட்டான். அடுத்த பாதியை காதில் வாங்கவில்லை. தீவிரமான அதிர்ச்சியில் இருந்தான். மேரு மலையின் முன்னால் நிற்கும் அற்பப் பிராணியைப் போல் சித்தார்த்தாவின் தனித்தன்மையின் முன்னால் மடுவாக குன்றிப் போய்விட்டான். ராகேஷ் உஸ்ஸோக் பற்றி முழுவதுமாக சித்தார்த்தாவிடம் சொல்லி விட்டான்.

எல்லாவற்றையும் பொறுமையாக கேட்டுக் கொண்ட சித்தார்த்தா ஒரே ஒரு கேள்வியைக் கேட்டான். "ராகேஷ்! கடவுள் என்று ஒன்று இருந்தால் அதற்கு எதிராக பேயும் இருக்கும் என்று நம்புகிறவன் நான். நாளை மறுநாள் விடிவதற்குள் காஷ்மோராவை என்னால் தடுக்க முடியாமல் போனால் கௌரிக்கு அஷ்டாவக்கிரன் பிறந்து பிரசவத்தி லேயே அவள் இறந்து போகலாம். அந்தச் சமயத்திற்கு

துஷ்டதேவதை உன்னுள் புகுந்து கொண்டு என்னைக் கொலை செய்ய தூண்டலாம். ஆனால் மனோ ரூப வித்தை என்பது உண்மையாகவே இருந்து உஸ்ஸோக் அங்கத்தினர்களுக்கு அந்த வித்தை தெரிந்திருக்கும் என்றால் இந்த விஷயங்கள் எல்லாம் எனக்கு முன்னாடியே தெரியும் என்று உன்னால் ஏன் தெரிந்து கொள்ள முடியவில்லை? அதைவிடு. உன் சக உஸ்ஸோக் மெம்பரான ஷெர்பா நம்மை கொலை செய்ய வந்திருக்கிறான் என்று உன்னால் முன்னாடியே ஏன் உணர முடியவில்லை?"

ராகேஷால் பதில் சொல்ல முடியவில்லை.

உருகிய பனி சொட்டு சொட்டாக மேலிருந்து விழுந்து கொண்டிருந்தது.

★

**எ**ப்படியும் வெளியே வரத்தான் போகிறது. ஆம்! நாளைக்கு இந்நேரத்திற்குள் என்று நினைத்தார் ரங்கபிரசாத் கையிலிருந்த ரிப்போர்ட்டை பரிசீலித்தபடி. கௌரியைக் காட்டிலும் சித்தார்த்தாவைப் பற்றித்தான் அவருக்கு ஏனோ கவலையாக இருந்தது. எங்கே போய்விட்டான் அவன்?

வெளியே கார் வந்து நின்ற ஓசை கேட்டு ரங்கபிரசாத் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். விலை உயர்ந்த பெரிய கார் ஒன்று அவருடைய வீட்டிற்கு முன்னால் வந்துநின்றது. முன்பெல்லாம் இந்த மாதிரி கார் கிராமத்திற்குள் நுழைந்து விட்டால் போதும் சிறுவர்கள் கும்பலாக வந்து கூடி விடுவார்கள். ஆனால் அவதார்பாபா கிராமத்திற்கு வந்தபிறகு இதுபோன்ற கார்கள் வருவது பழக்கமாகிவிட்டது.

விலையுயர்ந்த ஆடைகளுடன் ஒருவர் காரிலிருந்து இறங்கி உள்ளே வந்தார். "நீங்கள்தானா ரங்கபிரசாத்?" உற்றுப் பார்த்தபடி கேட்டார்.

"ஆமாம். நீங்க?"

“என் பெயர் சரோஜ்குமார் அகர்வால்.”

அகர்வால் தன்னைத் தேடிக் கொண்டு இவ்வளவு தூரம் வந்தது வியப்பாக இருந்தது. அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் “உட்காருங்கள்” என்றார்.

“நீங்கள் அனுப்பிய விவரம் கிடைத்தது. நானும் போலீஸ், கோர்ட்டு என்று போகாமல் இந்த விஷயத்தை செட்டில் செய்ய விரும்புகிறேன்.”

ரங்கபிரசாதின் வியப்பு எல்லையைக் கடந்தது. “போலீஸா?” என்றார்.

“இன்னும் நடிக்கத் தேவையில்லை. நீங்க டாக்டர் வேடத்தில் இருக்கும் சி.பி.ஐ. ஆபீசர்னு எனக்கு தெரியும். நாம் நேராகவே பேசிக் கொள்ளலாம்.”

ரங்கபிரசாத் குழப்பத்துடன் அகர்வாலைப் பார்த்தார். அவருடைய குழப்பத்தைப் பார்த்த அகர்வால், “ஆம். நான் எதற்காக பயப்படணும்? இதென்ன கொலையா கொள்ளையா? சுமார் இரண்டு லட்சம் கறுப்புப் பணத்தைச் செலவழித்தேன். அது ஒன்றுதான் நான் செய்த குற்றம்.”

ரங்கபிரசாதின் குழப்பத்தை மேலும் நீடிக்கச் செய்ய விரும்பாதது போல் போன் ஒலித்தது.

“நான்தான் நிவேதிதா” மறுமுனையில் கேட்டது. “அகர்வால் அங்கே வந்தானா?”

“ஆமாம். எனக்கு ஒரே குழப்பமாக இருக்கு.”

“நான்தான் இருட்டில் அம்பை விட்டுப் பார்த்தேன். அகர்வாலுக்கு போன் செய்து S.S.A. வை சி.பி.ஐ. காரர்கள் பிடித்துவிட்டார்கள் என்றும் அதில் கிடைத்த ரசீது புத்தகத்தில் அகர்வாலின் பெயர் இருந்ததென்று சொன்னதும் கலவரமடைந்துவிட்டான். நான் வேறு ஒன்றுமே பேசவில்லை. மற்ற விஷயங்களை C.B.I. காரர்களே

பேசுவார்கள் என்று சொன்னேன். கடைசியில் ஒரு க்ளூ கொடுத்தேன், கிருஷ்ணா புரத்தில் ஒரு சி.பி.ஐ. ஆள் டாக்டர் வேடத்தில் இருப்பார் என்றும், அவரைச் சந்தித்தால் ஏதாவது நடக்கலாம் என்றும் சொல்லி வைத்தேன். இங்கிலீஷ் படங்களை பார்த்த பாதிப்பு. வந்தானா?"

இதைப் பற்றி வெளிப்படையாக அகர்வால் முன்பாக போனில் பேசமுடியாத டாக்டர் மறைமுகமாகவே பேசினார். "ஆமாம். இங்கேதான். நீ மட்டும் கொஞ்சம் தாமதமாக போன் பண்ணியிருந்தால் பைத்தியமே பிடித்திருக்கும்" என்று போனை வைத்துவிட்டார்.

அகர்வாலுக்கு இந்தப் பேச்சு எதுவும் புரியவில்லை "யாரு?" என்றார் போனைப் பார்த்துக் கொண்டே.

"டில்லியிலிருந்து, எங்கள் மேலதிகாரி."

அகர்வாலின் முகம் வாடிப் போய்விட்டது. "நான் S.S.A. வுக்கு இரண்டு லட்ச ரூபாய் தந்தது உண்மைதான்."

"எதற்கு?"

அகர்வால் சங்கடத்துடன் நெளிந்தார். அவரை மேலும் சங்கடத்தில் ஆழ்த்த விரும்பாமல் ரங்கபிரசாத் சொன்னார். "மிஸ்டர் அகர்வால்! S.S.A.யை நாங்கள் சோதனை போட்ட போது நிறைய பணமும், தஸ்தாவேஜுகளும் கைப்பற்றப் பட்டன. பெரிய மனிதர்கள் பலர் அதில் இருக்கிறார்கள். நீங்க சொன்னாற்போல் நீங்கள் செய்தது பெரிய குற்றமொன்றும் இல்லை. உங்கள் பெயர் வெளியில் வராமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு என்னுடையது. போதுமா? நீங்க எதற்காக அவ்வளவு பணம் கொடுத்தீங்க?"

"என் மனைவிக்காக." தலைகுனிந்தபடி சொன்னார் அகர்வால்.

"காரணம்?"

"எங்களுக்குக் குழந்தையில்லை. பல டாக்டர்களை பார்த்த பிறகும் பயனில்லாது போனதால் மனமொடிந்து போயிருந் தோம். அந்தச் சமயத்தில்தான் S.S.A. பற்றி தெரிய வந்தது. பிரதிமாவுக்கு கர்ப்பம் தரிக்கச் செய்வதாகவும் அதற்காக இரண்டு லட்ச ரூபாய் தர வேண்டும் என்றும் சொன்னார்கள். எனக்கு பணம் ஒரு பிரச்னை இல்லை. அவர்கள் அவளை பரிசோதித்து சிகிச்சையளித்தார்கள். ஒப்புக் கொண்டது போல் இரண்டு லட்ச ரூபாயைக் கொடுத்துவிட்டேன். பிளாக் மனி தந்தது மட்டும்தான் நான் செய்த குற்றம்."

ரங்கபிரசாத் நிதானமான குரலில் சொன்னார். "மிஸ்டர் அகர்வால்! நீங்க பொய் சொல்றீங்க."

"பொய்யா? எது பொய்?"

"உங்களுக்குக் கல்யாணம் ஆவதற்கு முன்பே குழந்தைப் பேறு இருக்காது என்று தெரியும். வேறு யாருடனாவது தொடர்புகொண்டு பிரதிமாவுக்கு குழந்தை பிறந்தால் கூட தேவலை என்று நினைத்தீங்க. ஆனால் பிரதிமா இதற்கு உடன்படவில்லை. இறுதியில் ஆர்டிஃபிஷியல் இன்செமினேஷனுக்கு அழைத்துச் சென்றீர்கள். அதற்கு பிரதிமா மறுத்து விட்டாள்."

அகர்வாலின் முகம் இரத்தம் வற்றிவிட்டது போல் வெளிறிவிட்டது - "இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"சி.பி.ஐ.யைத் தாழ்வாக எடை போடாதீங்க."

"உண்மைதான். அவளால் எனக்கும், என்னால் அவளுக்கும் எந்தப் பயனும் இல்லை என்று தோன்றியதும் விவாகரத்து பெற்றுக் கொள்ளலாம் என்றாள் அவள். என்னைப் பற்றி உலகிற்குத் தெரிந்துவிடுமே என்று பயந்தேன்

நான். என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பியபோது S.S.A. எனக்கு உதவ முன் வந்தது. முன்னாளில் தான் காதலித்த சினிமா நடிகன் ஜெகதீஷின் வீரியத்தின் மூலமாக கர்ப்பம் தரிக்க பிரதிமா ஒப்புக் கொண்டாள்."

"ஆனால் ஏற்கனவே அந்த ஜெகதீஷ் இறந்து போய் விட்டான் இல்லையா?"

"ஆமாம். அவனுடைய ஸ்பெர்மை பத்திரப்படுத்தி வைத்திருப்பதாக S.S.A. ருசுவு காட்டியது. அதைப் பற்றி நான் அவ்வளவு பொருட்படுத்தவில்லை. யாருடைய வீரியமாக இருந்தாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை. பிரதிமா சம்மதித்த பிறகு அவளுக்கு ஆர்டிஃபிஷியல் இன் செமினேஷன் செய்யப்பட்டது. இரண்டு மாதங்கள் கழித்து அவள் கருவுற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. பிறகு நான் S.S.A வுக்கு இரண்டு லட்சம் கொடுத்தேன். உண்மையில் பிரதிமா அவ்வளவு முட்டாள்தனமாக பிடிவாதம் பிடிக்காமல் இருந்தால் இரண்டாயிரத்தோடு காரியம் முடிந்திருக்கும்."

"அது சரி. S.S.A. என்றால் என்னவென்று நீங்கள் சொல்லவே இல்லையே?"

அகர்வாலின் முகத்தில் சிரிப்பு மாயமாயிற்று. இது கூட தெரியாமலா ரெயிட் செய்தீர்கள் என்பது போல் பார்த்தார். பிறகு மெதுவாக சொன்னார். "S.S.A. என்றால் ஸ்பெர்ம் செல்லிங் ஏஜென்ஸி."

சலனமில்லாமல் இருந்த பூமி திடீரென்று நடுங்கத் தொடங்கினாற் போலவும், சுற்றுப்புறமெல்லாம் தட்டாமாலை சுற்றுவது போலவும் தோன்றியது ரங்கபிரசாதுக்கு.

**யோ**சனையில் மூழ்கியிருந்த ரஞ்சிதாவுக்கு மூளையே வெடித்துவிடும் போல் இருந்தது. அதற்குள் அவள் தோளில் ஒரு கை படிந்தது.

"அப்படி என்றால் நீ ரவியை மறந்து போகவும், என்னோடு சேர்ந்து இருக்கவும் முடிவு செய்து விட்டாய் இல்லையா" என்றார் அவதார் பாபா.

அவள் தலையை அசைத்தாள்.

"இதன் மீது கையை வை."

அப்பொழுதுதான் அவள் கவனித்தாள், தான் ஒரு பிரத்யேக அறைக்குள் இருந்ததையும், சுற்றிலும் ஏதேதோ கருவிகள் இருப்பதையும்.

லை டிடெக்டர்! பொய் சொன்னால் காட்டிக் கொடுத்துவிடும்.

அவள் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைப் பார்த்து அவதார் பாபா உரத்த குரலில் சிரித்தார். "விளையாட்டாக பொய் சொல்லிவிட்டு தப்பித்துக் கொள்ளலாம் என்று பார்த்தாயா?" சட்டென்று கடுகடுப்பாக மாறியது அவர் முகம். பளாரென்று அவள் கன்னத்தில் ஒரு அறை விட்டார்.

"ஏதோ கெட்டிக்காரி, சூழ்நிலைக்கேற்ப மாறிவிடுவாய் என்று நினைத்தேன். இப்படி ஏமாற்ற திட்டம் போடுவாய் என்று நினைக்கவில்லை. உஸ்ஸோக்கைக் குறைவாக எடை போட்டு விட்டாய். நன்றாக அனுபவி" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விட்டார்.

பயங்கரமான நிசப்தம் அங்கு சூழ்ந்து கொண்டது. தான் சாகப் போவது உறுதி என்று தெரிந்துவிட்டது. அவதார்பாபா யாரென்று ரவியிடம் சொல்ல முடிந்தால்

எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டாள்.

அதற்குள் அவளை ஒரு மைதானத்தில் கொண்டு போய் விட்டார்கள். விஷயம் புரிவதற்குள் தொலைவில் எங்கிருந்தோ ஒரு இயந்திரத்தின் ஓசை. நான்கு பக்கங்களிலிருந்தும் கதவுகள் மேலே தூக்கப்பட்ட சத்தம் கேட்டது. அடுத்த நிமிஷம் ஆளுயரத்தில் வேட்டை நாய்கள் இரண்டு வெளியே வரத் தொடங்கின.

தான் தீர்ந்து விட்டோம் என்று நினைத்தாள் ரஞ்சிதா. திறந்த கதவுகள் வழியாக வெளியே பாய்ந்து வரத் தயாராக இருந்த நாய்களைப் பார்த்ததும் அவளுக்குப் பாதி உயிரே போய்விட்டது. தன்னையறியாமல் கத்திவிட்டாள். "நானும் உஸ்ஸோக்கில் சேர்ந்து கொள்கிறேன்."

அவதார் பாபா நிமிர்ந்தார். மந்திரத்திற்கு கட்டுப்பட்டது போல் நாய்கள் திரும்பி விட்டன. இரண்டு நிமிடங்களில் அவளை பாபாவிடம் அழைத்துப் போனார்கள். அவள் அவருக்கு நாலடி தொலைவில் நின்றாள்.

அவர் தாழ்ந்த குரலில் "நாய்கள் கடித்துக் குதறிச் சாவது அதிர்ஷ்டம் ரஞ்சிதா. ஒருக்கால் அந்த மரணத்திலிருந்து தப்பிக்க நீ இந்த மாதிரி திட்டம் போட்டிருந்தால் ரொம்ப நஷ்டமடைவாய். இந்த முறை ப்ளட் ட்ரெயின் (blood drain) மூலம் உன் கதை முடிக்கப்படும்" என்று எச்சரித்தார்.

ரஞ்சிதா நடுங்கினாள். ஒவ்வொரு சொட்டு ரத்தமாக வெளியேற்றப்பட்டு சுமார் இரண்டு நாட்கள் சித்திரவதை அனுபவித்து சாகும் முறைதான் ப்ளட் ட்ரெயின். விரோதிகளுக்குக் கூட வரக் கூடாத சாவு அது.

"என்ன சரிதானே?"

ரஞ்சிதா தலையை அசைத்தாள். அவதார்பாபா தன் ஆட்களுக்குச் சைகை செய்தார். அவர்கள் அவளை அழைத்துப் போகும்போது பின்னாலிருந்து சொன்னார்.

“லை டிடெக்டர் மட்டும் அவள் பொய் சொல்வதாக உறுதி செய்தால் பிறகு என்னிடம் அழைத்து வரத் தேவை யில்லை. நான் சொன்ன தண்டனையை அமுலாக்கி விடுங்கள்.”

பாபா சொல்லி முடித்ததும் ரஞ்சிதாவை அழைத்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தார்கள். வராண்டாவில் இருந்த கதவு திறந்து கொண்டது. ரவி மறைவாக இருந்து கொண்டு பார்த்தான். அவன் இதயமே நின்று விடும்போல் இருந்தது.

இரண்டு பேர் ரஞ்சிதாவைப் பிடித்துக் கொண்டு நடத்தி அழைத்துப் போய்க் கொண்டிருந்தார்கள். மூவரும் லை டிடெக்டர் இருந்த அறைக்குள் நுழைந்ததும் கதவு சாத்திக் கொண்டது.

ரவி ரஞ்சிதாவை அடைத்திருந்த அந்த இரும்புக் கதவுக்கு அருகில் ஓட்டமாக ஓடி வந்தான். பத்து பட்டன்கள் இருந்தன, கதவுக்குப் பக்கத்தில். அவனுக்கு அத்தகைய கதவுகளைப் பற்றி நன்றாகத் தெரியும். அந்த பத்தில் ஏதாவது மூன்றை அழுத்தினால் கதவு திறந்து கொள்ளும். ஆனால் எந்த மூன்று?

சட்டென்று ஒரு யோசனை வந்தது. ஓடிப் போய் கொஞ்சம் மண்ணை அள்ளி வந்தான். அதை உள்ளங்கையில் வைத்து பட்டன்களின் மேல் வாயால் ஊதினான். மூன்றின் மேல் கொஞ்சம் மண் ஒட்டிக் கொண்டது. அதற்கு முன்னால் பட்டனை அழுத்தியவனின் ஆள்காட்டி விரலின் வியர்வை இன்னும் உலர்ந்திருக்கவில்லை.

மூன்று பட்டன்களையும் அழுத்தினான். கதவு மெல்லத் திறந்து கொண்டது. உள்ளே இருந்தவர்கள் ரஞ்சிதாவையே கவனித்துக் கொண்டிருந்ததால் அவன் வந்ததைப் பார்க்க வில்லை. சட்டென்று லை டிடெக்டருக்குப் பின்னால் மறைந்து கொண்டான். அப்பொழுதுதான் அவர்கள் அவளைக் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அதன் முனை சுவரில் இருந்த பிளக்கில் இணைத்திருந்தது. அவன் மேற்கொண்டு யோசிக்காமல் சட்டென்று அதைப் பிடுங்கிவிட்டான். கீழே சிவப்பு விளக்கு அணைந்ததை யாரும் கவனிக்கவில்லை. லை டிடெக்டரில் பாதரச மட்டம் மேலே ஏறாமல் நின்றுவிட்டது. அவளைப் பல கேள்விகள் கேட்டுவிட்டு அவள் உண்மை சொல்வதாக திருப்தியடைந்து அவளை மறுபடியும் பாபாவிடம் அழைத்துப் போக முற்பட்டார்கள்.

ரஞ்சிதாவுக்கு ஆச்சரியம்! எந்தச் சமயத்தில் பொய் சொன்னாலும் நூறு சதவீதம் லை டிடெக்டர் கண்டுபிடித்து விடும். இப்பொழுது என்னவாகிவிட்டது? அவர்களுடன் போய்க் கொண்டிருந்தவள் மற்றொரு முறை திரும்பி லை டிடெக்டரைப் பார்த்தாள். மிஷினுக்குப் பின்னாலிருந்து எழுந்து நின்ற அவ்வுருவம் . . . . ரவி!

★

திடீரென்று விழித்துக் கொண்டான் சித்தார்த்தா. தான் எங்கே இருக்கிறோம் என்று புரியவில்லை. சூழ்நிலை கதகதப்பாக இருப்பது போல் தோன்றியது. தலையைத் திருப்பிப் பார்த்தான். பக்கத்தில் ராகேஷ் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். கதகதப்பாக இருந்த காரணம் புரிந்தது. குகையின் மேல் பாகத்திலிருந்து வழிந்த தண்ணிர் கீழே விழுவதற்கு முன்னாலேயே பனியாக மாறிவிட்டதால் தடுப்புச் சுவராகி விட்டது. வெளியிலிருந்து காற்று உள்ளே வரவிடாமல் தடுத்துக் கொண்டிருந்தது.

சித்தார்த்தா ராகேஷை எழுப்பினான். ராகேஷ் தூக்கத்திலேயே அசைந்தான். சித்தார்த்தா அவன் கைகளையும், விரல்களையும் தேய்த்துவிட்டு கால்மாட்டிற்கு வந்தான். ஒரு கால் ஏற்கனவே ஃபிரஸ்ட் பைட்க்கு இலக்காகிவிட்டது. இரண்டாவது காலை மடியில் வைத்துக்

கொண்டு தேய்க்கப் போனபொழுது சந்தேகம் வந்து முழங்கால் அருகில் பலமாக அடித்தான்.

அந்தக் காலிலும் பாதிப்பு தொடங்கியிருந்தது. பின்னை எடுத்து முழங்காலில் குத்தினான். ராகேஷ் புரண்டு படுத்தான். முழங்காலுக்குக் கீழே குத்தியபோது ராகேஷுக்கு உணர்ச்சி யிருக்கவில்லை.

'மைகாட்!' சித்தார்த்தா நினைத்துக் கொண்டான். "ராகேஷ்! நாம் உடனே இங்கிருந்து கிளம்ப வேண்டும்" என்று பலமாக உலுக்கினான்.

குகையிலிருந்து வெளியேறும் போது ராகேஷ் காலை சரியாக ஊன்ற முடியாமல் தடுமாறி விழப் போனான்.

"நான் பயந்தது உண்மையாகிவிட்டது." சித்தார்த்தா முணுமுணுத்தான். "ராகேஷ்! கவனமாக நடக்க முயற்சி செய்."

"ஏதோ பயம் என்றாயே? எதுக்கு?"

சித்தார்த்தாவால் தவிர்க்க முடியவில்லை. "உன்னுடைய பாதங்களில் தொடங்கிய ஃபிராஸ்ட் பைட் மெல்ல மெல்ல மேலே பரவிக் கொண்டிருக்கிறது. அதான் உடனே கிளம்புவோம் என்று அவசரப்படுத்தினேன்."

"எனக்காக இந்த நள்ளிரவு குளிரில் நீயும் கிளம்பி விட்டாய். அப்படித்தானே?"

"ராகேஷ்! வேண்டாத யோசனைகளை விட்டுவிடு. நாம் ரொம்ப தூரம் நடக்கவேண்டும்."

ராகேஷால் தொடர்ந்து நடக்க முடியவில்லை. கீரைத் தண்டாக கால்கள் துவண்டுவிட்டன.

"என்னை விட்டுவிடு சித்தார்த்தா. நீ மட்டும் கிளம்பிப் போ. குட் பை!" முகத்தை கைகளில் புதைத்துக் கொண்டான் ராகேஷ்.

சித்தார்த்தா நின்று பின்னால் திரும்பிப் பார்த்தான். முதுகில் இருந்த பேக்கை சரி செய்து கொண்டு தாமதம் செய்யாமல் குனிந்து ராகேஷை தூக்கி தோளில் சாய்த்துக் கொண்டு நடக்கத் தொடங்கினான்.

"சித்தார்த்தா! என்ன இது? என்னைவிட்டு விடு."

"பேச்சுக் கொடுத்து என்னை மேலும் களைப்படையச் செய்யாதே ராகேஷ்!" பனியில் காலை பதித்துக் கொண்டே சுருக்கமாக சொன்னான் சித்தார்த்தா.

ஒரு ஆளை தோளில் சுமந்து கொண்டு பனியில் நடப்பது சாத்தியம் இல்லை என்று அவனுக்கும் தெரியும்.

"ஏன் முடியாது? என்னால் முடியும். என் தோளில் எந்த பளுவும் இல்லை. வலது காலை எடுத்து முன்னால் வைக்கிறேன். அடுத்ததாக இடதுகால். என்னுள் புதிய சக்தி நிரம்பி வழிகிறது. லட்சியத்தை என்னால் அடையமுடியும்."

ஏறத்தாழ மூன்று மணி நேரம் அவனால் தாக்குப் பிடிக்க முடிந்தது. பிறகு களைத்துப் போனவனாக ராகேஷை கீழே இறக்கிவிட்டான்.

"நாம் சரியான திசையில்தான் பயணம் செய்கிறோம் என்று நினைக்கிறேன். இந்தப் பக்கம் அந்தப் பக்கம் இரண்டு மலைக் குன்றுகள் இருக்கு. நடுவில் பள்ளத்தாக்கு. ஏதாவது ஒரு குன்றின் மீது ஏறி நம் அதிர்ஷ்டத்தை பரிசோதித்துக் கொள்ளணும். நாம் அதிர்ஷ்டசாலிகளாக இருந்தால் குன்றுக்கு அந்தப் பக்கம் மனித சஞ்சாரம் தென்படக் கூடும்." சித்தார்த்தா சொன்னான்.

"இல்லாவிட்டால்?"

"மறுபடியும் இறங்கிவந்து இரண்டாவது குன்றை ஏற வேண்டும். ஆனால் அதுவரையிலும் நாம் உயிரோடு இருப்பது நிச்சயமில்லை. அதனால் எந்த குன்றை ஏறுவது

என்று சீட்டுப்போட்டுப் பார்க்கணும். சொல்லு, என்ன செய்யலாம்?" என்றான் சித்தார்த்தா.

"முதலில் தூங்குவோம்."

சித்தார்த்தா திடுக்கிட்டு ராகேஷ் பக்கம் பார்த்தான்.

"இந்த நிலையில் பயணம் செய்வது நல்லது இல்லை. இன்னும் இரண்டு மணி நேரத்தில் விடிந்துவிடும். அந்த இரண்டு மணி நேர தூக்கம் புதிய தெம்பைக் கொடுக்கும்" என்றான் ராகேஷ்.

அவன் சொன்னது சரி என்று தோன்றியது. விடிந்தால் கிழக்கு எது என்று புரியும். கூரை போன்ற இடத்திற்குக் கீழே இருவரும் படுத்துக் கொண்டார்கள். சித்தார்த்தா ரொம்ப களைத்துப் போயிருந்தான். படுத்ததுமே தூங்கிவிட்டான்.

சூரிய வெளிச்சம் கண்ணில் பட்டு சுருக்கென்றதும் விழிப்பு வந்தது சித்தார்த்தாவுக்கு. மணியைப் பார்த்துக் கொண்டான். பதினொன்றரை. ரொம்ப நாளாக தூங்காதது போல் களைத்துப் போன உடலை தூக்கம் தழுவிக் கொண்டு விட்டது போலும். சூரிய வெளிச்சத்தில் பனியின் வெண்மை பளீரென்று பிரகாசமாக இருந்தது.

ஏற்கனவே தாமதமாகிவிட்டது. காது மடல்களை, கைகளை தேய்த்துக் கொண்டே திரும்பிப் பார்த்தவன் திடுக்கிட்டான். பக்கத்தில் ராகேஷைக் காணவில்லை.

"ராகேஷ்!" குரல் கொடுத்தான்.

பதில் இல்லை.

"ராகேஷ்!" குரலை உயர்த்தினான்.

முன்னால் அடி எடுத்து வைக்கப் போன சித்தார்த்தா காலில் ஏதோ தட்டுப் படவும் நின்றுவிட்டான்.

உடைகள்! ஷெர்பாவுடையது மட்டுமே இல்லை. ராகேஷுடையதும்.

இரண்டுமே போர்த்தியிருந்ததால்தான் அவ்வளவு கதகதப்பாக இருந்திருக்கிறது. உடைகளுக்குள் ஒரு கடிதம் இருந்தது. ராகேஷ் எழுதிய கடிதம்.

சித்தார்த்தா வியப்புடன் பிரித்துப் பார்த்தான்.

சித்தார்த்தா,

இந்தக் கடிதத்தை நீ படிக்கும் நேரத்தில் நான் உன் வலது பக்கம் இருக்கும் குன்றை ஏறிக் கொண்டு இருப்பேன். இல்லை இல்லை. தவழ்ந்து கொண் டிருப்பேன். ஒற்றைக் காலுடன் குன்றின் மீது ஏறுவதற்கு எனக்கு ரொம்ப நேரம் ஆகலாம். நீ கீழே இருந்து சக்தியைத் திரட்டிக் கொள். சிகரத்தை அடைந்ததும் சரியான வழியா இல்லையா என்பதை சொல்கிறேன்.

நாம் மறுபடியும் சந்தித்துக் கொள்வோமோ இல்லையோ தெரியாது. உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். நான் கெட்டவன் இல்லை. இந்த உலகில் யாருமே கெட்ட வனாக பிறப்பதில்லை. சூழ்நிலைதான் மனிதனை அரக்கனாக மாற்றுகிறது. இந்த பனி மலைகளுக்கு நடுவில் எதிரி என்று தெரிந்தும் நீ என்னிடம் காட்டிய கருணையில், அன்பில் ஆயிரத்தில் ஒரு பங்காவது என் தந்தையோ, மாற்றான் தாயோ என் மீது காட்டியிருந்தால் நான் இதுபோல் உருவாகியிருக்க மாட்டேனோ என்னவோ? உனக்குத் தெரியுமா சித்தார்த்தா, மாமாவைக் கொன்றது நான்தான். டாக்டர் ரங்கபிரசாத் மீது கொலை முயற்சி செய்ததும் நான்தான். இத்தனைக் கொடுமைகளை செய்தவன் என்று தெரிந்த பிறகும் மனைவியைக் காப்பாற்ற நினைத்தாயே தவிர என்னை பழி வாங்க எண்ணவில்லை. மேலும் என்னைக் காப்பாற்ற முயற்சி செய்தாய். இத்தனை நல்ல குணத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

நீ உறக்கத்தில் ஆழ்ந்த பிறகு நான் யோசித்தேன். காலையில் நீ எழுந்ததும் என்னைத் தோளில் சுமந்து கொண்டு மலையேறத் தொடங்குவாய். அசாத்தியமான அந்த வேலையை செய்து

முடித்தாலும் அதிர்ஷ்டம் நம்மை வஞ்சனை செய்தால்? மலைக்கு அந்தப் பக்கம் மனித சஞ்சாரம் இல்லையென்றால்? நாமிருவரும் இறப்பது நிச்சயம்.

அதனால் அந்த ரிஸ்கை நானே எடுத்துக் கொள்ள முடிவு செய்தேன். கிளம்புவதற்கு முன்னால் எனக்கு ஒரு எண்ணம் வந்தது. என்னுடைய உடைகளையும் உனக்கே தந்து விட்டால்? இந்தக் குளிர் பிரதேசத்தில் யார் என்னைப் பார்த்து சிரிக்கப் போகிறார்கள்? எந்தச் சக்தி என்னைத் தோளில் சுமந்து கொண்டு என்னை மலையேறச் செய்ததோ, அதே சக்தி எனக்கும் துணையாக இருந்து வழி நடத்தும். வாழ்க்கையில் நான் செய்யும் முதல் நல்ல காரியம் இது. உனக்கு உதவி செய்வதற்காகவாவது மலை உச்சியை அடையும் வரையில் நான் உயிரோடு இருப்பேன்.

மலை உச்சியை அடைந்ததும் ஒருமுறை பிஸ்டலை சுடுவேன். உன்னைச் சுடுவதற்காக உஸ்ஸோக் என்னிடம் தந்த பிஸ்டல் இது. இந்த விதமாக பயன்படப் போகிறது. ஒரு முறை பிஸ்டலை சுட்டால் நாகரீக உலகம் அந்தப் பக்கமாக இருப்பதாக அர்த்தம். நீயும் வரலாம். பிஸ்டல் சத்தம் மூன்று முறை கேட்டால் நீ இந்தப் பக்கம் வர வேண்டியதில்லை. அந்தப் பக்கத்து குன்றின் மீது ஏறி உன் அதிர்ஷ்டத்தைப் பரிசோதித்துக் கொள்.

அஷ்டாவக்கிரனின் ஜென்ம ரகசியங்கள் அடங்கிய காகிதம் என் உடைகளில் இருக்கிறது. எடுத்துக் கொண்டு சீக்கிரமாக கிளம்பு.

என்னைக் காப்பாற்றுவதற்கு இந்தப் பக்கம் வர முயற்சி செய்யாதே. பிஸ்டல் ஒருமுறை வெடித்து நீ இந்தப் பக்கம் வந்தால், அது வரையிலும் மலையுச்சியில் மேலும் ஆறு மணிநேரம் உன் வருகைக்காக எதிர்பார்த்துக் கொண்டு நான் உயிரோடு இருந்தால் சரி. இல்லாவிட்டால் இதுதான் என் கடைசி வணக்கம். இறுதியாக ஒரு வேண்டுகோள். உனக்கும் உன் குடும்பத்திற்கும் நான் இழைத்த துரோகத்திற்கு என்னை மன்னித்துவிடு.

இந்த விஷயங்கள் எதையும் கௌரியிடம் சொல்லாதே. நான் இறந்துவிட்டேன் என்று மட்டும் சொன்னால் போதும். இந்த உலகத்தில் எனக்காக ஒருத்தராவது ஒரு சொட்டு கண்ணீர் விடுவதைவிட ஆத்மதிருப்தி எனக்கு வேறு என்ன இருக்க முடியும்?

நண்பனே! கிழக்குத் திசையில் தோன்றிய ஒளிக்கீற்றுகள் என்னை வா வா என்று அழைக்கின்றன. உயிரோடு இருந்தால் மறுபடியும் சந்திப்போம்.

ராகேஷ்.

நடுங்கும் விரல்களுடன், ஈரமான விழிகளுடன் எதிரே இருந்த சிகரத்தைப் பார்த்தான் சித்தார்த்தா. ராகேஷ் செய்த தியாகத்தைப் போல் ஓங்கி உயரமாகக் காட்சியளித்தது. அவன் கெட்டவனாகவே இருக்கலாம். ஆனால் இன்று அவன் செய்த தியாகம் மட்டும் கனவில்கூட ஊகிக்க முடியாதது. தன்னைக் காப்பாற்றுவதற்காக உடைகளையும் தியாகம் செய்து லட்சியத்தை நோக்கிப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறான்.

எது எப்படி இருந்தாலும் சரி, இறந்து போனால் இரண்டு பேரும் ஒன்றாகவே இறக்க வேண்டும். ஒருக்கால் அவன் ஏறிய மலைக்கு அப்பால் மனித சஞ்சாரம் இருந்தால் அவனை தோளில் சுமந்து கொண்டு காப்பாற்றணும். இந்த எண்ணத் துடன் சித்தார்த்தா புறப்படத் தயாராக இருந்தான்.

அப்பொழுது கேட்டது பிஸ்டலின் சத்தம்.

சித்தார்த்தா ஒரு வினாடி சந்தோஷம் மேலிட அப்படியே நின்று விட்டான். சக்தி முழுவதையும் திரட்டிக் கொண்டான். ராகேஷ் பதினாலு மணி நேரத்தில் மலை ஏறியதை தன்னால் ஆறு மணி நேரத்தில் முடிக்க முடியும். அதுவரையிலும் தன் உடம்பில் வலுவிருந்தால் ராகேஷை சுமந்து கொண்டு தன்னால் இறங்கவும் முடியும்.

மறுபடியும் பிஸ்டல் வெடித்த சத்தம்!

சித்தார்த்தா அதிர்ச்சியடைந்தவன் போல் அப்படியே நின்றுவிட்டான். அது கனவா அல்லது நினைவா? சரியாக காதில் வாங்கிக் கொண்டானா என்று புரியவில்லை. கனவாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

அப்பொழுதுதான் மூன்றாவது முறை பிஸ்டல் வெடித்த சத்தம் கேட்டது. பிறகு ஆழமான நிசப்தம்.

## 32

**கா**ர் வேகமாக போய்க் கொண்டிருந்தது. இனியும் சஸ்பென்ஸைத் தாங்க முடியாமல் "நாம் எங்கே போகிறோம்?" என்று கேட்டார் அகர்வால்.

"மன்னித்துக் கொள்ளுங்கள். நீங்க நினைப்பதுபோல் நான் சி.பி.ஐ. ஆசாமி இல்லை. சாதாரண டாக்டர்தான். ஒரு ரகசியத்தை சோதிப்பதற்காக இதுபோல் நாடகமாட வேண்டி யிருந்தது" என்று சொன்ன ரங்கபிரசாத் கிருஷ்ணாபுரத்தில் விக்ருத சிசுக்கள் பிறந்ததையும், தான் பரிசோதனையில் இறங்கியதையும், நிவேதிதா ஆடிய நாடகத்தையும் விவரித்தார்.

எல்லாவற்றையும் கேட்ட அகர்வாலுக்கு நம்ப முடிய வில்லை. "கிருஷ்ணாபுரத்தில் பிறந்த விக்ருத சிசுக்களுக்கும் இரண்டு வருடங்களுக்கு முன்னால் என் மனைவிக்குப் பிறந்த விகாரக் குழந்தைக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்? இதற்கிடையே நாட்டில் பல இடங்களில் இது போன்ற குழந்தைகள் பிறந்திருக்கும் இல்லையா?" என்றார் அகர்வால்.

"அவர்கள் எல்லோருக்கும் S.S.A.வுடன் தொடர்பு இருந்திருக்கலாம்." அப்படிச் சொன்னாரே தவிர அவருக்கே அந்தக் கூற்றில் நம்பிக்கையிருக்கவில்லை.

அதற்குள் "இல்லை. எனக்கு நன்றாகத் தெரியும்" என்றார் அகர்வால்.

"எப்படி?"

"நான் அந்த நிறுவனத்திற்கு ரகசியமாகத்தான் போயிருந்தேன். ரகசியம் என்றால் சட்டம், அரசாங்கத்திற்கு பயந்து இல்லை. இந்த மாதிரியான விஷயம் எல்லோருக்கும் தெரியக் கூடாது என்றுதான். இதுபோன்ற ஸ்பெர்ம் செல்லிங் ஏஜென்ஸிக்களைப் பற்றி மேல் மட்டத்தைச் சேர்ந்தவர்கள் பேசிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இன்னும் கொஞ்ச நாளில் அழகு சாதன நிலையங்களைப் போல் இதுவும் நாடெங்கும் பரவினாலும் ஆச்சரியமில்லை."

அதற்குள் கார் பங்களாவுக்குள் நுழைந்தது.

"எங்கே அழைத்து வந்திருக்கீங்க?" காரிலிருந்து இறங்கிய அகர்வால் கேட்டார்.

"எனக்குத் தெரிந்தவரை இந்தப் பிரச்னையைப் பற்றிச் சொல்லக் கூடியவர் டாக்டர் வம்சிகிருஷ்ணா ஒருவர்தான். அவரிடம்தான் வந்திருக்கிறோம். அவரை உங்களுக்குத் தெரியும் இல்லையா?"

"தெரியும். நானும் என் மனைவியும் முன்பு வந்திருக்கிறோம்" என்றார் அகர்வால்.

★

"என் சந்தேகம் என்னவென்றால் எங்கோ பம்பாயில் என் மனைவிக்குப் பிறந்த சிசுவுக்கும் இங்கே கிருஷ்ணாபுரத்தில் பிறந்த சிசுக்களுக்கும் ஒரு சம்பந்தமும் இருக்காதோ என்று" என்றார் அகர்வால்.

"எனக்கும் அதே அபிப்பிராயம்தான்" என்றார் வம்சீ கிருஷ்ணா, நாற்காலியில் பின்னால் சாய்ந்து உட்கார்ந்து கொண்டே.

"அவ்வளவுதானா?" ஏமாற்றத்துடன் கேட்டார் ரங்கபிரசாத்.

“அது சரி. உங்க அபிப்பிராயம் என்ன? சொல்லுங்க” வம்சிகிருஷ்ணா கேட்டார்.

“என்னைக் கேட்டால் இந்த இரண்டு ஆண்டுகளில் நம் நாட்டில் பிறந்த இது போன்ற குழந்தைகளையும் அவர்களுடைய தாய்மார்களையும் சோதித்துப் பார்க்கணும்” என்றார் ரங்கபிரசாத்.

“சோதித்து என்ன செய்வீங்க?”

“அவர்களுக்கும், S.S.A.வுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா என்று தெரியவரும் இல்லையா?”

வம்சீகிருஷ்ணா சிரிக்கப் போனவர் ரங்கபிரசாத் என்ன நினைப்பாரோ என்று சிரிப்பை அடக்கிக் கொண்டு “கோடிக் கணக்கான பணத்துடன் வியாபாரத்தில் புரளும் S.S.A. எங்கோ மூலையிலிருக்கும் கிருஷ்ணாபுரம் வந்து ஏழு பெண்களின் மேல் எதற்காக சோதனையை நடத்தப் போகிறார்கள்?” என்றார்.

“நானும் அதைத்தான் சொன்னேன். எனக்குத் தெரிந்த பெரிய இடத்துப் பெண்ணிற்கு அவளுடைய அபிமான நடிகனின் மூலம் ஒரு மகன் பிறந்தான். அதுகூட இரண்டு வருடங்களுக்கு முன்புதான்.” இடைமறித்துச் சொன்னார் அகர்வால்.

வம்சீகிருஷ்ணா சொன்னார். “S.S.A. மீது நாம் சட்ட ரீதியாக எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள முடியாது என்று நினைக்கிறேன், வீரியத்தை விற்பனை செய்வதற்கு தடை விதித்து பார்லிமெண்டில் மசோதா வந்தாலொழிய.”

ரங்கபிரசாத் யோசிக்கத் தொடங்கினார். அவரது உள் மனம் ஏதோ உணர்த்தியது. இங்கேதான். . . இங்கேதான். . . . ஏதோ மர்மம் இருக்கிறது.

அகர்வால் எழுந்து நின்றார். “நான் வரட்டுமா? எனக்கு

விமானத்திற்கு நேரமாகிவிட்டது."

ரங்கபிரசாத் எழுந்து கைகுலுக்கிவிட்டு "தாங்க்ஸ். . . . இந்தச் சின்ன விஷயத்திற்காக பெரிய நாடகமாட வேண்டியிருந்தது. உங்களுக்கு வீண் சிரமம்" என்றார்.

"பரவாயில்லை. நான் கேட்டுக் கொள்வது ஒன்றுதான். ஒருக்கால் இந்தக் கேஸ் விவகாரம் ஏதாவது வெளிப்பட்டால் எங்கள் பர்சனல் விஷயம் எதுவும் வெளியில் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். பத்திரிகைகளைக் கண்டாலே எனக்கு பயம்."

இருவரும் வெளியே வந்தார்கள். ரங்கபிரசாத் காரை நோக்கி நடந்தார். ஊதக் காற்று துளைத்தெடுத்தது. வானத்தில் ஒரு நட்சத்திரத்தைக் கூடக் காணவில்லை. தார் பூசியது போல் கன்னங்கரேலென்று கருமேகத் திட்டுக்கள். இடையிடையே மின்னல்கள்.

"என்னிடம் நாடகமாடிய அந்தப் பெண்ணின் பெயர் என்ன?"

"டாக்டர் நிவேதிதா."

"ரொம்ப கெட்டிக்காரியாக இருப்பாள் போலிருக்கே?"

"நாங்களிருவரும் விரைவில் திருமணம் செய்து கொள்ளப் போகிறோம்."

"உண்மையாகவா? கங்கிராட்ஸ்! அழைப்பிதழை அனுப்பி வைக்க மறந்து விடாதீங்க."

"கண்டிப்பாக அனுப்புகிறேன்."

"நானும் பம்பாய் போனதும் போலீஸ் கமிஷனருடன் பேசுகிறேன், இந்த S.S.A. பற்றி துப்புத் துலக்கச் சொல்லி."

"தாங்க்ஸ். இந்த அளவுக்கு ஒத்துழைப்பு கிடைத்தால் போதும். இந்த ரகசியத்தை வெளியில் கொண்டு வந்து விடலாம்."

கார் கண் மறைவாகும் வரை ரங்கபிரசாத் அங்கேயே நின்று கொண்டிருந்துவிட்டு உள்ளே போகத் திரும்பிய போது மழைத்துளி ஒன்று முகத்தில் தெறித்தது.

சரியாக கால்மணி நேரத்தில் அகர்வாலின் கார் விமான நிலையத்தை அடைந்தது. அப்பொழுதுதான் கௌண்டரை மூடிக் கொண்டிருந்தார்கள். அவசர அவசரமாக ஸ்லிப்பை பெற்றுக் கொண்டு விமானத்தை நோக்கி நடந்தார். அவர்தான் கடைசிப் பயணி.

பம்பாய்க்குச் செல்லும் ஏர்பஸ் அது. அருகிலேயே மற்றொரு சிறிய விமானம் கிளம்பிக் கொண்டிருந்தது. லைட் மேன் அதற்கு சிக்னல் கொடுத்துக் கொண்டிருந்தான். இரவு எட்டுமணி. எங்கும் திறந்த வெளியாக இருந்ததால் ஊதக் காற்று துளைத்தெடுத்துக் கொண்டிருந்தது. விமான நிலையத்து படியிலிருந்து விமானம் வரையிலும் சுமார் முன்னூறடி தூரம் ஆளரவமற்று இருந்தது. விமானத்திற்கு அருகில் நாலைந்து சிப்பந்திகள் நின்று கொண்டிருந்தார்கள்.

அதுவரையில் ஒரே திசையில் வீசிக் கொண்டிருந்த காற்று திடீரென்று சுழற்காற்றாய் மாறிவிட்டது. தூசி தன்னைத் தாக்காமல் இருப்பதற்காக கையிலிருந்த பீரீஃப்கேசை முகத்திற்கு குறுக்கே வைத்துக் கொண்டார் அகர்வால். காற்றின் சீற்றம் மேலும் வலுத்ததால் அப்படியே நடக்கத் தொடங்கினார். விமானத்தின் ப்ரொபல்லர் பேரிரைச்ச லிட்டுக் கொண்டிருந்தது.

அதே சமயம் புறப்பட்டுக் கொண்டிருந்த விமானத்திற்கு சிக்னல் கொடுத்துக் கொண்டிருந்த சிப்பந்தி திடீரென்று விமானத்தின் போக்கில் ஏதோ மாறுபாடு தெரிந்ததைக் கவனித்தான். சிவப்பு விளக்கைத் தாண்டி முன்னோக்கி வந்து கொண்டிருந்தது அது. கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தான். தொலைவில் எங்கோ இடி முழங்கிற்று. அந்த சத்தத்தில் விமானத்தின் இறகுகளுக்கு பக்கத்திலிருந்த

விளக்குகள் அணைந்துவிட்டன.

அகர்வாலை காற்று கீழே தள்ளப்போனது. காதுகளில் கடல் அலைகளின் பேரிரைச்சல். காற்று அவரைச் சுற்றிலும் சூழ்ந்து கொண்டது. இறங்கிக் கொண்டிருந்த வேறொரு விமானத்தின் விளக்குகள் கண்களில் பளிச்சிட்டன. நகர்ந்து கொண்டிருந்த விமானம் மேலும் நெருங்கி வந்தது.

முதலில் கவனித்தது ஏர்பஸ்ஸிற்கு அருகில் இருந்த சிப்பந்திதான். "ஏய்! இந்தப் பக்கம்" என்று கத்தினான். ப்ரொபல்லரின் சத்தம் மேலும் காதைத் துளைத்தது. காற்றுடன் மழையும் சேர்ந்து கொண்டது. அகர்வால் மேலும் நாலடி எடுத்து வைத்தார்.

அவர் வாயிலிருந்து அலறல் கூட வெளிவரவில்லை. தோள்கள் முதலில் காற்றில் பறந்தன. பிறகு தலை கண்டந் துண்டமாக கீழே சிதறியது.

தவறு பைலட்டினுடையதா அல்லது அகர்வாலுடையதா என்று சாட்சியம் சொல்ல வேண்டிய லைன்மேன் மயங்கி விழுந்தான்.

★

**ர**ஞ்சிதாவை பாபாவின் ஆட்கள் அழைத்துச் சென்ற பிறகு அவர்களைத் தொடர்ந்து வந்த ரவி சாமர்த்தியமாக அவர்கள் கண்ணில் படாமல் அந்த அறையை விட்டு வெளியே வந்துவிட்டான்.

இனி பாபா சந்தேகப்பட்டு மறுபடியும் சோதித்தால் தவிர ரஞ்சிதாவின் உயிரைப் பற்றி இப்போதைக்குக் கவலையில்லை. தான் தப்பித்துக் கொண்டதை அவர்கள் தெரிந்து கொள்வ தற்கு முன் ஏதாவது செய்ய வேண்டும். ரவி இதுபோல் எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில் பாபா ரஞ்சிதாவைப் பார்த்து முறுவலித்துவிட்டு "என்ன ரஞ்சிதா, கைக்கு கடியாரம் கட்டிக் கொண்டாற்போல் எங்க

கருவிகளையும் ஏதாவது மாயம் செய்து விட்டாயா?" என்று கேட்டார்.

லை டிடெக்டர் சம்பவத்தால் துணிச்சலைப் பெற்று விட்ட ரஞ்சிதா மனோகரப் புன்னகையொன்றை உதிர்த்து விட்டு "என்னதான் செய்து உங்களை நம்ப வைக்கச் சொல்றீங்க?" என்று கேட்டாள்.

பாபா அவளை உற்றுப் பார்த்துவிட்டு "சொல்லச் சொல் கிறாயா?" என்றார்.

ரஞ்சிதாவின் முகத்திலிருந்த சிரிப்பு மாயமாயிற்று. "என்ன?" என்றாள் தடுமாறியபடி.

அவள் தடுமாற்றத்தைப் பார்த்து பெரிதாக சிரித்தார். "இல்லை ரஞ்சிதா. எனக்கு உன் தேவை அந்த மாதிரியில்லை. வேறொரு விதத்தில் உன்னைப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறேன். உஸ்ஸோக்கில் சேர்ந்த பிறகு உன் உடலின் மீது எனக்கு உரிமை கிடையாது."

அவளுக்குக் குழப்பமாக இருந்தது.

அவள் சந்தேகத்தைப் புரிந்து கொண்டாற் போல் பாபா "ரஞ்சிதா! இன்னும் ஐந்தாறுமணி நேரத்தில் அஷ்டாவக்கிரன் பிறந்துவிடுவான். உஸ்ஸோக்கில் எல்லோரும் அந்த பரபரப்பில் இருக்கிறார்கள். நீ செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றிப் பிறகு சொல்கிறேன். என்னுடன் வா" என்றார்.

அவள் மௌனமாக அவரைப் பின் தொடர்ந்தாள். அவர்கள் ஹாலை நோக்கிப்போய்க் கொண்டிருந்தார்கள். ரவியும் தாமதிக்காமல் அவர்களைத் தொடர்ந்தான். எல்லோரையும் போலவே அவனும் ரத்தத்தால் திலகமிட்டுக் கொண்டு கடைசி வரிசையில் உட்கார்ந்து கொண்டான். அவ்வாறு உட்கார்ந்தானே தவிர அவன் இதயம் வேகமாக துடித்துக் கொண்டிருந்தது.

அடைத்து வைத்திருந்த அறையில் அவன் இல்லாததை மற்றவர்கள் தெரிந்து கொள்வதற்கு முன்னால் ஏதாவது செய்ய வேண்டும்.

"அன்பார்ந்த உஸ்ஸோக் அங்கத்தினர்களே!" மகா திரஷ்டாவின் குரல் அந்த ஹாலில் எதிரொலித்தது. "நாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளை நெருங்கிவிட்டது. அஷ்டாவக்கிரன் இன்றிரவு பன்னிரெண்டு மணிக்குப் பிறக்கப்போகிறான்."

சபையில் ஆரவாரம் எழும்பியது. அவதார் பாபா ரஞ்சிதாவைப் பார்த்து 'இரு' என்று சைகை காட்டிவிட்டு மேடைக்குப் போனார்.

இப்பொழுது அவர் அவதார்பாபா வேடத்தில் இருந்ததால் ரவிக்கு அவரை அடையாளம் தெரிய வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அதற்குள் ரஞ்சிதா பின் வரிசையில் இருந்த ரவியைப் பார்த்து விட்டாள். பாபா யாரென்ற ரகசியத்தை ரவிக்குச் சொல்லிவிட அவள் துடித்தாள். ஆனால் எப்படித் தெரிவிப்பது என்றுதான் புரியவில்லை.

இப்பொழுது அவதார்பாபா பேசத் தொடங்கினார்.

"இன்றிரவு அஷ்டாவக்கிரன் பிறக்கப் போகிறான். கேதார கௌரி பிரசவத்திலேயே இறந்துவிடுவாள். அஷ்டாவக்கிரனை மகாதிரஷ்டா இங்கே அழைத்து வருவார். உஸ்ஸோக் உலகத்தின் எதிர்கால மன்னன் இங்கே வளர்ந்து ஆளாவான்." அவதார் பாபாவின் குரல் ஆவேசமாக ஒலித்தது. "இத்தனை நாளாக நாம் பாடுபட்டு வந்தது நடக்கப் போகிறது. இப்பொழுதுதான் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நாளையிலிருந்து அராஜகத்தை தோற்றுவிக்கணும். கூச் சலுக்கும் அலறல்களுக்குமிடையே நம் முழக்கங்கள் கேட்க வேண்டும். அதுதான் அஷ்டாவக்கிரனுக்கு நாம் தரும் வரவேற்பு."

பாபா சொன்னதை கேட்கக் கேட்க ரவியின் ரத்தம் கொதித்தது.

அதற்குள் மகாதிரஷ்டா கிளம்பிவிட்டார். அவரைத் தொடர்ந்து இரண்டுபேர் போனார்கள். சபை தொடர்ந்தது. ஒருக்கால் நள்ளிரவு வரையிலும், அஷ்டாவக்கிரனை மகாதிரஷ்டா தன்னுடன் அழைத்து வரும் வரையிலும் தொடர்ந்து கொண்டிருக்குமோ?

அஷ்டாவக்கிரனை அழைத்து வருவது என்றால்...

ரவியின் கண்கள் கலங்கின. இதெல்லாம் உண்மை என்றால், உண்மையிலேயே தீய சக்திகள் இருக்குமானால் தன் தங்கை இறந்து விடுவாள். இந்த விஷ வளையத்திலிருந்து தப்பித்துக் கொண்டு அங்கே எப்படிப் போவது? போனாலும் அவனால் என்ன செய்ய முடியும்?

மகாதிரஷ்டாவைப் பின் தொடர்ந்து போய்ப் பார்த்தால்?

அவன் எழுந்தான். அதே சமயத்தில் ஒரு ஆள் பரபரப்பாக ஓடி வந்தான். ஆயாசத்தால் பெருமூச்சுவிட்டபடியும், சந்தோஷத்தால் மலர்ந்த முகத்துடன் வந்து நின்ற அந்த ஆள் - புரொபசர் புட்டண்ணா!

வந்ததுமே அவர் பாபாவின் கால்களில் விழுந்தார். “நன்றி பாபா! என் ஆசை நிறைவேறிவிட்டது” என்றார்.

பாபா முறுவலுடன் “என்ன நிகழ்ந்தது?” என்று கேட்டார்.

“இன்றிரவே அஷ்டாவக்கிரன் கேதார கௌரியின் வயிற்றில் பிறக்கப் போகிறான் என்று நீங்கள் மாலையில் சொன்ன செய்தி காட்டுத் தீயாக ஊரெல்லாம் பரவிவிட்டது. மக்கள் ஆவேசத்தால் கொந்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். தீவட்டிகளுடன் சரியாய் ஒரு மணி நேரத்திற்கு முன்னால் டாக்டர் ரங்கபிரசாதின் நர்ஸிங் ஹோமைச் சூழ்ந்து

கம்பௌண்டரையும் கொன்றுவிட்டார்கள். கட்டிடத்திற்கு தீ வைத்துவிட்டார்கள்."

பாபா முறுவல் மாறாமலேயே "நல்லது. அப்படி என்றால் கேதாரகௌரி?" என்று கேட்டார். புட்டண்ணா பதில் சொல்லிக் கொண்டிருந்தார். கேட்டுக் கொண்டிருந்த ரவியின் கைகள் முறுக்கேறின.

★

**கே**தார கௌரி அப்பொழுதுதான் கண்ணயர்ந்தாள். வெளியே ஏதோ சலசலப்பு கேட்டதால் எட்டிப் பார்த்தாள். அவள் உடல் தன்னையறியாமல் நடுங்கியது. மக்கள் ஏராளமான தீவட்டிகளுடன் வெள்ளம் போல் வந்து கொண்டிருந்தார்கள். "பாபாவுக்கு ஜெய்!" என்று கத்திக் கொண்டிருந்தார்கள். சிலர் சாமி வந்தது போல் ஆடிக் கொண்டிருந்தார்கள். அவளுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. எழுந்து வெளியே வந்தாள். இருட்டில் மக்கள் அவளைக் கவனிக்கவில்லை. கம்பௌண்டர் அவர்களைத் தடுத்து நிறுத்தி ஏதோ சொன்னது கேட்டது.

"முடியாது. அஷ்டாவக்கிரன் பிறக்கக் கூடாது" என்று கத்தினான் ஒருவன்.

அப்பொழுதுதான் அவளுக்கு விஷயம் புரிந்தது.

"இப்போ என்னதான் வேண்டும் உங்களுக்கு?" கம்பௌண்டர் கேட்டான்.

"அவளை எங்களிடம் ஒப்படைக்கணும்."

"டாக்டர் இங்கே இல்லை."

"நாங்கள் கேட்டது டாக்டரை இல்லை. அவளை மரியாதையாக எங்களிடம் ஒப்படைத்து விடு."

அதற்குள் இன்னொருவன் "வீண் பேச்சு எதுக்கு?

பிடித்து இழுத்துக் கொண்டு போகாமல்'' என்றான்.

கேதாரகௌரி மக்களைக் கூர்ந்து கவனித்தாள். திருவிழாவுக்குக் கூடியது போல் கூடியிருந்தார்கள்.

“அவளை என்ன செய்யப் போறீங்க?'' கம்பௌண்டரின் குரலில் பயம் தொனித்தது.

“என்னவோ செய்து கொள்கிறோம். உனக்கு என்ன வந்தது? மரியாதையாக வழியை விடப் போகிறாயா இல்லையா?'' முன்னுக்கு வந்தான் ஒருவன்.

“இப்பொழுதாவது தெரிந்ததே. அவன் மட்டும் பிறந்து விட்டால் உலகத்திற்கே அரிஷ்டம் வந்துவிடும்.''

“இவ்வளவு நாளாக இடைவிடாமல் மழை பெய்கிறதைப் பார்க்கும்போதே சந்தேகம், இதேதோ கெட்ட சகுனம் என்று.''

“பிரளயம் வருவதற்குமுன் இப்படித்தான் நடக்குமாம். சாத்தானின் வாரிசு பிறக்கப்போகிறதாம்.''

மக்கள் வாய்க்கு வந்தபடி பேசிக் கொண்டு இருந்தார்கள். கேட்டுக் கொண்டிருந்த கௌரிக்கு கோபம் வரவில்லை. துக்கமும் வரவில்லை. மாறாக அந்த மக்களைப் பார்க்கும் போது இறக்கம்தான் ஏற்பட்டது. இவர்கள் எப்பொழுது மாறப்போகிறார்கள்? எப்படி மாறப் போகிறார்கள்?

வயிற்றுக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் கள்ளமறியாத பச்சிளம் குழந்தையை தம் முட்டாள்தனத்திற்கும், மூட நம்பிக்கைகளுக்கும் பலியாக்க நினைக்கும் இவர்கள் மாறுவார்களா?

பக்கத்து வீட்டுக்காரியின் கணவன் இறந்துவிட்டால் புடவைத் தலைப்பில் மஞ்சள் கிழங்கை முடிந்து கொள் பவர்கள், தும்மினால் சகுனம் பார்ப்பவர்கள், இவர்களைத்

திருத்தவும் முடியுமா?

கௌரியின் சிந்தனை பெரும் கூக்குரலால் கலைந்தது. வெளியே கலகம் அதிகரித்துவிட்டது. கம்பௌண்டரை பிடித்துத் தள்ளிவிட்டு எல்லோரும் திமுதிமுவென்று உள்ளே நுழைந்தார்கள். "பிறப்பதற்கு முன்பே தாயைக் கொன்று விடுவதே நல்லது." எவனோ கத்தினான்.

அவள் கை தன்னையறியாமல் வயிற்றைத் தடவியது. பிறக்கும்முன்பே இத்தனை எதிர்ப்புகளைத் தாங்க வேண்டியுள்ள இக்குழந்தை போகப் போக என்னென்ன கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்குமோ?

அதற்கு மேல் யோசிக்க முடியவில்லை அவளால். இந்தக் குழந்தையை எப்படியாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அவன் அஷ்டாவக்கிரனாகவே இருக்கட்டும். தன்னுடைய சாவுக்கு காரணகர்த்தாவாகவே இருந்தாலும் சரி, அவனைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

அவள் நர்ஸிங் ஹோம் பின் பக்க கதவைத் திறந்தாள். வெளியே காரிருள். மழை லேசாக தூறிக் கொண்டிருந்தது. அவள் இருளில் நடந்துபோகத் தொடங்கினாள். நிறைமாதம் என்பதால் மூச்சு இரைத்தது. ஏதோ வெளிச்சம் வந்தாற்போல் இருந்தது. நடந்து கொண்டிருந்தவள் திரும்பிப் பார்த்தாள். அவள் கால்கள் அதற்குமேல் நகர மறுத்துவிட்டன. நர்சிங் ஹோம் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. எந்த ஆஸ்பத்திரி இத்தனை காலமும் ஏழை எளியோர்களுக்கு தஞ்சமளித்து வந்ததோ இன்று அந்த மக்களே ஆவேசத்தால் அதற்கு தீயை வைத்து விட்டார்கள்.

அவள் நடந்து கொண்டிருந்தாள். யார் வீட்டிற்குப் போவது? இந்த நேரத்தில் யாரைத்தான் நம்ப முடியும்? ஆவேசத்தால் கொதித்தெழும் மக்களுக்குத் தெரிந்து விட்டால் ஓடிவந்து அவர்களையும் சேர்ந்து தாக்குவார்களே?

மழை வலுத்தது. அரைமணி நேரம் நடந்திருப்பாள். களைப்பு மேலிட நின்றாள். சுற்றிலும் காரிருள், மழை. அவள் மூச்சிரைக்கச் சுற்றிலும் நோட்டமிட்டாள். அப்பொழுது தான் கவனித்தாள் தான் எங்கே வந்து சேர்ந்திருக்கிறோம் என்று.

பாதி எரிந்த சிதை. . . புகை . . . நெருப்பு. மயானத்தின் நடுவில் இருந்தாள் அவள். அவளுக்கு பயம் ஏற்படவில்லை. கொடூரமான மக்களைவிட பிணங்களுக்கு மத்தியில் வாழ்வதே மேல். விடியும் வரையில் இங்கேயே இருப்பது நல்லது என்று தோன்றியது.

ஆனால் அதுவரையிலும் பொறுக்க மாட்டேன் என்பது போல் வயிற்றிலிருந்த குழந்தை புரண்டது. வலி தாங்க முடியாமல் குனிந்து அருகிலிருந்த பாறையைப் பிடித்துக் கொண்டாள். அந்த சமயத்தில் வானத்தில் மின்னல் மின்னியது. அந்த எல்லை முழுவதும் வெளிச்சம் நிரம்பியது.

அப்பொழுதுதான் அவள் கவனித்தாள், தான் பிடித்துக் கொண்டிருந்தது சமாதியின் மேற்கு பகுதி என்று. பயத்தால் உடல் சிலிர்த்தது. சட்டென்று கையை பின்னால் இழுத்துக் கொள்ளப் போனாள். ஆனால் தான் வெளிவர வேண்டிய வேளை நெருங்கிவிட்டது என்பது போல் வயிற்றிலிருந்த குழந்தை மேலும் பலமாக அசைந்தது. வலி எடுக்கத் தொடங்கி விட்டது. அவள் அந்த சமாதியின் மேல் அப்படியே சரிந்தாள்.

## 33

“**பி**ஸ்தா கிராமத்தில் விஷாச்சி என்ற மந்திரவாதியின் வீட்டில் தோண்டியதில் அஷ்டாவக்கிரனின் பிறப்புக்கு சம்பந்தப்பட்ட ஐந்து சடங்குகள் எழுதப்பட்ட ஒரு ஓலைச்

சுவடி கிடைத்தது. அதைப் படித்துவிட்டு பிறகு கைத் தவறி விட்டது போல் நழுவவிட்டு அந்த ஓலைச் சுவடியை நாசமாக்கினேன். அந்த ஐந்து சடங்குகளும் என் ஒருத்தனுக்குத் தான் தெரியும். அதில் நாலாவதாக குறிப்பிடப்பட்ட அம்சம் -

'காஷ்மோரா பயப்படுவது சூஃபீ மந்திரத்திற்கு மட்டும் தான். இது எழுத்து வடிவத்தில் இருக்காது.'

இதில் சூஃபீ என்றால் என்னவென்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன் முஸ்லிம்கள் வசிக்கும் இருட்டுச் சந்துகளில் தேடினேன். அங்கே இருக்கும் தர்கா வளாகத்தில் கிழவி ஒருத்தி தென்பட்டாள். அந்தக் கிழவி ஒரு 'முர்ஷித்'. அதாவது நம் சித்தர்களுக்கு ஒப்பானவள். அவளிடமிருந்து ஆசிகளை பெற்றுக் கொள்.

சூஃபீ முர்ஷித் கிழவியை நானும் சந்தித்தேன். அஷ்டாவக்கிரன் பிறப்புக்கு எந்த தடைகளும் இருக்கக் கூடாது என்ற எண்ணத்தில் அவளைக் கொன்றுவிட நினைத்தேன். ஆனால் அந்த வளாகத்தில் பிச்சைக்காரர்களைப் போல் தென்படுபவர்களில் பாபாக்களும், ஃபகீர்களும் இருந்ததால் என் உயிருக்கே ஆபத்து வரக்கூடும் என்று திரும்பிவிட்டேன்.

சித்தார்த்தா! அந்த முர்ஷித் பெண்மணியைச் சந்தித்துப் பேசு. பிறகு உன் அதிர்ஷ்டம், கௌரியின் அதிர்ஷ்டமும்."

★

**வ**ண்டியின் குலுக்கலுக்கு ஏற்ப சித்தார்த்தாவின் உடல் அசைந்து கொண்டிருந்தது. மலையின் உச்சியை அடைந்த பிறகு அந்தப் பக்கமாக தென்பட்ட சாலையைப் பார்த்து சந்தோஷத்தால் கூச்சலிட்ட தருணத்தில் கூட ராகேஷ் எழுதிய கடிதத்தின் நினைவுதான். நேரம் கடப்பதற்குள்

தன்னால் போய்ச் சேர முடியும் என்ற யோசனைதான். தனக்காக டெஹராடூனில் ஹெலிகாப்டர் காத்திருந்தது கூட அதிர்ஷ்டம்தான். இன்னொருத்தராக இருந்தால் நினைவு தப்பி நான்கைந்து நாட்களாவது படுக்கையில் கிடந்திருப்பார்கள். ஆனால் சித்தார்த்தா கடமையே கண்ணாக பயணத்தை மேற்கொண்டு ராகேஷ் குறிப்பிட்டிருந்த தர்காவை அடைந்தான். அவனுக்காக தர்கா வாசலிலேயே 'முஹிப்' ஒருவன் காத்திருந்தான். சித்தார்த்தாவைப் பார்த்தும் "உன் மனைவிக்கு பிரசவ காலம் நெருங்கிவிட்டதா?" என்று கேட்டான்.

திகைத்துப் போன சித்தார்த்தா ஆமாம் என்று தலையை அசைத்தான்.

"சமயம் அதிகம் இல்லை."

பழைய குதிரை வண்டியில் ஏறிக் கொண்டதும் குதிரை ஓடத் தொடங்கியது.

சித்தார்த்தாவுக்கு குழப்பமாக இருந்தது. "நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?" என்று கேட்டான்.

"முர்ஷிதைப் பார்ப்பதற்கு."

"நான் வருவேன் என்று முன்னாடியே தெரியுமா?" வியப்புடன் கேட்டான்.

"என்னுடைய தாய் முர்ஷித்க்கு தெரியும்."

சித்தார்த்தா மேற்கொண்டு பேசவில்லை. அதற்குள் வண்டி நின்றது. இரண்டு பேரும் இறங்கி உள்ளே போனார்கள். உள் அறையில் முர்ஷித் இருந்தாள். நூறு வயது கடந்தவள்.

"யாஹூ ஃபீஜ்! (காப்பாற்றுபவனே) யாமுக்னீ! (வளர்ப்பவனே) இஷ்க் யாஹூ! யாஹதீ! பர்காபாஷாத்!

(என்னுடைய ஆசீர்வாதம் உனக்கு," என்று வாழ்த்தினாள்.

"அஷ்டாவக்கிரன் என் மனைவியின் கர்ப்பத்திற்குள் நுழையாமல் தடுப்பது எப்படி?"

"சூஃபீ மந்திர எழுத்துக்களால்."

"அதை எழுதித் தந்தால் சீக்கிரம் போய் என் மனைவியைக் காப்பாற்றிக் கொள்வேன்."

"அந்த மந்திரத்திற்கு எழுத்து வடிவம் கிடையாது. அதை தரையிலோ காகிதத்தின் மீதோ எழுதக் கூடாது. எழுது கோலை பயன்படுத்தக் கூடாது."

சித்தார்த்தா சிலையாகிவிட்டான்.

★

**ர**விக்கு கலவரமாக இருந்தது, ரஞ்சிதாவின் நிலைமையை நினைத்துப் பார்க்கும்போது. சில ரகசியங்கள் அங்கே வெளியானால் அதற்குப் பின்னால் அவளைத் தன்னால் பார்க்கவே முடியாது.

வெளியே வந்தவன் தனக்குப் பின்னால் ஏதோ சந்தடி கேட்டதும் திரும்பிப் பார்த்தான். பாபாவும் ரஞ்சிதாவும் வந்து கொண்டிருந்தார்கள். சட்டென்று இருளில் மறைந்து கொண்டான்.

கொஞ்சதூரம் போனதும் யாரோ ஓடி வந்து பாபாவிடம் ஏதோ சொன்னதும், வேறொரு ஆளிடம் ரஞ்சிதாவை ஒப்படைத்துவிட்டு வந்தவனுடன் அவசரமாக போய்விட்டார்.

பாபா தன்னைத் தாண்டிப் போய் மறையும் வரையிலும் இருட்டோடு இருட்டாய் ஒண்டிக் கொண்டிருந்த ரவி அவர் போனதும் மேலும் கொஞ்ச தூரம் நடந்தான்.

உணர்ந்தான். எங்கிருந்தோ குளிர்ந்த காற்று வீசியது. எதிரே கொஞ்சம் வெளிச்சம் தென்பட்டது. நான்கு அறைகளை இணைக்கும் கூடம் போல் இருந்தது. அங்கே மூன்று பேர் உட்கார்ந்து கொண்டு பிளாஸ்டிக் உறைகளில் எதையோ நிரப்பிக் கொண்டிருந்தார்கள்.

பாபா அவர்களைத் தாண்டிக் கொண்டு ஒரு அறைக்குள் நுழைந்தார். அந்த அறைக்கு வெளியே 'உத்தரவின்றி உள்ளே வரக் கூடாது' என்று எழுதியிருந்ததைக் கவனித்து அங்கேயே நின்று விட்டான். அரை மணி ஆயிற்று. இவ்வளவு நேரமாக அந்த அறைக்குள் என்ன செய்து கொண்டிருப்பார்? அந்த அறைக்குள் நுழைய வேறு வழி இருக்கிறதா?

அதிக நேரம் தாமதித்தால் தனக்கும் ரஞ்சிதாவுக்கும் ஆபத்துதான். அவன் பார்வை கூடத்தில் இருந்த மூவரின் மேல் விழுந்தது. மூவரையும் ஒரே சமயத்தில் எதிர்க்க தான் ஒன்றும் ஜேம்ஸ் பாண்ட் இல்லை.

உள்ளே போனதும் முதல் ஆளை எதிர்க்கவேண்டும். தன்னைப் பார்த்த அதிர்ச்சியிலிருந்து மற்ற இருவரும் மீளுவதற்கு கொஞ்ச நேரம் ஆகும். அந்த சொற்ப நேரத்தில் அவ்விருவரையும் ஒரு கை பார்க்க வேண்டும். முதல் அடியிலேயே எதிராளியை பலவீனப்படுத்த வேண்டும்.

ரவி ஒரு முடிவுக்கு வந்ததும் காற்றைவிட வேகமாக உள்ளே நுழைந்து முதல் ஆளின் நெற்றியில் ஓங்கி ஒரு குத்து குத்தினான். மற்ற இருவரும் திக் பிரமையிலிருந்து மீளும் முன்பே இரண்டாவது ஆளின் அடி வயிற்றில் முழங்காலில் உதைவிட்டான். அவன் கை மின்சாரம்போல் மூன்றாவது ஆளின் கண்களைத் தாக்கியது.

அரைவினாடிக்குள் நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. அவர்களை அறையில் ஒரு மூலையில் தள்ளிவிட்டு பாபா

போன திசையில் நடந்தான்.

அந்த அறையில் சிறிய பீரோ, நாற்காலி, சுவர்க்கடியாரம் . . . இதை தவிர வேறு எதுவும் இல்லை. இதற்குப் போய் 'உத்தரவின்றி உள்ளே வரக் கூடாது' என்று தடை போடுவானேன்? பாபா எங்கேதான் போனார்? ரவி சுற்றும் முற்றும் பார்த்தான். அந்த அறைக்கு வேறு வாசல் இல்லை. பீரோவின் கதவைப் பிடித்து இழுத்துப் பார்த்தான். பூட்டியிருந்தது. மெஜிஷியனாக இருந்த ரவிக்கு அந்த பீரோவைத் திறக்க அரை நிமிஷம் மட்டுமே பிடித்தது.

பீரோவைத் திறந்தவன் வியப்படைந்தான். அதற்குள் இருந்தவை இரண்டு மூன்று பிஸ்டல்களும், ஒரு அட்டைப் பெட்டியும் தான்.

ஆனால் மர பீரோவைத் திறந்து கொண்டிருந்த போதே அதற்குள்ளிருந்த இன்னொரு கதவு திறந்து கொண்டது.

அச்சிறிய கதவு துவாரத்திற்குள் நுழைந்து உள்ளே போகப் போக குறுகிக் கொண்டே வந்தது. மேற்கூரையில் மிகச்சிறிய வெண்டிலேட்டர்கள் இருந்தன. அங்கிருந்து உள்ளே வந்த காற்றைக் கொண்டு அதுதான் வெளியே போகும் வழியாக இருக்கலாம் என்று தோன்றியது.

திரும்பவும் பின்னோக்கி பீரோவிடம் வந்தான். அங்கு கிடந்த நாற்காலியைப் போட்டுக் கொண்டு வெண்டிலேட்டர் வழியே எட்டிப் பார்த்து அந்தப் பக்கமாக என்ன இருக்கிற தென்று தெரிந்து கொள்ள விரும்பினான்.

அதற்குள் அவன் பார்வை' அட்டை பெட்டியின் மேல் விழுந்தது. ஆச்சரியம்! மேலுக்கு அட்டை பெட்டியைப் போல் தென்பட்டாலும் அது உண்மையில் அட்டையே இல்லை. இரும்பு போல் கனமாக இருந்தது அது. உள்ளே 'அபாயம்' என்று எழுதியிருந்ததைக் கண்டு அவன் ஆர்வம் அதிகரித்தது.

கார் பாட்டரி அளவில் பாதியளவே இருந்த இரண்டு செல்கள் உள்ளே இருந்தன. அவற்றுள் ஒன்றை வெளியே எடுத்தான்.

முதலில் ஒன்றும் தெரியவில்லை. கூர்ந்து கவனித்த பொழுது நகத்தால் கீறினாற்போல் அச்சிடப்பட்ட எழுத்துக்கள் தென்பட்டன.

*235/92* u என்று

ஏதோ சந்தேகம் தோன்றவே மற்றொன்றையும் எடுத்துப் பார்த்தான். அவன் சந்தேகம் உண்மையாயிற்று.

*239/94* pu என்று இருந்தது.

திடீரென்று பயம் வந்து அவனைச் சூழ்ந்து கொண்டது. சட்டென்று பெட்டியில் அவற்றை வைத்து விட்டான். கைகால்கள் பயத்தால் நடுங்கின. ஒன்றில் யுரேனியம் மற்றொன்றில் ப்ளுடோனியம். அது போறாது என்பது போல் அதைச் சுற்றிலும் லிதியம் டியோடெரைட். ஹைட்ரோஜனை ஹீலியம் நியூக்லியாக மாற்றி எரிமலையாக வெடிக்க வைப்பதற்காக இரண்டு வயர்கள். எல்லாம் சேர்ந்தால் அதன் பெயர் "தெர்மோ நியூக்ளியர் பாம்!"

சாதாரண வெடி குண்டை விட நூறு மடங்கு சக்தி வாய்ந்தது.

அந்த பொருட்களின் கலவையிலிருந்து வெளிப்படும் ரேடியோ ஆக்டிவ் கதிர்கள் தன் உடலைத் தாக்கினால் (ஒருக்கால் ஏற்கனவே தாக்கியிருந்தால்) தன் உடல் சில நாட்களிலேயே எரியத் தொடங்கிவிடும்.

அதற்குள் அவன் தன்னைச் சமாளித்துக் கொண்டான். மிக நவீனமான வெடிகுண்டு அது. அத்தனை எளிதில் அபாயத்தைத் தோற்றுவிக்கக் கூடியதாக இருந்தால் பெட்டியில் அலட்சியமாக வைத்திருக்க மாட்டார்கள்.

அந்த துணிச்சலில் மேலும் கவனமாக ஆராய்ந்தான். ஒரு மூலையில் சிறிய நட்சத்திரமும் கீழே கோடும் இருந்தன. இதுதானா விஷயம்! C.I.A. போன்ற உளவாளிகளின் கூட்டத்தைச் சேர்ந்த அடையாளம் அது. அவன் பிளாஸ்டிக் பையை எடுத்து கூர்ந்து கவனித்தான். சிறிய எழுத்துகளில் பிரிண்ட் செய்யப்பட்டிருந்தது.

TROPOSPHERIC FALL - OUT TOTALLY
RESTRICTED.
LOCAL FALL OUT MINIMISED To 1/100

இதைப் பற்றியும் உஸ்ஸோக் பற்றியும் அரசாங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றால் முதலில் இங்கிருந்து வெளியேற வேண்டும். நாற்காலியின் மீது வெண்டிலேட்டர் வழியாக எட்டிப் பார்த்தான். வெளியே காரிருள். குளிர்ந்த காற்று வந்து முகத்தைத் தாக்கியது. மின்னல் வெளிச்சத்தில் மரங்கள் வேரோடு சாய்வது போல் ஆடிக்கொண்டிருந்தன.

அன்றிரவு பிரளயம்தான். உலகத்திற்கு மட்டுமே அல்ல. தன்னுடைய வாழ்க்கைக்கும்தான். அவன் நாற்காலியை விட்டிறங்கினான். அந்தக் குறுகிய வழியே மேலும் நடக்கத் தொடங்கினான். அந்த வழியாகத்தான் அவதார்பாபா போயிருக்க வேண்டும். ஆனால் அந்த வழி ஓரிடத்தில் திடீரென்று நின்றுவிட்டது. மரத்தினால் ஆன தடுப்பு தட்டுப்பட்டது. இரு பக்கமும் சுவர்கள். அதுதான் கதவாக இருக்க வேண்டும். அந்தப் பக்கமாக யாரோ பேசிக் கொண்டிருக்கும் குரல் கேட்டது. கதவில் ஓட்டை இருந்தது. அதன் வழியே கண்ணை இடுக்கிக் கொண்டு பார்த்தான். அதுவரை தான் பார்த்த சூழ்நிலைக்கு முற்றிலும் வித்தியாச மான ஒரு சூழ்நிலை உள்ளே காட்சி தந்தது. அலமாரிகளில் புத்தகங்களும், கண்ணாடி பீரோக்களும்.

ஒரு நாற்காலியில் பாபா தான் முன்னாடி பார்த்ததை

விட சற்று மாறுதலான தோற்றத்தில் உட்கார்ந்திருந்தார். அவருடைய முதுகு பக்கம் தெரிந்தது. அதற்குள் ஏதோ வேலையாய் அவர் எழுந்து கொண்டு எதிரே இருந்த ஆளிடம் ஏதோ புத்தகத்தை எடுத்து வந்து அதிலிருந்து ஏதோ காண்பித்து விவரித்துக் கொண்டிருந்தார். பிறகு புத்தகத்தை மூடிவிட்டு இந்த பக்கம் திரும்பினார்.

பார்த்துக் கொண்டிருந்த ரவிக்கு யாரோ முகத்தில் ஓங்கி அறைந்தாற்போல் இருந்தது. அவதார் பாபா வேடத்தில் இருந்தது. . . .

டாக்டர் வம்சீகிருஷ்ணா!

## 34

அகர்வாலை விமான நிலையத்தில் விட்டுச் சென்ற காரை எதிர்பார்த்துக் காத்திருந்தார் டாக்டர் ரங்கபிரசாத். நேரம் போய்க் கொண்டிருந்தது. ரங்கபிரசாத் எழுந்து நின்று "ரொம்ப இருட்டிவிட்டது. இந்தப் புயல் ஓயாது போலிருக்கு. நான் கிளம்புகிறேன்" என்றார்.

"கார் வரணும் இல்லையா? ஆனாலும் விமான நிலையத்திற்கு போய்விட்டு வருவதற்கு இவ்வளவு தாமத மாவானேன்? அதோ வந்துவிட்டது" என்றார் வம்சீ கிருஷ்ணா.

சுமார் பத்து ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருந்தது அந்த நிறுவனம். தொலைவிலிருந்து வந்து கொண்டிருந்த காரின் விளக்கு வெளிச்சம் மினுக்மினுக்கென்று தென்பட்டது.

கார் வந்து நின்றதும் டிரைவர் ஓட்டமாக உள்ளே வந்தான். "அகர்வால்சாப் இறந்துவிட்டார் சார்" என்றான் பதற்றத்துடன்.

ரங்கபிரசாத் திடுக்கிட்டார். டிரைவர் சொல்லிக் கொண்டே போனான். "தவறுதலாக வேறு விமானத்தை நோக்கிப் போய் விட்டாராம். சக்கரத்தில் மாட்டிக் கொண்டு கண்டந்துண்டமாகிவிட்டாராம். போலீசார் விசாரித்துக் கொண்டிருந்ததால் நேரமாகிவிட்டது."

ரங்கபிரசாத் அதிர்ச்சியடைந்தார். அவர் தலையில் இடியாய் வந்து விழுந்தது அந்தச் செய்தி. ஒரு மணி நேரத்திற்கு முன்னால் தன்னோடு சிரித்துப் பேசிக் கொண்டிருந்தவர் இப்பொழுது இந்த உலகத்திலேயே இல்லை.

"விபத்து எந்த சமயத்தில் எப்படி நடக்கும் என்று யாராலும் சொல்ல முடியாது. இல்லாவிட்டால் யாரும் எதிர்பாராத விதமாக இப்படி நடப்பானேன்?" என்றார் வம்சீ கிருஷ்ணா.

ரங்கபிரசாத் நாற்காலியைவிட்டு ஆவேசமாக எழுந்து கொண்டார். "இது விபத்து இல்லை. இரண்டாம் பேர் அறியாமல் செய்த கொலை" என்றார்.

வம்சீ கிருஷ்ணாவும், டிரைவரும் சற்று அதிர்ந்தவர்களாய் அவரை வித்தியாசமாக பார்த்தார்கள். "உங்களுக்குத் தெரியாது வம்சீ கிருஷ்ணா. இந்த கொலைகள் எல்லாம் ஒரு திட்டத்தின்படி நடந்து வருகின்றன. அன்று என் மீது கூட கொலை முயற்சி நடந்தது. பிரதிமாவையும், வில்லியம்ஸையும் கூட இதே போல் கொலை செய்திருக்கிறார்கள்."

வம்சீகிருஷ்ணாவின் முகத்தில் மாறுபாடு தென்பட்டது. "நீங்க நிறைய விஷயம் தெரிந்து கொண்டு இருக்கீங்களே" என்றார்.

"இல்லை. இப்பொழுதுதான் அகர்வாலின் மரணத்தால்

என் சந்தேகம் உறுதியாகிவிட்டது. இந்த விக்ருத சிசுக்களின் ஜனனங்களுக்கும், S.S.A.வுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.''

"எப்படிச் சொல்றீங்க?''

ரங்கபிரசாத் சட்டென்று பதில் சொல்லவில்லை. ஆவேசத்தை அடக்கிக் கொள்ள கொஞ்சம் நிதானித்துவிட்டு பிறகு சொல்லத் தொடங்கினார்.

"ஒரு க்ரோமோசோமில் 500 உயிரணுக்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். உயிரணு நம்பர் 23 கண்ணின் நிறத்திற்கு தொடர்புடையது. உயிரணு நம்பர் 336 காதுகளின் அமைப்புக்கு சம்பந்தப்பட்டது. ஆணின் க்ரோமோ சோம்களில் கூட இதே மாதிரி 500 உயிரணுக்கள் உண்டு. அதனால் தந்தைக்கு தேன் நிறத்தில் கண்கள் இருந்தால் மகனுக்கும் அதே நிறத்தில் கண்கள் அமைவது வழக்கம்தான். தன்னிடமுள்ள ஒவ்வொரு அம்சத்தையும் தாய்க்குள் எடுத்துச் செல்கிறது தந்தையின் வீரியம்.''

"சின்ன பையனுக்குச் சொல்வது போல் இத்தனை விவரமாக எதுக்காக சொல்றீங்க?''

"அதற்குத்தான் வருகிறேன். மனைவிக்கு தேன் நிற கண்களும், கணவனுக்கு கருப்பு நிற கண்களும் உள்ளன என்று வைத்துக் கொள்வோம். கணவனின் உயிரணு நம்பர் 23ம் மனைவியின் உயிரணு நம்பர் 23 சேர்ந்தால் குழந்தை கறுப்பு நிற கண்களோடு பிறக்குமா அல்லது தேன்நிற கண்களுடன் பிறக்குமா என்பது இருவருள் எவருடைய உயிரணு பலம் வாய்ந்தது என்பதை பொறுத்து இருக்கும். அதைத்தான் டாமினேடிங் ஜீன் என்கிறோம்.

"கிருஷ்ணாபுரத்தில் பிறந்த ஏழு குழந்தைகளையும் பரிசீலித்தால் அந்தக் குழந்தைகளின் தலையிலும், முகத்திலும்

மட்டுமே குறைபாடு இருக்கிறது. அதாவது மேலே சொன்ன கூற்றின்படி அந்த ஏழு பெண்களுக்கும் செலுத்தப்பட்ட வீரியத்தில் தலைக்கு சம்பந்தப்பட்ட க்ரோமோசோம்களில் 500 உயிரணுக்களும் பாழாகி விட்டிருக்கின்றன என்பது புரிகிறது. வேறு விதமாக சொல்லணும் என்றால் ஒவ்வொரு வீரிய அணுக்களிலும் ம்யுடேஷன் ஒரே க்ரோமோசோம் லேயே நிகழ்ந்திருக்கிறது."

"ஒரு பேச்சுக்கு நீங்க சொன்னது எல்லாம் சரி என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் அதற்கும் S.S.A.வுக்கும் என்ன சம்பந்தம்?"

"இங்கேதான் முக்கியமான பாயிண்ட் இருக்கிறது. S.S.A. வியாபாரத்திற்காக வீரியத்தை பாதுகாத்து வைத்திருக்கும். அந்த வீரியம் பழுதடைந்து இருந்தால் சுமார் பத்தாயிரம் பேர் விக்ருத சிசுக்கள் அதன் மூலம் உருவாவார்கள்."

"ஒரு சொட்டு வீரியத்தில் உள்ள ஒவ்வொரு உயிரணுவி லிருந்தும் ஒரு குழந்தையைப் பெற முடியும் என்றால்."

"முடியாமல் என்ன? நிச்சயமாக முடியும். ஆணின் வீரியத்தில் உள்ள ஒவ்வொரு உயிரணுவிலிருந்தும் ஒரு குழந்தையை உருவாக்க முடியும் என்று என் தந்தை முப்பதாண்டுகளுக்கு முன்பே நிரூபித்து காட்டியிருக்கிறார். அப்படி பிறந்த முதல் குழந்தை நான்தான் என்றும் உங்களுக்குத் தெரியும்."

"ஆமாம். முன்பே சொல்லியிருக்கீங்க. ஒரு வேளை நீங்க சொன்னாற் போலவே S.S.A.வின் ஸ்டாக்கில் சில உயிரணுக்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும் கிருஷ்ணாபுரத்தில் விக்ருத சிசுக்கள் பிறப்பது எப்படி சாத்தியம்? அகர்வால் சொன்னது போல் பிரதிமாவுக்கு அப்புறம் சில குழந்தைகள் பம்பாயில் சாதாரணமாகவே பிறந்திருக்காங்களே. S.S.A.வின்

மேல் குற்றத்தைச் சுமத்துவதாக இருந்தாலும் இதைவிட பலமான சாட்சியங்கள் தேவைப்படும்" என்ற வம்சிகிருஷ்ணா கடியாரத்தைப் பார்த்துவிட்டு "மைகாட்! பத்தரையாகி விட்டது. நீங்க கிளம்புங்கள்" என்றார்.

ரங்கபிரசாத் எழுந்து நின்று "இன்றிரவு எப்படியும் எனக்குத் தூக்கம் இருக்காது. நாளை காலை நேரத்திற்குள் கௌரிக்குக் குழந்தை பிறந்துவிடும் என்று எதிர்பார்க்கிறேன். எங்கேயாவது சின்ன லிங்க் கிடைத்தால் போதும், உடனே வந்து சொல்கிறேன்."

"குட் நைட்! ரொம்ப மழையாக இருக்கு. ஜாக்கிரதையாக போங்க. அஃப்கோர்ஸ், எங்க டிரைவர் ரொம்ப அனுபவசாலி."

இருவரும் வெளியே வந்தார்கள். டிரைவர் கதவைத் திறந்து பிடித்துக் கொண்டான். ரங்கபிரசாத் உட்கார்ந்ததும் கதவைச் சாத்தினான்.

காற்றின் சீற்றம் வலுத்தது. காரைக் கிளப்பும் முன் டிரைவர் வம்சீ கிருஷ்ணாவைப் பார்த்தான். அவர் கண்களிலிருந்த குறிப்பை உணர்ந்து கொண்டாற்போல் தலையை அசைத்துவிட்டு வேகமாக காரைக் கிளப்பினான்.

★

**ம**காதிரஷ்டா ஹோமத்திற்கு முன்னால் மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தார். நள்ளிரவு நெருங்க கொஞ்ச நேரம்தான் இருந்தது.

அப்பொழுது மகாதிரஷ்டா எழுந்து கொண்டார். ஹோமத்திற்கு அருகிலிருந்த கத்தி முதலிய சாதனங்களைக் கையில் எடுத்துக் கொண்டார். தாயின் வயிற்றை அறுத்து சாத்தான் மன்னனை வெளியே எடுப்பதற்காக மந்திர எழுத்துக்கள் செதுக்கிய கத்தி அது.

புறப்பட்டார்கள். அஷ்டாவக்கிரன் பிறக்கப் போகும் இடம் அவர்களுக்குத் தெரியும். எங்கிருந்தாலும் சரி அந்தத் தாயைக் குட்டிச்சாத்தான் உரிய வேளையில் மயானத்திற்கு அழைத்து வந்து விடும் என்று அவர்கள் நம்பினார்கள். அந்த நம்பிக்கையில்தான் அந்த இருட்டில் கிருஷ்ணாபுரத்திற்கு அருகில் இருந்த மயானத்தை நோக்கிப் போனார்கள்.

★

இருக்கையில் பின்னால் சாய்ந்து உட்கார்ந்திருந்தார் ரங்கபிரசாத். டிரைவர் பெட்ரோல் போட்டுக் கொண்டிருந்தான்.

ரங்கபிரசாதின் யோசனைகள் அங்கேயில்லை. சற்று முன்னால் வம்சீ கிருஷ்ணாவுடன் பேசியதுதான் நினைவுகளில் சுழன்று கொண்டிருந்தது. இதற்கெல்லாம் காரணம் S.S.A. தானா?

காருக்கு பக்கத்தில் ஸ்கூட்டர்காரர் ஒருவர் பெட்ரோல் போடும் பையனுடன் வாதாடிக் கொண்டிருந்தார்.

"என்னப்பா? நான் சொன்னதென்ன? ஆயில் கலக்காமல் இன்ஜினுக்குப் போனால் அவ்வளவுதான். ஏற்கனவே மழை வேறு. ஒரு மழைத்துளி சேர்ந்து கொண்டால் அப்புறம் அவ்வளவுதான்."

அப்பொழுதுதான் ரங்கபிரசாதிற்கு சட்டென்று அந்த யோசனை வந்தது. அது வரையிலும் தெளிவில்லாமல் இருந்த விஷயம் இப்பொழுது திரை விலகினாற்போல் நன்றாகப் புரிந்துவிட்டது.

சில நிகழ்ச்சிகளுக்கும் அதிலிருந்து தோன்றும் யோசனை களுக்கும் துளியும் சம்பந்தமே இருக்காது. அந்த மாதிரிதான் பெட்ரோல் பங்க் நிகழ்ச்சியும் சிக்கலான

விஷயத்திற்கு தீர்வு காண்பதற்கு பெரிதும் உதவியது.

"டிரைவர்! காரைத் திருப்பு. நாம் மறுபடியும் உங்க இன்ஸ்டிட்யூட்டிற்கே போகணும்." குரலில் மகிழ்ச்சி நிரம்பி வழியச் சொன்னார் அவர்.

★

ரஞ்சிதா தவித்துக் கொண்டிருந்தாள். இங்கிருந்து எப்படி தப்பித்துக் கொள்வது? ரவிக்கு பாபா யாரென்று எப்படி தெரிவிப்பது?

அப்பொழுதுதான் அங்கே வந்த பாபா அவளைப் பார்த்து முறுவலித்தார். "சாரி. நடுவில் உன்னை விட்டுவிட்டு போக வேண்டியிருந்தது. டாக்டர் ரங்கபிரசாத் வந்திருந்தார். அதனால்தான் போனேன்." எதிரேயிருந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்துகொண்டு "சரி. உன்னிடமிருந்து எனக்கு தேவையான விஷயத்தைப் பற்றிப் பேசுவோமா?" என்றார்.

அவர் கேட்டதற்கு பதிலளிக்காமல் "ரங்கபிரசாத் என்ன சொன்னார்?" என்று கேட்டாள் ரஞ்சிதா. அதன் மூலம் கௌரியைப் பற்றி ஏதாவது தெரியக்கூடும் என்று எதிர்பார்ப்பு அவளுக்கு.

"ரொம்ப நெருங்கி வந்துவிட்டான்" என்றவர் கை கடியாரத்தைப் பார்த்துவிட்டு "இந்நேரம் உயிரை இழந்திருப்பான்" என்று சொல்லிவிட்டு சிரித்தார்.

ரஞ்சிதா அதிர்ந்து போனாலும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் "நெருங்கி வந்துவிட்டாரா? அப்படி என்றால்?" என்று கேட்டாள்.

"அதைச் சொல்வதற்கு முன்னால் உனக்கு S.S.A. பற்றிச் சொல்லணும். அதாவது ஸ்பெர்ம் செல்லிங் ஏஜென்ஸி."

ரஞ்சிதா திடுக்கிட்டாள்.

“முதலில் அப்படித்தான் இருக்கும் ரஞ்சிதா. நீ சம்மதித்தால் S.S.A.க்கு உன்னை செகரெட்டரியாக போடுகிறேன்.”

“நான் என்ன செய்யணும்?”

“சில பிரமுகர்களிடமிருந்து வீரியத்தைப் பெறுவது S.S.A.வுக்கு அவ்வளவு சிரமம் இல்லை. ஆனால் சில விஞ்ஞானிகள், விளையாட்டு வீரர்கள், நடிகர்கள் தம் வீரியத்தை விற்பதற்கு சம்மதிக்கவில்லை. அவர்களை நீ சம்மதிக்க வைக்கணும்.”

“நானா? சம்மதிக்க வைப்பதா? எப்படி?” என்றாள் திக்பிரமையடைந்தவளாய்.

வம்சீ கிருஷ்ணா சிரித்துவிட்டு “நான் முதலில் உன்னிடம் பிரபோசல் சொல்லப் போவதாக சொன்னதும் நீ வேறு எதையோ ஊகித்துக் கொண்டுவிட்டாய். அதையே கொஞ்சம் நவீன பாணியில் வைத்துக் கொள். அதுதான் நீ செய்ய வேண்டிய உதவி.”

அவளுக்கு ஏதோ லேசாகப் புரிந்தது. சிறிய பாம்பின் பிடியிலிருந்து தப்பிப் பெரிய பாம்பின் வாயில் விழுந்தாற் போல் இருந்தது.

“ரஞ்சிதா! உன்னைப் போன்ற அழகான சுறுசுறுப்பான பெண்கள் எங்களுக்குத் தேவை. நீ செய்யவேண்டியதெல்லாம் பிரபலமானவர்களுடன் நட்பு ஏற்படுத்திக் கொள்வதுதான். உன்னைப் போன்ற பெண்கள் கொஞ்சம் நெருங்கிப் பழகினால் யாருமே மறுக்கமாட்டார்கள். ஒருமுறை வலையில் விழுந்துவிட்டால் பிறகு நயமாகவோ, மிரட்டியோ நாம் அவர்களை நம் வழிக்குக் கொண்டு வந்துவிடலாம்.”

“பிளாக்மெயில்?”

“இல்லை இல்லை. தேவைப்பட்டால் நாமே

அவர்களுக்கு பணம் கொடுப்போம். நமக்கு வேண்டியதெல்லாம் அவர்கள் பாண்ட் பேப்பரில் கையெழுத்துப் போடுவதுதான். அந்த வீரியம் இன்னாருடையதுதான் என்று கஸ்டமர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதுதான்.”

“ஆனால் நாம் பயன்படுத்தப் போவதோ வேறொருவருடையது.” பழிப்பதுபோல் ஒலித்தது அவள் குரல்.

“இல்லை. நாம் பயன் படுத்துவதும் அவர்களுடையது தான்.”

“அதை எப்படி பெற முடியும்?”

“உன் மூலமாக.”

சுழற்காற்றுக்கு ஆடும் இளங்கொடியைப் போல் நடு நடுங்கினாள் அவள். உண்மை சொல்லுவது போல் தான் நாடகமாடிக் கொண்டிருந்ததை அந்த நிமிடம் மறந்து விட்டாள். அதுவரையிலும் அவதார் பாபா மீதிருந்த கோபம், வெறுப்பு எல்லாம் சேர்ந்து அவளது ஆவேசத்தை வரம்பு கடக்கச் செய்துவிட்டது. ஓங்கி அவர் கன்னத்தில் பளார் என்று ஒரு அறை விட்டாள்.

அவதார்பாபா சிலையாக நின்றுவிட்டார். அவரால் அதை நம்ப முடியவில்லை. ஒருவினாடி தாமதித்திருந்தால் என்னவாகி இருக்குமோ தெரியாது. அதற்குள் வெளியே யிருந்து யாரோ அழைத்ததால் கதவை வெறுமே சாத்திவிட்டு வெளியே போனார்.

வெளியே கார் டிரைவர் நின்று கொண்டிருந்தான். “ரங்கபிரசாத் திரும்பி வந்திருக்கிறார் சார். உங்களிடம் ஏதோ சொல்லணுமாம். ஊருக்கு வெளியே அழைத்துப் போகணும் என்று ரொம்ப முயற்சி செய்தேன். ஆனால் உடனே பேசணும். இரண்டே நிமிடம்தான் என்று சொன்னதால்

திரும்பி அழைத்து வந்தேன்" என்றார் டிரைவர்.

அவன் முழுவதும் சொல்லி முடிப்பதற்குள் வராண்டாவைக் கடந்து வெளியே வந்து தன்னுடைய அலுவலக அறைக்குள் நுழைந்தார் வம்சீகிருஷ்ணா.

வழக்கமாக அவர் உட்காரும் நாற்காலிக்கு எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தார் ரங்கபிரசாத். சந்தடி கேட்டு நிமிர்ந்தவர் வம்சீகிருஷ்ணாவை பார்த்துவிட்டு "உடனே உங்களிடம் சொல்லாவிட்டால் மண்டை வெடித்து விடும் போல் இருந்தது. அதான் திரும்பி வந்தேன்" என்றார்.

"என்ன விஷயம்?"

"சொல்கிறேன். சில குழந்தைகளுக்கு வெளியே கொஞ்சம் மேகமூட்டமாக இருந்தாலே போதும், ஜலதோஷம் பிடித்துக் கொண்டுவிடும். ஏன்? மனிதனுக்குள்ளே இருக்கும் லட்சக் கணக்கான, கோடிக்கணக்கான உயிரணுக்களில் ஒரே ஒரு உயிரணு வழி தவறி நடந்து கொள்வதால்தான். கொஞ்சம் பழுதாகிவிட்ட உயிரணு முற்றிலும் சாவதற்கு (ஜெனடிக் டெத்) சில நூற்றுக் கணக்கான ஆண்டுகள் பிடிக்கலாம். உயிரணு மிக மோசமான நிலையில் இருந்தால் சீக்கிரத்தில் இறந்துவிடும். பழுதடைந்த உயிரணுக்களால் மனித இனத்திற்கு ஆபத்து அதிகம். பலவிதமான வியாதிகளை தோற்றுவிக்க காரணமாக இருக்கின்றன. இந்த ஜெனடிக் கோட் புரிந்துவிட்டால் போதும், மனிதன் ஏறக்குறைய எல்லா வியாதிகளிலிருந்தும் விடுதலை அடைந்தாற் போல்தான்."

ரங்கபிரசாத் சொல்லிக் கொண்டிருந்த அதே சமயத்தில் ரவி வெண்டிலேட்டர் வழியாக எட்டிப் பார்த்தான். அவனுக்கு முதலில் தென்பட்டது டாக்டர் ரங்கபிரசாத். அவர்தான் இதற்கெல்லாம் காரணமாக இருப்பாரோ என்று முதலில் நினைத்தான். ஆனால் அடுத்த நிமிடமே எதிரே

உட்கார்ந்திருந்த வம்சீகிருஷ்ணா தென்பட்டார். தர்க்கரீதியாக யோசித்துப் பார்த்ததும் அவர்தான் இதற்கெல்லாம் காரண கர்த்தா என்று புரிந்துவிட்டது.

அதற்குள் ரங்கபிரசாத் பேசியது காதில் விழுந்தது. "மனிதனின் சந்தான உற்பத்தித் திறன் மீது ரேடியோ ஆக்டிவ் கதிர்களின் பாதிப்பு பயங்கரமாக இருக்கும். அதனால்தான் ரொம்ப முக்கியமாக இருந்தால் தவிர டாக்டர்கள் எக்ஸ்ரே பரிசோதனை செய்து கொள்ளச் சொல்லி நோயாளிகளுக்கு அறிவுரை வழங்கமாட்டார்கள். வீரியத்தை ஆண்டு கணக்கில் பாதுகாத்து வைக்கும்போது அந்த முறையில் ரேடியோ ஆக்டிவிடி கதிர்கள் 2R அளவுக்கு இருந்தால்கூட போதும் அதில் இருக்கும் உயிரணுக்கள் பழுதடைவதற்கு.

"S.S.A. நிறுவனத்தின் வேலை என்ன? வீரியத்தை மாத கணக்கிலும், வருஷக் கணக்கிலும் சேமித்து வைப்பதுதான். அப்படி சேமித்து வைக்கும் முறையிலேயோ, அதற்காக பயன்படுத்தும் ரசாயனங்களிலோ 2R சக்தியுடைய ரேடியோ ஆக்டிவிடி இருந்தால் போதும், மொத்த வீரியமும் பழு தடைந்துவிடும். ஆவேசப்படாதீங்க. நான் உங்கள் விஞ்ஞான முறைகளை குறை சொல்லவில்லை. ஒரு மேதாவியின் சந்ததியைப் பத்து தலைமுறைகள் வரையிலும் நிலைநாட்டி வைப்பதற்கு இதுபோன்ற சோதனைகள் உதவும்தான்.

"பணத்தால் எதையும் சாதிக்க முடியும் என்று நினைக்கும் சில பெண்களின் விருப்பத்தை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்வதுதான் S.S.A.வின் நோக்கம். எந்த ஆண்மகனின் வீரியமாவது அவன் எடுத்துக் கொள்ளும் ரேடியோ ஆக்டிவ் ட்ரீட்மெண்ட் மூலம் பழுதடைந்து இந்த S.S.A.வின் சேமிப்பில் சேர்ந்திருந்தால் இயற்கையான முறையில் ஆண் பெண் உறவு நிகழும்போது ஜெனடிக் டெத் ஆக வேண்டிய க்ரோமோசோம்கள் எங்க அப்பா

கண்டுபிடித்த பரிசோதனை யின் மூலம் உயிர்பெற்று விக்ருத சிசுவின் பிறப்புக்கு வழி செய்கிறது. பெட்ரோலில் கலந்த ஒரு சொட்டு தண்ணீர் இன்ஜினையே நிறுத்திவிடுவது போல் முல்லர் பரிசோதனை யில் உறுதி செய்யப்பட்ட இந்த முடிவு உலகம் முழுவதும் தெரிந்து கொள்ள வேண்டிய கசப்பான உண்மையாகி விட்டது."

மறைவாக நின்று கேட்டுக் கொண்டிருந்த ரவி கனவில் ஒரு காட்சியைக் காண நேர்ந்தது போல் அப்படியே நின்று விட்டான்.

எங்கோ ஒரு கிராமத்தில் ஒரு மூலையில் இருந்து கொண்டு பிராக்டீஸ் செய்யும் ஒரு டாக்டர் தான் பார்த்த சிறிய நிகழ்ச்சியை மனதில் வைத்துக் கொண்டு தன் அறிவுக் கூர்மையால் ஒரு தியரியை வெளிக் கொணர்ந்துவிட்டார்.

தன்னலமில்லாமல் கிராமத்திற்கு வந்து சேவை புரியும் டாக்டர் அவர். ஆனால் அவர் உயிர் இப்பொழுது ஆபத்தில் இருக்கிறது. எதிரே இருப்பவன் பாம்பைவிடக் கொடியவன் என்று அறியாமல் அவர் எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டு இருக்கிறார். எப்படி அவரைக் காப்பாற்றுவது?

தான் இங்கே இருப்பது வம்சீகிருஷ்ணாவுக்கு தெரிந்து விட்டால் தனக்கும், ரங்கபிரசாதிற்கும், ரஞ்சிதா மூவருக்குமே ஆபத்துதான்.

பிரதிமா அகர்வாலுக்கு விக்ருத குழந்தை பிறந்ததற்கும் கிருஷ்ணாபுரத்தில் விக்ருத குழந்தைகள் பிறந்ததற்கும் சுமாராக ஒரு இடைவெளி இருக்கிறது. பிரதிமா அகர்வாலுக்கு அந்த மாதிரி குழந்தை பிறந்ததுமே S.S.A. கலவரமடைந்து தவறு எங்கே இருக்கிறதென்று தெரிந்து கொள்ள கிருஷ்ணாபுரத்து பெண்கள் மீது பயன்படுத்திப் பார்க்கத் துணிந்திருக்கலாம்.

வம்சீ கிருஷ்ணாவின் முகத்தில் தோன்றிய மாறுதலை ரவி கவனிக்கத் தவறவில்லை. அதற்குள் டெலிஃபோன் ஒலித்தது. வம்சீகிருஷ்ணா ரீசிவரை எடுத்து பேசிவிட்டு "சாரி டாக்டர். உங்களுக்கு ஒரு கெட்ட செய்தி" என்றார். "உங்க நர்சிங் ஹோமை மக்கள் தீ வைத்துக் கொளுத்தி விட்டார்களாம். கட்டிடம் முழுவதும் நாசமாகிவிட்டதாம்."

ரங்கபிரசாத், ரவி இருவருமே திடுக்கிட்டார்கள்.

"வாங்க ரங்கபிரசாத்! நானும் உங்களோடு கிருஷ்ணாபுரம் வருகிறேன்" என்றார் வம்சீகிருஷ்ணா.

"நீங்களுமா?"

"வெளியே புயல் கடுமையாக இருக்கு. அங்கே என்ன ஆபத்து வருமோ? வாங்க, காரில் போவோம்."

"வேண்டாம் வேண்டாம்" என்று அலறத் துடித்தான் ரவி. 'ஐயோ ரங்கபிரசாத்! நீங்கள் அடியெடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் மரணத்தை நோக்கி. உங்களுக்குப் புரியும்படி எப்படி எடுத்துச் சொல்வேன்? இங்கிருந்து கிருஷ்ணா புரத்திற்கு போகும் வழியிலேயே உங்களை பிணமாக்கி விடுவார்களே' என்று குமுறினான்.

அவ்விருவரும் எழுந்து கொள்வது அவன் கண்களுக்கு புலப்பட்டது. இருவரும் வெளியே வந்தார்கள். ரவி பெரிதாக கத்திவிட நினைத்தான். ஆனால் பகுத்தறிவு தடை விதித்தது.

வெளியே ஊதக்காற்று பலமாக வீசியது. போர்டிகோவில் கார்நின்று கொண்டிருந்தது. திண்ணையோரத்தில் டிரைவர் கைகளைக் கட்டிக் கொண்டு நின்றிருந்தான். வம்சீ கிருஷ்ணாவும், ரங்கபிரசாதும் போர்டிகோவுக்கு வந்தார்கள்.

*ர*ங்கபிரசாத் யோசனையில் ஆழ்ந்தார். அவர் கவனம் இங்கே இல்லை. நர்சிங்ஹோமுக்கு தீயை வைத்து விட்டார்கள் என்றால் கேதாரகௌளரி என்னவானாள்? இந்தக் காற்றில் . . . மழையில். . .

யோசித்தவாறே அவர் முதல் படியில் இறங்கினார். விசாலமான படிகள். தொலைவில் பிரளயகால தாண்டவத்தைப் போல் மரங்கள் ஆடிக் கொண்டிருந்தன.

அவர் மேலும் ஒரு படி இறங்கினார். அப்பொழுதுதான் அவர் பார்வை அங்கே பட்டது. காற்றின் சீற்றத்தைத் தாங்க முடியாமல் ஆடிக் கொண்டிருந்த மரங்களுக்குப் பின்னா லிருந்து இரண்டு நாய்கள் வந்து கொண்டிருந்தன.

அவர் உடல் நடுங்கியது. நாய்கள் ஆளுயரத்தில் இருந்தன.

தொலைவில் மின்னல் மின்னியது. அவர் மூளையிலும் மின்னியது. இதற்கு முன் அந்த நாய்களை எங்கேயோ பார்த்திருக்கிறோம் என்று குழம்பி வந்தார். போன தடவை வந்தபோது இன்ஸ்டிட்யூட் வளாகத்திலேயே ஒன்றைப் பார்த்து இத்தனை பயங்கரமாக இருக்கிறதே என்று நினைத்துக் கொண்டார். பிறகு அதைப் பற்றியே மறந்து விட்டார்.

அவர் திரும்பி வம்சீகிருஷ்ணாவைப் பார்த்தார். வம்சீகிருஷ்ணாவின் முகத்தில் ஒருவிதமான மாறுபாடு ஒரு நிமிடம் தோன்றி மறைந்தது. ஆயினும் அதை ரங்கபிரசாதின் கண்கள் புரிந்து கொண்டு விட்டன. ஏதோ யோசனைகள் ஒன்றையடுத்து மற்றொன்று.

சரோஜ்குமார் அகர்வால் மனைவியோடு இந்த

நிறுவனத திறகு வநது தன எணணம நிறைவேறாமல் ஏமாற்றத்துடன் திரும்பியபோது, S.S.A. அவரைச் சந்தித்து அவர் விருப்பத்தை நிறைவேற்றுவதாக சொல்லியிருக்கிறது. S.S.A.வுக்கு இதெல்லாம் எப்படி தெரியவந்தது?

எங்கேயோ பம்பாயில் S.S.A. செய்த பரிசோதனைகள் இங்கே கிருஷ்ணாபுரத்து பெண்களிடம் விளைவுகளைக் காட்ட முடியுமா? அப்படி என்றால் S.S.A. பம்பாயில் இல்லை. அருகில் இருக்கிற ஊரில்தான் இருக்கிறது. அல்லது இதே ஊரில்தான் இருக்க வேண்டும்.

இந்த இரண்டு யோசனைகளையும் ஒன்றாக இணைத்தால் இந்த இன்ஸ்டிட்யூட்தான் S.S.A. முதுகுத்தண்டில் சிலிர்ப்பு ஊடுருவியது. வம்சீகிருஷ்ணாவை திரும்பிப் பார்த்தார். ரங்கபிரசாத் முகத்தில் மாறுபாட்டைப் புரிந்து கொண்ட வம்சீகிருஷ்ணா ஓரடி பின் வாங்கி சட்டைப் பையில் கையை விட்டார். யஜமான் உத்தரவைக் கவனித்த டிரைவர் ரங்கபிரசாதை நோக்கி வேகமாக ஓடிவந்தான். நாய் படியேறத் தொடங்கியது.

மூன்று பக்கங்களிலிருந்தும் வந்து சூழ்ந்த ஆபத்தை கவனித்த ரங்கபிரசாத் உஷாராகி நான்காவது பக்கம் பார்த்தார். அங்கே படிகளுக்குக் கீழே நிறுத்தியிருந்த கார் கண்ணில் பட்டது.

அவர் ஒரே பாய்ச்சலில் நான்கு படிகளையும் கடந்து காருக்குள் ஏறி உட்கார்ந்து கதவைச் சாத்திக் கொண்டு விட்டார். வினாடி நேரத்திற்குள் இது நிகழ்ந்து முடிந்து விட்டது. நாய் பாய்ந்து வந்து தாவுவதற்குள், டிரைவர் நடந்ததை கவனித்து உணருவதற்குள் வில்லிலிருந்து விடுபட்ட அம்பாய் கார் இருளில் பாய்ந்தது.

வெளியே என்ன நடந்தது என்று ரவிக்குத் தெரியவில்லை. வெளியில் கார் கிளம்பிய சத்தத்தைத்

தொடர்ந்து பாபா பரபரப்புடன் உள்ளே வந்ததும் டிரைவர் கைகளை பிசைந்து கொண்டு பின்னாடி வருவதும் மட்டும் தெரிந்தது.

பாபா டெலிபோனில் யாருடனோ பேசிக் கொண் டிருந்தார். “ஆம். நம்முடைய கார்தான். அவனை எப்படி யாவது பிடித்து அழைத்து வாங்க. நம் ரகசியத்தைத் தெரிந்து கொண்டு விட்டான்.”

ரவிக்கு சந்தோஷமாக இருந்தது. தான் கேட்டது ரங்கபிரசாத் ஏறிச் சென்ற கார் சத்தம் போலும். டாக்டர் கடைசி நேரத்தில் விஷயத்தை எப்படிப் புரிந்து கொண்டாரோ தெரியவில்லை.

ஆனாலும் பாபா பதற்றமடையவில்லை. உண்மை யிலேயே சாமர்த்தியம் மிகுந்தவனாக இருக்க வேண்டும். “ரங்கபிரசாத் பதற்றத்தில் இருக்கிறான். அவன் எதிர்பாராத உண்மை தெரிந்து போய்விட்டது. இந்த நள்ளிரவில், புயலில் அவன் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவான் என்று நான் நினைக்கவில்லை. ஆனாலும் போலீஸ் ஸ்டேஷனில் நம் ஆளை உஷாராய் இருக்கச் சொல்லுங்கள். ஆஸ்பத்திரி நாசமாகிவிட்டதால் கேதாரகௌரியைத் தேடிக் கொண்டு போவான். அல்லது புதிதாக காதல் மோகத்தில் விழுந் திருப்பதால் அந்த நிவேதிதா வீட்டிற்குப் போய் தெரிந்ததை எல்லாம் சொல்லக்கூடும். அதனால் நம் ஆள் ஒருத்தனை நிவேதிதா வீட்டிற்கு வெளியே காவல் இருக்கச் சொல்லுங்கள். அவன் நிவேதிதாவைச் சந்திக்கும் முன்பே பிடித்துவிட்டால் நல்லது. அனாவசியமாக அவளையும் கொலை செய்ய வேண்டியிருக்காது. மேலும் இருவரை கிருஷ்ணாபுரத்தின் எல்லையில் இருக்கச் சொல்லுங்கள். பத்தே நிமிஷத்தில் ரங்கபிரசாதை என்னிடம் கொண்டுவந்து சேர்ப்பிக்கணும். முடிந்தால் உயிரோடு. . . இல்லாவிட்டால்

பிணமாக.

சர்வசாதாரணமாக கொஞ்சம்கூட தடுமாறாமல் தன் ஆட்களுக்கு அவர் கட்டளையிட்ட விதத்தைப் பார்த்தால் ஒரு பெரிய உளவாளி நிறுவனத்தின் தலைவனாக இருப்பார் போல் தோன்றியது.

ரவிக்கு பயம் ஏற்பட்டது. ஏனோ ரங்கபிரசாத் அந்த புலிக் கூண்டிலிருந்து தப்பித்து விட முடியாது என்று பட்டது - ஏதாவது அற்புதம் நிகழ்ந்தால் தவிர.

★

மூர்ஷிதாயிரியும், அந்த இளைஞனும் என்ன செய்வதென்று புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சித்தார்த்தாவும் அதே நிலையில் இருந்தான்.

எத்தனையோ கடினமான சூஃபீ மந்திரங்களை குறைவான சமயத்திற்குள் எப்படி கற்றுக் கொள்வது? கண்ணுக்குத் தெரியாத சக்திகளுடன் எப்படிப் போராடுவது?

சித்தார்த்தாவுக்கு திடீரென்று ஒரு யோசனை வந்தது. பக்கத்திலிருந்த இளைஞன் பக்கம் திரும்பினான். அவன் இடுப்பில் பழங்காலத்தில் அரபு நாட்டினர் பயன் படுத்தும் பிடிக்கத்தி இருந்தது. அதை எடுத்து மூர்ஷிதாயிரியின் முன்னால் வைத்தான்.

"எழுதுகோலும், பத்திரமும் இல்லாமல், கடினமான சூஃபீ மந்திரத்தை நான் மனப்பாடம் செய்யத் தேவையில்லாமல் அதை என் உடலில் கத்தியாய் செதுக்கு மூர்ஷிதாயிரி! உடல் அசாசுவதமானது. கத்தி எழுது கோலாகாது. எழுத்துக்களும் சீக்கிரத்தில் மறைந்துவிடும்."

மூர்ஷிதாயிரி வியப்புடன் பார்த்தாள். இளைஞன் அந்த யோசனையை ஜீரணித்துக் கொள்ள முடியாமல் திகைப் படைந்தான்.

“தாமதம் செய்யாதீங்க முர்ஷிதாயிரீ! என் யோசனை தங்களுடைய நிபந்தனைகளை மீறாத பட்சத்தில் சீக்கிரமாக செயல்படுங்கள்” என்றான் வேண்டுகோள் கலந்த குரலில்.

நிலைமையைப் புரிந்து கொண்ட முர்ஷிதாயிரி மேற் கொண்டு தாமதம் செய்யவில்லை. கத்தியை எடுத்து அவன் மார்பின் மீது சூஃபீ மந்திரத்தை செதுக்கத் தொடங்கினாள். ரத்தம் புஸ்ஸென்று வெளியேறியது. சித்தார்த்தா அசைய வில்லை. வாயைத் திறக்கவில்லை. பார்த்துக் கொண்டிருந்த இளைஞனுக்கு நினைவு தப்பி விடும் போல் இருந்தது.

வந்தது சாதாரண மனிதனாக இருக்க முடியாது. துஷ்ட சக்திகளை அடக்குவதற்கு கடவுள் அனுப்பிய தூதனாக இருக்க வேண்டும். தன்னையும் அறியாமல் குனிந்து சித்தார்த்தாவை வணங்கினான். சித்தார்த்தா செதுக்கிய சிற்பம் போல் இருந்தான். அவன் முகம் தேஜஸ்ஸுடன் ஒளிவீசிக் கொண்டிருந்தது. இனி உலகத்தில் எந்த துஷ்டசக்தியும் எதுவும் செய்ய முடியாது என்ற தைரியம் அவன் கண்களில் வெளிப்பட்டது.

முர்ஷிதாயிரி பிடிக்கத்தியை அவன் கையில் வைத்தாள். “போய் வா மகனே! காஷ்மோராவின் தாக்குதலிலிருந்து உலகத்தைக் காப்பாற்று” என்று ஆசீர்வதித்தாள்.

சித்தார்த்தா வெளியே நடந்தான். பின்னாலேயே இளைஞனும் வந்தான். சித்தார்த்தா குதிரை வண்டியில் ஏறிக் கொண்டதும் வண்டி கிருஷ்ணாபுரத்தை நோக்கி ஓட்ட மெடுத்தது.

★

**த**ன் உயிர் அபாயநிலையில் இருப்பதையும் ‘எந்த சமயத்திலும் எங்கிருந்தாவது ஆபத்து வரலாம் என்றும் ரங்கபிரசாதுக்குப் புரிந்தது. தன்னைப்பின் தொடர்ந்து யாரும்

வராதது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆங்காங்கே வம்சீகிருஷ்ணாவின் ஆட்கள் நவீன ஆயுதங்களுடன் தனக்காக காத்திருக்கிறார்கள் என்பதை அவர் அறியவில்லை.

இரவு பதினோரு மணியைத் தாண்டிவிட்டது. புயலின் சீற்றம் மேலும் வலுத்தது. ஐந்தடிக்கு அப்பாலிருந்தது கூட தெளிவாகப் புலப்படவில்லை. ஆனாலும் காரை வேகமாக ஓட்டிக் கொண்டிருந்தார் அவர்.

வம்சீகிருஷ்ணா ஊகித்தது போலவே நிவேதிதாவிடம் போய் எல்லாவற்றையும் சொல்லிவிட்டுப் பிறகு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகலாம் என்று நினைத்தார். ஆனால் நள்ளிரவு நேரத்தில் அவளை எழுப்புவது நன்றாகயிராது என்று நினைத்து அந்த எண்ணத்தை கைவிட்டார்.

கிருஷ்ணாபுரத்தில் இருந்த சப்இன்ஸ்பெக்டரை அவருக்குத் தெரியும். அவர் மூலம் புகார் கொடுக்கலாம் என்ற எண்ணம் வந்ததும் கிருஷ்ணாபுரத்தை நோக்கி காரை வேகமாக ஓட்டத் தொடங்கினார்.

கார் ஊர் எல்லையைத் தொட்டது. மழையின் தீவிரம் அதிகரித்ததால் பத்தடி தொலைவில் இருப்பது கூட தென் படவில்லை.

இரண்டு வீதிகள் கூடுமிடும் அது. எதிரே ஏதோ வாகனம் வருவதுபோல் இருந்தது. அதுவும் வேகமாக வருவது போல் தோன்றவே சட்டென்று பிரேக்கை போட்டார். அதற்குள் தாமதமாகிவிட்டது. கிறீச்சென்று சத்தத்துடன் இரண்டும் மோதிக் கொண்டன.

கலவரத்துடன் காரை விட்டிறங்கினார் ரங்கபிரசாத். மறுபக்கத்திலிருந்து வந்து மோதியது குதிரை வண்டி.

அதில் சித்தார்த்தா இருந்தான். அந்த விபத்தினால் அவன் வண்டியிலிருந்து தூக்கியெறியப்பட்டு கீழே

விழுந்தான்.

ரங்கபிரசாதிற்கு பகீர் என்றது. அது சித்தார்த்தா என்று தெரிந்ததும் கலவரம் அதிகரித்தது. அதற்குள் "தவறு என்னுடையதுதான். மன்னியுங்கள்" என்று சட்டென்று எழுந்து நின்ற சித்தார்த்தா ரங்கபிரசாதைப் பார்த்துவிட்டு "அட! நீங்களா!" என்றான்.

"ஆம்."

"அப்புறமாக எல்லாம் பேசுவோம். வாங்க நேரமில்லை. கௌரி ஆபத்தில் இருப்பாள்." காரை நோக்கி வேகமாக நடந்தான் சித்தார்த்தா.

கௌரியைப் பற்றி என்ன சொல்வதென்று புரியாத ரங்கபிரசாத் "சித்தார்த்தா! ஆஸ்பத்திரியை மக்கள் நாசமாக்கி விட்டார்கள். கௌரியின் நிலைமை எப்படி இருக்கு என்று தெரியவில்லை" என்றார்.

"எனக்குத் தெரியும், பூத சக்திகள் எப்படியாவது அவளை வரவழைத்துக் கொள்ளும் என்று. அவள் இப்போ மயானத்தில் இருப்பாள்." சித்தார்த்தா சொன்னான்.

ரங்கபிரசாதிற்கு பாதி புரிந்தது. பாதி புரியவில்லை. எது எப்படி இருந்தாலும் சித்தார்த்தா இந்த சமயத்தில் வந்து சேர்ந்தது தெம்பாக இருந்தது. சித்தார்த்தாவிடம் வம்சீ கிருஷ்ணா பற்றிய எல்லா உண்மைகளையும் சொல்லி விட்டார்.

முழுவதும் கேட்டுக் கொண்ட சித்தார்த்தா "இதெல்லாம் உண்மை என்றால் அந்த வம்சீகிருஷ்ணாவைக் கொன்று போட்டுடணும்" என்றான் ஆத்திரத்துடன்.

கார் ஊர் எல்லையில் நின்றது. "ரங்கபிரசாத்! இந்த மயானத்து வாசலில் நான் இறங்கிக் கொள்கிறேன். உங்களுக்கும் எனக்கும் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம்.

ஆனால் என் நம்பிக்கை என்னுடையது. இங்கேதான் கௌரி இருப்பாள்" என்றான் சித்தார்த்தா.

"ஒரு நிமிஷம்." கலவரத்தோடு சொன்னார் ரங்கபிரசாத். "இப்போ எந்த விவாதமும் வைத்துக் கொள்ள வேண்டாம். என்னைவிட உங்களுக்குத்தான் காரின் தேவை அதிகம். அதனால் காரை இங்கேயே விட்டு வைக்கிறேன். இது வம்சீகிருஷ்ணாவின் கார். தெரியும் இல்லையா. ஜாக்கிரதையாக இருக்கணும்." எச்சரித்தார்.

அவர் சொல்லி முடிப்பதற்குள் சித்தார்த்தா காரை விட்டிறங்கி மயானத்தை நோக்கி ஓட்டமெடுத்தான். அந்தச் சூழ்நிலையில் மயானம் பார்க்க ரொம்ப பயங்கரமாக இருந்தது. வேரோடு பெயர்ந்து விழுந்திருந்த மரமொன்று நாலைந்து சமாதிகளைத் தன் கிளைகளால் மூடியிருந்தது.

"கௌரீ!" உரக்கக் கத்தினான். பதிலுக்கு தெற்கேயிருந்து வீசிய காற்றின் சத்தம்தான் கேட்டது. அந்த இடத்தில் கௌரி தென்படவில்லை.

கலவரத்தோடு திரும்பி காரை நோக்கி ஓடிவந்தான். அதே நேரத்தில் ரங்கபிரசாத் தன் ஆஸ்பத்திரி எப்படி இருக்கிற தென்று பார்க்கத் துடித்தவராக ஊரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்.

ஊருக்கு வடக்குப் பக்கமாக இன்னொரு மயானம் இருந்தது. அங்கே போய் பார்க்க முடிவு செய்தான் சித்தார்த்தா. அவன் இக்னிஷியனைத் திருப்பி கியரை மாற்றுவதற்குள் கழுத்திற்குப் பின்னால் ஏதோ சில்லென்று பட்டாற்போல் இருந்தது.

"எங்களிடமிருந்து அவ்வளவு சுலபமாக தப்பித்துக் கொள்ள முடியாது ரங்கபிரசாத்! காரைப் பின்னால் திருப்பு. உனக்காக வம்சீகிருஷ்ணா காத்துக் கொண்டு இருக்கிறார்"

சித்தார்த்தா திகைத்துப் போனான். இதிலிருந்து எப்படி மீளுவது?

## 36

எப்படி தப்பித்துக் கொள்வது என்று யோசித்துக் கொண்டிருந்தான் ரவி. மெதுவாக வராண்டாவைக் கடந்து பிரார்த்தனை கூடத்திற்கு வந்தான். உஸ்ஸோக் மெம்பர்கள் இன்னும் தியான நிலையிலேயே இருந்தார்கள்.

ரவி கதவைத் திறந்து கொண்டு ரஞ்சிதா இருந்த அறைக்குள் நுழைந்தான். அவனைப் பார்த்துவிட்டு சந்தோஷமாக ஓடி வந்து ஏதோ சொல்லப் போனாள்.

"ஷ்! நேரமில்லை. க்விக். பிறகு பேசிக் கொள்ளலாம்" என்று அவளை வெளியே அழைத்து வந்தான். எதிரே யாரோ வந்தாற்போல் இருந்தது. ரவி ரஞ்சிதாவை சுவரோரமாக அழைத்துக் கொண்டு போனான். எதிரே வந்தது பாபாதான். அவர் பிரார்த்தனை கூடத்திற்குள் நுழைந்தார். கொஞ்ச நேரத்தில் அவர் குரல் கேட்டது.

"இன்னும் கொஞ்ச நேரத்திற்குள் அஷ்டாவக்கிரன் பிறந்துவிடுவான். அழைத்து வருவதற்கு மகாதிரஷ்டா போயிருக்கிறார். சித்தார்த்தா இமயமலையில் இருப்பான். இன்றிரவு பன்னிரெண்டு மணிக்கு ஓலைச் சுவடியில் குறிப்பிட்டது போல் சித்தார்த்தா இறந்துவிடுவான். அஷ்டாவக்கிரன்மேல் அவநம்பிக்கை கொண்டதால் ராகேஷிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. உஸ்ஸோக்கில் அதிகாரத்தை கைப்பற்ற விரும்பியதால் ராகேஷிற்கு இந்த தண்டனை. அவர்களைக் கொல்வதற்கு போன ஷெர்பாவை பூதகணங்கள் தம்மோடு இணைத்துக் கொண்டுவிட்டன.

உஸ்ஸோக்கிற்கு அவன் செய்த சேவைக்காக இது கிடைத்தது. மறுபடியும் பிறந்து அவன் சிற்றரசனாக நாட்டை ஆளுவான்.”

சபையோர் மகிழ்ச்சியின் மிகுதியால் ஆரவாரம் செய்யத் தொடங்கினார்கள்.

ரவிக்கு தலையைச் சுற்றியது. தான் முட்டாளா அல்லது அவர்கள் முட்டாளா என்று புரியவில்லை.

தொடர்ந்து பாபாவின் குரல் கேட்டது. “அஷ்டா வக்கிரன் பிறக்கும் சமயத்தில் குட்டிச் சாத்தான் நரபலி கேட்கும். ஆயிரம் பேரை பலி கொடுக்கணும்” என்றவர் இரண்டு பேரை அருகில் அழைத்து “அந்தக் காரியத்தை நீங்களிருவரும்தான் செய்யணும். நாளைக்கு வெள்ளிக் கிழமை. மாரணாயுதத்தை எடுத்துக் கொண்டு நீங்கள் பிரார்த்தனை மண்டபத்திற்கு போகணும்.” நகரத்திலுள்ள பெரிய மண்டபம் அது. ஐநூறு பேர் வரையிலும் அங்கே கூடியிருப்பார்கள். அந்த மாரணாயுதம் சுமார் ஒரு மைல் எல்லைக்குள் இருக்கும் எல்லாவற்றையும் பூண்டோடு நாசமாக்கிவிடும். இந்த விதமாக குட்டிச் சாத்தானின் விருப்பம் நிறைவேறும்.

ரவியின் ரத்தம் கொதித்தது. மாரணாயுதம் என்று அவர் குறிப்பிட்டது சற்றுமுன்பு பார்த்த தர்மோ ந்யூகிளியர் பாம்தான் என்று புரிந்தது. இந்த உஸ்ஸோக் அங்கத்தினர்கள் அதை குட்டிச்சாத்தான் அனுப்பியதாகச் சொன்னால் நம்பி விடுவார்கள்.

வெள்ளிக்கிழமை பிரார்த்தனை மண்டபத்தில் குண்டு வெடித்து ஆயிரக் கணக்கானவர்கள் இறந்தால் அந்த பிரச்னை அதோடு முடியாது. பெரிய அளவில் மதக் கலவரம் தோன்றக் கூடும்.

அதற்குள் பாபா ஒரு கிழவனை மேடைக்கு அழைத்தார்.

“நேற்றிரவு குட்டிச் சாத்தான் என் கனவில் தோன்றி எனக்கு ஆணையிட்டிருக்கிறது. நாளைக்கு முதலமைச்சரின் சபையில் நீ தீக்குளித்து தற்கொலை செய்து கொள்ளணும். அஷ்டா வக்கிரனின் கையாளாக மறுபிறவி எடுப்பதற்கு உன் ஆன்மா பரிசுத்தமாகும்” என்றார்.

கிழவன் “மகா பாக்கியம் சுவாமீ!” என்று முணுமுணுத்தது கேட்டது.

அதற்குள் ஒருத்தன் வந்து பாபாவின் காதில் ஏதோ சொன்னதும் அவர் அவனோடு சேர்ந்து வெளியே போய் விட்டார்.

“நாம் வெளியே போவதற்கு ஏதாவது வழியை யோசித்தாயா?” ரஞ்சிதா கேட்டாள் ரவியிடம்.

ரவி ஏதோ முடிவுக்கு வந்தவன் போல் “நாம் இந்தக் கட்டிடத்தையே தகர்த்துவிட வேண்டும். இதோடு சேர்ந்து நாமும் இறந்தாலும் சரி. இந்த உஸ்ஸோக் மெம்பர்கள் ஒவ்வொருத்தனும் ஒரு வெடிகுண்டுக்குச் சமமானவன். ஒரே ஒருவன் போதும் நாட்டையே நாசமாக்குவதற்கு. இவர்களுக்கு போலீஸ், கோர்ட் எதுவும் லாபமில்லை. கொன்று விடுவதுதான் சரியான தண்டனை” என்றான்.

ரவி சற்றுமுன் வெடிகுண்டைப் பார்த்த இடத்திற்கு ரஞ்சிதாவுடன் வந்து சேர்ந்தான்.

“ரஞ்சிதா! இந்த இரண்டு வயர்களையும் இணைத்து இதை வெடிக்கச் செய்துவிட்டால் போதும். ஒரு மைல் தூரத்திற்கு எல்லாம் அழிந்துவிடும். இதனால் சில அப்பாவிகள் பலியாகலாம். ஆனால் வேறு வழியில்லை. இப்பொழுது இரவு பதினொன்றரை. இன்னும் அரைமணியில் இது வெடிக்கும். அதற்குள் நாம் இங்கிருந்து இரண்டு மைல் தொலைவிற்குப் போய்விடணும்.”

ரவி இரண்டு வயர்களையும் கையில் எடுத்துக்

கொண்டான்.

★

தன்னிடம் வந்து தகவல் சொன்ன ஆளைத் தொடர்ந்து போனார் அவதார்பாபா. ரங்கபிரசாதைத்தான் அழைத்துக் கொண்டு வந்திருப்பான் என்ற நினைப்பில் இருந்தவர் அங்கே காரில் உட்கார்ந்திருந்த சித்தார்த்தாவைப் பார்த்து திடுக்கிட்டார்.

சித்தார்த்தா சமயோசிதமாய் சட்டென்று "எங்க ஊர் எல்லையில் இந்தக் கார் தனியாக தென்பட்டது. இது உங்களுடையதாச்சே. இங்கே எப்படி வந்தது என்று ஆச்சரியப் பட்டுக் கொண்டிருந்தபோது இவர்கள் என்னை இங்கே அழைத்து வந்தார்கள். இதெல்லாம் என்ன?" என்று அப்பாவியைப் போல் நடித்தான்.

ரங்கபிரசாத் காரை ஊர் எல்லையில் விட்டுவிட்டு ஓடிப்போய் விட்டான் போலும் என்று நினைத்தார் பாபா.

"ஐயாம் சாரி. என் காரை யாரோ திருடிக் கொண்டு போய்விட்டார்கள். அதனால் போலீஸில் ரிப்போர்ட் கொடுத்தேன். எங்க ஆட்களையும் விட்டு தேடச் சொன்னேன். உங்களை திருடனென்று எண்ணி அழைத்து வந்து விட்டார்கள் போலிருக்கு" என்றார் முறுவலுடன்.

"உங்க கார் எனக்குக் கிடைத்தது அதிர்ஷ்டம்தான். நான் போகணும். கிருஷ்ணாபுரத்தில் என் மனைவி இருந்த ஆஸ்பத்திரியை யாரோ தாக்குதல் நடத்தியிருக்கிறார்களாம். அவள் எங்கே இருக்கிறாளோ தெரியவில்லை. உடனே போய் தேடணும்."

பாபா ஒன்றும் தெரியாதது போல் "அப்படியா?" என்ற கலவரப்படுபவரைப் போல் நடித்துவிட்டு "சரி. ஏறிக் கொள்ளுங்கள். உங்களைக் கொண்டுவிடுகிறேன்" என்று காரில் ஏறிக் கொண்டார்.

"நீங்க வீணாக இந்த மழையில் எதற்காக சிரமப்படணும்?" என்று தடுக்கப் பார்த்தான் சித்தார்த்தா.

"நோ நோ. இந்த மாதிரி நிலைமையில் நண்பர்களுக்கு உதவாமல் போவதா?" என்று காரை ஸ்டார்ட் செய்தார்.

சித்தார்த்தாவை அழைத்து வந்த மூவரும் கூட பின்சீட்டில் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள்.

கார் கிருஷ்ணாபுரத்தை அடைந்ததும் சித்தார்த்தா இறங்கிக் கொண்டான். அவன் இறங்கியதும் கார் மறைந்தது. தன்னை இறக்கிவிட்டு அது திரும்பிப் போகவில்லை என்றும் ரங்கபிரசாதைத் தேடுவதற்காக போய்க் கொண்டிருக்கிறது என்றும் சித்தார்த்தாவுக்குத் தெரியும். ஆனால் அவனால் என்ன செய்ய முடியும்?

★

ரங்கபிரசாத் போலீஸ் இன்ஸ்பெக்டரின் வீட்டில் அவசரமாக நுழைந்து "அவதார் பாபாவின் மீது புகார் கொடுக்க வந்திருக்கிறேன்" என்றார். அவர் ஆடைகள் எல்லாம் தொப்பலாக நனைந்துவிட்டிருந்தன. சப் இன்ஸ்பெக்டரின் வீட்டு முன்னறையில் உட்கார்ந்திருந்தார் அவர். அந்த சப் இன்ஸ்பெக்டரை அவருக்கு முன்பே தெரியும். காவல் நிலையத்திற்குப் பக்கத்தில்தான் அவர் வீடு.

"அவதார்பாபாவை நீங்க உடனே அரெஸ்ட் பண்ணணும்."

"யாரை? பாபாவையா?"

"ஆமாம். வேறு விதமாக சொல்லணும் என்றால் ஸ்பெர்ம் செல்லிங் ஏஜென்ஸி என்ற ஒரு மோசடிக் கம்பெனியின் நிர்வாகியை" என்று தான் கண்டுபிடித்த விஷயங்களை எல்லாம் சுருக்கமாகச் சொன்னார் ரங்கபிரசாத்.

எல்லாவற்றையும் கேட்டு முடித்த சப்இன்ஸ்பெக்டரின் முகத்தில் நிறம் மாறத் தொடங்கியது. அந்த நள்ளிரவு நேரத்தில் வந்து தொந்தரவு செய்தது வேறு யாராவதாக இருந்தால் வெளியில் தள்ளி கதவைச் சாத்தியிருப்பார். ஆனால் வந்தது ரங்கபிரசாத் என்பதால் பொறுமையாக இருந்தார்.

"என்ன டாக்டர் நீங்க? அவதார்பாபாவைப் போன்ற மகானை அரெஸ்ட் செய்வதா? நீங்க சொன்ன புகார்களுக்கு சாட்சியம் இருக்கா?" என்று கேட்டார்.

"அதையெல்லாம் நாம் அப்புறமாக சம்பாதித்துக் கொள்ளலாம். முதலில் அவதார் பாபாவை அரெஸ்ட் செய்யவில்லை என்றால் சர்வநாசமாகிவிடும்."

"எங்கள் வீட்டில் பாபாவை தெய்வமாக கொண்டாடி வருகிறோம். போன மாதம் என் மகனின் உயிருக்கே ஆபத்தான நிலை ஏற்பட்டபோது அவர் வந்து நெற்றியில் கையை வைத்ததுதான் தாமதம், சரியாகிவிட்டது. அப்படிப் பட்ட மகானை அரெஸ்ட் செய்வதாவது?"

சப்இன்ஸ்பெக்டரின் எதிர்க்கேள்விக்கு ரங்கபிரசாத் வியப்புடன் ஏறிட்டார். நிலைமை இந்த மாதிரி எதிர் பதமாகிவிடும் என்று அவர் கனவிலும் நினைக்கவில்லை.

"சரி, போகட்டும். என்னையாவது காப்பாற்றுங்கள். வம்சீ கிருஷ்ணாவால் எனக்கு ஏதாவது ஆபத்து வரக்கூடும் என்று நினைக்கிறேன். என் உயிரைக் காப்பாற்ற வேண்டியது உங்கள் பொறுப்பு. ஆஸ்பத்திரி என்னவாச்சோ தெரியவில்லை. யார் யார் உயிரோடு இருக்கிறார்களோ, யார் யார் இறந்து போனார்களோ தெரியவில்லை. உடனே அங்கே போகணும். துணைக்கு போலீஸ் யாரையாவது அனுப்பி வைப்பீர்களா?"

சப்இன்ஸ்பெக்டர் ரங்கபிரசாதை சலனமில்லாமல் நோக்கினார். "இந்த நள்ளிரவு நேரத்தில், அடைமழையில்

போலீஸை உங்களுக்குத் துணையாக எப்படி அனுப்ப முடியும்?" என்றார் நிதானமாக.

ரங்கபிரசாதுக்கு கோபம் வந்தது. ஆவேசத்தை அடக்கிக் கொண்டு "யாரோ சில முட்டாள்கள் ஆஸ்பத்திரியை துவம்சம் செய்தால் போலீஸ் படை ஒன்றுமே செய்யாதா? மழை, இரவு நேரம் என்று சும்மாயிருந்து விடுவார்களா?" என்றார்.

சப் இன்ஸ்பெக்டர் மேலும் நிதானமாக "எங்களுக்கு ஏற்கனவே கம்பிளைண்ட் வந்துவிட்டது. நாங்கள் போன பொழுது அங்கே எல்லாம் முடிந்துவிட்டது. விரட்டி யடிப்பதற்குக் கூட அங்கே ஒருத்தரும் இல்லை. பர்னிச்சர் முழுக்க எரிந்துவிட்டது. அங்கே போலீஸ் ஒருவனை காவலுக்கு வைத்து விட்டு வந்தேன். இதைத் தவிர என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. செய்வதற்கும் என்ன இருக்கிறது?" என்றார்.

அவர் அவ்வளவு சாவதானமாக பேசியதைக் கேட்டதும் ரங்கபிரசாதிற்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டது. சந்தேகத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் முன்பே வெளியே கார் வந்து நின்ற ஓசை கேட்டது. கூடவே காலடியோசையும்.

வம்சீ கிருஷ்ணாதான் உள்ளே வந்து கொண்டிருந்தார்.

ரங்கபிரசாத் சட்டென்று நாற்காலியை விட்டு எழுந்து கொள்ள முயன்றார். ஆனால் அதற்குள் நிலைமை கை மீறிப் போய்விட்டது.

வம்சீகிருஷ்ணா சப்இன்ஸ்பெக்டரிடம் சென்று "தாங்க்ஸ் இன்ஸ்பெக்டர்! இவரைத்தான் ரொம்ப நேரமாக தேடிக் கொண்டிருக்கிறேன். இவ்வளவு நல்ல டாக்டருக்கு திடீரென்று பைத்தியம் பிடித்திருப்பது துரதிர்ஷ்டம்தான்" என்றார்.

ரங்கபிரசாதின் முகம் சிவந்தது.

"அர்த்தராத்திரியில் வந்து பாபாவை அரெஸ்ட் செய்யச் சொன்னபோதே எனக்குச் சந்தேகம் வந்தது" என்றார் சப் இன்ஸ்பெக்டர்.

"இவரை எங்களுடன் அழைத்துப்போகலாமா?"

"பேஷாக."

அதுவரை பார்வையாளராகப் பார்த்தபடி நின்று கொண்டிருந்த ரங்கபிரசாத் சட்டென்று நகர்ந்து "நோ. . . நோ" என்று கத்திக் கொண்டே வெளியே போனார்.

வம்சீகிருஷ்ணாவுடன் வந்திருந்த அடியாட்கள் இருவரும் ரங்கபிரசாதை இருபக்கமும் பிடித்துக் கொண்டார்கள். அப்பொழுதுதான் ரங்கபிரசாத் கவனித்தார். சப் இன்ஸ்பெக்டர் சிரிப்பை அடக்கிக் கொண்டதை.

ரங்கபிரசாத் ஏதோ சொல்லும் முன் அவரைத் தரதர வென்று காரை நோக்கி இழுத்துச் சென்றுவிட்டார்கள். கத்தினாலும் லாபமில்லை என்று ரங்கபிரசாதிற்கு தெரிந்து விட்டது. சப் இன்ஸ்பெக்டர் பற்றித் தெரிந்து கொண்ட அதிர்ச்சியிலிருந்து அவர் இன்னும் மீளவில்லை.

## 37

**ர**வியின் மூளை சுறுசுறுப்பாக இயங்கியது. "டைம்பாம் போலவே இந்த மினி அணுகுண்டை பிஸ்டன் மூலமாக இயங்கச் செய்யலாம். ஆனால் தம்மிடம் கட்டுப்படுத்தக் கூடிய உபகரணம் எதுவும் இல்லை."

எங்கும் நிசப்தமாக இருந்தது. கடிகாரத்தின் டிக் டிக் ஒலியைத் தவிர வேறெந்த ஓசையும் கேட்கவில்லை. இருவரும் ஒரே சமயத்தில் யோசனை வந்தது போல் சுவர் கடியாரத்தைப் பார்த்தார்கள்.

சரியாக இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு அந்த கடியாரத்தின் பெரிய முள்ளோடு ஒரு வயரையும், சிறிய முள்ளோடு இன்னொரு வயரையும் இணைத்தான் ரவி.

பன்னிரெண்டு அடிக்க சரியாக பதினைந்து நிமிடங்கள் இருந்தன. பெரிய முள்ளும், சிறிய முள்ளும் ஒன்று சேர்ந்ததும் பயங்கர ஜ்வாலையுடன் மாரணாயுதம் வெடித்துச் சிதறப் போகிறது. வெளியே போக முடிந்தால் இந்தப் பதினைந்து நிமிடங்களுக்குள் இந்த இடத்தை விட்டு ஓடிவிட வேண்டும்.

★

**கார்** போய்க் கொண்டிருந்தது. வம்சீ கிருஷ்ணா சொல்லத் தொடங்கினார்.

"இந்த உலகத்தில் எல்லாவற்றைக் காட்டிலும் பயங்கர மான மாரணாயுதம் எது தெரியுமா? ந்யூக்ளியர் பாம் என்று நினைக்கிறீங்களா? இல்லவே இல்லை. இந்த உலகத்திலேயே பயங்கரமான ஆயுதம் மனிதன்தான். அவனது முட்டாள் தனத்தை நமக்குத் தேவையான விதத்தில் மாற்றிக் கொண்டு விட்டால் மனிதனைப் போன்ற ஆபத்தானது வேறு எதுவும் இல்லை. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டுதான் நான் என் காரியங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன்.

"குட்டிச் சாத்தானுக்கும் குறிப்பிட்ட ஒரு நாட்டின் அதிபருக்கும் சம்பந்தம் இருப்பதாக கதை புனைந்து சொன்னதுமே, உஸ்ஸோக் அங்கத்தினர் இருவர் அந்த இடத்திலேயே அந்த அதிபரைக் கொன்றுவிட்டு தம் உயிரையும் அர்ப்பணித்துக் கொண்டு விட்டார்கள்.

"ஒரு மினி அணுகுண்டைக் கொண்டு ஒரு பிரார்த்தனை மண்டபத்தை வெடித்துத் தகர்த்து விட்டுத் தாமும் அழிந்து போவதற்குத் தயாராகிவிட்டார்கள் உஸ்ஸோக் அங்கத் தினர்கள்.

"இதெல்லாம் எப்படி சாத்தியமாயிற்று? அவர்களுக்குள் தோற்றுவிக்கப்பட்ட பக்தி உணர்வுதான் காரணம். இந்த மாதிரி ஒரு பிரமையில் அவர்களை ஆழ்த்துவதற்காக நான் குட்டிச்சாத்தான் என்ற வார்த்தையை பயன்படுத்திக் கொண்டேன்.

"ரங்கபிரசாத்! நீங்கள் ஊகித்ததெல்லாம் உண்மைதான். பிரதிமா அகர்வாலுக்கு ஏன் விக்ருத குழந்தை பிறந்தது என்று முதலில் எங்களுக்குப் புரியவில்லை. அதனால் சிலர் மீது இந்தப் பரிசோதனையை செய்து பார்க்க வேண்டியிருந்தது. யார் மீது பரிசோதிப்பது? கூலிப் பெண்களாக இருந்தால் ரகசியம் வெளியில் வராது. இன்ஸ்டிட்யூட்டிற்குப் பக்கத்திலேயே இருந்த கிருஷ்ணாபுரத்திற்கு வந்தோம்.

"ஏழெட்டுப் பெண்களுக்கு மயக்க மருந்து கொடுத்து அவர்கள் மீது சோதித்துப் பார்த்தோம். இரண்டு மூன்று குழந்தைகள் பிறந்ததுமே நாங்கள் செய்த தவறு என்னவென்று புரிந்துவிட்டது. உடனே ஜெகதீஷின் வீரியத்தை அழித்து விட்டோம். ஆனால் அதற்குள் நாங்கள் செய்த சோதனையின் விளைவாக வரிசையாக விக்ருத குழந்தைகள் பிறந்து கொண்டே வந்தார்கள். இதையே ஏன் சாதகமாக்கிக் கொள்ளக் கூடாது என்ற ஆசை என்னுள் துளிர்விட்டது.

"அதே சமயத்தில்தான் அவதார்பாபா என்ற ஒரு சன்யாசி சொற்பொழிவுகளாலும், மேஜிக்குகளாலும் மக்களைக் கவரத் தொடங்கினார். அந்த இடத்தை நான் கைப்பற்றினேன். அந்த சமயத்தில்தான் மகாதிரஷ்டாவுடன் பழக்கம் ஏற்பட்டது.

"அஷ்டாவக்கிரன் பிறக்கப் போவதாக மகாதிரஷ்டா உண்மையிலேயே எண்ணியிருந்தார். அவருடைய தேவை எனக்கு ரொம்ப இருந்தது. முக்கியமாக உஸ்ஸோக்கை

உருவாக்கியிருந்தார்.

"எங்கேயோ இமயமலையில் ஒரு பைராகி எழுதி வைத்த ஓலைச்சுவடியைப் பற்றிச் சொல்லி விஷயத்தை ஜோடித்து ராகேஷை நம்ப வைத்து தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டார்.

"பூதசக்திகள்தான் இயங்குவதாக உஸ்ஸோக் அங்கத் தினர்கள் பிரமையில் ஆழ்த்தப்பட்டார்கள். அதற்கு ஏற்றபடி சில நவீன உபகரணங்கள் எங்களுக்கு உறுதுணையாக இருந்தன. நான் அவதார்பாபா வேடத்தில் மக்களின் தெய்வ நம்பிக்கையை பயன்படுத்திக் கொண்டு சாதித்தது போலவே மகாதிரஷ்டா பூத தேவதைகளைப் பற்றி அவர்களிடையே வேரூன்றி அதன் மூலம் சாதித்துக் கொண்டார். மொத்தத்தில் நாங்களிருவரும் மக்களின் மூடநம்பிக்கையை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டோம்."

சற்று நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தார் வம்சீ கிருஷ்ணா.

"அதனால் அதற்கு ஏற்றபடி எல்லா ஏற்பாடுகளையும் செய்தேன், வானத்திலிருந்து அசரீரி அஷ்டாவக்கிரன் பிறப்பைப் பற்றிப் பேசிய பேச்சிலிருந்து இன்றுவரை. நான் எதிர்பார்த்ததை விட என் திட்டம் நன்றாக வேரூன்றிவிட்டது. அந்த நேரத்தில் ராகேஷ் ஒரு வேண்டுகோளுடன் வந்தான். என்ன செலவானாலுமே பரவாயில்லை. அஷ்டாவக்கிரன் கேதாரகௌரியின் வயிற்றில் பிறக்க வேண்டும் என்றான். அவனிடமிருந்து இரண்டு மூன்று லட்சங்களைக் கறந்து கொண்டோம். அஷ்டாவக்கிரன் பிறப்பதற்கு சில நியமங்களை அனுஷ்டிக்க வேண்டுமென்று ஓலைச்சுவடியில் எழுதி யிருப்பதாகச் சொன்னார் மகாதிரஷ்டா. அதற்காக இமய மலைப் பிரதேசத்தில் திரிந்து பல பைராகிகளிடமிருந்து சில செய்திகளைச் சேகரித்து

வைத்திருந்தார் அவர். இதில் எனக்கு எந்த நஷ்டமும் இல்லையே?

"அஷ்டாவக்கிரன் என்று ஒருத்தன் பிறந்தால் உஸ்ஸோக்கை மேலும் பதினைந்து ஆண்டுகள் நீடிக்கச் செய்து ஆண்டு கொண்டிருக்கலாமே என்று தோன்றியது. ராகேஷ் பவானி சங்கரைப் பற்றிச் சொன்னதுமே மகாதிரஷ்டாவுக்கு பழைய பகைமை நினைவுக்கு வந்து விட்டது. அவரையும், அவர் மகளையும், சித்தார்த்தாவையும் ஒரேதிரியாக தீர்த்துவிட எண்ணினார். அதனால் எனக்கு எந்த நஷ்டமும் இல்லை."

"இவ்வளவு கஷ்டப்படுவதால் உங்களுக்கு என்ன லாபம்? நீங்க நல்ல பொசிஷனில் இருக்கீங்க. பாபாவாக வேஷம் போட்டுக் கொண்டு மக்களை ஏமாற்றுவானேன்?" கேட்டார் ரங்கபிரசாத்.

வம்சீ கிருஷ்ணா சிரித்தார். "ஒரு நல்ல பொசிஷனில் இருந்து கொண்டு சம்பாதிப்பதற்கும், இப்படிச் சம்பாதிப் பதற்கும் எந்த ஒப்பீடும் கிடையாது ரங்கபிரசாத்! பாபா என்ற போர்வையில் இந்த ஒரு வருடத்தில் நான் எவ்வளவு சம்பாதித்து இருப்பேன்னு நினைக்கிறீங்க. உங்களால் ஊகித்தும் பார்க்க முடியாது. நான்கு கோடி ரூபாய்!

"இவ்வளவு பேர் உஸ்ஸோக் அங்கத்தினர்களைக் கொண்டும், உள்நாட்டு வெளிநாட்டு உளவாளிகளைக் கொண்டும், அண்டர்கிரவுண்ட் தொடர்புகளைக் கொண்டும் நான் எதை வேண்டுமானாலும் சாதிக்கும் நிலைக்கு உயர்ந்து விட்டேன். நான் நினைத்தால் எவ்வளவு பெரிய ஆளையும் தீர்த்துக் கட்ட முடியும். எந்த அராஜகத்தையும் கிளப்பிவிட முடியும். இதைத் தவிர S.S.A. வேறு இருக்கிறது. இப்பொழுது சொல்லுங்கள் ரங்கபிரசாத். கொஞ்சம் புத்திக் கூர்மையுடன் இதையெல்லாம் செய்து

கொண்டிருக்கும் நான் பெரிய மனிதன் இல்லையா?"

ரங்கபிரசாத் அவரைச் சலனமின்றிப் பார்த்தார். "நீங்க பெரிய மனிதரா இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் உங்களைப் போலவே முன்னாளில் ஒருத்தன் இருந்திருக்கிறான், ஜோன்ஸ் என்று. மக்களை ஒரு விதமான பிரமையில் ஆழ்த்தி அதிகாரம் செய்துவந்தான். கடைசியில் எல்லோரும் பொடாஷியம் சைனேட் குடித்து சாக வேண்டி யிருந்தது. எனக்கு அதுதான் இப்பொழுது நினைவுக்கு வருகிறது. நீங்க ஒரு சைகிக். உங்கள் முடிவும் அப்படித்தான் இருக்கும்."

"இம்பாசிபிள் ரங்கபிரசாத்! உஸ்ஸோக் நிமிஷத்திற்கு நிமிஷம் பெருகிக் கொண்டே வருகிறது. அஷ்டாவக்கிரன் பிறந்தது தெரிந்தால் இன்னும் வேகமாக வளர்ந்து வரும். நான் சொன்னதை அப்படியே நிறைவேற்ற மேலும் பலர் தயாராக இருப்பார்கள். நான் மேலும் மேலும் பணக்காரனாகி விடுவேன்." ஹிஸ்டீரிக்காக சிரித்தார் வம்சீகிருஷ்ணா.

அதற்குள் கார் நின்றது. வம்சீகிருஷ்ணா இறங்கிக் கொண்டு "இறங்குங்கள் ரங்கபிரசாத்" என்றார்.

"நாம் எங்கே வந்திருக்கிறோம்?"

"மயானத்திற்கு, இங்கே உங்களைக் கொன்றால்தான் இரண்டாம்பேருக்குச் சந்தேகம் வராது. இது ஒரு காரணம். இன்னொரு காரணம், உங்களுக்கு உங்க வாழ்க்கையில் கடைசி ஆச்சரியத்தைக் காட்டப் போகிறேன்" என்றார் வம்சி கிருஷ்ணா.

ரங்கபிரசாதிற்குப் புரியவில்லை. சாவு உறுதி என்று தெரிந்து விட்டது. கதவைத் திறந்து காலைக் கீழே வைத்தார். சற்று தொலைவில் மயானம் தென்பட்டது. ரங்கபிரசாதைத் தொடர்ந்து வம்சீ கிருஷ்ணாவும் நடக்கத் தொடங்கினார்.

தொலைவில் மூன்று உருவங்கள் தெரிந்தன. அவர்களை நெருங்கியதும் வம்சிகிருஷ்ணா ரங்கபிரசாதைப் பார்த்து "பார்! உஸ்ஸோக்கின் தலைவன். பூத தேவதைகளை வசப்படுத்திக் கொண்டவன், அஷ்டாவக்கிரனின் பிறப்புக்கு தலைமையானவன், மகாதிரஷ்டா! அவரைக் கொஞ்சம் உற்றுப் பார்" என்றார்.

ரங்கபிரசாத் அவ்வுருவத்தை கண்ணை இடுக்கிக் கொண்டு பார்த்தார். எங்கேயோ பார்த்தாற்போல் இருந்தது. மேலும் நெருங்கியதும் நன்றாகத் தெரிந்தது. ரங்கபிரசாதின் கால்கள் நடுங்கத் தொடங்கின. "அப்பா!" என்றார். மகாதிரஷ்டா உருவத்தில் இருந்த வித்யாசாகர் நெருங்கி வந்தார்.

★

**அ**ந்த அறையில் சவப் பெட்டி போன்ற மரப்பெட்டி ஒன்று தட்டுப்படவே ரவியின் யோசனை மின்னலாய் பளிச்சிட்டது.

"ரஞ்சிதா! நாம் ஒரு டிரிக் செய்வோம். இந்த உஸ்ஸோக்கில் எல்லோரும் தங்களுடைய ஆட்களின் உடல் மீது உள்ள அடையாளத்தைக் கண்டுபிடித்து விடுவோம் என்ற பிரமையில் இருக்கிறார்கள். இப்போ நாம் அதையே பயன் படுத்திக் கொள்வோம். நீ இதில் படுத்துக்கொள்" என்றான் சவப்பெட்டியைக் காட்டிவிட்டு.

ரஞ்சிதா வீலென்று கத்திவிட்டாள். "நானா?"

"வேறு வழியில்லை ரஞ்சிதா. எத்தனையோ பூத தேவதைகளை வழிபடுவதற்கு இந்தப் பெட்டி பயன்படுத்தப் பட்டிருக்கலாம். ஆனால் இந்த நிமிஷம் வெளியேறுவதற்கு இதைவிட வேறு வழியில்லை."

வலுக்கட்டாயமாக அவளை அதில் படுக்க வைத்து

மூடினான். பிறகு பக்கத்து அறையிலிருந்து நாலைந்து நீளமான, வேறு வேறு விதமான துணிகளைக் கொண்டுவந்து கழுத்திலும், உடலிலும் சுற்றிக் கொண்டான். இறுதியாக தன் அதிர்ஷ்டத்தை பிரார்த்தனை செய்து கொண்டான். முன்னறைக்கு வந்தான். அங்கே நான்கு உஸ்ஸோக் ஆட்கள் இருந்தார்கள்.

“இங்கே என்ன செய்து கொண்டு இருக்கீங்க?” குரலை கம்பீரமாக மாற்றிக் கொண்டு அதட்டுவது போல் கேட்டான்.

அவர்கள் அவனை நிமிர்ந்து பார்த்தார்கள். ஆனால் அவன் பயந்தது போல் அல்லாமல் அவனை மதிப்புடன் வழிபட்டார்கள். ரவியின் ஆடையலங்காரமும், குரலும் அவனே மகாதிரஷ்டா என்று அவர்களை நம்ப வைத்து விட்டது.

“இந்தப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வாருங்கள். அஷ்டாவக்கிரனின் பிறப்புக்குக் கடைசி அம்சமான ஷட்புதசடங்கை செய்யச் சொல்லி எனக்கு உத்தரவு வந்திருக்கிறது” என்றான். அந்த வார்த்தைக்கு அர்த்தம் அவனுக்கே தெரியாது.

அந்த நால்வரும் பயபக்தியுடன் அந்தப் பெட்டியை தூக்கிக் கொண்டு முன்னால் நடந்தார்கள். வாசலில் இருபுறமும் இரண்டு உஸ்ஸோக் ஆட்கள் நின்று கொண் டிருந்தார்கள். ரவி பயந்தான் ஏதாவது கோட் வார்த்தைகள் இருக்குமோ என்று. ஆனால் அதிர்ஷ்டவசமாக அப்படி எதுவும் இருக்கவில்லை. கதவு திறந்து கொண்டது. பெட்டியுடன் வெளியே வந்தார்கள்.

வெளியே கல்லும், மண்ணும் புதருமாக இருந்தது. தான் இன்ஸ்டிட்யூட்டிற்கு பின்பக்கமாக இருந்ததைக் கவனித்தான்.

“மயானத்திற்கு இந்தப் பெட்டியைக் கொண்டு போக

வாகனம் எங்கே?" என்று கேட்டான் ரவி.

"உத்தரவு. இப்பொழுதே கொண்டு வருகிறேன்." அவர்களில் ஒருவன் ஓடிப்போய் ஐந்து நிமிடங்களில் சிறிய வேன் ஒன்றைக் கொண்டு வந்தான்.

பெட்டியை அதில் ஏற்றிய பிறகு ரவி டிரைவர் இருக்கையில் ஏறி உட்கார்ந்துகொண்டு "நண்பர்களே! போய் வருகிறேன். இன்னும் ஐந்து நிமிடங்களில் அஷ்டாவக்கிரன் பிறந்து விடுவான். உங்கள் எல்லோருக்கும் மங்களம் உண்டாகட்டும். சர்வே ஜனா சுகினோ பவந்து" என்று சொல்லிவிட்டு வேனை ஸ்டார்ட் செய்தான்.

அங்கிருந்து வேன் அம்பாய் பாய்ந்தது. ஐந்து நிமிடங்கள் தான் இருக்கு என்று அவனுக்குத் தெரியும். புதர்களைத் தாண்டி வெளியே மெயின்ரோடுக்கு வந்து சேர்ந்தான். நான்கு நிமிஷம். . . மூன்று நிமிஷம். . . இரண்டு . . . அம்பாய் பறந்து கொண்டிருந்த கார், ஊர் எல்லையைத் தாண்டிவிட்டது.

அப்பொழுதுதான் கேட்டது அந்த சத்தம், ஆகாயம் இடிந்து விழுந்தாற்போல். பூமி அதிர்ந்தது. அதற்குச் சரியாக ஒரு வினாடிக்கு முன்புதான் வெளிச்சம் அந்த எல்லை முழுவதும் பரவி உஷ்ணக்காற்று வீசியது. பூமியே நடுங்கியது போல் வேன் கிடுகிடுவென்று ஆடியது. ரவி நிறுத்தவில்லை. பத்து நிமிடங்களுக்குப் பிறகுதான் வேனை நிறுத்தினான்.

தொலைவில் என்ன நடந்ததென்று புலப்படவில்லை. ஆனால் கொஞ்சநேரத்திற்கு முன்னால் தெரிந்த வெளிச்சத் தினால் நடந்ததை ஊகித்துக் கொண்டான். உஸ்ஸோக் அங்கத்தினர்களின் உயிர்கள் நிசப்தமாக அந்த இடத்திலேயே ஆவியாகியிருக்கும். அதில் சில அப்பாவிகளும் உயிரை இழந்திருக்கலாம். ஆனால் வேறு வழியில்லை. குரு க்ஷேத்திர

இழக்கவில்லையா?

★

**ம**யானமே கடலாகிவிட்டது போல் தரை முழுவதும் தண்ணீர் தேங்கியிருந்தது. புயலில் சிக்குண்டு திசை தெரியாமல் தடுமாறும் பயணியைப்போல் அவன் அந்த இருளில் நடந்து கொண்டிருந்தான். "கௌரீ!" என்று உரத்த குரலில் கத்தினான். காற்றுதான் பதிலாக வந்தது.

பளீரென்று மின்னல் வெளிச்சத்தில் சிறிய கூடு போன்ற அந்த இடம் தென்பட்டது.

அதற்கு நடுவில், குப்பையும் கூளத்திற்குமிடையே ஏதோ அசைந்தாற்போல் இருக்கவே சித்தார்த்தா கையால் தடவிப் பார்த்தான். மாமிசப் பிண்டம் போல் கைக்கு தட்டுப்பட்டது. ஷாக் அடித்தாற்போல் கையைப் பின்னால் இழுத்துக் கொண்டான்.

அந்தப் பிண்டத்திற்கு உயிர் இருப்பதுபோல் அசைந்து கொண்டிருந்தது. நெற்றியில் மூன்றாவது கண்ணும், கண்கள் இருக்க வேண்டிய இடத்தில் ஓட்டையும் இருந்தன. உடல் எட்டு கோணலாக வளைந்திருந்தது.

அ. . . ஷ். . . டா. . . வ. . . க். . . கி. . . ர. . . ன்!

அப்படி என்றால் கௌரீ! எட்டு திசைகளும் கிடு கிடுக்குமாறு சித்தார்த்தா "கௌரீ!" என்று கத்தினான். அந்த சமயத்தில் அவனைப் பார்த்தவர்கள் யாருமே சித்தார்த்தா என்று சொல்ல முடியாது. எல்லாவற்றையும் இழந்து விட்டவன் போலிருந்தான்.

இன்னொரு முறை கத்தினான். இயற்கை அவனுக்குக் கொஞ்சம் உதவினாற்போல் இருந்தது. காற்றின் சீற்றம்

கொஞ்சம் தணிந்தது. அந்த இடைவெளியில் அவனுக்குக் கேட்டது...

மெல்லிய முனகல்.

காதுகளைத் தீட்டிக் கொண்டு கேட்டான் எங்கிருந்தாலும் சரி, இதயத்திற்கு மட்டுமே கேட்கும் அந்த அழைப்பு.

ஓடினான். தொலைவில் மரக்கிளைகளுக்கு நடுவில் சிக்குண்டு பாயும் தண்ணீருக்கிடையே உயிர் இருக்கிறதா இல்லையா என்று தெரிந்து கொள்ளவும் முடியாத நிலையில் விழுந்து கிடந்தாள் கேதாரகௌரி. ஆம்! அதோ அவனுடைய கௌரி இன்னும் உயிரோடு இருக்கிறாள்.

வானத்தில் மின்ன வேண்டிய மின்னல் அவன் முகத்தில் மின்னியது. மகிழ்ச்சியும், கலவரமும் போட்டியிட அவளருகில் ஓடினான்.

குனிந்து அவளது சுவாசத்தைப் பரிசீலித்தான். வேதனையால் முனகிக் கொண்டிருந்தவள் பழக்கப்பட்ட இதமான ஸ்பரிசம் நெற்றியில் படவே கண்களைத் திறந்தாள்.

அவன் மகிழ்ச்சி கரை புரண்டது. அவள் பிழைத்து உயிரோடு இருந்ததற்கு மட்டுமே இல்லை. இன்னும் குழந்தை கருவறையிலேயே பத்திரமாக இருப்பது தெரிந்ததால்.

அவள் வயிற்றின் மேல் கையை வைத்து பரிவோடு “கௌரீ!” என்றான்.

அவள் அசைந்தாள். அந்த அசைவில் அவனுக்கு பொருள் புரிந்தாற் போல் இருந்தது. கடமை அவனைத் தட்டி எழுப்பியது. வினாடி நேரத்தில் உண்மையான சித்தார்த்தாவாக மாறிவிட்டான்.

அவள் பெரிதாக கத்தினாள். அவன் ஓரடி பின் வாங்கினான்.

ஒரு மின்னல் கொடியானது வானத்தில் அசைந்ததா? இல்லை இல்லை. அவளிடமிருந்துதான் அந்த ஒளி வந்தது. இருவரின் வாழ்க்கையை நிரப்பிய ஒளி.

அவன் குனிந்து கைகளை நீட்டினான். ஒன்பது மாதங்களுக்கு முன்னர் இதே போல் திறந்த வெளியில் நிகழ்ந்த கூடல். . . சூனியத்திலிருந்து தோன்றிய ஒரு சக்தி உருபெற்றது போல், ஆறு மணி நேரத்திற்குப்பிறகு உதிக்க வேண்டிய சூரியன் அவசரப்பட்டு அப்பொழுதே உதித்து விட்டாற்போல் அந்த அனுபவம். கணவனே அவளுக்கு தாதியானான். தாயுமானவன் ஆனான்.

பூரண சந்திரனே தோன்றியது போல் அழகான ஆண் குழந்தை! ஆரோக்கியமான குழந்தை!

சந்தடி கேட்டுத் திரும்பினான் சித்தார்த்தா.

ஆஜானுபாகுவான உருவம். மகாதிரஷ்டா நின்று கொண்டிருந்தார். பின்னாலேயே இரண்டு உஸ்ஸோக் மெம்பர்கள்.

சித்தார்த்தா நடுங்கிவிட்டான். அந்த மயக்கத்திலும் தாயின் அறிவு விழித்துக் கொண்டதோ என்னவோ. கேதார கௌரியின் கைகள் குழந்தையைப் பொத்தி அணைத்துக் கொண்டன. அந்த தாய்க்கும், சேய்க்கும் பாதுகாப்புத் தருவது போல் சித்தார்த்தா குடையாய் குனிந்தான். 'முதலில் என்னை வெட்டிப் போட்டு விட்டு பிறகு அவர்களைக் கொல்லு' என்பது போல் இருந்தது அவன் பார்வை.

அதற்குள் மகாதிரஷ்டாவின் பார்வை குழந்தையின் மேல் பட்டது. அந்த இருட்டில் கூட சுளீர் என்று சாட்டையால் அடிவாங்கியது போல் அவர் முகத்தில் மாற்றம்! அவரிடம் தோன்றிய மாறுதலைக் கவனித்த சித்தார்த்தா சொன்னான்.

"அங்கே மூலையில் ஒரு குழந்தை கிடக்கிறது" என்றான். மகாதிரஷ்டா அங்கிருந்து வேகமாக நகர்ந்தார்.

★

**எ**திரே வந்து கொண்டிருந்த மகாதிரஷ்டாவைப் பார்த்து "அப்பா!" என்று உச்சரித்த விதத்திலேயே எத்தனையோ பொருள் மறைந்திருந்தது.

'அப்பா! எதற்காக இந்த மாதிரி எல்லாம் செய்தீங்க? நான் உங்கள் மகன் இல்லை என்று நிரூபிப்பது போல் என்றாவது நடந்து கொண்டேனா? யாரோ ஒரு முட்டாள் நீங்க செய்த சோதனையில் சிறிய மாறுதல் செய்து தன்னுடைய சுய நலத்தால் உங்களுக்கு தீங்கிழைத்தால் அதற்கு பழி வாங்குவது போல் அவனை, அவன் தம்பியை, தம்பியின் குடும்பத்தை சர்வநாசமாக்கணும் என்ற வக்ரமான யோசனை உங்களுக்கு எப்படி வந்தது? அப்பா! நீங்க ஒரு பெரிய விஞ்ஞானி. இயற்கையை எதிர்த்து நின்று போராடினீங்க. சூழ்நிலை உங்களுக்கு எதிர்ப்பதமாகி விட்டதால் சன்னியாசியானீங்க. இமயமலைக்குச் சென்று வாழ்க்கையின் தத்துவங்களை தேடப் போன நீங்க அரக்கனாக எப்படி மாறினீங்க? இந்த சுயநலவாதி உங்கள் திறமைகளை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறான் என்று உங்களுக்குத் தெரியுமா?

'உங்களுடைய அம்சம் இல்லாவிட்டாலும் நான் உங்களுடைய மகன்தான். இருபத்தைந்து வருடங்கள் அன்புடன் வளர்த்து ஆளாக்கப்பட்ட இந்த ரங்கபிரசாத் என்றென்றும் உங்களுடைய மகன்தான்.

'நீங்க பகைமை வளர்த்துக் கொள்ளும் அளவுக்கு இந்த உலகம் மோசமானது இல்லை. இந்த உலகத்திற்கு சாத்தான் தேவையில்லை. மனித நேயம்தான் தேவை.'

மகாதிரஷ்டா இன்னும் முன்னால் வந்து கொண்டே இருந்தார். அவருடைய பார்வை வம்சீகிருஷ்ணாவின் மீதே நிலைத்திருந்தது. அவர் கையில் ஊசி போல் செதுக்கப்பட்ட எலும்பு இருந்தது.

வம்சீ கிருஷ்ணா பிஸ்டலை உயர்த்தி ரங்கபிரசாதை குறி பார்த்தார். "கடவுளை பிரார்த்தனை செய்துகொள் ரங்கபிரசாத்! உனக்குத்தான் கடவுள் மீது நம்பிக்கை இல்லை இல்லையா" என்றபடி டிரிக்கரை அழுத்தப் போனார்.

"அஷ்டாவக்கிரன் பிறக்கவில்லை அவதார்பாபா" என்ற வார்த்தைகள் மகாதிரஷ்டாவின் வாயிலிருந்து அம்புபோல் வெளிவந்தன.

வம்சீகிருஷ்ணா ரங்கபிரசாத் மீது இருந்த பார்வையைத் திருப்பாமலேயே "பிறந்துவிட்டான் மகாதிரஷ்டா! கோவிலில் கடவுள் சிலை இருக்க வேண்டிய இடத்தில் இருக்கிறான்" என்றார்.

"அந்தக் குழந்தையை ஒரு டாக்டராக நான் சோதித்து விட்டேன். பத்து நாட்களுக்கு முன்னால் பிறந்த சிசு அது. நீ ஆடிய நாடகத்தின் கடைசி அத்தியாயத்தில் சமித்தாக, நீ செய்த பிளாஸ்டிக் சர்ஜரியால் அஷ்டாவக்கிரனாக அங்கே கிடக் கிறான். எனக்கு வேண்டியது அவன் இல்லை. காஷ்மோராவின் அம்சத்தில் பிறந்த உண்மையான அஷ்டாவக்கிரன்! அவனை நான்தான் தேடிக் கொள்ளணும். சற்று முன் நீ பேசியதெல்லாம் கேட்டேன். அதற்கு பிரதிபலனாக ..." என்று ஓரடி முன்னால் வைத்தார்.

வம்சீ கிருஷ்ணாவின் கையில் இருந்த பிஸ்டல் வெடித்தது.

மகாதிரஷ்டாவின் தோளிலிருந்து ரத்தம் வெளியேறத் தொடங்கியது. அவர் கொஞ்சமும் அசரவில்லை. எந்த

புல்லெட்டுகளும் அவரைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

கையை உயர்த்தினார். காற்றைக் கிழித்துக் கொண்டு அவர் கையிலிருந்த எலும்புத் துண்டு வம்சீகிருஷ்ணாவின் வயிற்றுக்குள் வேகமாக ஊடுருவியது. வம்சீகிருஷ்ணாவின் கத்தல் வெளியே கேட்டுவிடாமல் தெற்கு பக்கத்திலிருந்து காற்று வேகமாக வீசியது. மகாதிரஷ்டா இரு கைகளால் அவன் உடலை உயரே தூக்கினார். துடிதுடித்துக் கொண்டிருந்த உடல் அடுத்த வினாடி சலனத்தை நிறுத்திக் கொண்டது.

"பூதகணங்களே! இத்தனை நாட்களும் என்னைப் பகடைக் காயாக பயன்படுத்தி வந்த இந்த நீசனின் உடலை உங்களுக்கே அர்ப்பணிக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே அந்த உடலை பலமாக வீசி எறிந்தார். குண்டுபட்ட காயங்களிலிருந்து ரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தது. சுற்றிலும் ஒருமுறை பார்த்துவிட்டு பின்னால் திரும்பி நடந்தார். எல்லோரும் பயத்துடன் மௌனமாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். இருட்டில் அவருடைய உருவம் மெல்ல மெல்ல மறைந்துவிட்டது.

★

முன்னறையில் இரண்டு பலகைகள் போடப் பட்டிருந்தன. எதிரே தாம்பாளத்தில் அரிசி இருந்தது.

ரஞ்சிதா, ரவி, ரங்கபிரசாத், நிவேதிதா, சித்தார்த்தாவின் தாய், புரொபசர் ஜெயதேவ் எல்லோரும் காத்திருந்தார்கள்.

சித்தார்த்தா வந்து பலகையின் மீது உட்கார்ந்து கொண்டான். பக்கத்திலேயே கௌரி.

சித்தார்த்தா மோதிரத்தால் பெயரை எழுதினான். பார்த்துக் கொண்டிருந்த எல்லோருக்கும் அளவு கடந்த

ஆச்சரியம்! அதைப்பார்த்துவிட்டு சித்தார்த்தா சொன்னான்.

"என் பெயர் சித்தார்த்தா. சித்தார்த்தனுக்கு எப்போதோ முப்பது வயது நிரம்பிய பிறகு ஞானோதயம் வந்தது. என் மகனுக்குப் பிறந்ததுமே இந்த உலகத்தைப் பற்றித் தெரியணும் என்று என் மனைவி பிடிவாதம் பிடித்து இந்தப் பெயரை வைத்தாள்."

எல்லோரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். அப்பொழுது கேதாரகௌரி தன் மனதில் இருப்பதை சொல்லத் தொடங்கினாள்.

"எனக்குச் சிறு வயதிலேயே போலியோ வந்தது. அந்த அங்க ஹீனம் என்னுள் தாழ்வு மனப்பான்மையை வளர்த்து விட்டது. என் கணவர் அழகற்றவர். அது ஒன்பது மாதங்களாக என்னுள் இனம் புரியாத பயத்தை வளர்த்து வந்தது. இந்த ஒன்பது மாத காலத்தில் நான் புரிந்து கொண்டது என்ன வென்றால் இந்த உலகில் நூற்றுக்கு தொண்ணூற்றி ஒன்பது பேர் என்னைவிட அதிகமாக தாழ்வு மனப் பான்மையால் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். என்னைக் காட்டிலும் கோழைகள். சில புத்திசாலிகள் இவர்களுடைய பலவீனத்தை தங்களுக்கு சாதகமாக மாற்றிக் கொண்டு பணம் பண்ணுகிறார்கள். நான் என் மகனுக்கு சூட்டியிருக்கும் பெயர் மிகவும் கேலிக்குரியது. உண்மைதான். பிற்காலத்தில் அவனை யாராவது இதென்ன பெயர் என்று கேட்டால் அவன் வெட்கத்தால் குன்றிவிடக் கூடாது. பெருமையோடு நிமிர்ந்து, ஒரு தாய் தன் மகனுக்கு ஏன் அந்தப் பெயரை வைக்க வேண்டியிருந்தது என்று விளக்கமாக கதை போல் சொல்லணும். அந்தக் கதையைக் கேட்டு ஒருத்தராவது மாறணும். விவரம் தெரிந்தபிறகு அவனே என்னிடம் வந்து "அம்மா! எனக்கு இந்தப் பெயர் வேண்டாம்" என்று சொன்னால் கண்டிப்பாக பெயரை மாற்றிவிடுகிறேன்.

ஆனால் என் ரத்தத்தைப் பகிர்ந்து கொண்டு பிறந்த குழந்தையாதலால் அவன் அந்த மாதிரி கேட்கமாட்டான் என்று நம்புகிறேன்" என்று முடித்தாள்.

அரிசியில் அந்த எட்டு எழுத்துக்களும் பளிச்சென்று மின்னிக் கொண்டிருந்தன.

**அஷ்டாவக்கிரன்**

- நிறைந்தது -

எண்டமூரி வீரேந்திரநாத்

# அஷ்டாவக்ரன்



தமிழில்

கௌரி கிருபானந்தன்